அனுபோக வைத்திய நவநீதகம்

ஹக்கீம்
பா.மு. அப்துல்லா சாயபு

பாகம்- 2

தாமரை நூலகம்,
சென்னை - 600 026.

அனுபோக வைத்திய நவநீதம்

இரண்டாம் பாகம்

ஆசிரியர் :
ஹக்கீம். பா. முகம்மது. அப்துல்லா சாயபு அவர்கள்

பதிப்பாசிரியர் :
எஸ். பி. ராமச்சத்திரன்

தொலைபேசி எண் : 23620249

தாமரை நூலகம்
7. என். ஜி. ஓ. காலனி, 3வது தெரு
வடபழனி, சென்னை 600 026.

தாமரை வெளியீடு எண் : 156

முதல் பதிப்பு : செப்டம்பர் - 1995

இரண்டாம் பதிப்பு : மார்ச் - 2006

மூன்றாம் பதிப்பு — : மே 2020

உரிமைபெற்றது

நூலைப்பற்றி

நூலின் பெயர் — அனுபோக வைத்திய நவநீதப் இரண்டாம் பாகம்

பதிப்பாசிரியர் : எஸ். பி. ராமச்சந்திரன்

வெளியிட்டோர் : தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி,
வடபழனி, சென்னை - 26.

பதிப்பு ஆண்டு : மே - 2020

உரிமை : பதிப்பகத்திற்கு

நூல் வடிவம் : 21 செ. மீ. x 14 செ. மீ

அச்சுத்தாள் : 16.6 கி.கி. வெள்ளைத்தாள்

எழுத்துக்கள் : 11 புள்ளி

மொத்த பக்கங்கள் : 182

பிரதிகள் : 1000

நூல் விலை : ரு. 70.00

அச்சிட்டோர் : கிரியேட்டிவ் ஆப்செட்
நுங்கம்பாக்கம், சென்னை - 34

பதிப்புரை

சித்தர்களின் நூல்கள் என்னும் மாபெரும் பாற்கடலைக் கடைந்து அமுதை அள்ளித் திரட்டி அளித்திருக்கிறார். ஹக்கீம் பா. முகம்மது அப்துல்லா சாயபு அவர்கள்.

அப்துல்லா அவர்கள் மாபெரும் வைத்திய மேதை. சித்த வைத்தியத்தில் மட்டுமின்றி யுனானி வைத்தியத்திலும் சிறந்த நிபுணர். இவர் தமது அனுபவத்தால கண்ட முறைகளையே சிறப்பாக எழுதியிருக்கிறார். இவரது மருத்துவ முறைகள் அப்படியே பலிக்கக் கூடியவைகள் உடனடியாகப் பயனளிக்கக் கூடியவை.

சித்த மருத்துவத்திற்குப் புத்துயிரளிக்க அன்றைய தமிழக அரசின் கல்வியமைச்சராகவிருந்த மாண்புமிகு அன்பழகன் அவர்கள் தீர்மானித்தபோது முதன் முதலாக ஹக்கீம் பா. முகம்மது அப்துல்லா சாயபு அவர்களின் அனுபோக வைத்திய நவநீதத்தையே தேர்ந்தெடுத்தார்.

இந்த நூல் பத்து பாகங்களாக வெளியிடப் பட்டது. இதன் திறவுகோல் இரண்டு பாகங்கள். ஆகப் பனிரெண்டு பாகங்கள்.

இன்றும் மருத்துவர்கள் கையேடு போல் உபயோகப்படுத்துவதும் மாணவர் பாட நூலாக ஏற்றுக் கொள்வதும் இந்நூல்களேயாகும். நீண்ட காலமாகக் கிடைக்காமலிருந்த இந்நூல்களை மீண்டும் சமர்ப்பிப்பதில் தாமரை நூலகம் பெருமையடைகிறது.

அன்புடன்,

பதிப்பாசிரியர்

முதற்பதிப்பின் முகவுரை

நண்பர்களே!

இந்த நூலினது பெருமையும், இதை வெளிப்படுத்த முன்வந்ததற்கு ஏற்பட்ட காரணம் முதலியவைகளும் இதன் முந்தின பாகத்தின் முன்னுரையினால் நன்கு விளங்கும். ஆதலின் அவ்விவரங்களைப் பற்றி இங்கெழுதுவது அவசிய மில்லை.

இந்த இரண்டாம் பாகமானது முன்பாகம் வெளியான சொற்ப நாள்களுக்குள்ளேயே வெளிப்பட வேண்டியதாக இருந்தும் சில அசந்தர்ப்பங்களை முன்னிட்டுச் சற்றுத் தாமதித்திருந்தது, ஆயினும், முன் காண்டத்தைத் தருவித்துப் பார்த்தனுபவித்த ஒவ்வொரு அறிவாளிகளும் மற்றும் பல நண்பர்களும் அடுத்த பாகங்களையும் கூடிய சீக்கிரம் வெளிப்படுத்த வேண்டுமெனக் கடிதமுகத்தாலும், நேரிலும் வற்புறுத்தி வந்த படியால் அவர்கள் விருப்பத்தை வீணாக்க வசமற்றவனாய் எவ்வித அசந்தர்ப்பங்களையும் எதிர்பாராது இச்செயலில் சில நாள்களுக்கு முன் பிரவேசித்து இடைவிடா முயற்சியுடன் இந்த இரண்டாம் பாகத்தை வெகு சீக்கிரமாகவே முடித்து வெளியிட்டேன். இனி மற்ற காண்டங்களும் இவ்வாறே முறையாக வெளிவரும்.

இந்த இரண்டாம் பாகத்தில் முந்தின பாகங்களைக் காட்டிலும் சற்று அதிகமாகவே சுமார் 183 முறைகள் வரை அடங்கி இருக்கின்றன. அவைகளில் ஒவ்வொன்றும் மிகப் பெருமையுற்றதும், சுலபமாக முடியத்தக்கதும், சிறந்த குணமுடையதும், பரம்பரையாக அனுபவத்தோடு கையாண்டு வந்ததும், இரகசியத்தில் வைத்து வந்ததுமாகும், அம்முறைகளாவன: -

அயத்தூய்மைகள், அய அப்பிரகச் செந்தூரம், கருவங்கச் சுண்ணம், கருவங்கத் தூய்மைகள், கருவங்கச் செந்தூரங்கள், கருவங்கப் பவழச் செந்தூரம், கருவங்க பற்பங்கள், சொர்ணலோக செந்தூரம், தங்கக் களங்கு, தங்கத் தூய்மைகள், தங்கச் செந்தூரங்கள், தங்க பற்பங்கள், திரிவங்கச் செந்தூரம், திரிவங்க பற்பங்கள், திரிவங்க மாத்திரை, நாக அப்பிரகச் செந்தூரம், நாகத்தூய்மைகள், நாகச் செந்தூரங்கள், நாக பற்பங்கள், வங்கத் தங்கபற்பம், வங்க மாத்திரை, வீரிய வெள்ளி பற்பம், வெள்வங்கச் சுண்ணங்கள், வெள்வங்கத் தூய்மை, வெள்வங்கச் செந்தூரங்கள், வெள்வங்க பற்பங்கள், வெள்ளி சூத பற்பம், வெள்ளித்

தூய்மை, வெள்ளிச் செந்தூரங்கள், வெள்ளி பற்பங்கள், வெள்ளி மெழுகு ஆகிய உலோகங்களாலான அரிய மருந்து முறைகளும்.

இரத்தின சொர்ணமாலியம், யூதக்கல் தூய்மைகள், யூதக்கல் பற்பங்கள், நிமிளைத் தூய்மைகள், பொன்னிமிளைச் சத்து, பொன்னிமிளைச் செந்தூரங்கள், பொன்னிமிளை பற்பங்கள், அபபிரகச்சத்து, அப்பிரகச்சத்துச் செந்தூரங்கள், அப்பிரகத்தூய்மைகள், அப்பிரகச் செந்தூரங்கள், அப்பிரக நவநீதம், அப்பிரக பற்பங்கள், சிலாசத்துத் தூய்மைகள், சிலாசத்துப் பற்பங்கள், சிலாசத்துப் பாவனை, பூநாக பற்பம், மைசாட்சிப் பக்குவம். நண்டு பற்பம், கலைமான் கொம்பு பற்பம் ஆகிய செய்தேர்ச்சியில் பயனடைந்த நன்முறை மருந்துகளும்.

மருந்துகளுக்காகும் அரசம்பட்டைக் குடிநீர், கொள்ளின் குடிநீர், கொண்டைக்கடலைக் குடிநீர், சுண்ணாம்புத் தெளிநீர் செந்தூரச் செயநீர், நாகப்பட்டைக் குடிநீர், பூவரசம்பட்டைக் குடிநீர், சவுக்கார செயநீர் ஆகிய செய்முறைகளும், இன்னும் பலவுமாகும்

மேற்கண்ட முறைகளெல்லாம் இரகசியத்தில் வைக்கத்தக்க அருமை வாய்ந்தவையாயினும் உலகநலத்தைக் கருதியே இவைகளை இந்நூலின் மூலமாக வெளியிட்டேன்.

இவ்வளவு அருமை வாய்ந்த முறைகளடங்கியுள்ள இந்த இரண்டாம் பாகமானது முன் பாகங்களைக் காட்டிலும் மிகச் சிறந்த தன்மை வாய்ந்ததென்பதை இங்கெடுத்துச் சொல்லாமலே எவரும் எளிதில் உணர்ந்து கொள்ளக் கூடும். இது உயர்ந்த தாள்களில் சுமார் 264 பக்கங்களுள்ள புத்தகமாக அச்சிடப்பட்டிருக்கின்றது. இந்நூலிற்காக எடுத்துக் கொண்ட அரும்பிரயாசை, பொருட்செலவு, உடலுழைப்பு முதலியவைகளை எதிர்பாராமலே உலகோர்க்கு உதவி செய்யும் நோக்கில் இதற்கு மிகவும் குறைந்த விலையே ஏற்படுத்தி இருக்கின்றேன். ஆதலின், ஒவ்வொரு நேயர்களும் முந்தின பாகத்தைப் போல் இதனையுந் தருவித்துப் பார்த்து என்னைக் களப்படுத்துமாறு வேண்டுகின்றேன். இனி மற்ற பாகங்களும் வெளிவருமாறு எல்லாம்வல்ல கடவுள் அருள் புரிவாராக. சுபம்.

ஹக்கீம் பா. மு. அப்துல்லா சாயபு

12, அப்பு மேஸ்திரி தெரு,

ஜார்ஜ் டவுன், சென்னை

பொருளடக்கம்

அனுபோக வைத்திய நவநீதம்

இரண்டாம் பாகம்

கடவுள் வணக்கம்

மாவர் ரனுபோக வைத்ய நவநீதம்
பாவாரு மச்சிற் பதித்திடவே- நாவாரும்
ஆதியே பல்கோடி யண்டமனைத் தும்படைத்தாள்
சோதியே செய்வாய் துணை.

குரு வணக்கம்

திருவும் புகழுந் திகழறிவுஞ் சேரெங்
குருவின் பதம்பணிந்து கொண்டு - வருநலனு
போகமாம் வாகடத்திற் போற்றுநவ நீதமுயர்
வா கவியற் றத்தொடங்கு வாம்.

நூல்

இயற்கையின் அருளினாலும் பெரியோர்களின் வாழ்த்தினாலும் பற்பல மருத்துவ வல்லுநர்களின் ஆதரவினாலும் இதன் முதற்பாகத்தில் பற்பல குரு முறைகள், இரகசிய முறைகள், மூவகை வைத்தியத்திலும் அதிகமாய் உபயோகப் படும் அயத்தின் பற்பம், செந்தூரம், அவை சம்பந்தமான இளகங்கள், சூரணங்கள், வடகங்கள் முதலியவைகளும் எஃகு, மண்டூரம், காந்தம், தாம்பிரம் ஆகியவைகளின் பற்பங்கள், செந்தூரங்கள் இவை சம்பந்தமான பல முறைகளும் சொல்லப் பட்டிருக்கின்றன. அவைகளின் அருமையும் பெருமையும் அவற்றைப் பார்த்து அங்குச் சொல்லியிருக்கிறபடி செய்து அனுபவிப்பவர்களுக்கு "உள்ளங்கை நெல்லிக்கனி" போலத் தெரிய வரும், மேற்கண்ட அயம் முதலியவை பல நோய்களில் பெரும்பான்மையும் உபயோகப்படுவது போல, அப்பிரகமும் பல நோய்களில் உபயோகப்படுகின்றபடியால், அதன் பற்பம் முதலியவைகளை முன்னர் ஆரம்பித்து மற்றவைகளில் பற்பம், செந்தூரம் முதலியவைகளை முறையே சொல்வோம்.

அப்பிரகத்தின் வகைகள்

அப்பிரகமானது நான்கு வகையாகும், 1-வெள்ளை அப்பிரகம்: இதற்குப் பளிங்கு அப்பிரகமென்று மறு பெயருமுண்டு. 2-கருப்பு அப்பிரகம்: இதற்குக் கிருஷ்ண அப்பிரக மென பெயருமுண்டு. 3-சிவப்பு அப்பிரகம்: இதற்கு இரத்த அப்பிரகமென மறு பெயருமுண்டு. 4-மஞ்சள் அப்பிரகம்: இதற்குப் பீத அப்பிரகமென மறுபெயருமுண்டு.

1. அப்பிரகத்தை நெருப்பிற் காய்ச்சும்போது அதன் பதர்கள் வெவ்வேறாகி விட்டால் அதற்குப் பினாக அப்பிரக மென்று பெயர். இதனைத் தூய்மை செய்யாமல் உபயோகித்தால் பெருங் குட்ட நோய் உண்டாகும்.

2. அப்பிரகத்தை நெருப்பிற் காய்ச்சும் போது தவளையின் கத்துதலைப் போன்ற ஒலியுண்டானால் துர்துர அப்பிரக மென்று பெயர். இதனைத் தூய்மை செய்யாமல் உபயோகித்தால் மரண பயத்தை உண்டாக்கும்.

3. அப்பிரகத்தை நெருப்பிற் காய்ச்சும்போது பாம்பு சீறுதலைப் போன்ற ஒலியுண்டானால் அதற்கு நாக அப்பிரக மென்று பெயர். இதனைத் தூய்மை செய்யாமல் உபயோகித்தால் பகந்திர நோய் உண்டாகும்.

4. அப்பிரகத்தை நெருப்பிற் காய்ச்சினால் எவ்வித வேறுபாடும் ஒலிகளும் இல்லாதிருப்பதற்கு வச்சிர அப்பிரகம் என்று பெயர். இந்த வகைதான் பற்பம், செந்தூரம் முதலியவை செய்வதற்கு மிகவும் சிறப்புடையது. இவ் வகை அப்பிரகத்தைத் தூய்மை செய்து பற்பம், செந்தூரம் ஆகியவைகளாகச் செய்து பயன்படுத்த வேண்டியது. இவ்வகை அப்பிரகத்தினாற் செய்யப்பட்ட பற்பம், செந்தூரம் ஆகியவைகள் நோய் முதலியவைகளைப் போக்கி உடல் வலிமை, உடல்திடம் முதலியவைகளை உண்டாக்கி உடலை வச்சிரத்தைப் போலாக்கும். இக் காரணம் பற்றியே இதற்கு வச்சிர அப்பிரகமென்று பெயரிடப் பட்டிருக்கிறது. இந்த வகை அப்பிரகமே எல்லா வகை அப்பிரகங்களிலும் உத்தம குணத்தைத் தரத்தக்கது. ஆகையால் பற்பம், செந்தூரம் முதலியவைகள் செய்யவேண்டி இருக்கும்போது மேற்கண்ட விதமாகச் சோதனை செய்து எடுத்துப்பயன் படுத்தினால் அதனால் உண்டாகும் நன்மைகளை அவரவர்களே தெரிந்து கொள்வார்கள். ஆகையால் நாமிங்குச் சொல்ல வேண்டியதில்லை.

எந்த வகை அப்பிரகமாயினும், தூய்மை செய்யாமல் பயன் படுத்துவதனால் அநேக வகைத் தீயகுணங்கள் உண்டாகுமென எல்லா வகை வைத்தியத் துறை வல்லுநர்களாலும் ஏகோபித்துத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

அப்பிரகத் தூய்மை

வச்சிர அப்பிரகத்தைக் கொல்லுலையில் வைத்துக் காய்ச்சிப் பசுவின் பாலில் தோய்க்க வேண்டும. (அப்பிரகத்தை நெருப்பில் வைத்துக் காய்ச்சினால் இரண்டொரு தடவைக்குள் தூளாகிப்போம். ஆகையால், இதனை ஒரு புதுச்சட்டியில் அல்லது புது ஓட்டில் போட்டுக் கொல்லுலையில் வைத்தூதி நன்றாய்ச் சூடேறிச் சிவந்த பின் பசுவின் பாலில் தோய்க்க வேண்டும். இதுதான் சுலபமார்க்கம்.) நன்றாயாறின பின் பாலை இறுத்து நீக்கிவிட்டு முன் போல் அப்பிரகத்தைக் கொல்லுலையில் வைத்துக் காய்ச்சி நன்றாய்ச் சூடேறிச் சிவந்தவுடன் முன்போல் பாலில் தோய்க்க வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஏழு தடவைகள் காய்ச்சிக் காய்ச்சிப் பசுவின் பாலில் தோய்க்க வேண்டும். பாலானது மேற்படி அப்பிரகம் ஓர் அங்குலம் உள்ளே அமிழ்ந்து இருக்கும்படியாக இருக்க வேண்டியது. இன்னும் ஒவ்வொரு தடவையும் பாலைப் புதிதாகவே வார்த்துக் கொள்ள வேண்டும். ஒரு தடவை பயன்படுத்திய பாலை மறுதடவைக்குப் பயன் படுத்தலாகாது.

பிறகு மேற்கண்ட விதமாகவே முப்பலைக் குடிநீரில் ஏழு தடவையும். காடியில் ஏழு தடவையும், கோமூத்திரத்தில ஏழு தடவையும் மடக்கி மடக்கிக் காய்ச்சிக் காய்ச்சித் தனித்தனி தோய்த்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு தடவையும் அந்தந்தத் திரவத்தைப் புதிது புதிதாகவே சேர்த்துக் கொள்ள வேண்டும். ஒரு தடவை உபயோகித்து மறுதடவைக்கு உபயோகிக்கலாகாதென வற்புறுத்துவதற்காக வேண்டி இரண்டாந் தடவையும் இங்குச் சொல்லப்பட்டது.

முப்பலைக் குடிநீர்:- மஞ்சட் கடுக்காய்த் தோல், தான்றிக் காய்த் தோல், நெல்லி முள்ளி இம்மூன்றும் வகையொன்றுக்குத் தூய்மை செய்ய வேண்டிய அப்பிரகத்தினெடைக்கு ஏழுபங்கு: அதாவது சுத்தி செய்ய வேண்டிய அப்பிரகத்தின் எடை ஒரு பலமாக இருந்தால் மேற்கண்ட மூன்றும் வகை-1க்குப் பலம் 7 (245-கிராம்) எடுத்துக்

கொள்ள வேண்டியது பிறகு இம் மூன்று வகையின் மொத்த எடைக்குப் பதினாறு பங்கு நீரில் போட்டு எட்டுப் பங்காகச் சுண்ட வைத்து இறக்கி இளஞ் சூட்டுடன் பிசைந்து வடிகட்டித் திப்பி நீக்கின குடிநீரில் ஒவ்வொரு தடவைக்கும் செல்லத்தக்க அளவு எடுத்துக் கொள்ள வேண்டும்.

அப்பிரகத் தூய்மை (வேறு)

இலந்தைவேர்ப்பட்டைக் குடிநீரில் மேற்படி பாகத்தில் சொன்ன கிரமப்படி ஏழு தடவைகள் மடக்கி மடக்கிக் காய்ச்சிக் காய்சசித் தோய்த்துத் தோய்த்து எடுத்துக் கல்வத் திலிட்டுச் சுத்தத் தண்ணீர் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாமம் அரைத்துச் சிறு வில்லைகளாகச் செய்து உலர்த்தி வைத்துக் கொள்ளவும். இவ்விதம் செய்யப்பட்ட அப்பிரகமானது தூய்மையாவதுடன் அப்பிரக நவநீதமாகவும் இருக்கிறது. இது இரண்டு வகையாலும் இலகுவான முறையாம்.

அப்பிரக நவநீதம்

தூய்மை செய்த அப்பிரகம் 1-பங்கு, நெல் 1-பங்கு. இவ்விரண்டையும் ஒரு கம்பளித் துண்டில் தளர முடிந்து காடியில் ஒரு நாள் ஊற வைக்க வேண்டும். இந்த முடிப்பானது காடிக்குள் நான்கு அங்குலம் இருக்கும்படியாகக் காடியில் விட வேண்டியது. மறுநாள் முடிப்பை எடுத்து வேறு புதிய காடியில் அல்லது தண்ணீரில் வைத்துக் கொண்டு ஒரு கையால் முடிப்பின் தலைப்பைப் பிடித்துக் கொண்டு மறு கையால் அந்த முடிப்பைப் பிசைந்து வந்தால் அப்பிரக மெல்லாங் கரைந்து காடியில், அல்லது தண்ணீரில் இறங்கி நிற்கும். அதை வெய்யிலில் வைத்துத் தெளியத் தெளிய காடியை, அல்லது தண்ணீரை இறுத்துவிட்டு கெட்டிப் பதமானவுடன் வில்லை யாகச் செய்து உலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும். இதற்கு அப்பிரக நவநீதமென்று பெயர். பற்பம், செந்தூரம் ஆகியவைகள் செய்வதற்குப் பெரும்பான்மையும் இவ்விதம் செய்துதான் உபயோகப்படுத்தப் படுகிறது. மேற்கண்ட விதமாக வெள்ளை, கருப்பு என்னும் இருவகை அப்பிரகத்தையும் தூய்மை செய்து நவநீதமாகச் செய்து கொள்ள வேண்டியது. ஆனால், முன் சொல்லியிருக்கிறபடி சோதனை செய்து வச்சிர அப்பிரகமாக எடுத்துக் கொள்ள வேண்டியது. அந்த வகையைத் தெரிந்தெடுத்துச் செய்யாமல் கண்டவகைகளிற் செய்வதால் அதற்காகச் சொல்லப்பட்ட அரிய குணங்களுக்குப் பதிலாக விபரீத குணங்களுண்டாகி நாம் ஏமாற நேரிடுகிறது.

அப்பிரகச் சத்து

தூய்மை செய்த கிருஷ்ண அப்பிரக நவநீதம் 5 பலம் (175 கிராம்), சுவர் முள்ளங்கிச் சாறு 20 பலம் (700 கிராம்), வீரம் ½ பலம் (17½ கிராம்).

செய்முறை: மேற்படி சாற்றில் மேற்படி நவநீதத்தைப் போட்டு ஏழு நாளூற வைக்க வேண்டும். பிரதிதினம் இரண்டு மூன்று தடவை கிளறிக் கொடுத்தும் வரவேண்டும். சாறெல்லாம் சுண்டி வறண்டுவிட்டால் மறுபடியும் முன்சாற்றை விட்டுக் கொள்ள வேண்டும். எட்டாம்நாள் கெட்டியாய் உருட்டும் பதத்தில் இருக்க வேண்டியது. சாறு அதிகமாயிருந்தால் வெய்யிலில் வைத்து மேற்கண்ட பதமாக எடுத்துக் கொள்ள வேண்டியது.

பிறகு வச்சிர மூசையிலிட்டுக் கொல்லுலையில் வைத்து இரட்டைத் துருத்தியால், அல்லது சீமைத் துருத்தியால் மூன்று சாமம் மிதமாக ஊதிப்பிறகு மேற்படி வீரத்தை அதிற் போட வேண்டும். வீரம் போட்டவுடன் புகையுமாகையால் அந்தப் புகையானது கண் முதலிய இடங்களிற் படாமல் விழிப்பாக இருக்க வேண்டும். வீரத்தைப் போட்டு ஒரு மணி நேரம் ஊதியபின் பார்த்தால் புற்றாஞ்சோறு போலச் சத்து வெளிப்பட்டு நிற்கும். இதுதான் பதம், தீயின் வேறுபாட்டால் தாமதமாகவும் சீக்கிரமாகவும் சத்து வெளிப்படுவதுண்டு. ஆகையால் மேற்கண்ட பதம் வரும் வரையில் ஊதி, மூசையை எடுத்து ஆறவைத்துச் சத்தையெடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

ஆற்றலுள்ளவர்கள் இந்த விதமாகச் சத்தையெடுத்துப் பற்பம், செந்தூரமாகச் செய்து உபயோகித்தால் சிறப்புடைய குணமுண்டாகுமென நாமிங்கு எடுத்துச் சொல்ல வேண்டிய தில்லை. அப்பிரகச் சத்து எடுக்கும் முறைகள் அநேகம். அவற்றுள் இது மிகவும் சுலபமானதும் அனுபவ சித்தியானதுமாகும். ஆனால், எந்த வேலையையும் அதிகக் கடினமென மலைப்பவர்களுக்கு இது அதிகக் கடினமாகவே தோன்றும். "உளமுண்டானால் உறுவழியுண்டாம்" என்பது போல விருப்பமானவர்கள் எப்படியும் செய்து கொள்வார்கள்.

குறிப்பு

வச்சிரக் குகையை நாம் செய்வதைப் பார்க்கிலும் ஆங்கில மருந்துக் கடைகளில் விற்பதை வாங்கிக் கொள்வது உத்தமம். அவை அதிக

உறுதியாகவும் எவ்வித நெருப்பிற்கும் அசையாமலும் இருக்கிறது. ஒரு மூசை வாங்கி வைத்துக் கொண்டால் பலதடவைகளுக்கு உபயோகமாகும். வச்சிரக் குகை முறைகள் அநேகமிருந்த போதிலும் நாமதைச் சிரமப்பட்டுச் செய்வதை விட 2, 3 ரூபாயில் வாங்கிக் கொள்வது மிகவும் நன்று.

103. அப்பிரகப் பற்பம்

தூய்மை செய்த கிருஷ்ண அப்பிரக நவநீதம் 2 பலம (70 கிராம்), கொத்தவரைச் சமூலச்சாறு, நீலோற்பல மலர்ச்சாறு, கட்டுக்கொடிச் சமூலச்சாறு, பசு மூங்கிற் கிழங்குச்சாறு இந்நான்கும் வகை 1-க்கு ½ படி.

செய்முறை:- மேற்படி அப்பிரக நவநீதத்தைக் கல்வத்திலிட்டுக் கொத்தவரைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு அரைக்க வேண்டும். இதனை ஒரே நேரத்தில் செய்ய வேண்டுமென்னும் நிபந்தனையில்லை. சாவகாசம் வாய்க்கும் போதெல்லாம் அரைத்துக் கொள்ளலாம். இந்தச் சாறுகளும் ஏககாலத்திலேயே எல்லாம் வேண்டுமென்னும் அவசியமுமில்லை. எந்தெந்தச் சமயத்தில் எவ்வெவ்வளவு கிடைக்கிறதோ அவ்வவ்வளவு எடுத்துக் கொள்ளலாம். ஆனால், ஒரு கணக்கேற்படுத்தி மொத்தம் அரைப்படிச்சாறு அரைப்பிற் செலுத்த வேண்டியதே முக்கியமாகும். மேற்கண்ட விதமாகச் சிறுகச் சிறுக வார்த்தரைத்து மேற்கண்ட கொத்தவரைச் சாறு அரைப்படி சென்ற பின் வில்லை செய்து உலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடிச் சீலைமண் செய்து உலர்த்தி 5 பலம (175 கிராம்) உள்ள நாற்பது விராட்டியில் குழிப்புடமிட்டுக் குளிர ஆறியபின் எடுத்துக் கொள்ளவேண்டும்.

பிறகு மேற்படி அரைப்பக்குவமான அப்பிரகத்தைக் கல்வத்திலிட்டு முன் சொன்ன நீலோற்ப மலரின் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து, மேற்கண்ட விதமாகவே அரைப்படிச் சாறுஞ் சென்றபின். வில்லை 'செய்துலர்த்தி முன்போற் புடமிடவும்.

பிறகு இதனைக் கட்டுக்கொடிச் சாற்றிலும் மேற்கண்ட நிபந்தனைப்படி புடமிட்டுக் கொள்ளவேண்டும்.

முடிவாக, மூங்கிற் கிழங்குச் சாற்றிலும் மேற்கண்ட நிபந்தனைப்படியே புடமிட்டெடுக்க சற்று வெளிறின செந்நிறமான பற்பமாயிருக்கும். இது எந்த வணணமுடையதாயினும் குணமொன்றேதான். இது அனுபவத்தால் நிச்சயிக்கப் பட்டிருக்கிறது.

அளவு:- ½ முதல் 1 குன்றிமணி எடை.

பயன்படுத்தலும், துணைமருந்தும்: - ஆவாரம்பூ 1 பலம் (35 கிராம்) ஆவாரங்கொழுந்து 1 பலம் (35 கிராம்) இவ்விரண்டையும் அம்மியில் அரைத்தெடுத்துக் கொள்க. ஒரு பாண்டத்திற் கால் படி மோரை விட்டுப் பானை வாய்க்கு வேடுகட்டி முன் சித்தப்படுத்தினதை வைத்து அடுப்பேற்றி நன்றாய் வெந்தபின் இறக்கி அப்பிட்டையும் பானையில் மோர் முறிந்து திரண்டிருக்குங் கற்கத்தையும் சம அளவாக எடுத்து இரண்டையும் அம்மியில் வைத்தரைத்து அதில் ஒரு பலம் எடுத்து அதற்குள் மேற்படி பற்பத்தை அளவுப்படி வைத்துச் சேர்த்துக் காலை, மாலை இரண்டு வேளையும் உட்கொண்டு வரவேண்டும். இவ்விதம் ஒரு வாரம் செய்து வந்தால் மது மேகம், மதுமேகத்தால் உண்டாகும் ஆயாசம், களைப்பு ஆகியவை தீரும். மூன்று நாளைக்குள் மூத்திரம் அதிகப்பட்டிருக்கிற அளவும். மூத்திரத்திலிருக்கிற சர்க்கரையும் குறைய ஆரம்பமாகிவிடும். நோய் நாட்பட்டதாக இருந்தால் இடையில் பத்துப் பத்து நாள் விட்டு மூன்று முறை கொடுத்தால் அதுவுங் குணமாகிவிடுகிறது. இன்னும் மதுமேக நோய்க்கான தக்க துணை மருந்துகளிலும் கொடுத்துக் குணங் காணப்பட்டிருக்கிறது.

வெள்ளரி விதைப் பருப்பை அரைத்துப் பிழிந்த பால் 1½ பலம் (17½ கிராம்). நெருஞ்சி இலையைத் தண்ணீரிற் கலக்கி எடுத்த கோழை ½ பலம் (17½ கிராம்). தேன் 1 பலம் (35 கிராம்). இம்மூன்றையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துட்கொண்டுவர மிக்க முயற்சி, எரிச்சல், வெகுநேரம் பொறுத்துப் பொறுத்துத் துளித்துளியாய் வருதல் என்ற இக்குணங்களுடைய நீரறுகல், அல்லது நீர்க்கட்டு என்னும் நோய்குணமாகும்.

மேற்றோல் சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி இவற்றைத் தனித்தனி இடித்துத் துணியில் வடிகட்டிய சூரணம் வகை 1க்குக் 2 குன்றிமணி எடை (7 கிராம்) தேன் 3 வராகன் எடை. (10½ கிராம்) இவற்றைச் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துட் கொண்டுவர எல்லா வகைக்கிராணி நோய்களுங் குணமாகும்.

நிலப்பனைக் கிழங்குச்சாறு, தண்ணீர்விட்டான் கிழங்குச் சாறு, இவ்விரண்டும் வகை 1-க்கு 2 வராகன் எடை (7 கிராம்), சீமை நீர்முள்ளிவிதைச் சூரணம் 5 வராகன் எடை (17½ கிராம்), தேன் ½ வராகன் எடை (1¾ கிராம்). இவையெல்லாவற்றையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண எல்லாவகை வெட்டை நோய்களும் தீரும்.

வெள்ளறுகை அரைத்த விழுது 5 வராகன் எடை (17½ கிராம்), பசுவின் வெண்ணெய் 5 வராகன் எடை (17½ கிராம்), சருக்கரை இரண்டரை வராகன் எடை (8¾ கிராம்) இவை எல்லாவற்றையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண வெள்ளை, வெட்டை ஆகிய நோய்கள் தீரும்.

சீந்திற் சருக்கரை வராகன் எடை, மூங்கிலுப்புச் சூரணம் வராகன் எடை 1, கற்கண்டுத் தூள் வராகன் எடை ½ - இவைகளைக் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண எல்லாவகை வெட்டை நோய்கள், எலும்பு நோய்கள் புராதன சுரங்கள் ஆகியவைகள் தீரும். பசி அதிகப்படும்.

சீரகச் சூரணம் வராகன் எடை ¼ தேன் வராகனெடை - ½ , இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப் படி சேர்த்துண்ண வாந்தி பசியின்மை ஆகியவைகளும் தீரும்.

சிலாசத்துப் பற்பம் அல்லது தூய்மை செய்த சிலாசத்து 2குன்றிமணி எடை, கற்கண்டுத் தூள் - 1 வராகன் எடை (3½ கிராம்), பசுவின் நெய் - 3 வராகன் எடை (10½ கிராம்), இவற்றைச் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துட்கொள்ள இந்திரிய சம்பந்தமான நோய்கள், இரத்தக் கெடுதியினாலுண்டான நேய்கள், சுவாசம், இருமல் ஆகியவைகள் தீரும்.

அத்திப்பட்டைச் சாறு, நாகப்பட்டைச்சாறு இவையிரண்டும் வகை 1-க்கு வராகன் எடை 3 (10½ கிராம்). இவற்றைக் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண இரத்தமூலம், இரத்தபித்தம் ஆகியவைகள் தீரும்.

இன்னும் நீர்க்கட்டு, சன்னிநோய், மூர்ச்சை நோய், நேத்தர வாயு, நேத்திர சூலை, பாரிசவாயு, பக்கவாயு ஆகிய நோய்களும் தீரும். ஆனால், மருத்துவர்கள் அந்தந்த நோய்களுக்குத் தகுந்த துணை மருந்துகளான குடிநீர், இளகங்கள் முதலியவைகளிற் கொடுக்க வேண்டும்.

எருக்கிலைச்சாறு 1 வராகன் எடை (3½ கிராம்), தேன் 1 வராகன் எடை (3½ கிராம்), இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துட்கொள்ள பல தேள் நஞ்சுகள், குளவி நஞ்சுகள் முதலிய பல வகை நஞ்சுகள் தீரும்.

உத்தாமணிச் சமூலச்சாறு, அல்லது உத்தாமணிப்பூச்சாறு வராகன் எடை - 1 (3½ கிராம்). தேன் வராகன் எடை - 1 (3½ கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துட் கொள்ள கரும்பூரான் ஆதியாகச் சாணிப்பூரான் ஈறாகவுள்ள பல பூரான் நஞ்சுகள் தீரும்.

நிலவேம்பு சமூலச்சாறு, அல்லது நிலவேம்பு இலைச்சாறு 1 வராகன் எடை - (3½ கிராம்). தேன் 1 வராகன் எடை - (3½ கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்து உட்கொள்ள கரும்பூரான் ஆதியாகச் சாணிப்பூரான் ஈறாகவுள்ள பல பூரான் நஞ்சுகள் தீரும்.

வெட்பாலைப் பட்டைச்சாறு 1 வராகன் எடை - (3½ கிராம்) தேன் வராகன் எடை 1 - (3½ கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி உட்கொண்டு வர நீர்வண்டு, சொறிவண்டு முதலிய பல வண்டுகளின் நஞ்சுகள் தீரும்.

இலைக்கள்ளியை நெருப்பில் வாட்டிப்பிழிந்த சாறு 1 வராகன் எடை - (3½ கிராம்). தேன் 1 வராகன் எடை - (3½ கிராம்), இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்து உண்ணச் சுண்டெலி ஆதியாக பேரெலி யீறாகவுள்ள பல எலிக்கடி நஞ்சுகள் தீரும்.

வன்னியிலைச்சாறு 1 வராகன் எடை (3½ கிராம்), தேன் 1 வராகன் எடை - (3½ கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி உட்கொண்டு வர மரநாய் ஆதியாகக் கடிநாய் ஈறாகவுள்ள பல நாய்கடி நஞ்சுகள் தீரும்

மலைவேம்பின் சாறு 1 வராகன் எடை (3½ கிராம்) தேன் 1 வராகன் எடை (3½ கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்படி பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண எல்லா வகை மூஞ்சூற்றின் கடி நஞ்சுகளும் தீரும்.

வெள்ளெருக் கிலையைச் சற்று நெருப்பில் வதக்கிப் பிழிந்த சாறு 1 வராகன் எடை (3½ கிராம்), தேன் 1 வராகனெடை - (3½ கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண நட்டுவாக்காலியின் பேதமான மாரகார்த்தி, மோகனார்த்தி, மிருகார்த்தி, பெருங்காற்சம்மி என்னும் இவ்வகை நஞ்சுகள் தீரும்.

தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு 1 வராகன் எடை (3½ கிராம்), தேன் 1 வராகன் எடை - (3½ கிராம்), இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ணப் பலவகை மரவட்டை நஞ்சுகள் தீரும்.

ஓரிலைத்தாமரைச் சாறு 1 வராகன் எடை - (3½ கிராம்). தேன் 1 வராகன் எடை - (3½ கிராம்), இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ணப் பல வகை நரி நஞ்சுகள் தீரும்.

கையாந்தகரைச் சாறு 1 வராகன் எடை -(3½ கிராம்), தேன் 1 வராகன் எடை - (3½ கிராம்). இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ணப் பல வகைச் செய்யான் நஞ்சுகள் தீரும்.

ஆடுதின்னாப் பாலைச்சாறு 1 வராகன் எடை - (3½ கிராம்), தேன் 1 வராகன் எடை - (3½ கிராம்), இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண பல வகை அட்டைக்கடி நஞ்சகள் தீரும்.

குப்பைமேனியிலைச் சாறு 1 வராகன் எடை - (3½ கிராம்). தேன் 1 வராகன் எடை (3½ கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படிக் கலந்துண்ணக் காரீ முதலிய பல ஈக்கடி நஞ்சுகள் தீரும்.

வெண் துளசிச்சாறு அல்லது, கருந்துளசிச்சாறு 1 வராகன் எடை - (3½ கிராம்). தேன் 1 வராகன் எடை - (3½ கிராம்), இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படிக் கலந்துண்ண சுரம், சன்னி முதலிய நோய்களும் இன்னும் பல நோய்களும் தீரும்.

துளசிச் சாறானது அப்பிரக பற்பத்தின் அல்லது, அப்பிரக செந்தூரத்தின் பொதுவான துணை மருந்தெனச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் வேறுவகை துணை மருந்துகள் கிடைக்காத அவசரமான காலங்களில் மேற்கண்டபடி துளசிச் சாற்றில் கொடுக்கலாம்.

இன்னும் இந்தப் பற்பத்தைக் கீழ்க்காணும் சிறுகீரைப் பிரயோகத்தில கலந்துக் கொடுத்துவர இடுமருந்தினாலுண்டாகும் கெடுதல்கள், இருமல், கக்கல் செரியாமை, வயிற்றுப்புசம் முதலியவைகள தீரும்.

சிறுகீரையின் பயன்

காட்டுச் சிறுகீரை வேர் 2 பலம் - (70 கிராம்), பசுவின் நெய் செல்லத்தக்க அளவு.

செய்முறை:- இதனை அம்மியில் வைத்து மைப் போலரைத்துச் சிறு வில்லைகளாகச் செய்து பசுவினெய்யில் வறுத்துக் கொள்ளவேண்டும். காலையில் ஒரு வில்லையுடன் கொஞ்சம் தேனைச் சேர்த்து மத்தித்து மேற்படி பற்பத்தில் அளவுப்படி கலந்துண்ண வேண்டும். மாலையில் இவ்விதமே சாப்பிட வேண்டும். ஆகாரத்துடன் மேற்படி வில்லைகளில் இரண்டு அல்லது, மூன்றையும் அதில் எஞ்சி இருக்கிற நெய்யிற் கொஞ்சத்தையும் சாப்பிடவேண்டும். இவ்விதம் ஒரு வாரம் செய்து வந்தால் எவ்வகை மருந்தீடும் தீரும். இது பல தடவைகளில் பலருக்குச் செய்தனுபவப்பட்டது. இதனால் கழிச்சல் ஆவதுமில்லை. நீர் அதிகப்படுகிறதுமில்லை. வேர்வை உண்டாகிறதுமில்லை. ஆனால் மருந்தோ அல்லது, மருந்தின் வேகமோ எவ்விதம் எடுபட்டுப் போகிறதென்பது ஆச்சரியமாகவே இருக்கிறது சந்தேகமுள்ளவர்கள் தாங்களும் இதனையும் பயன்படுத்தி அனுபவத்தால் தெரிந்து நிச்சயித்துக் கொள்ளலாம்.

மருந்துணவு:- எந்தெந்த பண்டங்களினால் எந்தெந்த நோய் உண்டாகிறதோ அந்தந்த பண்டங்களையும், எந்தெந்த நோய் எந்தெந்தக் காரணங்களால் நேரிடுகிறதோ அந்தந்தக் காரணங்களையும், நீக்குவதே முக்கியமான பத்தியம், இன்னும் பெண் மோகமானது எல்லா நோய்களுக்கும் பத்தியமாயிருப்பது போலவே இந்த அப்பிரக பற்பத்துக்கும் கண்டிப்பாக நீக்கவேண்டியது.

104. அப்பிரக பற்பம் (வேறு)

தூய்மை செய்த கிருஷ்ண அப்பிரக நவநீதம் 2 பலம் (70 கிராம்), எருக்கம்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை:- மேற்படி அப்பிரக நவநீதத்தைக் கல்வத்திலிட்டு எருக்கம்பாலைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமமரைத்து வில்லை செய்துலர்த்தி ஒட்டில் வைத்து மேலோடு மூடி ஏழு சீலைமண் செய்துலர்த்தி முழச் சதுரக் குழியில் புடமிட்டு ஆறின பின் எடுக்க வேண்டும்.

இதனைக் கல்வத்திலிட்டு மேற்கண்ட எருக்கம்பாலைச் சிறுகச் சிறுகவிட்டு, இரண்டு சாமம் அரைத்து வில்லை செய்துலர்த்தி, அகலில்

வைத்து மேலகல் மூடி முன்போற் சீலைமண் செய்துலர்த்தி முன்போற் புடமிட வேண்டும்.

குளிர ஆறின பின்னெடுத்து, முன் பாலையே சிறுகச் சிறுக விட்டு இரண்டிரண்டு சாமமரைத்து, முன்போலவே உலர்த்திக் கவசித்து மடக்கி மடக்கி ஏழு புடமிட்டெடுக்க, இயற்கையினது அருளால் வெண்மையான பற்பமாக இருக்கும்.

அளவு:- ½ முதல் 1 குன்றிமணி எடை

துணைமருந்து:- துளசிச் சாறு, தேன், நெய் முதலியவைகளாகும்.

மேற்சருகை நீக்கியிடித்துப் பிழிந்த சீந்திற் கொடிச் சாறு 3- வராகன் எடை (10½ கிராம்), வேப்பம்பட்டைச் சாறு 2 வராகன் எடை (7 கிராம்), தேன் 3 வராகன் எடை - (10½ கிராம்), இவற்றைச் சேர்த்து மேற்படி பற்பத்தை அளவுப் படி கலந்துண்ண வரணமேகங்கள், ஆறாதவிரணங்கள், குழி விழுந்த புண்கள் ஆகியவைகள் தீரும்.

ஆவாரை விதையை வறுத்திடித்துத் துணியில் வடிகட்டிய தூள் 2 வராகன் எடை - (7 கிராம்), தேன் 2 வராகன் எடை (7கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண மதுமேகம், மதுமேகத்தாலுண்டாகும் தாகம், நாவறட்சி முதலயவை தீரும்.

அதிமதுரப்பால் ¼ வராகன் எடை முலைப்பால் 1 வராகன் எடை (3½ கிராம்), தேன் வராகன் எடை - 1 (3½ கிராம்) மேற்படி முலைப்பாலில் மேற்படி அதிமதுரப்பாலைவிட்டு ஊற வைத்தால் அது ஊறி மிருதுவாகிவிடும். பிறகு தேனையுங் கலந்து மத்தித்தால் குழம்புப் பதமாகிவிடும். பிறகு மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி அதனுடன் சேர்த்துட் கொண்டுவர இருமல், கபநோய் ஆகியவைகள் தீரும்.

இன்னும் தகுந்த துணைமருந்து, நோய்களின் மூல சலோ தரநோய், ஈறிலுண்டாகும் ரணங்கள், குட்ட நோய், பெருங்கழிச்சல் நோய் ஆகியவைகள் தீரும்.

மருந்துணவு:- மேற்கண்டவைகளேயாகும்.

105. அப்பிரகப் பற்பம் (வேறு)

தூய்மை செய்த அப்பிரக நவநீதம் 1 பங்கு, முள்ளங்கிக் கிழங்கு 2 பங்கு, முள்ளங்கிக் கிழங்குச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- மேற்படி கிழங்கைக் கல்லுரலிலிட்டு நைய சிதைத்து எடுத்து மேற்படி நவநீதத்தையும் சேர்த்துக் கல்வத்திலிட்டு ஒருசாமம் அரைத்து. ஒரு மண் ஓட்டில் பரப்பி மேலோடு மூடிச் சீலைமண் செய்யாமல் கவசத்தின் பத்துப் பங்கெடை விராட்டியிற் புடமிட்டு, ஆறின பின்னெடுத்துக் கல்வத்திலிட்டு முள்ளங்கிச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு இரண்டு சாமமரைத்து, வில்லை செய்து உலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடு மூடி ஐந்து சீலை மண் செய்து உலர்த்திக் கவசத்தின் ஒன்பது பங்கெடை விராட்டியிற் புடமிட வேண்டும். ஆறினபின் எடுத்து முன் போலவே கல்வத்திலிட்டு முள்ளங்கிக் கிழங்குச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு இரண்டு சாமமரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடு மூடிச் சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் எட்டுப் பங்கெடை விராட்டியிற் புடமிட வேண்டும். பிறகு எடுத்து முன் போல் கிழங்குச் சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு இரண்டு சாமமரைத்து வில்லை செய்து உலர்த்தி மடக்கி மடக்கிக் கவசத்தின் எட்டுப் பங்கெடை விராட்டியில் 5 புடம் போட வேண்டும். ஆகக் கூடிய புடம் ஏழும் தீர்ந்தால் வெண்ணிறமான பற்பமாகியிருக்கும்.

அளவு: 1 முதல் 2 குன்றிமணி எடை

துணை மருந்து:- தேன், நெய், தகுந்த இளகங்கள் முதலியவைகளாம்.

புதினா இலைச் சாறு, இஞ்சிச் சாறு, தேன் இம் மூன்றையும் சமபாகமாகச் சேர்த்துக் காய்ச்சி மணப்பாகு பதமாக எடுத்து வைத்துக் கொள்ளவேண்டும். இந்த மணப்பாகு வராகன் எடை மூன்றுடன் மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ணப் பசியுணர்வு அதிகப்படும். பசியாமை நோய் தீரும். ஆகாரம் அதிகமாகச் சென்று இரத்த விருத்தி முதலியவை உண்டாகி உடல் வளம், உடல் திடம் ஆகியவைகள் அதிகரிக்கும்.

கோதுமைச் சத்து 2½ பலம் (87½ கிராம்). நெய் 2½ பலம் (87½ கிராம்), சர்க்கரை 5 பலம் (175 கிராம்). கோதுமைச்சத்தை 5 பலம் (175 கிராம்) தண்ணீரிற் கரைத்து வடிகட்டித் தனியே வைத்துக்கொள்ள வேண்டும். சர்க்கரையை இரண்டு பலம் தண்ணீரிற் கரைத்து வடிகட்டி அடுப்பேற்றி நெய்யையும் அதனுடன் சேர்த்துக் காய்ச்சும் போது முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற கோதுமைச் சத்துப் பாலைச் சிறுகச்சிறுக விட்டுக் கை விடாமல் கரண்டியால் துழாவி வரவேண்டும். அப்படிச்

துழாவி வராவிட்டால் கட்டி கட்டியாய்ப் போகும். ஆகையால் கட்டிவிடாமல் பார்த்துத் துளாவ வேண்டியது. இவ்விதம் கோதுமைச் சத்து முழுவதையும் சிறுகச்சிறுக விட்டு துழாவி வந்தால் நீரெல்லாம் சுண்டி நெய் கக்கும் பதத்தில் இறக்கி வைத்து ஆறின பின் எடுத்தால் பிசின் போன்ற அல்வாவைப் போலிருக்கும். இந்த அல்வா செரித்தல் சக்திக்குத் தகுந்ததுபோல 1 முதல் 2 பலம் சாப்பிடலாம். சமயோசிதம் போல் இந்த அல்வாவுடன் மேற்படி பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண எவ்வகைப்பட்ட சத்துக் குறைவும் தீர்ந்து உடல் பலம், தேகதிடம், இந்திரிய வலிமை தாது வலிமை ஆகியவைகள் உண்டாகும்.

அதிமதுரத் தூள் ½ வராகன் எடை (1¾ கிராம்), தேன், நெய், இவ்விரண்டும் வகை 1க்கு வராகன் எடை 2 சேர்த்து அளவுப்படி இவற்றை மேற்கண்ட பற்பத்தை கலந்துண்ண இரத்த பித்த நோய் தீரும்.

வெங்காயச்சாறு, தேன் இவ்விரண்டும் வகைகளுக்கு 3 வராகன் எடை (10½ கிராம்), இவ்விரண்டையும், கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவப்படி துணைமருந்துடன் சேர்த்துண்ண வயிற்றுப்போக்கு, பேதி ஆகியவைகள் தீரும்.

ஏலக்காய்த் தூள் 4 குன்றி மணியெடை - தாளிசப்பத்திரித் தூள 8 குன்றிமணியெடை - தேன் வராகன் எடை - 3 இவைகளைக் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண பலகிரகணிநோய செரியாமை ஆகியவைகள் தீரும்.

இன்னும் தகுந்த துணைமருந்துகளிட தாதுக்குறைவு வலுக்குறைவு நோய், வாயுநோய், மார்பெரிவு, அருவருப்பு, மூத்திரநோய சுரபங்கநோய் முதலியவைகள் தீரும்.

106. அப்பிரக பற்பம் (வேறு)

தூய்மை செய்த கிருஷ்ண அப்பிரக நவநீதம் 5 பலம் இதனை ஒரு பீங்கான் பாத்திரத்திற் போட்டு இருபது பலம் புளியாரைச் சாற்றை பாலில் விட்டு நான்கு நாள் ஊறவைக்க வேண்டும். பிறகு அதையெடுத்துக் கல்வத்திலிட்டு இரண்டு சாமம் அரைக்க வேண்டும். அரைப்பதற்குச் சாறு போதாதிருந்தால், இன்னுங் கொஞ்சம் புளயாரைச் சாற்றை விட்டு அரைத்துக் கொள்ளலாம். பிறகு அரைத்து வில்லை செய்து கொள்ளவும். பழம்புளியைக் கோது, கொட்டை முதலியவைகளை நீக்கி அம்மியில் வைத்து மைப் போலரைத்து

வில்லையின் மீது இரண்டங்குல கனம் கவசமேத்திப் புளியாரைச் சக்கையைக் கீழ் மேலிட்டு ஓட்டில் வைத்து மேலோடு மூடிச் சீலைமண் செய்யாமல் கெசபுடமிட வேண்டும். பிறகு அப்பிரகத்தை எடுத்துக் கல்வத்திலிட்டுப் புளியாரைச் சாற்றைச் சிறுகச்சிறுக விட்டு இரண்டு சாமம் அரைத்து வில்லை செய்து முன்போற் புளியை அரைத்து முன்போற் மேற்பூசி புளியாரைச் சக்கையைக் கீழ் மேலிட்டு இரண்டு சீலை செய்து முன்போற் கெசபுடமிடவும். இவ்விதம் மூன்றாம் புடமும் போட்டெடுத்துப் பிறகு தயிர் விட்டு இரண்டு சாமம் அரைத்து வில்லை செய்துலர்த்தி அகலில் வைத்து மேலகல் மூடிச் சீலைமண் செய்து முன்போற் புடமிடவும், பிறகு எடுத்து தயிர் விட்டு இரண்டு சாமம் அரைத்து வில்லை செய்துலர்த்தி ஓட்டில் வைத்து மேல் ஓடு மூடி முன்போற் சீலைமண் செய்துலர்த்தி முன்போற் புடமிடவும். ஆறின பின்னெடுக்க சுத்தமான பற்பமாயிருக்கும்.

அளவு: 1½ முதல 3 குன்றிமணி எடை.

துணைமருந்து: தேன், நெய், இன்னுஞ் சமயோசிதமான இளகங்கள், சர்பத்துகள் ஆகியவைகளுமாம்.

தீரும் நோய்கள்: வெள்ளை ஒழுக்கு இருபத்தொன்று, இருமல், எண்வகைக் கப நோய், மேகஊறல், ஆனைக்கால் வீக்கம் முதலிய அநேக நோய்கள் தீரும்.

மருந்துணவு : மேற்கண்டவைகளாம்.

107. ஜவாஹிர் மொஹறா, அல்லது இரத்தின சொர்ணமாலியம்

மேற்கண்ட அப்பிரகபற்பம் 1 பலம் - (35 கிராம்), தொளையிடாத நன்முத்து, செம்பவளம், தங்கரேக்கு அல்லது, தங்க அரப்பொடி, வெள்ளிரேக்கு அல்லது, வெள்ளி அரப்பொடி இவை வகை 1 -க்கு 1¼ வராகன் எடை கொடியுகா இலைச்சாறு, வெள்ளையவரைபூச் சாறு, சோற்றுக் கற்றாழம்பால் இவை தனித் தனியாக வகை 1-க்கு செல்லத்தக்க அளவு, முதல் தரமான பன்னீர் செல்லத்தக்க அளவு.

செய்முறை: முத்தை நன்னிக்கல் கல்வத்திலிட்டுச் சிதறப் போகாமல் பக்குவமாக நொறுக்கி நுண்ணிய பொடியாக அரைத்துத் தனியே எடுத்துக்கொள்ள வேண்டும். பிறகு பவளத்தைக் கல்வத்திலிட்டு அரைத்து நுண்ணிய பொடியாகத் தனியே எடுத்துக் கொள்ளவேண்டும் பிறகு அப்பிரக பற்பம், முத்துத் தூள், பவளத்தூள்

ஆகிய மூன்றையும் கல்வத்திலிட்டுக் கொடியுகா இலைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு அரைக்க வேண்டும். தங்க ரேக்கு வெள்ளி ரேக்கை ஒரே தடவையில் எல்லாவற்றையும் போட்டு விடாமல் ஒவ்வொன்றாய், அல்லது, இரண்டிரண்டாய்ப் போட்டு அரைத்தரைத்துச் சேர்த்துக் கொள்ள வேண்டும், அப்படிச் செய்யாமல் ஏகமாய்ச் சேர்த்தால் உருண்டையாகத் திரண்டு போய் முடியும். தங்க அரப்பொடி, வெள்ளி அரப்பொடியானால் ஒன்றாகச் சேர்த்து அரைத்துவிடலாம். இவ்விதம் கொடியுகா இலைச்சாற்றில் நான்கு சாமம் அரைத்துச் சிறு வில்லைகளாகச் செய்து வெய்யிலிலுலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடிச் சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தினெடைக்குப் பத்துப்பங்கெடை விராட்டியிற் புடமிட்டு ஆறினபின் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இவ்விதம் சித்தப்படுத்தினதைக் கல்வத்திலிட்டு வெள்ளை அவரைப் பூசசாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமம் அரைத்து முன்போற் சிறு வில்லைகளாகச் செய்து வெய்யிலிலுலர்த்தி முன்போல் ஓட்டிலிட்டு மேலோடு மூடி முன்போற் சீலைமண் செய்துலர்த்தி முன்போற் புடமிட்டு ஆறினபின் எடுத்துக் கொள்ளவும்.

இதனைக் கல்வத்திலிட்டுச் சோற்றுக் கற்றாழம்பாலைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமம் அரைத்து மேற்கண்ட படியே புடமிட்டு எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்த மூன்று புடமுந் தீர்ந்த பிறகு பன்னீரை விட்டு முன்போலரைத்து முன்போலவே இரண்டு புடம் போட்டு எடுத்துக் கொள்ள வேண்டும். இயற்கையின் அருளால் வெளிறின சிவப்பு நிறமுள்ள பற்பமாகி இருக்கும். சில சமயங்களில் வெண்மையாகவும் இருக்கும். இப்படி வண்ணவேறுபாடு உண்டாவதற்குக்காரணம் அரைப்பு, புடம் ஆகியவைகளின் வித்தியாசமே தவிர வேறுபாடுகள் இல்லை எவ்வித நிறமுடைய தாயினும் குணஞ் செய்வதெல்லாம் ஒன்றே. இதனை இவ்விதமே பற்பமாகவும் உபயோசிக்கலாம். அல்லது பன்னீரை விட்டு அரைத்து மாத்திரைகளாகச் செய்தும் உபயோகக்கலாம்.

அளவு:- 2 முதல் 3 குன்றிமணி எடை.

துணைமருந்து:- பன்னீர், தேன், முலைப்பால் முதலியவைகளும் இன்னும் நோய்களுக்குத் தகுந்த இளகம், சர்பத் ஆகியவைகளுமாம்.

தீரும் நோய்கள்:- எல்லாவகை காச நோய், இருமல் நோய், குன்மம், பெருங்கழிச்சல், நீரிழிவு, வெள்ளை ஒழுக்கு விடாச்சுரம், எலும்பைப் பற்றிய காய்ச்சல், எருவாய் நோய், முதலிய அநேக நோய்கள் தீரும். இரத்த விருத்தி முதலியவைகளுண்டாகி முகப்பொலிவு, உடல் பொலிவு ஆயுள் விருத்தி ஆகியவைகளுண்டாகும்.

மருந்துணவு:- அவரவர்களின் உடல் நிலைமைக்கு ஒவ்வாத உணவுப் பொருள்களையும், அந்தந்த நோய்களுக்கு காரணமான உணவு பொருள்களையும் நீக்க வேண்டியதே முக்கிய பத்தியம். தாதுவலிமை முதலியவைகளுக்காகச் சாப்பிடும்போது சத்துள்ள உணவுகள் அல்வாக்கள், மிட்டாய் வகைகள் ஆகியவைகளை சாப்பிட்டு வர வேண்டியது.

இந்த ஜவாஹர் மொஹறாவுக்காக முன் சொல்லி இருக்கிற முறைப்படி செய்யப்பட்ட அப்பிரக பற்பத்தைச் சேர்த்துக் கொள்ளலாம். இது அகப்படாத காலங்களில் வேறு விதமாகச் செய்யப்பட்ட அப்பிரக பற்பம். அப்பிரகச் செந்தூரம் ஆகியவைகளையும் சேர்த்துக் கொள்ளலாம்.

சக்தியுள்ள கனவான்கள் இந்த அருமையான மருந்தைச் செய்து வைத்திருப்பதனால் உற்ற சமயத்தில் அநேகருக்கு உபயோகப்பட்டுப் புண்ணியத்திற் கேதுவாகும், நினைத்த போது செய்கிறதாயிருந்தால் கூடாத காரியம். மேலும் இவ்வகை மருந்துகள் நாட்செல்லச் செல்ல குணமும் அதிகப்பட்டுக் கொண்டே போகும். பணம் முதலிய பொருள்களைத் தருமஞ் செய்து கிடைக்கும் புண்ணியத்தைப் பார்க்கிலும் இவ்வித மருந்துகளைச் செய்து கடினப்படுத்தும் கெட்ட நோய்களினால் பீடிக்கப்படுபவர்களைச் சுகப்படுத்தி உயிரைக் காப்பாற்றுவதினால் கிடைக்கும் புண்ணியமே சிறந்ததாம்.

107. அப்பிரக பற்பம் (வேறு)

ஒரு மண் புதுக்கலயத்தில் சுண்ணாம்பில் தண்ணீர் விட்டுக் குழைத்து, அந்தக் கலயத்திற்குள் நிரப்பி கலயத்தின் மேலும் பூசிவிட வேண்டும். இரண்டொரு நாள் வைத்துக் கலயத்திற்குள்ளிருக்குஞ் சுண்ணாம்பை நீக்கி ஒரு நாள் வெய்யிலிற் காயவைத்து, மறுநாள் முன்போல் அந்தக் கலயத்திற்குள்ளிருக்குஞ் சுண்ணாம்பை நீக்கி வெய்யிலில் உலர்த்த வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஏழு தடவைகள் அல்லது, பதினொரு தடவைகள் சுண்ணாம்பை நிறைத்து

நிறைத்து எடுத்தெடுத்து உலர்த்தித் சித்தப் படுத்திக் கொள்ள வேண்டும். நாட்டுப் புறங்களில் உபயோகிக்கும் பழைய சுண்ணாம்புக் கலயம் அகப்பட்டால் மிகவும் சிறந்தது. அப்படி அகப்படாத சமயங்களில் மேற்கண்ட விதமாகச் சித்தப் படுத்திக் கொள்ள வேண்டியது. இவ்விதக் கலயத்தில் சுண்ணாம்பில்லாமற் சுரண்டியெடுத்து விட்டு அதில் தூய்மை செய்த கிருஷ்ண அப்பிரகப் பொடியைப் போட்டு அதில் எலுமிச்சம் பழச் சாற்றை விட வேண்டும். அந்தச் சாறானது பொடிக்கு மேல் ஒரு அங்குலம் அல்லது ஒன்றரை அங்குலம் நிற்க வேண்டியது. கலயத்தின் வாய்க்குச் சில்லிட்டுச் சீலைமண் செய்து ஈர முலர்த்தி முழச் சதுரக் குழியில் எருவடுக்கிப் புடமிட வேண்டும். குளிர ஆறினபின் எடுத்துக் கல்வத்திலிட்டு வேர்க்கடலை இலைச்சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடு மூடிச் சீலைமண் செய்து உலர்த்தி முன்போல் முழப் புடமிடவும்.

இந்தப்படி மேற்படி வேர்க்கடலை இலைச் சாற்றில் அரைத்தரைத்து மடக்கி மடக்கி ஏழு தடவை புடமிட்டெடுக்க இயற்கையின் அருளினால் உயர்ந்த பற்பமாயிருக்கும்.

அளவு: 2 முதல் 3 குன்றிமணி எடை.

துணை மருந்தும், தீரும் நோய்களும் :- பசு வெண்ணெய் அல்லது கலப்பான வெண்ணெய் 1 வராகன் எடை (35 கிராம்) இதனுடன் மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துக் காலையில் ஒரு வேளை மாத்திரம் ஏழு நாள் உட்கொண்டு வர மேகசூலைகள் தீரும்.

வேப்பிலைப் பழுப்பு, மஞ்சள், பனை வெல்லம் இம் மூன்றும் வகைக்கு 3½ வராகன் எடை. இம் மூன்றையும் ஒன்றரை ஆழாக்குத் தண்ணீரில் போட்டு அரை ஆழாக்காகச் சுண்டவைத்து இறக்கி வடிகட்டி, மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துக் காலையில் மாத்திரம் ஒரு வேளை உட்கொண்டு வர உதிரக்கட்டு பிரசவத்திலுண்டாகும் உதிரச் சிக்கல், நாட்பட்ட சூதகவாயு, நாட்பட்ட சூதகவலி, அக்கிரமமான சூதகம் முதலிய கருப்பைச் சம்பந்தமான பல நோய்கள் தீரும்.

தேன் 1 வராகன் எடை, அதிமதுரச் சூரணம் 5 வராகன் எடை கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துக் காலையில் ஒருவேளை ஏழு நாள் உட்கொண்டுவர இருமல் நோய்கள் தீரும்.

வெண்ணெய் 2½ வராகன் எடை, தேன் 2½ வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துக் காலை, மாலை இரண்டு வேளையும் 5 நாள் உபயோகித்துவரின் எல்லாவகைப் பிரமேக நோய்களும் தீரும்.

மிளகுச் சூரணம் 2½ வராகன் எடை, வெண்ணெய் 2½ வராகன் எடை, இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துக் காலை, மாலை இரண்டு வேளையும் ஏழுநாள் உபயோகித்து வந்தால் பாரிச வாயு, பட்சவாதம் ஆகியவைகள் தீரும்.

கெட்டித் தயிர் 5 வராகன் எடை, தேன் 5 வராகன் எடை, இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தையும் அளவுப் படி கலந்து காலை, மாலை இரண்டு வேளையும் ஏழுநாள் உட்கொண்டு வர பாண்டு நோய், மகோதர நோய் ஆகியவைகள் தீரும்.

இன்னும் தகுந்த துணை மருந்துடன் மேற்கண்ட பற்பத்தை சேர்த்துக் கொடுக்க இருபத்தொரு வகை மேகமும் தீரும்.

மருந்துணவு: மீன், கருவாடு, ஆகியவைகளை அறவே நீக்கி இச்சா பத்தியமாகவும் இருக்க வேண்டியது.

108. அப்பிரகச் சத்துப் பற்பம்

அப்பிரகச் சத்து 1 பலம், எருக்கம்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை: மேற்படி அப்பிரகச் சத்தைக் கல்வத்திலிட்டு எருக்கம்பாலைச் சிறுகச் சிறுக விட்டு, இரண்டு சாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி அகலில் வைத்து, மேலகல் மூடிச் சீலை மண் செய்து உலர்த்தி முழச்சதுரப் புடமிடவும் நன்றாய்க் குளிர ஆறின பின் எடுத்து முன்போல் எருக்கம் பாலை விட்டு - 2 சாமம் அரைத்து முன்போற் புடமிடவும். இவ்விதம் மடக்கி மடக்கி ஏழு தடவை புடமிட்டெடுத்தால் உயர்ந்த பற்பமாயிருக்கும்.

அளவு: 1 முதல் 3 குன்றிமணி எடை.

துணைமருந்தும், பயன்படுத்துதலும்:- மஞ்சட் கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிமுள்ளி இம் மூன்றின் தனித்தனி சூரணம் வகைக்கு ½ வராகன் எடை, தேன் 1½ வராகன் எடை இவற்றை கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ணப் பாண்டு நோய்கள் தீரும்.

மேற்கண்ட சூரணங்கள் வகைகள் ½ வராகன் எடை, பசுவின் நெய் 1½ வராகன் எடை, இவற்றைக் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்து உண்ண ஹலீமுகப் பாண்டு நோய் இரத்த குறைவு நோய் ஆகியவைகள் தீரும்.

வெள்ளாட்டு நெய் 3 வராகன் எடை, மூங்கிலுப்புச் சூரணம் 4 குன்றிமணி எடை, தேன் 4 வராகன் எடை இவை யெல்லாவற்றையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்து உட்கொண்டு வர இரத்தகாசம் சுவாசகாசம், இருமல் நோய் ஆகியவைகள் தீரும்

தாளிசப்பத்திரிச் சூரணம் 1 வராகன் எடை, (3½ கிராம்) தேன் 2 வராகன் எடை (7 கிராம்) இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்து உட்கொண்டு வர எல்லாவகை அதிசார நோய்களும் தீரும்.

மரமஞ்சட் சூரணம் 1 வராகன் எடை (3½ கிராம்) தேன் 3 வராகன் எடை (10½ கிராம்) இவற்றைச் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்து உட்கொண்டு வர இரத்த பித்த நோய், இரத்தக் குறைவு நோய் ஆகியவைகள் தீரும்.

தாமரைப்பூச்சாறு 3 வராகன் எடை: (10½ கிராம்) தேன் 3 வராகன் எடை (10½ கிராம்) சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துட்கொள்ளப் பிரமேக நோய்கள் தீரும்.

திராட்சை பழம் ½ வராகன் எடை, (1¾ கிராம்) மூங்கிலுப்புச் சூரணம் 4 குன்றிமணி எடை, தேன் 1 வராகன் எடை முன் இரண்டையும் சேர்த்தரைத்துத் தேனிற் கலக்கி மேற்படி பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண இரத்த காசம், இரத்தங் கக்கல் ஆகியவைகள் தீரும்.

இன்னும் தகுந்த துணை மருந்துகளில் கொடுத்து வந்தால் பல நோய்கள் தீரும். அவரவர்களே இதன் குணத்தை துணை மருந்துகளினால் தெரிந்த கொள்ள வேண்டும்.

மருந்துணவு: புளி, புகை, புணர்ச்சி நீக்க வேண்டும்.

குறிப்பு

மேற்கண்ட விதமாகச் செய்த பற்பத்தை எல்லாவகை மாத்திரைகள், சூரணங்கள் ஆகியவைகளிலும் சேர்த்து உபயோகித்து கொள்ளலாம்.

109 அப்பிரக பற்பம் (வேறு)

தூய்மை செய்த கிருஷ்ண அப்பிரக நவநீதம் 2 பலம் (70 கிராம்), கொடியுகா இலைச்சாறு ½ படி.

செய்முறை: மேற்படி நவநீதத்தை ஒரு பீங்கான் பாத்திரத்தில் விட்டு, மேற்படி கொடியுகா இலைச்சாற்றை அதில் விட்டு மூன்று நாள் வெய்யிலில் வைக்க வேண்டும். ஒவ்வொரு நாளும், மூன்று, நான்கு தடவைக்குக் குறையாமல் நன்றாய்க் கிளறிவிட்டும் வரவேண்டும். வெய்யில் கடுமையானதாயிருந்தால் சாறெல்லாஞ் சுண்டிவிடும். வெய்யில் கடுமையில்லாவிட்டால் சாறு சுண்டாமற் பாக்கியாயிருக்கும். அவ்வித சமயங்களில் மூன்று நாள் என்னும் கணக்கின்றிச் சாறு சுண்டுகிற வரையில் வெய்யிலில் வைக்க வேண்டும். இதில் எவ்வளவு சாறு சுண்டுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு திறமான பற்பமாகும். ஆகையால், அவசரப்படாமல் நிதானமாய் அந்தச் சாறெல்லாஞ் சுண்டின பிறகு அகலிலிட்டு மேலகல் மூடிச் சீலை மண் செய்து காயவைத்து, ஒரு கெச சதுரக் குழியில் காட்டெருவடிக்கிப் புடமிட வேண்டும். நன்றாய்க் குளிர ஆறின பின் எடுக்க உயர்ந்த பற்பமாயிருக்கும். ஆனால் சில சமயங்களில் மேற்கண்ட சாறு, புடம் இவைகளின் வேறுபாட்டினால் பூரணமான பற்பமாகாமல் தளுக்கிருந்து விடுகிறது. ஆகையால் இப்பற்பத்தைச் சோதித்து நிதானித்துத் தளுக்கிருக்குமானால் பற்பத்தை மேற்படி கொடியுகா இலைச் சாற்றை விட்டு நான்கு சாமம் அரைத்து வெய்யிலில் வைத்து ஈரமுலர்ந்த பின் வெங்காயச் சாற்றை விட்டு நான்கு சாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி முன்போற் புடமிடவும். புடம் ஆறினபின் எடுக்கச் சிறிதும் தளுக்கின்றி உயர்ந்த பற்பமாக இருக்கும்.

அளவு: 2 முதல் 3 குன்றிமணி எடை.

துணை மருந்தும், தீரும் நோய்களும்:- நீர்ப்பூலா வேர்ப்பட்டை, பொன் முசுட்டை வேர். ஆவாரம் வேர்ப்பட்டை, கடலழிஞ்சிப் பட்டை, கோரைக்கிழங்கு, தேற்றான் விதைச் சீவல், மஞ்சள் கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லி முள்ளி இவை வகை-1க்கு 1பலம், இவையெல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து இடித்து துணியில் வடிகட்டிக் கொள்ள வேண்டும். இந்தச் சூரணம் 1½ வராகன் எடை, தேன் 2½ வராகன் எடை, இவ்விரண்டையும் மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ணப் பூரணமதுமேகம்

ஆரம்பமாகி சிரேணமதுமேகம், நீரிழிவு, அதிமூத்திர நோய் ஆகியவைகள் தீரும். ஒரு வாரத்திற்குள் மூத்திரத்தின் அளவும் அதிலுள்ள சர்க்கரை முதலியவைகளும் குறைந்து அதிக அளவாயிருக்கிற டிகிரியுங் குறைந்து போகும்.

இன்னும் மேற்கண்ட நோய்களுக்கு அவரவர்களுக்கு அனுபோகமான சூரணம், குடிநீர், இளகம் ஆகியவைகளுடனும் சம்பந்தபடுத்திக் கொடுத்து வந்தால் மேற்கண்ட மதுமேகம், நீரிழிவு முதலிய எல்லா நோய்களும் தீரும்.

ஆடாதோடை வேர்ப்பட்டைத் தூள், கருங்காலி மரப்பட்டைச் சூரணம், கற்கடகசிங்கிச் சூரணம், தாளிசப்பத்திரித் தூள் ஆகியவைகள் வகைக்கு 1½ வராகன் எடை, தேன் 2 வராகன் எடை, இவையெல்லாவற்றையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்து உட்கொள்ள சுவாச நோய், இருமல் நோய் ஆகியவை தீரும்.

அமுக்குராக் கிழங்குச் சூரணம் சீந்திற் சர்க்கரை கோரைக் கிழங்குச் சூரணம், இவை வகைக்கு ½ வராகன் எடை, பசுவின் நெய் அல்லது பசுவின் வெண்ணெய் 3 வராகன் எடை (10½ கிராம்), இவை எல்லாவற்றையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண, கபநோய்கள் தீரும்.

இன்னும் தகுந்த துணைமருந்துகளில் உபயோகித்தால் இருபத்தொரு மேகநோய்களும் தீரும். ஆகையால் தங்கள் தங்களுக்கு அனுபவசித்தமான துணை மருந்துகளுடன் உபயோகித்துச் சித்தியடைவார்களாக.

மருந்துணவு:- இச்சாபத்தியம், இன்னும் சமயோசிதம் போலவும் வைத்துக் கொள்ள வேண்டியது.

110. அப்பிரக பற்பம் (வேறு)

பச்சை மூங்கில் சுமார் ஒரு முழமுள்ளதாகவும், இரண்டரை அங்குலச் சுற்றளவுள்ளதாகவும் ஒருபுறம் கணுவுள்ளதாகவும், எடுத்து அதில் இருபது பலம் குப்பைமேனி வேரை மைப்போல அரைத்து இரண்டு பங்காக்கி ஒரு பங்கை மேற்படி மூங்கிற் குழாய்க்குள் வைத்து நன்றாய்க் கெட்டித்து அதன்மேல் இரண்டு பலம் தூய்மை செய்த கிருஷ்ண அப்பிரக நவநீதத்தை வைத்து அதன்மேல் முன்பாதிக் குப்பைமேனி வேரை அரைத்த விழுதை வைத்துக் கெட்டித்துக்

குழாய்வாய்க்கு மூங்கிற் கணுவை வைத்தடைக்கட்டி 5-சீலை மண் செய்து உலர்த்திப் பத்து பலமுள்ள ஐம்பது விராட்டியிற் புடமிட்டு ஆறினபின் எடுக்க வெண்மையான பற்பமாயிருக்கும். இதை எடுக்கும் போது குப்பைமேனி வேர்ச்சாம்பலும் ஒன்றாய்க் கலந்து போயிருக்கும். குப்பைமேனி வேர்ச்சாம்பலானது கரிந்துபோன நிறமாயிருக்கும். அப்பிரக பற்பமானது வெண்ணிறமாக இருக்கும். இரண்டொரு தடவை அனுபவத்தில் தானே தெரிந்து போகும்.

அளவு:- 2 முதல் 3 குன்றிமணி எடை.

துணை மருந்து:- நெய், தேன், முலைப்பால் முதலியவைகளாம்.

தீரும் நோய்கள்:- மேகம், நீரிழிவு, காசம், இரைப்பிருமல் ஆகியவைகள் தீரும்.

மருந்துணவு:- முன் சொன்னவைகளேயாம்.

111. அப்பிரக பற்பம் (வேறு)

தூய்மை செய்த கிருஷ்ண அப்பிரக நவநீதம் 1-பலம் (35 கிராம்), கரியுப்பு ½ பலம் (17½ கிராம்), வெடியுப்பு ½ -பலம் (17 கிராம்), அகத்திக்கீரைச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- முன்மூன்று சரக்குகளையும் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துச் சேர்த்துப் பிறகு மேற்படி இலைச்சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமமரைத்து வில்லை செய்துலர்த்தி அகலில் மேலகல் மூடி 5 சீலைமண் செய்துலர்த்தி நூறு பலம் விராட்டியிற் புடமிட்டுக் குளிர ஆறினபின் எடுத்து அதனைக் கல்வத்திலிட்டு முன்போலவே முன் மூலிகைச்சாற்றைவிட்டு நான்கு சாமம் அரைத்து முன்போற் வில்லை செய்து உலர்த்தி முன்போற் புடமிடவும் மூன்றாவது தடவையும் புடமிட்டு ஆறின பின்னெடுக்க வெண்ணிறமான பற்பமாகியிருக்கும்.

அளவு:- 4 முதல் குன்றிமணி எடை.

துணைமருந்தும், தீரும் நோய்களும்:- நன்னாரி வேர்ப்பட்டையை இடித்துத் தூளாக்கி அதில் பசுவின் பாலை விட்டு அம்மியில் வைத்தரைத்த விழுது 3 வராகன் எடை (10½ கிராம்), வெண்ணெய் 3 வராகன் எடை (10½ கிராம்), இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்து உட்கொண்டு வர நூதனப்பிரமேகங்கள், புராதனப் பிரமேகங்கள் ஆகியவை தீரும்.

முருங்கைப் பட்டைச்சாறு 2 வராகன் எடை, தேன் 2 வராகன் எடை (7 கிராம்), இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்து உட்கொண்டுவர, மேக சுரம், எலும்பு சுரம் ஆகியவை தீரும்.

இன்னும் பசுவின் வெண்ணெய், நெய், தேன் ஆகியவைகளிலும் மேற்கண்ட நோய்களுக்குத் தகுந்த வேறு துணை மருந்துகளிலும் சேர்த்துக் கொடுக்கலாம்.

மருந்துணவு:- நோய்களுக்குத் தகுந்தது போலும் உடல் இயல்பு நோயின் வலிமை, ஆகியவைகளுக்குத் தகுந்தது போலும் கடினமாகவும், இலகுவாகவும் பத்தியங்களேற்படுத்த வேண்டியது. இன்னும் அப்பிரக பற்பத்துக்கு ஆகாதவைகளையும் நீக்க வேண்டியது.

112. அப்பிரக பற்பம் (வேறு)

தூய்மை செய்த கிருஷ்ண அப்பிரக நவநீதம் 2 பலம் (70 கிராம்), சுண்ணாம்புத் தெளிநீர் செல்லத்தக்க அளவு. சித்திரமூல வேர்ப் பட்டை, அவுரி இலை ஆகியவைகள் செல்லத்தக்க அளவு.

செய்முறை:- நவநீதத்தைக் கல்வத்திலிட்டுச் சுண்ணாம்புத் தெளிநீரை சிறுகச் சிறுக விட்டு இரண்டு சாமம் அரைத்து வில்லை தட்டி உலர்த்திச் சித்திரமூல வேர்ப்பட்டையைத் தண்ணீர் விட்டு வெண்ணெய் போலரைத்து மேற்படி வில்லைக்கு அரையங்குலக் கவசமேற்ற வேண்டும். அதன்மேல் இரண்டு சீலைமண் செய்து ஈரமுலர்த்தி முழசதுரக் குழியில் புடமிட வேண்டும். ஆறின பின்னெடுத்துக் கல்வத்திலிட்டு முன்போல் சுண்ணாம்புத் தெளிநீரை விட்டு இரண்டு சாமமரைத்து முன்போல் வில்லை செய்து உலர்த்தி முன்போல் இரண்டு கவசமுஞ்செய்து, சீலைமண்ணுஞ் செய்து முன்போல் புடமிட வேண்டும். மூன்றாந்தடவையும் முன்போலவே புடமிட்டெடுக்க இயற்கையின் அருளால் வெண்ணிறமான பற்பமாகி இருக்கும்.

அளவு:- 2 முதல் 8 குன்றிமணி எடை.

துணைமருந்து:- தேன், நெய், சூரணங்கள், இளகங்கள் முதலியவைகளாம்.

தீரும் நோய்கள்:- பிரமேக நோயகள், நீரறுகல், நீரெரிச்சல், நீர்க்கட்டு, அதிமூத்திர நோய், நீரிழிவு ஆகியவைகள் தீரும்.

மருந்துணவு:- புளி, புகை, புணர்ச்சி நீக்குக.

சுண்ணாம்புத் தெளிநீர்:- தாளிக்காத கற்சுண்ணாம்பு அல்லது, கிளிஞ்சிற் சுண்ணாம்பு 1 படி (இதனை அளந்தெடுப்பதற்கு முன் அதிலுள்ள கற்கரடு, வேகாதவைகள் முதலியவைகளைப் புடைத்து நீக்கி சுத்தமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.) பனி நீர் - 2 படி (பனி நீர் அகப்பட்டால் உத்தமம் அது அகப்படா விட்டால் தண்ணீரைத்தான் சேர்த்துக் கொள்ள வேண்டும்.) மேற்படி சுண்ணாம்பை ஒரு மண் பாத்திரத்தில் போட்டு மேற்படி நீரில் சுமார் காற்படி நீரை விட்டு உடனே மூடிவைத்து விட வேண்டும். பிறகு கொதிப்படங்கினபின் மிச்ச நீரையும் விட்டு நன்றாய்க் கலக்கி மூன்று நாள் வைக்க வேண்டும். இரண்டு நாள் ஒவ்வொரு தினமும் நாலைந்து தடவை மூங்கிற் குச்சியால் நன்றாய்க் கலக்கியும் வரவேண்டும். மூன்றாம் நாள் கலக்காமல் அப்படியே வைத்து நாலாம் நாள் தெளிவை மாத்திரம் இறுத்துக் கருப்புப் புட்டியில் அடைத்து வைத்துக் கொள்ள வேண்டும். இந்த முறைப்படி எடுத்த சுண்ணத் தெளிநீரைத்தான் மேற்படி பற்பத்துக்கு உபயோகப் படுத்த வேண்டும்.

113. அப்பிரக பற்பம் (வேறு)

அப்பிரக நவநீம் 2 பலம் (70 கிராம்), தூய்மை செய்த கற்பூர சிலாசத்து 2 - பலம் (70 கிராம்), சிறு செருப்படைச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- மேற்கண்ட இரண்டையும் கல்வத்திற் சேர்த்து அரைத்துப் பிறகு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி அகலிலிட்டு மேலகல் மூடி ஏழு சீலைமண் செய்துலர்த்தி யானைப் புடமிடவும், ஆறின பின் எடுத்துக் கல்வத்திலிட்டு முன்போல் சிறு செருப்படைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு மூன்று சாமமரைத்து முன்போல் வில்லை செய்து உலர்த்தி முன்போல் புடமிடவும். இவ்விதம் மடக்கி மடக்கி இன்னும் மூன்று புடம் போடவேண்டும். ஆகக்கூடிய புடம்-5 இ-ம், தீர்ந்தால் வெண்ணிறமான பற்பமாயிருக்கும்.

அளவு:- 2 முதல் 3 குன்றிமணி எடை.

துணை மருந்து:- நெய், தேன், வெண்ணெய் முதலியவைகள்

தீரும் நோய்கள்:- வெட்டை நோய்கள், இருபத்தொரு மேகங்கள், நீரிழிவு, கப நோய்கள், பித்த நோய்கள் ஆகியவைகள் தீரும்.

மருந்துணவு:- பித்த சம்பந்தமான உணவுப் பொருள்கள் காரமான பொருள்கள் ஆகியவைகள் ஆகாது.

114. பளிங்கு அப்பிரக பற்பம்

வெள்ளை அப்பிரகத்தை ஓலைக் கனமுள்ள தகடுகளாகப் பிரித்து 2 பலம் (70 கிராம்), நிறுத்தெடுத்து 20 பலம் (700 கிராம்). கையாந்தகரைச் சாற்றில் ஊறப்போட வேண்டும். நிழலில் வைத்திருந்து சாறெல்லாஞ் சுண்டினபின் அரை முழச் சதுரமாக விராட்டியை அடுக்கி அதன் மேல் முன் சித்தப் படுத்தின அப்பிரகத் தகடுகளைப் பரப்பி அதன்மேல் அரை முழச் சதுரம் விராட்டியை அடுக்கிப் புடமிட்டு ஆறின பின் தகடுகளை எடுத்துக் கொள்ள வேண்டும். (இவ்விதஞ் செய்வதால் பளிங்கு அப்பிரகம் தூய்மையாகிவிடும்.) இந்தத் தகட்டின் எடைக்கு இரண்டு பங்கு எடை சீனா வெங்காரம், ஒரு பங்கு எடை வெடியுப்பு, இவ்விரண்டையும் நுண்மையாகப் பொடித்து ஒரு ஓட்டில் கொஞ்சம் பொடியைத் தூவி முன்புடம் போட்டு எடுத்த அப்பிரகத் தகட்டிற் கொஞ்சத்தைப் பரப்ப வேண்டும். அதன் மேல் கொஞ்சம் தூளைப் பரப்பி அதன் மேல் தகட்டை அடுக்க வேண்டும். இவ்விதம் தூளுந்தகடுமாக முறையே அடுக்கடுக்காய்ப் பரப்பி எல்லாவற்றிற்கு மேலும் மேற்படி தூளைத் தூவி மேலோடு மூடி சீலைமண் செய்து முழச்சதுரப் புடமிடவும், குளிர ஆறின பின் எடுத்தால் வெண்மையான பற்பமாயிருக்கும். செய்பாகமும் தீயும் சரிவர இருந்தால் ஒரே புடத்தில் தளுக்கற்றிக்கும். அப்படித் தளுக்கிருந்தால் அதனைப் பழச்சாற்றில் நான்கு சாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி முன்போல புடமிட வேண்டும். இப்படிச் செய்தால் தளுக்கில்லாத சுத்தமான பற்பமாகி இருக்கும்.

அளவு: 2 முதல் 3 குன்றிமணி எடை.

துணை மருந்து:- நெய், வெண்ணெய், கூழ்ப்பாண்ட இளகம், கூழ்ப்பாண்ட நெய், தேற்றாங்கொட்டை இளகம் (இம்முறைகளெல்லாம் பின்னெழுதப்படும்) முதலியவைகளாம்.

தீரும் நோய்கள்:- பிரமேக நோய்கள், வெட்டைநோய்கள் நீர்ச்சுருக்கு முதலிய நீர்ச்சம்பந்தமான பல நோய்கள் தீரும்.

மருந்துணவு:- காரமான பொருள்கள், புகை, புளி, புணர்ச்சி ஆகியவைகளைத் தவிர்க்க வேண்டும்.

115. பளிங்கு அப்பிரக பற்பம் (வேறு)

முன் சொல்லியிருக்கிறபடி பளிங்கு அப்பிரகத்தைக் கையாந்தகரைச் சாற்றில் ஊற வைத்துப் புடமிட்டுத் தூய்மை செய்து கொள்ளவேண்டும். இவ்விதம் தூய்மை செய்யப்பட்ட மேற்படி அப்பிரகம் 2 பலம் (70 கிராம்), தாளிக்காத கிளிஞ்சல் சுண்ணாம்பு 6 பலம் (210 கிராம்), வெடியுப்புத்தூள் 3-பலம் (105 கிராம்), வெங்காயச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- மேற்படி சுண்ணாம்பையும், மேற்படி வெடியுப்புத் தூளையும் தனித்தனியே இரண்டு பாகமாகச் செய்து கொள்ள வேண்டும். ஒரு அகலில் முன்னர் சுண்ணாம்பின் ஒரு பாகத்தைப் பரப்பி அதன் மேல் வெடியுப்புத்தூளின் ஒரு பாகத்தைப் பரப்பி அதன்மேல் அப்பிரகத்துண்டுகளைப் பரப்பி அதன்மேல் மற்றொரு பாகக் கிழிஞ்சிற் சுண்ணத்தைப் பரப்ப வேண்டும். (இந்த முறைகளெல்லாம் இன்னவிதஞ் செய்ய வேண்டுமெனக் குறிப்பாய் எழுதலாமே தவிர உள்ளது உள்ளபடி எல்லாவற்றையும் எழுதுவது முடியாத செய்தி. திறமைசாலிகளான புத்திமான்களுக்குக் குறிப்புகள் போதுமானதாகையால், இதனை அடுக்கடுக்காகப் போடும் வகை விவரங்களைத் தாங்களே தெரிந்துகொண்டு சமயோசிதம்போல தகுந்தபடி செய்து கொள்வார்கள்) பிறகு மேலகல் மூடி ஏழு சீலை மண் செய்து முக்கால் யானை அல்லது ஒரு யானைப் புடமிட்டு ஆறினபின் எடுத்து வெங்காயச் சாற்றால் நான்கு சாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி அகலில் வைத்து மேலகல் மூடி ஏழு சீலை மண் செய்து முக்கால் அல்லது ஒரு யானை புடமிட்டு ஆறினபின் எடுக்கத் தளுக்கற்று உயர்ந்த பற்பமாகியிருக்கும்.

குறிப்பு

இதில் வெடியுப்புச் சம்பந்தமாயிருப்பதால் இதனைச் சிலர் இலேசாக எண்ணுவார்கள். வெடியுப்புச் சம்பந்தமாயிருந்தாலும் அது சம்பந்தமாயில்லா விட்டாலும் நமக்குக் குணமே முக்கியம்.

அளவு:- 2 முதல் 4 குன்றிமணி எடை.

துணைமருந்து திரும் நோய்கள், மருந்துணவு:- மேற்கண்டவைகளேயாகும்.

116. அப்பிரகச் சுண்ணம்

உகரப்பட்டை 20 பலம் (700 கிராம்), தூய்மை செய்த கிருஷ்ண அப்பிரக நவநீதம் 2 பலம் (70 கிராம்),

செய்முறை:- மேற்படி பட்டையைப் பஞ்சு போல் நைய நசுக்கி இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தைக் கலயத்தில் வைத்து அழுத்தி அதன்மேல் அப்பிரக நவநீதத்தை வைத்து அதன் மேலும் முன் பாதி மரப்பட்டைத் தூளை போட்டழுத்திக் கலயத்தின் வாய்க்குச சில்லிட்டுச் சீலை மண் செய்து யானைப் புடமிடவும். ஆறினபின் எடுக்கக் கடுங்காரச் சுண்ணமாயிருக்கும். மஞ்சளுக்குச் சிவக்கும்.

அளவு:- ½ முதல் 1 குன்றிமணி எடை.

துணைமருந்து:- தேன், நெய், முலைப்பால், வெற்றிலை முதலியவைகளாம்.

தீரும்நோய்:- இருமல், இரைப்பிருமல், நீர்ச் சம்பந்த நோய் ஆகியவைகள் தீரும்.

மருந்துணவு:- புளி, புகை, புணர்ச்சி முதலியவைகளை நீக்குக.

117. அப்பிரகச் சுண்ணம (வேறு)

தூய்மை செய்த அப்பிரக நவநீதம் 1 பலம் (35 கிராம்), சவுக்கார செயநீர் செல்லத்தக்க அளவு.

செய்முறை:- மேற்படி நவநீதத்தைக் கல்வத்திலிட்டு மேற்படி செயநீரைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாம மரைத்து வில்லை செய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி 5 சீலைமண் செய்துலர்த்தி 60 பலம் (2100 கிராம்), விராட்டியில் புடமிட வேண்டும். ஆறினபின் எடுத்து முன்போலவே செயநீர் விட்டு முன்போலவே அரைத்து முன்போலவே வில்லை செய்துலர்த்தி கவசித்துப் புடம் போடவும். மூன்றாந் தடவையம் இவ்விதமே புடம் போட்டுக் கொள்ளவேண்டும். மூன்று புடத்திற்குள் கடுங்காரச் சுண்ணமாகிவிடும். அப்படி ஆகாவிட்டால் நான்காந் தடவையும் முன்போற் புடமிட்டுக் கொள்ளவும்.

அளவு:- 1 முதல் 3 குன்றிமணியெடை.

திரும் நோய்கள்:- தகுந்த துணைமருந்துகளிலிட மேக நோய்கள், நீர் நோய்கள், இருமல் நோய்கள், செரியாமை நோய்கள் ஆகியவைகள் தீரும்.

மருந்துணவு:- நோய் பலம், உடல்பலம் ஆகியவைகளுக்குத் தகுந்தது போல் பத்தியம் வைக்க வேண்டியது.

சவுக்கார செயநீர்:- இந்த முறையானது நமது இரசவாத சிந்தாமணி முதற்பாகத்தில (121-எண். சவுக்கார நீர்) என்பதே. அங்கு அது வகை விவரமாக எழுதப்பட்டிருக்கிறது. அவசியமானவர்கள் அதைப் பார்த்துச் செய்து கொள்ளவேண்டியது.

விண்ணப்பம்

நாம் இது வரையில் அப்பிரக பற்ப முறைகளில் பலவற்றையும் இவைகளின் துணைமருந்துகளையும் எழுதி வந்தோம். இனி அப்பிரக செந்தூர முறைகளை எழுத ஆரம்பித்து அவற்றுள் அருமையானதும் பலதலைமுறைகளாக இரகசியமாய் வைக்கப்பட்டதும் பரம்பரை வழியாகப் பல்லாண்டுகளாய் அனுபவசித்தி பெற்றதுமான ஒரு முறையை ஆரம்பமாக எழுதலாம்.

118. செந்தூரச் செயநீர்

ஐந்தாங்காய்ச்சல் வெடியுப்பு 10 பலம் (350 கிராம்), அட்டுப்பு 5 பலம் (175 கிராம்), சீக்காரம் 5 பலம் (175 கிராம்), நவாச்சாரம் 5 பலம் (175 கிராம்), வெள்ளைப் பாடாணம் 5 பலம் (175 கிராம்), நெல்லிக்காய் கெந்தகம் 3 பலம் (105 கிராம்); எவட்சாரம் 2¼ பலம் (78¾ கிராம்), அன்னபேதி 2 பலம் (70 கிராம்), கோது கொட்டை முதலியவை நீக்கிய பழம்புளி 15 பலம் (525 கிராம்).

செய்முறை:- புளியைத் தவிர மற்ற எல்லாச் சரக்குகளையும் தனித்தனியாகக் கல்வத்தில் பொடித்துத் தனித்தனியே எடுத்து வைத்துக் கொள்ளவேண்டும். பிறகு எல்லாவற்றையும் ஒன்றாகக் கல்வத்தில் சேர்த்து இரண்டொரு மணிநேரம் அரைத்து ஒன்றாய் சேர்த்துக் கொள்ளவேண்டும். இதை எடுத்துத் தனியே வைத்துக் கொண்டு புளியைக் கல்வத்திலிட்டு முன் சித்தப்படுத்தினவைகளைக் கொஞ்சங் கொஞ்சமாய்ப் புளியில் தூவி அரைக்க வேண்டும். எல்லாத் தூளும் சென்ற பின்பு இரண்டொரு மணிநேரம் அரைத்துப்பிறகு எடுத்துக் கல்லுரலிலிட்டு நன்றாய் இடிக்கவேண்டும். நாம் எவ்வளவுக்

கெவ்வளவு இடிக்கின்றோமோ அவ்வளவுக் கவ்வளவு செயநீரானது வேகமானதாகவும், குணமுள்ளதாகவும் இருக்கும். ஆகையால் குறைந்தது ஆறுமணி நேரமாகிலும் இடித்து உள்ளங்கையகலமான சிறு வில்லைகளாய்ச் செய்து வைத்துக் கொள்ள வேண்டும். அடுப்பில் ஒரு ஓட்டை அல்லது, சட்டியை வைத்துச் சூடு கண்ட பின்பு மேற்படி வில்லைகளில ஒரு வில்லையைப் போட்டு அடுப்பை மெதுவாக எரித்தால் அந்த வில்லையில் ஒரு விதச் சீறலுண்டாகிப் புகையெழும்பும். சில சமயங்களில் அந்த வில்லையானது சீறி மேலேயெழும்புவதும் உண்டு. ஆகையால் வில்லையைச் சட்டியில் போட்டபின்பு மிகவும் விழிப்புடனிருக்க வேண்டும். புகையடங்கிச் சீறல் நின்றவுடன் மறு வில்லையைப்போட வேண்டும். எல்லா வற்றையும் ஒரே வில்லையாகச் செய்து சட்டியில் போட்டு எரித்துக் கொள்ளலாம். ஆனால் சீறுதல் மேலே எழும்புதல் என்னும் அபாயத்திற்கு ஏதுவாயிருக்கின்றபடியால் மேற்கண்ட விதமாக ஒவ்வொரு வில்லைக்குப் பின் ஒவ்வொன்றாகப் போட்டெரித்துக் கொள்வது சுலபமானதும் அபாயகரமில்லாததுமான மார்க்கம். ஆகையால் முன் கண்டபடி ஒவ்வொன்றாய்ப் போட்டு எரித்து வெளுக்கும் படி சுண்ணமாக்கிக் கொள்ள வேண்டியது. பிறகு இதனைக் கல்வத்தில் பொடித்து ஒரு கெட்டித் துணியில் கிழிக்கட்டி ஒரு பானைக்குள் பீங்கான் வைத்து அதன் நேரே துலாந்தரமாப் பானையில் தொங்க விட்டு மேல் சட்டிமூடி ஏழு சீலைமண் செய்து ஈரமாயிருக்கிற இடத்தில் புதைத்து வைக்கவேண்டும். ஈரமுள்ள இடம் இல்லாவிட்டால் அதைக் காய்ந்த தரையில் புதைத்துப் பானை வாய்க்குமேல் சுமார் ஒரு அடி உயரத்தில் சேறாடி வைத்துப் பிரதிதினமும் அந்தத் தரை உலர்ந்து போகாமல் தண்ணீர் தெளித்துக் கொண்டிருக்க வேண்டியது. இவ்விதம் நாற்பது நாள் சென்ற பின் எடுக்கப் பீங்கானில் செயநீர் இறங்கி இருக்கும். இந்த செயநீரானது நவலோகங்கள், இரசம், வச்சிரகங்கள், கொம்புகள் முதலியவைகளைச் செந்தூரிக்க உபயோகப்படுகிறது. அப்பிரகத்தை இதன் மூலமாகச் செந்தூரித்தால் வேறு எந்தவகைச் செந்தூரமும் இதற்குமுன் நில்லாது. அந்த முறையைப் பின் எழுதுவோம்.

அளவு: ஒரு துளி முதல் ஐந்து துளி.

துணை மருந்து :- சர்க்கரை, பொரியரிசிமா, வெந்நீர், தண்ணீர் முதலியவைகளும், இன்னும் சமயோசிதமான அந்தந்த நோய்களுக்குத் தகுந்தவைகளுமாகும்.

திரும் நோய்கள்:- இந்த செய நீரானது இந்த நோய்க்கு ஆகும் இந்த நோய்க்கு ஆகாது என்னும் விதியில்லை. எல்லா நோய்களிலும் உள்ளுக்கு உபயோகிக்கலாம். இதனை மேலுக்குப் பூசி வருவதினால் பதினெட்டுவகைக் குட்டமும் தீரும்.

இன்னும் முன் சொல்லப்பட்ட அப்பிரக பற்பங்கள் இனிச் சொல்லப்படும் வேறு வகை அப்பிரக செந்தூரங்கள் ஆகியவைகளை இந்த செயநீர் விட்டு இரண்டொரு சாமம் அரைத்து ஒவ்வொரு புடம் போட்டெடுத்துக் கொண்டால் "பொன்மலர் நாற்றமுடைத்து" என்பதற்கு ஒக்க இது சம்பந்தமாகச் செய்யப்பட்ட ஒவ்வொன்றும் சிறந்த குணமுடையதாக இருக்கும். இதன் மர்மம் எல்லாவற்றையும் வெளியிடுவதானால் இச்சிறிய நூல் இடந்தராது. திறமைசாலிகளான அறிவாளிகளுக்கு இங்கெழுதி இருக்கும் குறிப்பான செய்திகளே போதுமானவை. விருப்பமானவர்கள் தாங்களும் சற்று கடினப்பட்டு இதன் அருமை பெருமைகளைத் தெரிந்து கொள்ளட்டுமென இம்மட்டோடு நிறுத்துகின்றோம்.

119. அப்பிரகச் சத்துச் செந்தூரம்

அப்பிரகச் சத்து 1 பலம் (35 கிராம்). மேற்கண்ட செந்தூர செயநீர் செல்லத்தக்க அளவு.

செய்முறை:- மேற்படி சத்தைக் கல்வத்திலிட்டு மேற்படி செயநீரைச் சிறுகச் சிறுக விட்டு ஒரு சாமமரைத்து வில்லை செய்து அகலில் வைத்து மேலகல் மூடி மூன்று சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் பத்துப் பங்கு எடை விராட்டியிற் புடமிட்டு ஆறின பின் எடுத்துக் கொள்ளவும். பிறகு அந்த மருந்தை முன்போல் கல்வத்திலிட்டு செயநீர் விட்டு முன் போலரைத்து புடமிடவும். இவ்விதம் மடக்கி மடக்கி ஒவ்வொரு சாமமரைத்துப் பத்து புடமிட்டால் இரத்த வண்ணமான செந்தூரமாகி இருக்கும்.

இது பூரணமான செந்தூரமானதற்கு சோதனை ஒரு சிறு தோண்டியில் கீழ்ப்புறம் விலாப்புறம் முதலில் நாலாபக்கங்களிலும் சிறு துவாரங்களிட்டு வெளிப் பக்கத்தில் தேன் மெழுகு முதலியவற்றைத் தடவியடைத்துக் கொண்டு தோண்டி நிறைய நீரை விட்டுத் தோண்டியின் அளவிற்குத் தகுந்தபடி இரண்டொரு குன்றிமணி மேற்படி செந்தூரத்தை மேற்படி தண்ணீரிற்போட்டு

முன்னடைத்திருக்கிற மெழுகு முதலியவைகளை எடுத்துவிட வேண்டும். ஒரு சொட்டு தண்ணீரும் வெளியில் வராது. இந்தச் சோதனைக்கு ஒத்திருந்தால் செந்தூரமானது குறைவின்றிப் பூரணமாகி விட்டதென எடுத்துப் பத்திரப் படுத்திக் கொள்ளவேண்டும். அவ்விதம் சோதனைக்கு ஒத்திரா விட்டால் முன்போல் முன் செயநீரால் ஒவ்வொரு சாமம் அரைத்து முன்போல் இலகு புடமாக ஐந்து புடம் இட்டுக் கொண்டால் எல்லாவிதச் சோதனைக்கும் ஒத்திருக்கும்.

வேறு வித சோதனை:- நன்றாய்க் கனிந்து அழிந்திருக்கிற வாழைப்பழத்தில் இந்தச் செந்தூரத்தை ஊசிமுனையால் எடுத்துச் செலுத்தி வைத்து 5 அல்லது, 10 நிமிடம் தாமதித்துப் பார்த்தால், அந்தப் பழமானது கல்லைப்போல் இறுகிப் போயிருக்கும். இவ்விரண்டு வகைதான் முக்கியமான சோதனையாகும். இவைகளைத்தான் நாம் நேரே கண்ணால் பார்த்திருக்கின்றோம். மற்ற பல வகைச் சோதனைகளைக் கேள்விப் பட்டதேயொழிய நமது அனுபவத்தில் வராதபடியால் அவைகளை நாமிங்கு எழுதவில்லை.

அளவு:- 1 முதல் 4 குன்றிமணி எடை.

துணைமருந்து:- தேன், நெய், ஆவாரைப் பஞ்சாங்கச் சூரணம், ஆவாரைப் பஞ்சாங்கக் குடிநீர், சமயோசிதமான இளகங்கள் முதலியவைகளாம்.

தீரும் நோய்:- மேகம் இருபத்தொன்று: நீரிழிவு இருபத்தொன்று, சோம நோய் பன்னிரெண்டு, குட்டம் பதினெட்டு முதலிய அநேக நோய்கள் தீரும். இதனை ஒரு ஆண்டு தொடர்ச்சியாய் உபயோகித்து வந்தால் நரை, திரைமாறிக் காயசித்தி முதலியவைகளும் உண்டாகும்.

மருந்துணவு:- சமயோசிதமாக அந்தந்த நோய்களுக்குத் தகுந்ததுபோல வைத்துக் கொள்ளவேண்டும்.

குறிப்பு

இந்தப் பாகப்படி செய்யப்பட்ட அப்பிரகசத்துச் செந்தூரமானது வராகன் எடை 1க்கு ரூபாய் முந்நூறு முதல் ஐந்நூறு வரையில் விற்கப்படுகிறது. இப்போது இதன் அருமையை அறியும் தக்க பெருமக்கள் குறைவாயிருப்பதால் இதன் பெருமையும் மறைவாகவே இருந்து வருகிறது. நோயினால் உயிர் போனாலும் போகட்டும் பணத்தைச் செலவிட மாட்டேனென்னும் பிடிவாதமுள்ள செல்வர்கள்

பலருண்டு. அவர்கள் பொருள் அவர்களுக்கு அருமையாயிருப்பது போலவே மற்றவர்களுக்கும் அவர்கள் சிரமப்பட்டுச் செய்த மருந்தும் அருமையாகவே இருக்கும். "காக்கைக்குத் தன்குஞ்சு பொன்குஞ்சு" என்பதுபோலவும் "பெற்றவளுக்குத் தெரியும் பிள்ளையின் அருமை" யென்பது போலவுமாம். இன்னும் இவ்விதமான மருந்துகளெல்லாம் இரகசியமாக வைக்கப்பட்டவைகளே யொழிய, கடைத்தெருவில் விலை கூறி விற்கப்பட்டவைகளல்ல விளம்பர வைத்தியர்கள் இவ்வித மருந்துகளைத் தங்கள் கண்ணினால் பர்க்கும்படியான கீர்த்தி பெற்றிருந்தால் அவர்களென்ன செய்வார்களோ நாமறிகிலோம் இந்த வகை மருந்துகள் அவரவர்கள் நலவினைப் பயனாகக் கிடைக்க வேண்டியது.

120. அப்பிரகச் செந்தூரம்

தூய்மை செய்த கிருஷ்ண அப்பிரக நவநீதம் 1 பலம் (35 கிராம்), செயநீர் செல்லத்தக்க அளவு.

செய்முறை:- மேற்கண்ட பாகப்படியே ஒவ்வொரு சாமம் அரைத்து புடமிட்டுக் கொள்ளவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி 25 புடம் இட்டுக்கொள்ள வேண்டும். பிறகு மேற்கண்டபடி சோதித்துப்பார்த்து சோதனைக்கு ஒத்திருந்தால் பூரணமாகி விட்டதென நிறுத்திக் கொள்ள வேண்டும், அப்படியாகா விட்டால் மறுபடியும் 5 புடம் முன்போற் போட்டுச் சோதித்து நிறுத்திக் கொள்ள வேண்டும். சில சமயங்களில் ஐம்பது புடம் வரையிற் போடும்படியாக நேரிடுகிறது. இது திராவகத்தின் திறம், அரைப்பு புடத்திட்டம், நெருப்பு ஆகியவைகளைப் பொறுத்த தாகையால் ஒரு நிதானப்படுத்தக் கூடவில்லை. ஆகையால் 25 புடத்திற்குப்பின் ஐந்தைந்து புடமிட்டுச் சரியாக இருக்கிறதாவெனச் சோதித்துக் கொள்ள வேண்டியதுதான் முறை. இவ்விதம் சோதனைக்கு ஒத்து வருகிற வரையில் புடமிட்டுத் தீரவேண்டியதுதான் முடிவு. எத்தனை புடமிட்டாலும் அத்தனைக்கத்தனை சிறப்புடையதேயொழியக் குறைவொன்றுமில்லை. இது, புடம் இலகுவாய் இடும்படியாக இருப்பதினாலும் ஒரு சாமம் அரைக்க வேண்டி இருப்பதாலும் இது மிகவும் சுலபமான பாகமென்றே சொல்லவேண்டும். மற்ற வகை முறைகளுக்காகப் பலவகை மூலிகைகள் தேட வேண்டியதாக இருக்கிறது. ஒவ்வொரு தடவையும் அநேக மணிநேரங்கள் அரைக்க வேண்டியதாயுமிருக்கிறது. புடமோ அரை கெசம், முக்கால் கெசம், ஒரு கெசம் போட வேண்டியதாகவுமிருக்கிறது.

அவ்வித சிரமங்களெல்லாம் இந்த முறையிலில்லை. துணிந்தவர் களுக்குச் சமுத்திரம் முழங்கால் அளவு என்பது போல தைரியமும் ஊக்கமும் உடையவர்களுக்கு இதைப் போன்ற இலகுவானதும் அருமையானதும் குணநிச்சயமானதுமான வேறு முறை இல்லையெனச் சொல்லத் துணிவோம். சந்தேகமானவர்கள் இந்தப் பாகத்தையும் மற்ற பாகங்களையும் செய்து பயன்படுத்தி ஒவ்வொன்றின் சிறப்புக் குணத்தைத் தெரிந்து நிச்சயித்துக் கொள்ளலாம்.

அளவு, துணை மருந்து, தீரும் நோய்கள், மருந்துணவு முதலானவைகளெல்லாம் முன் சொல்லப்பட்டவைகளேயாம்.

121. அப்பிரகச் செந்தூரம் (வேறு)

அப்பிரக நவநீதம் 5 பலம் (175 கிராம்), பழரசம் ½ படி, கொடிவேலி வேர்ப்பட்டை 10 பலம் (350 கிராம்),

செய்முறை:- மேற்படி நவநீதத்தை ஒரு பீங்கான் பாத்திரத்தில போட்டு, பழச்சாற்றைப் பொடிக்கு மேல் ஒரு அங்குலமிருக்கும் படியாக விட்டு 24 மணி நேரம் ஊற வைத்துப் பிறகு வெண்ணெய் போல் ஆகிறவரையில் அரைத்து வில்லை செய்து உலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும். மேற்படி கொடிவேலி வேர்ப்பட்டையை இடித்துத் தூள் செய்து பழச் சாற்றில் மிகுதியாயிருந்தால் அதைவிட்டு அரைக்க வேண்டியது. அப்படி இல்லாவிட்டாலும் போதாமல் போனாலும் மேலும் பழச்சாற்றை விட்டு மைபோல் அரைத்து இரண்டு பாகமாக்கி வைத்துக் கொள்ளவும். பிறகு இரண்டு குழி அகலவாய் பொருந்தும்படியாகத் தேய்த்து மேற்படி கொடிவேலி வேர்ப்பட்டை விழுதின் ஒரு பாகத்தை ஒரு அகலிலும், மற்றொரு பாகத்தை மறு அகலிலும் பூசி இரண்டிற்கும் மத்தியில் மேற்படி அப்பிரக வில்லையை வைத்து, வாய் பொருந்தும்படியாக மூடி ஏழு சீலைமண் செய்து ஈரம் உலர்த்திக் கவசத்தின் எடைக்கு-20 பங்கு எடை வராட்டியில் புடமிட்டுக் குளிர ஆறின பின் எடுக்கச் செந்தூரமாயிருக்கும். புடமானது குழிப்புடமாகப் போட வேண்டும் அல்லது காற்றில்லாத இடத்தில் புடம் போட வேண்டும். தீயானது சரியா யிருந்தால் ஒரே புடத்தில் செந்தூரமானது அரைகுறையாய் இருக்கும். அப்படி இருந்தால் மறுபடியும் முன் போல் பழச்சாற்றை விட்டு அரைத்து வில்லை செய்து உலர்த்தி முன் போல் புடமிட்டுக் கொள்ளச் செந்தூரமாகும். இதனைக் கவசம் செய்வதும் இதன் புடத்திட்டமும்

இரண்டொரு தடவையில் அனுபவத்தில் தானே தெரிந்து போகும். ஆனால் கைமுறைப்படி செய்தால் ஒரே புடத்தில் உயர்ந்த செந்தூரமாகிவிடுகிறது, புதிதாய்ச் செய்கிறவர்கள சற்று பொறுப்புடன் செய்வார்களாயின் ஒரே தடவையில் தப்பாமல் செந்தூரித்துக் கொள்ளலாம்

அளவு:- 1 முதல் 2 குன்றிமணி எடை.

துணைமருந்து:- தேன், நெய், இஞ்சிச்சாறு முதலியவைகளாம்.

தீரும் நோய்கள்:- குட்ட நோய்கள், குன்மங்கள், மதுமேக நோய்கள் ஆகியவைகள் தீரும்.

இன்னும் அப்பிரக பற்பங்களில் சொல்லியிருக்கப்பட்ட துணைமருந்துகளில் கொடுக்க அந்தந்த நோய்கள் தீரும். மேற்கண்ட குட்டம் முதலிய நோய்களுக்குத் தகுந்த சூரணம், இளகம், நெய், குழித்தைலம் ஆகியவைகளுடன் மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்து கொடுத்துக் கொண்டு வந்தால் மேற்கண்ட நோய்கள் சீக்கிரமாகவும் நிச்சயமாகவும் தீரும்.

மருந்துணவு:- நோய்களுக்குத் தகுந்த விதமாகவும், நோயின் பலம், உடலின் பலம், ஆகியவைகளுக்குத் தகுந்த விதமாகவும், கடின பத்தியமாகவும், இலகு பத்தியமாகவும் வைத்துக் கொள்ள வேண்டும்.

122. அப்பிரகச் செந்தூரம் (வேறு)

கிருஷ்ண அப்பிரக நவநீதம் 2 பலம் (70 கிராம்) சிவந்த பூப்பூக்கிற சிற்றாமணக்கிலைச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- மேற்படி நவநீதத்தைக் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றைச் சிறகச் சிறக விட்டு நான்கு சாமம் அரைத்து வில்லைச் செய்துலர்த்தி அகலில் வைத்து மேலகல் மூடி ஏழுசீலை மண்செய்து உலர்த்திக் காட்டெருவில் கெசப்புடமிட்டு ஆறினபின் எடுக்கவும். அரைப்பும், தீயும் சரியாயிருந்தால் ஒரே புடத்தில் தளுக்கற்ற செந்தூரமானது தளுக்கில்லாமலிருந்தாலும் சற்றுவெளிறின நிறமாயிருக்கும். ஆகையால் மேற்கண்ட மூலிகைச் சாற்றிலேயே நவ்வாலு சாமம் அரைத்தரைத்து மடக்கி மடக்கி இரண்டு புடம் போட்டு எடுத்துக் கொண்டால் நல்ல வண்ணமாகவும் சிறப்புடைய குணமுள்ளதாகவும் ஆகிவிடும். பாடுபட்டால் பலன் பெறலாம்.

சிரமத்திற்குப் சோம்பலுற்றால் விருப்பம் போலாவது கடினமாயிருக்கும். ஊக்கமும் முயற்சியுமுடையவர்கள் எவ்விதமும் செய்து உலகத்தாருக்கு நன்மையுண்டாக்குவதுடன் அதனாலுண்டாகும் புண்ணியம் கண்ணியம் முதலியவைகளையும் அடைவார்கள்.

அளவு:- 2 முதல் 3 குன்றிமணி எடை.

துணை மருந்து:- நெய், தேன். அதிமதுரச் சூரணம், கசகசா மணப்பாகு, துளசி மணப்பாகு, முதலிய துணை மருந்துகளில் சமயோசிதமாக சேர்த்து உபயோகிக்க வேண்டும்.

தீரும்நோய்கள்: மேகநோய்கள், மதுமேகங்கள், காசம் இரைப்பிருமல் ஆகியவைகள் தீரும்.

மருந்துணவு:- அந்தந்த நோய்களுக்குத் தகுந்த விதமாகப் பத்தியம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது மருத்துவர்கள் நோயாளிகள் ஆகியவர்களின் கடமையாகும்.

123. அப்பிரகச் செந்தூரம் (வேறு)

அப்பிரக நவநீதம் 2 பலம் (70 கிராம்), சோற்றுக்காற்றாழைச்சாறு 10 ஆழாக்கு நாட்டுக் காட்டாமணக்குப் பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை:- மேற்படி நவநீதத்தை ஒரு சிறு சட்டியிற் போட்டு மேற்படி சோற்றுக் கற்றாழைச் சாற்றில் ஒரு ஆழாக்கைவிட்டு அடுப்பேற்றிச் சாறெல்லாம் வற்றும்படியாகச் சுண்ட வைத்துக் கொள்ளவேண்டும். பிறகு இன்னொரு ஆழாக்கு மேற்படி சாற்றைவிட்டு முன்போல சுண்ட எரித்துக் கொள்ளவேண்டும். இவ்விதம் ஒவ்வொரு ஆழாக்காக முறையே விட்டு விட்டு சுண்டும்படி செய்து கொள்ள வேண்டும். பிறகு கல்வத்திலிட்டு நாட்டுக் காட்டாமணக்குப் பாலைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமமரைத்து வில்லை செய்துலர்த்திக் கொள்ள வேண்டும். இரண்டு நன்றாய் வெந்த செங்கற்களை மட்டமாகத் தேய்த்து ஒரு செங்கல்லில் வில்லை கொள்ளும்படியானதும் அது உள்ளடங்கி இருக்கும்படியானதுமான வட்டாகாரமான பள்ளஞ் செய்து முன் சித்தப்படுத்தின வில்லையை அதற்குள் வைத்து மற்றொரு கல்லையும் பொருந்தச் செய்து ஏழு சீலைமண் செய்து உலர்த்திக் கெச புடமிடவும். நன்றாய்க் குளிர ஆறின பின் எடுக்க செம்பரத்தம் பூ வண்ணமுள்ள செந்தூரமாகி இருக்கும்

அளவு:- 2 முதல் 3 குன்றிமணி எடை.

துணை மருந்து:- தேன், நெய், வெண்ணெய் முதலியவைகளும், முன் அப்பிரக பற்பங்களில் சொல்லி இருக்கிற அனுபவமான முறைகளுமாம்.

தீரும் நோய்கள்:- மேக நோய்கள், மதுமேக சம்பந்த நோய்கள், வெட்டை நோய்கள் ஆகியவைகள் தீரும்.

மருந்துணவு:- சமயோசிதம் போலும் நோய் வலிமை உடல் வலிமை ஆகியவைகளுக்குத் தகுந்தது போலும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது.

124. அப்பிரகச் செந்தூரம் (வேறு)

அப்பிரக நவநீதம் பலம் 5 (175 கிராம்) எலுமிச்சம் பழச்சாறு புளித்த காடித் தண்ணீர், நிலக்கடம்பு இலைச்சாறு ஆகியவை செல்லத்தக்க அளவு.

செய்முறை:- மேற்படி நவநீதத்தை ஈயம் பூசின பாத்திரத்தில் போட்டுப் புளித்த தண்ணீர், எலுமிச்சம் பழச்சாறு இரண்டையும் சமபாகமாகக் கலந்து அதில் விட வேண்டும். அந்தத் திரவமானது நவநீதத்துக்கு மேல் காலங்குலம், அரை அங்குலம் இருக்கும்படியாக விட வேண்டியது. அதனை அடிக்கடி நன்றாய்க் கலக்கியும் வரவேண்டும். அன்றாடம் பழைய திரவத்தை யிறுத்து விட்டும் புதுத் திரவத்தை முன்போல் சமபாகமாக இரண்டையும் சேர்த்துப் புதிது புதிதாக விட்டு வரவும் வேண்டும். இவ்விதம் நான்கு நாள் செய்து ஐந்தாம் நாள் பக்குவமாக எல்லா நீரையும் சிறுகச் சிறுக வடிய வைத்து நீக்கிவிட்டால் அது வெண்ணெய் போல பக்குவமாகி இருக்கும். அதனைக் கல்வத்திலிட்டு மேற்படி நிலக்கடம்பு இலைச்சாற்றைச் சிறுக சிறுக விட்டு நான்கு சாமம் அரைத்துச் சிறு சிறு வில்லைகளாகச் செய்து ஒரு பீங்கான் தட்டில் வைத்து வெய்யிலில் கொஞ்சமும் ஈரமில்லாமல் உலர்த்திக் கொள்ள வேண்டும். நன்றாய்க் கணீரெனச் சத்தங் கேட்கும்படியாக உலர்ந்த பின்பு ஒன்றின் மீதொன்றில்லாமல் சமமாக எல்லா வில்லைகளையும் ஒரு ஓட்டில் அடுக்கி மேலோடு மூடி ஏழு சீலை மண் செய்து அதனையும் கொஞ்சமும் ஈரமில்லாமல் உலர்த்திக் கெச புடமிட வேண்டும். புடம் நன்றாய்க் குளிர ஆறினபின் எடுத்துக் கல்வத்திலிட்டு முன்போல் நிலக்கடம்புச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு

நான்கு சாமமரைத்து முன்போல் சிறு வில்லைகளாகச் செய்து முன் போலுலர்த்தி ஓட்டிலடுக்கி புடமிட்டெடுத்துக் கொள்ள வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி இன்னும் 5 புடம் இட்டு எடுத்துக் கொள்ள வேண்டும். ஆகக் கூடிய ஏழு புடமும் தீர்ந்தால் ஒரு சிறிதும் தளுக்கில்லாத உயர்ந்த செந்தூரமாகி இருக்கும்.

இது ஒரு சிறந்த முறை. இது ஒரு மகானால் ஆய்ந்தறிந்து கூறியபடி செய்யப்பட்டது. நூறு புடமிட்ட அப்பிரகச் செந்தூரமும் இதற்கு முன் நில்லாது. சக்தியுள்ளவர்கள் மேற்கண்ட மூலிகையில் பதினேழு அல்லது இருபத்தோரு புடமிட்டுக் கொண்டால் முன் சொல்லி இருக்கிற செந்தூரசெயநீர் சம்பந்த அப்பிரகச் செந்தூரத்தின் சோதனைகளுக்கெல்லாம் ஒத்தே இருக்கும். ஆகையால் விருப்பமான வர்கள் தங்கள் சக்திக்கியன்றவாறு எத்தனை புடம் போட்டுக் கொள்ளக் கூடுமோ அத்தனை புடம் போட்டுக் கொள்ளலாம். சிரமத்திற்குப் பின்வாங்காமல் இதனைத் தக்க பெருமக்கள் செய்து வைத்திருப்பார்களாயின் மகா கொடிய நோய்களையும் கண்டித்துப் போக்கி இரக்க உணர்வோடு உலக மக்கட்கு உதவியாக உபயோகப்படும்படி செய்து புண்ணியத்தைப் பெற ஏதுவாகும்.

அளவு: 2 முதல் 3 குன்றிமணி எடை.

துணை மருந்து:- நெய், தேன், தகுந்த குடிநீர்கள், சூரணங்கள், இளகங்கள் ஆகியவைகளாம்.

தீரும் நோய்கள்:- காசநோய்கள், மேகநோய்கள், மதுமேக சம்பந்த நோய்கள், வெட்டை நோய்கள் முதலிய அநேக நோய்களில் உபயோகிக்கலாம்,

மருந்துணவு:- சமயோசிதம் போல உடல் வலிமை, நோய் வலிமை ஆகியவைகளுக்குத் தகுந்தவாறு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

125. அப்பிரகச் செந்தூரம் (வேறு)

அப்பிரக நவநீதம் 8 பலம் (280 கிராம்), தூய்மை செய்த நெல்லிக்காய் கெந்தகம் 1 பலம் (35 கிராம்), (1) எருக்கம் பால் (2) மஞ்சட்கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிமுள்ளி இம்மூன்றையும் சமபாகமாகச் சேர்த்து இதற்குப் பதினாறு பங்கு எடை நீரிலிட்டு எட்டிலொருபாகமாகச் சுண்ட வைத்த குடிநீர் (3)

அரசமரப்பட்டைக் குடிநீர் (4) பூவரசம்பட்டை குடிநீர் (இவ்விரண்டையும் தனித்தனி பதினாறு பங்கெடை நீரில் போட்டு எட்டிலொரு பாகமாகச் சுண்டவைத்து வடிகட்டி எடுத்துக் கொள்ள வேண்டியதே குடிநீராகும்.) (5) பசுவின் பால் ஆகிய ஐந்து வகைகளும் தனித் தனி செல்லத்தக்க அளவு.

செய்முறை:- முன் இரண்டு சரக்கையும் சேர்த்து எருக்கம் பாலைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமமரைத்து வில்லை செய்துலர்த்தி அகலில் வைத்து மேலகல் மூடி ஏழு சீலைமண் செய்து உலர்த்திக் கெச புடமிட்டு ஆறினபின் எடுத்துக் கொள்ளவும், பிறகு முப்பலைக் குடிநீரைச் சிறுகச் சிறுகவிட்டு நான்கு சாமமரைத்து முன்போல் வில்லை செய்து முன்போல் புடமிட்டுக்கொள்ள வேண்டும். இவ்விதம் முப்பலைக் குடிநீரில் மடக்கி மடக்கி இன்னும் நான்கு புடமிட்டுக் கொள்ள வேண்டும். ஆக முப்பலைக் குடிநீரில் மொத்தம் 5 புடமாம்.

அரசம்பட்டைக் குடிநீரில் மேற்கண்டவாறே 5 புடமிட்டுக் கொள்ள வேண்டும்.

அதன் பிறகு பூவரசம்பட்டைக் குடிநீரில் மேற்கண்ட விதமாகவே 5 புடமிட்டுக் கொள்ள வேண்டும்.

முடிவாகப் பசுவின் பாலில் 1 புடம் முன்போலவே இட்டுக் கொள்ள வேண்டும்.

ஆகக்கூடிய மொத்தம் பதினேழு புடமும் இட்டுத் தீர்த்தால் முருக்கம்பூப் போன்ற செந்தூரமாகி இருக்கும்.

அளவு:- 1½ முதல் 3 குன்றிமணி எடை.

துணைமருந்து;- நெய், தேன், வெண்ணெய் அதற்குத் தகுந்த சூரணங்கள், இளகங்கள் முதலியவைகளாம். ஆனால் இதனுடன் அயச்செந்தூரத்தைச் சம்பந்தப்படுத்திக் கொடுத்து அதிக சிறப்புடைய குணங்காணப் பட்டிருக்கிறது. அப்படிச் செய்தல் அதிசீக்கிரமாகவும் நிச்சயமாகவும் குணங்காணுமென்பது உறுதி. தனியாக உபயோகித்தால் அதிக சாந்தமாகவும் மெதுவாகவும் குணம் கொடுக்கிறது. ஆகையால், மருத்துவர்: நோய் பலமாயிருந்து நோயாளி அதிகம் பலக்குறைவாயிருந்தால் இதனுடன் லோக செந்தூரத்தைச் சம்பந்தப்படுத்தி உபயோகிக்க வேண்டும். அப்படி இல்லாதிருந்தால்

தனியே உபயோகிக்கலாம். இந்த செய்திகளெல்லாம் மருத்துவர்களின் அனுபவம் புத்தி நுட்பம் ஆகியவைகளைச் சேர்ந்ததாம்.

தீரும் நோய்கள்:- மதுமேகம், காசம், சுவாசம், வெட்டை நோய், பிரமேகம் ஆகியவைகள் தீரும்.

மருந்துணவு:- சமயம்போல் இலகுபத்தியமாகவும் கடினபத்தியமாகவும் வைக்க வேண்டியது.

126. அப்பிரகச் செந்தூரம் (வேறு)

கிருஷ்ண அப்பிரக நவநீதம் 5-பலம் [175 கிராம்], நாவற்பட்டைச்சாறு, நெல்லிப்பட்டைச்சாறு, கல்யாண முருக்கிலைச்சாறு புளி இலைச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு, வெண்ணொச்சி இலைச்சாறு, கையாந்தகரைச்சாறு, ஆலம் விழுதுச்சாறு இவ்வெட்டும் வகைக்குத் தனித்தனி செல்லத்தக்க அளவு, ஆடாதோடைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- மேற்படி நவநீதத்தைக் கல்வத்திலிட்டு மேற்கண்ட முன் எட்டுவகைச் சாறுகளில் ஒவ்வொன்றிலும் நன்னான்கு சாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடிச் சீலைமண் செய்து உலர்த்திக் கெச புடம் போடவும். இவ்விதம் மேற்கண்ட எட்டு வகைச் சாற்றிலும் ஒவ்வொன்றிலும் தனித்தனி ஐந்துபுடமாக நாற்பது புடமும் இட்டுத் தீர்ந்த பின்பு ஆடாதோடைச் சாற்றை நன்னான்கு சாமம் அரைத்தரைத்து மடக்கி மடக்கி முன்போல் ஏழு புடமிடவும். ஆகக்கூடிய நாற்பத்தேழு புடமிட்டுத் தீர்ந்தால் தளுக்கற்று மாதுளம்பூ வண்ணமாய்ச் செந்தூரமாகும்.

அளவு:- 2 முதல் 3 குன்றிமணி எடை.

துணைமருந்து:- தேன், நெய், வெண்ணெய், சூரணங்கள் குடிநீர் ஆகும்.

தீரும் நோய்கள்:- இருபத்தொரு மேகங்கள், இருபத்தொரு மதுமேக நோய்கள், எல்லா வகைபித்த நோய்கள் ஆகியவை தீரும்.

மருந்துணவு:- சமயோசிதம்போல் செய்துகொள்ள வேண்டும்.

குறிப்பு:- மேற்கண்ட இரண்டு பாகங்களும் சற்றுக் கடினமானவைகளாயினும் எவ்வித கடினமான முறைகளையும் செய்யப் பிரியமுள்ளவர்கள் சிலர் இருப்பார்களாகையால் அவ்வித பாகம்

இந்நூலில் இல்லையென்னும் குறை நீக்குவதற்காக இங்கு மேற்கண்டவைகள் எழுதப்பட்டிருக்கின்றன.

127. அய அப்பிரகச் செந்தூரம்

கிருஷ்ண அப்பிரக நவநீதம் 1 பலம் (35 கிராம்) காய்ச்சின பூநீறு ¼ பலம், தூய்மை செய்த அயப்பொடி 1¼ பலம் [43¾ கிராம்] குப்பைமேனிச் சாறு, சோற்றுக்காற்றாழைச்சாறு முள்ளங்கிக் கிழங்குச்சாறு ஆகியவை செல்லத்தக்க அளவு.

செய்முறை:- முன்னர் நவ்நீதத்தையும், பூநீற்றையும் கல்வத்திலிட்டு அரைமணி நேரம் நன்றாய் அரைத்துப் பிறகு அயப்பொடியைச் சேர்த்துச் சோற்றுக் கற்றாழைச்சாற்றை விட்டுக் கால்மணி நேரம் அரைத்து வெய்யிலில் வைத்து ஈரமில்லாமல் உலர்த்திச் சுட்ட குகையில் அடைத்துச் சில்லிட்டுச் சீலை செய்து கொல்லுலையில் வைத்து நன்றாய்க் குகையமுக ஊதியெடுத்து ஆறின பின் உடைத்துப் பார்த்தால் புற்றாஞ்சோறு போலிருக்கும். அதனைக் கல்வத்திலிட்டு குப்பைமேனிச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒருசாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி முழப்புடமிடவும். மேற்கண்ட விதமாகவே சோற்றுக் கற்றாழைச்சாற்றில் ஒரு புடமும் இடவேண்டும். பிறகு முள்ளங்கி கிழங்குச் சாற்றில் முன்போலவே மடக்கி மடக்கி ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு சாமமரைத்து வில்லை செய்து உலர்த்தி முழப் புடமாக ஐந்து புடமிட வேண்டும். இந்த மூன்று வகை மூலிகைகளிலும் ஆகக்கூடிய ஏழு புடமிட்டு எடுத்தால் இயற்கையினது அருளினால் திவ்வியமான செந்தூரமாகி இருக்கும்.

அளவு:- 1½ முதல் 2 குன்றிமணி எடை.

துணைமருந்து:- ஆவாரம்பட்டைத் தூள், ஆவாரவிதைத்தூள், ஆவாரைப் பஞ்சாங்கக் குடிநீர், அதிமதுரத்தூள் வெள்ளரி விதைத் தூள் முதலியவைகளாம், நோய் வலிமைக்குத் தகுந்தபடி ஒரு மண்டலம் அரைமண்டலம் உபயோகிக்க வேண்டும்.

தீரும் நோய்கள்:- சயம், இருமல் நோய், இரைப்பிருமல் நோய், இருபத்தொரு வகை நீரிழிவு, இருபத்தொரு வகைப் பிரமேக நோய்கள் ஆகியவைகள் தீரும்.

மருந்துணவு:- சமயோசிதம் போல் நோய்வலிமை, உடல் வலிமை ஆகியவைகளுக்குத் தகுந்தது போல் வைக்க வேண்டியது.

128. பளிங்கு அப்பிரகச் செந்தூரம்

தூய்மை செய்த பளிங்கு அப்பிரக நவநீதம் 1 பலம் [35 கிராம்] வெடியுப்பு 1½ பலம் [52 ½ கிராம்], நல்ல வெல்லம் ½ பலம் [17½ கிராம்], தண்ணீர், கையாந்தகரைச் சாறு எலுமிச்சம் பழச்சாறு ஆகிய இவை செல்லத்தக்க அளவு.

செய்முறை:- அப்பிரக நவநீதத்தை ஒரு அகலில் வைத்து வெடியுப்பு, வெல்லம் இரண்டையும் கொஞ்சம் தண்ணீர் வார்த்துக் குழம்பாய்க் கரைத்து, அதில் விட்டு முழுப் புடத்தின் நடுவில் வைத்துப் புடமிடவும். இந்த அகலை மேல் மூட வேண்டியதில்லை. ஒரு விராட்டித் துண்டை வைத்தால் போதுமானது. ஆறினபின் எடுத்துக் கையாந்தகரைச் சாற்றில் இரண்டிரண்டு சாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி உலர்த்தி மடக்கி மடக்கி ஏழு புடமிடவும். இதன் பிறகு எலுமிச்சம் பழச்சாற்றில் முன் போலவே மடக்கி மடக்கி மூன்று புடமிடவும், ஆகக்கூடிய புடம் பதினொன்றும் தீர்ந்தால் வாலறிவன் அருளால் தளுக்கற்ற செந்தூரமாகி இருக்கும்.

அளவு;- 2 முதல் 3 குன்றிமணி எடை.

துணைமருந்து;- தேன், நெய், வெண்ணெய் முதலியவைகளாம்.

தீரும் நோய்கள்;- பிரமேகங்கள், நீர்க்கடுப்பு, நீரெரிச்சல், வெட்டை, சயம், இரைப்பிருமல் ஆகியவைகள் தீரும்.

மருந்துணவு;- நோய்க்குத் தகுந்தபடி சமயோசிதம்போல வைத்துக் கொள்ள வேண்டும்.

129. நாக அப்பிரகச் செந்தூரம்

நாக அப்பிரகம் 2 பலம் (70 கிராம்), இதனைக் கிருஷ்ண அப்பிரகத்தைப் போலவே தூய்மை செய்து நவநீதமாக்கிக் கொள்ளவேண்டும். பிறகு இதனை ஓட்டில் வைத்துக் காய்ச்சி ஆற விட்டு எலுமிச்சம் பழச்சாற்றில் இருபத்துநான்கு மணி நேரம் ஊற வைத்து அச்சாற்றை விட்டே ஒரு சாமம் அரைத்து வில்லை செய்துலர்த்தி 'அகலில் வைத்து மேலகல் மூடி மூன்று சீலை மண் செய்துலர்த்தி இருபது பலம் விராட்டியில் ஒரு புடமிடவும்.

கரிசாலைச் சாற்றில் ஒவ்வொரு சாமம் அரைத்தரைத்து வில்லை செய்து உலர்த்தி உலர்த்தி மடக்கி மடக்கி நாற்பது பலம் விராட்டியில் இருபது புடமிட வேண்டும்.

ஆலம் விழுதுச் சாற்றில் ஒவ்வொரு சாமம் அரைத்தரைத்து வில்லை செய்து உலர்த்தி உலர்த்தி அறுபது பலம் விராட்டியில் தொண்ணூற்றேழு புடம் மடக்கி மடக்கி இட வேண்டும். ஆக நூற்றிருபத்து நாலு புடமுமிட்டுத் தீர்ந்தால் வாலறிவன் அருளால் மிகச் சிறப்பான செந்தூரமாகி இருக்கும்.

அளவு;- 1½ முதல் 3 குன்றிமணி எடை.

துணைமருந்து;- தேன், நெய், வெண்ணெய் முதலியவைகளும் இன்னும் சமயோசிதமான அனுபானங்களுமாம்.

தீரும் நோய்கள்;- இருபத்தொரு மேக வகைகள் சயம், காசம், சுரம், எருவாய் நோய்கள் ஆகியவைகள் தீரும்.

மருந்துணவு;- சமயோசிதம் போல் நோய்க்குத் தகுந்தபடியும் உடல் இயல்புக்குத் தகுந்தபடியும் செய்து கொள்ள வேண்டும்.

குறிப்பு;- இந்த முறையானது முன் சொல்லிய எல்லா முறைகளைப் பார்க்கிலும் சற்றுக் கடினமானதாகவே இருக்கிறது. ஆயினும் அரைப்பு, புடம் ஆகியவைகள் குறைந்த அளவாக இருக்கிறபடியால் இரண்டு வகை உழைப்புகளையும் ஒத்துப் பார்க்குங்கால் சற்றேறக் குறையச் சமமாகவே இருக்கும். மேலும் நாக அப்பிரகம் கிடைப்பது அரிது. அப்படிக் கிடைக்கும் காலங்களில் அதனைச் செந்தூரமாகச் செய்து கொள்ளப் பிரியமுள்ளவர்களுக்காக ஒரு பாகம் இருக்க வேண்டியது அவசியமாகும் மற்றும் வைத்திய நூல், வாகடம், சிந்தாமணி முதலிய பெரிய நூல்களிலும் சொல்லி இருக்கிறபடியால் நாமும் ஒரு முறையை இங்கு எழுதி இருக்கின்றோம்.

130. அப்பிரக அமிர்தீகரணம்

அப்பிரக பற்பம், அப்பிரகச் செந்தூரம் ஆகியவைகளை அமிர்தீகரணம் என்னும் தூய்மைப் பாவனை செய்யாமல் உபயோகிக்கலாகாதென எல்லா மருத்துவ நூல்களிலும் கூறப்பட்டுள்ளன. ஆகையால் மருத்துவர்கள் இந்த விவரங்களையும் தெரிந்து அம்முறைப்படி செய்து அமிர்தீகரணம் செய்து கொள்ள வேண்டும். அது பின் வருகிற விதமாம்.

அப்பிரக பற்பம் 10 பங்கு, திரிபலாதிக் குடிநீர் 19 பங்கு, பசுவின் நெய் 8 பங்கு.

செய்முறை:- இவை எல்லாவற்றையும் நன்றாய்க் கலந்து இரும்புப் பாத்திரத்திற் போட்டு அடுப்பேற்றிச் சிறுதீயாய் எரித்து எல்லாம் எரித்து நெய்ப்பசை இல்லாத பதத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். இவ்விதம் அமிர்தீகரணம் செய்யப்பட்ட அப்பிரக பற்ப முதலியவைகள் எல்லா வகை மருந்துகளிலும் சேர்க்கப்படும். இவ்விதம் அமிர்தீகரணம் செய்யப்பட்ட அப்பிரகச் செந்தூரத்தைத் தகுந்த அனுபானங்களில் எல்லா நோய்களுக்கும் உபயோகிக்க அவை நலமாகும். இவ்விதம் செய்வதால் அப்பிரக பற்பம், செந்தூரம் ஆகியவைகளில் ஏதேனும் குற்றமிருந்தாலும் அவை நீங்கி அவற்றில் அநேக வகை நல்ல குணங்கள் உண்டாகி விடுகின்றன. இதன் சிறப்புகளைப் பழக்கப் பயிற்சியில் அவரவர்கள் நன்கு தெரிந்து கொள்ளலாம்.

அப்பிரகத்திற்கு ஆகாத பண்டங்கள்

உவர்ப்புப் பண்டங்கள், புளிப்புப் பண்டங்கள், வெள்ளரிக்காய், பாகற்காய், கத்திரிக்காய், மூங்கில் போத்து, எள்ளு, எண்ணெய், கடலை ஆகியவைகளும் ஆகா.

வெள்வங்கத் தூய்மை

வெள்வங்கத்தைப் பற்பம், செந்தூரம் ஆகியவைகள் செய்வதற்கு முன் அதனை நன்றாகத் தூய்மை செய்து உபயோகிக்க வேண்டியது. அப்படிச் செய்யாவிட்டால் பலவித குணங்களுக்கு ஏதுவாகும். "வங்கமானால் தங்கம், வங்கம் கெட்டால் பங்கம்" என்னும் யாவருமறிந்த பழமொழியொன்றும் வழங்குகிறது. இந்தப் பழமொழியானது சாதாரணமாய் வழங்கப்படினும் இதில் அநேக வகை ஆழ்ந்த கருத்துகள் அடங்கியுள்ளன என்பது அனுபவசித்தி பெற்ற அறிவாளிகளுக்கு நன்கு புலப்படும். வெள்வங்க தூய்மையானது ஒவ்வொரு நூல்களிலும் ஒவ்வொரு வகையாகச் சொல்லப்பட்டிருப்பினும் அனுபவசித்தி பெற்ற ஒன்றிரண்டை இங்கு எழுதுகின்றோம்.

வெள்வங்கத்தை அரையணா கனமுள்ள தகடாகச் செய்து சொள்ள வேண்டும். வெண்ணொச்சி வேர்ப் பட்டையை உலர்த்தி இடித்துத் தூளாக்கி வடிகட்டிக் கல்வத்திலிட்டு எருக்கம் பாலை விட்டு இரண்டொரு சாமம் அரைத்து மெழுகு போல் எடுத்து வைத்துக்

கொள்ள வேண்டும். இந்த மெழுகை மேற்படி வங்கத் தகட்டின் மீது அரையணா கனம் நாலாபக்கமும் பூசி உலர்த்தி இரும்புக் கரண்டியில் வைத்து உருக்கி நன்றாய் உருகின பிறகு வெண்ணொச்சி இலைச் சாற்றில் சாய்க்க வேண்டும். இந்த வெண்ணொச்சிச் சாறானது வங்கமானது தாராளமாக அமிழ்ந்திருக்கும்படி இருக்க வேண்டியது சாற்றில் வங்கத்தைச் சாய்க்கும்போது தெறிக்குமாகையால் முகம், உடல் ஆகியவைகளை விழிப்பாக வைத்துக் கொள்ள வேண்டியது. இதற்காகச் சாற்றைச் சிறு மண் பாத்திரத்தில் வார்த்துப் பூமியில் புதைத்து அதில் சிறு துவாரமிட்ட ஓட்டைக் கவிழ்த்து வைத்து அந்தத் துவாரத்தின் வழியாக ஊற்றுவது அபாயமற்ற வேலையாம். இவ்விதமே சமயத்துக்கு தகுந்த ஏற்பாடு செய்து கொள்ள வேண்டியது. பிறகு நன்றாய் ஆறினபின் வங்கத்தை எடுத்துக் கொஞ்சம் தட்டி அதன்மேல் முன் மெழுகை முன் போல் பூசிக் கொஞ்சம் உலர வைத்து முன்போலுருக்கி முன்போல் வெண்ணொச்சி இலைச் சாற்றில் சாய்க்க வேண்டும். இவ்விதம் தடவைக்குத் தடவை மெழுகைத் தடவி தடவைக்குத் தடவை புதிய சாற்றில் மடக்கி மடக்கி ஏழு தடவை சாய்த்தெடுத்துக் கொண்டால் வெள்ளீயமானது பரிசுத்த மானதாகிவிடும். இவ்விதம் செய்யப்பட்ட வெள்ளீயத்தைப் பற்பமாக அல்லது, செந்தூரமாகச் செய்து உபயோகித்தால் எவ்விதக் குணத்தைத் தருமென்பது அனுபவசாலிகளுக்கு நன்கு புலப்படும்.

131. வெள்வங்க பற்பம்

தூய்மை செய்த வெள்வங்கம் பங்கு 1, கருவேலம் பட்டையை எரித்து எடுத்த சாம்பல் 4 பங்கு, புளியம் புறணியை எரித்தெடுத்த சாம்பல் 4 பங்கு, மனோசிலை செல்லத் தக்க அளவு, எலுமிச்சம் பழச்சாறு செல்லத் தக்க அளவு.

செய்முறை:- மேற்படி வங்கத்தை இரும்புச் சட்டியில் வைத்து உருக்கி இரண்டு சாம்பல்களையும் ஒன்றாகச் சேர்த்துச் சிறுகச் சிறுக வங்க முகத்திற் கொடுத்து இரும்புத் துடுப்பால் கிண்டி வரவேண்டும். ஒரு சாமத்திற்குள் மேற்கண்ட சாம்பல் எல்லாவற்றையும் கொடுத்துக் கைவிடாமல் துழாவிக்கொண்டிருந்தால் வங்கமானது மடிந்துபோகும். பின் அதற்கு சமனெடை மனோசிலையைச் சேர்த்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து எலுமிச்சம்பழச் சாற்றை சிறுகச் சிறுக விட்டு இரண்டு சாமம்

நன்றாய் அரைத்து வில்லை செய்து உலர்த்தி அகலிலிட்டு மேலகல் மூடி ஏழு சீலை மண் செய்து கெசபுடமிட்டுக் குளிர ஆறினபின் எடுக்க மிகத் தூய்மையான பற்பமாகி இருக்கும். எல்லாவிதத் தேர்வுக்கும் ஒத்திருக்கும்.

அளவு;- 2 முதல் 3 குன்றிமணி எடை.

துணைமருந்தும் தீரும் நோய்களும்;- தேன் 3 வராகன் எடை [10 ½ கிராம்], பசு நெய் 3 வராகன் எடை (10 ½ கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்து உட்கொண்டுவர விந்துக்குறைவு நோய், பிரமிய நோய்கள் ஆகியவைகள் தீரும்.

வெண்ணொச்சி இலைச்சாறு 3 வராகன் எடை (10½ கிராம்) தேன் 3 வராகன் எடை (10 ½ கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்து உண்ணக் கண்ட மாலை, காக்கை வலிப்பு நோய், மூர்ச்சை நோய் ஆகியவைகள் தீரும்.

மஞ்சட் கடுக்காய்த் தோல் தூள், தான்றிக்காய் தூள், நெல்லி வற்றல் தூள், இம்மூன்றும் வகைக்கு ½ வராகன் எடை (1 ¾ கிராம்), தேன் 3 வராகன் எடை (10 ½ கிராம்), இவற்றை கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண பகந்திர நோய்கள் தீரும்.

வலம்புரிக்காய்த் தூள் 8 குன்றிமணி எடை, மூங்கிலுப்புத் தூள் 2 குன்றிமணி எடை, ஏலரிசித் தூள் 2 குன்றிமணி எடை, வெண்ணெய் 2 குன்றிமணி எடை, இவற்றைக் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண மூத்திரக் கிரிச்சர நோய் தீரும்.

நெருஞ்சிச் சாறு 3 வராகன் எடை, தண்ணீர் விட்டான் கிழங்குச் சாறு 3 வராகன் எடை, இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண கல்லடைப்பு ஆகியவைகள் தீரும்.

கடுகின் தண்டுச்சாறு 6 வராகன் எடை, தேன் 3 வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண சிறுநீரக நோய் தீரும்.

கொடிவேலி வேர்ப்பட்டைத் தூள் 3 குன்றிமணி எடை, கண்ட திப்பிலித் தூள் 4 குன்றிமணி எடை, தூய்மை செய்த மைசாட்சி 8 குன்றிமணி எடை, தேன் 3 வராகன் எடை (10 ½ கிராம்), இவை

எல்லாவற்றையும் கலந்தரைத்து எடுத்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண தனுர்வாயு, முதலிய பல வாயுகள் தீரும்.

மரமஞ்சட் தூள் 8 குன்றிமணி எடை, விராலி வேர்த் தூள் ½ வராகன் எடை (1 ¾ கிராம்), தேன் 3 வராகன் எடை (10 ½ கிராம்), இவற்றைக் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண கும்ப காமாலை நோய் தீரும்.

கீழ்க்காய் நெல்லிவேர்த் தூள் 1 வராகன் எடை (3 ½ கிராம்), கழுநீர் ½ ஆழாக்கு, தேன் 3 வராகன் எடை (10 ½ கிராம்), இவற்றைக் கலந்து மேற்கண்ட பற்பத்தைச் சேர்த்துண்ண அலீமுகப் பாண்டு, கும்ப காமாலை ஆகியவைகள் தீரும். இந்த நோய்களில் சுரம் வருகிறதாக இருந்தாலும் அதுவும் தீரும்.

மரவள்ளி வேர்த் தூள் 3 வராகன் எடை (10 ½ கிராம்), பசுவின் நெய் ½ ஆழாக்கு, தேன் 6 வராகன் எடை (21 கிராம்), இவற்றைக் கலந்து மேற்கண்ட பற்பத்தைச் சேர்த்துண்ணக் காமாலை வீக்கம் தீரும்.

எருக்கம் வேர்ப்பட்டைத் தூள் ¾ வராகன் எடை, கழுநீர் ½ ஆழாக்கு, தேன் 6 வராகன் எடை (21 கிராம்), இவற்றைக் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண கும்பகாமாலை, நான்காமுறைக் காய்ச்சல் ஆகியவைகள் தீரும்.

ஆலம் விழுதுத் தூள் 2 வராகன் எடை (7 கிராம்), கற்கண்டுத் தூள் 2 வராகன் எடை (7 கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண இரத்த பித்த நோய், மலத்துடன் இரத்தம் விழுதல் ஆகியவைகள் தீரும்.

நெல்லிக்காயை அரைத்த விழுது 3 வராகன் எடை (10 ½ கிராம்), கற்கண்டுத் தூள் 3 வராகன் எடை (10 ½ கிராம்), கோரைக் கிழங்குத் தூள் 3 வர்ராகன் எடை (10 ½ கிராம்), இவை எல்லாவற்றையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண எல்லாவகை இரத்த பித்த நோய்களும் தீரும்.

பற்படாகத் தூள், ஆலம் விழுதுத் தூள், கற்கண்டுத் தூள், தேன், இந்நான்கும் வகைக்கு 3 வராகன் எடை (10 ½ கிராம்), இவற்றைக் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண புராதன இரத்த பித்த நோய் தீரும்.

தாமரைப்பூ ரசம் 3 வராகன் எடை (10½ கிராம்), தேன் 3 வராகன் எடை (10½ கிராம்) இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண குருதிக் கழிச்சல் சூட்டுக் கழிச்சல் ஆகியவைகள் தீரும்

மருந்துணவு;- சமயோசிதம் போலும் நோய்க்குத் தகுந்தது போலும் பத்தியமேற்படுத்திக் சொள்ள வேண்டியது.

132. வெள்வங்க பற்பம் (வேறு)

புது மண் பாத்திரத்தில் சுண்ணாம்பைப் பூசி உலர்த்த வேண்டும். இவ்விதம் சுமார் ஒரு நூற் கனம் சுண்ணாம்பு ஏறின பின் அதில் தூய்மை செய்த வெள்வங்கத்தைப் போட்டு அடுப்பேற்றி பரவிய எரிப்பாக (காடாக்கினி) எரித்து வந்தால் வங்கமானது மடிந்துபோகும். அவ்விதம் மடிந்து போனதைக் கல்வத்திலிட்டுக் கொண்டைக் கடலைக் குடிநீரைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமத்திற்குக் குறையாமலரைத்து வில்லை தட்டிக் காயவைத்து உலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடு மூடி 5 சீலை மண் செய்துலர்த்திக் கெசபுடமிட்டு எடுக்கச் சிறந்த பற்பமாகி இருக்கும். இதில் ஏதேனும் களங்கமிருந்தால் இன்னொரு தடவையும் அரைத்து கெசபுடமிட்டெடுத்துக் கொள்ளவும். ஒழுங்கு முறையாகப் போட்டால் ஒரே தடவையிற் பற்பமாகி விடும். இரண்டாந்தடவையும் புடம் போட வேண்டுமென்ற அவசியமில்லை.

கொண்டைக் கடலைக் குடிநீர்:- கொண்டைக் கடலை ¼-படி ½ படி நீரில் கடலையைப் போட்டு ஒரு நாளூற வைத்து மறுநாட் காய்ச்சி அரைப்படியாகச் சுண்ட வைத்து வடிகட்டித் திப்பி நீக்கி எடுத்துக் கொள்ள வேண்டியதே கடலைக்குடிநீர்.

அளவு;- 2 முதல் 3 குன்றிமணியெடை.

துணை மருந்தும், நீரும் நோயும்:- இஞ்சிரசம் 3 வராகன் எடை (10½ கிராம்), தேன் 3 வராகன் எடை (10½ கிராம்) இவ்விரண்டையும் மேற்கண்ட பற்பத்தை கலந்து அளவுப்படி சேர்த்துண்ண சூலை வாயு தீரும்.

சோம்பைத் தண்ணீர் வார்த்தரைத்துப் பிழிந்த சாறு 3 வராகன் எடை (10 ½ கிராம்), தேன் 3 வராகன் எடை (10 ½ கிராம்) இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண ஆனந்த வாயு தீரும்.

ஓமத் தூள் 4 குன்றிமணி எடை, பொரித்துத் தூள் செய்த பெருங்காயத் தூள் 1 குன்றிமணி எடை, நெய் 3 வராகன் எடை (10 ½ கிராம்), இவற்றைக் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண வாத சூலைநோய் தீரும், வயிற்றிலுள்ள கட்டியும் நலமாகும்.

பழைய வெல்லம் 3 வராகன் எடை (10½ கிராம்), நெய் 6 வராகன் எடை (21 கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண பித்தசூலை நோய் தீரும்.

தண்ணீர் விட்டான் கிழங்குச் சாறு 3 வராகன் எடை (10½ கிராம்), தேன் 3 வராகன் எடை (10 ½ கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ணப் பிரமேக சம்பந்தமான கீல்வாயு, முடக்குவாயு முதலியவைகள் தீரும்.

மஞ்சட் கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிமுள்ளி இம்மூன்றின் தனித்தனித் தூள் வகைக்கு 1 வராகன் எடை [3½ கிராம்], தேன் 3 வராகன் எடை [10 ½ கிராம்], இவற்றைக் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண எருவாய் நோய்கள் தீரும்.

மேற்கண்ட திரிபலைத் தூள் வகைக்கு ½ வராகன் எடை வேப்பிலையை உலர்த்தி இடித்த தூள் ¾ வராகன் எடை வலம் புரிக்காய்த் தூள் ¾ வராகன் எடை, தேன் 3 வராகன் எடை [10 ½ கிராம்], இவை எல்லாவற்றையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண வாதமூல நோய், சூலை நோய் ஆகியவைகள் தீரும்.

தேன் 1 வராகன் எடை, இதில் மேற்சண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துட் கொண்டு கொஞ்சம் வெந்நீர் சாப்பிடக் கபசூலை நோய் தீரும்.

வில்வ வேர்ப்பட்டைச்சாறு 3 வராகன் எடை, ஆமணக்கு வேர்ச்சாறு 3 வராகன் எடை, தேன் 6 வராகன் எடை இவை எல்லாவற்றையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ணக் கபவாதம் தீரும்.

அப்பளாக்காரம் 4 குன்றிமணி எடை, தேன் 3 வராகன் எடை, இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி

சேர்த்துண்ண பக்கவலி, மார்புவலி, தொடையடிவலி முதலியவைகள் தீரும். பசி தீபனம் அதிகப்படும்.

அப்பளாக்காரம், பூநீறு வகைக்கு 2 குன்றிமணி எடை, பொரித்த பெருங்காயத் தூள் 1 குன்றிமணி எடை, பசுவின் நெய் 1 வராகன் எடை இவற்றைக் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண இடுப்புப் பிடிப்பு, பக்கசூலை, சுரம், வயிற்றுக்கட்டி, ஆகியவைகள் தீரும்.

விராலிவேர்க் குழித் தைலம் 1 வராகன் எடை [3 ½ கிராம்], மாதுளம் பழரசம் 2 வராகன் எடை [7 கிராம்], இந்துப்புத் தூள் 4 குன்றிமணி எடை, தேன் 3 வராகன் எடை [10 ½ கிராம்], இவை எல்லாவற்றையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்து உட்கொள்ள சன்னிபாத சூலை நோய் தீரும்.

நெருஞ்சி சமூலக் குடிநீர் 3 வராகன் எடை (10½ கிராம்), நறுவிலி வேர்க்குடிநீர் 3 வராகன் எடை (10 ½ கிராம்), பூநீறு 2 குன்றிமணி எடை இவற்றைக் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண நீர்ப்பையின் வலி, இடுப்பு வலி ஆகியவைகள் தீரும்.

சிவதைவேர்த் தூள் 1½ குன்றிமணி எடை, தேன் 3 வராகன் எடை [10 ½ கிராம்], இவற்றைக் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்து உட்கொள்ள வயிற்று நோய்கள், வயிற்றுப் பொருமல் ஆகியவைகள் தீரும்.

ஏலரிசித்தூள், தாளிசப்பத்திரித் தூள், வகைக்கு 8 குன்றிமணி எடை, மருதம்பட்டைச் சாறு 2 வராகன் எடை [7 கிராம்], தேன் 4 வராகன் எடை [14 கிராம்], இவையெல்லாவற்றையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்து உட்கொள்ள எட்டு வித பரிணாம சூலை முதலிய எல்லா சூலை நோய்களும் தீரும், எந்த வகைச் சூலை நோய்க்கும் இதற்கு மிஞ்சின மருந்தெதுவும் இல்லையென்று சொல்லலாம்.

பாலேடு 3 வராகன் எடை (10 ½ கிராம்), கற்கண்டுத்தூள் 3 வராகன் எடை [10 ½ கிராம்], இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண வறட்டிருமல் தீரும்.

மருந்துணவு;- சமயோசிதம் போல நோய்களுக்குத் தகுந்தபடி ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது.

133. வெள்வங்க பற்பம் (வேறு)

தூய்மை செய்த வெள்வங்கம் 6 பலம் (210 கிராம்), தூய்மை செய்த இரசம் 1½ பலம் (52½ கிராம்), மனோசிலை 1½ பலம், அகத்திக்கீரைச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- இரசத்தையும், வங்கத்தையும் கலக்கும்படி கல்வத்திலிட்டு மனோசிலையையும் சேர்த்து நன்றாயரைத்துக் கலந்து மேற்கண்ட அகத்தியிலைச் சாற்றைச் சிறுகச்சிறுக விட்டு பன்னிரெண்டு சாமமரைத்து வில்லை செய்துலர்த்தி அகத்திக்கீரையை அரைத்த விழுது 40 பலம் இதற்குள் முன் சித்தப்படுத்தின வில்லையை வைத்து இரண்டொரு சீலைமண் செய்து முந்நூற்றறுபது பலம் வராட்டியிற் புடமிட்டுக் குளிர ஆறினபின் எடுக்க வெண்ணிறமான பற்பமாகி இருக்கும்.

அளவு;- 1 முதல் 2 குன்றிமணி எடை.

துணைமருந்தும் தீரும் நோயும்;- நாவற்பட்டைச் சாறு 3 வராகன் எடை (10½ கிராம்), தேன் 3 வராகன் எடை (10½ கிராம்), இவ்விரண்டையும் அளவுப்படி மேற்கண்ட பற்பத்தைக் கலந்து சேர்த்துண்ண குருதி எருவாய்முளை நோய், குன்மக்கட்டி, சூதகக்கட்டி ஆகியவைகள் தீரும்.

நெல்லிக்காய்ச் சாறு 3 வராகன் எடை (10½ கிராம்), மூன்று வராகன் எடை நெருஞ்சிமுள்ளை 2½ பலம் தண்ணீரில் ஒரு இரவு ஊறவைத்து இறுத்தெடுத்த நீர், தேன் 3 வராகன் எடை (10½ கிராம்), இம்மூன்றையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண ஆண், பெண் குறிகளில் உண்டாகும் சொறிகள், சிரங்குகள், உடலின் மீதுள்ள சொறிசிரங்குகள் ஆகியவைகள் தீர்ந்து உடல் வலிமை, உடல் வளமை உண்டாகும்.

மணித்தக்காளிச் சாறு 3 வராகன் எடை [10½ கிராம்], இந்துப்புத் தூள் 4 குன்றிமணி எடை, இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண சுரக்கட்டி, ஈரல் வீக்கம் ஆகியவைகள் தீரும்.

ஆலம் விழுதுச் சாறு 5 வராகன் எடை [17½ கிராம்] அதிவிடயத்தூள் 8 குன்றிமணி எடை இவ்விரண்டையும் கலந்து

மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண குருதிக் கழிச்சல், நிணக்கழிச்சல் ஆகியவைகள் தீரும்.

மஞ்சட் கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிவற்றல் இம்மூன்றின் தனித்தனி தூள்கள் வகைக்கு ½ வராகன் எடை [1 ¾ கிராம்], கோரைக் கிழங்குத் தூள் ¼ வராகன் எடை, தேன் 5 வராகன் எடை (17 ½ கிராம்) இவை எல்லாவற்றையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண மஞ்சட் காமாலை நோய், பெருங்கழிச்சல் நோய் ஆகியவைகள் தீரும்.

செம்முள்ளி இலைச்சாறு, வேப்பம்பட்டைச்சாறு இவை இரண்டும் வகைக்கு-2 வராகன் எடை [7 கிராம்], தேன் 4 வராகன் எடை [14 கிராம்], இவற்றைக் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண தொண்டைக் கட்டு, தொண்டைக் கம்மல், தொண்டை அடைப்பு ஆகியவை தீரும்.

பசுவின் வெண்ணெய் 3 வராகன் எடை [10 ½ கிராம்], சிறு நாகம்பூ தூள், தூய்மை செய்த சிலாசத்து அல்லது சிலாசத்துப் பற்பம் வகைக்கு 2 குன்றிமணி எடை இவை எல்லாவற்றையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்து அருந்த சுக்கிலப் பிரமிய நோய், நரை, திரை உடல் தளர்ச்சி ஆகியவைகள் தீரும்.

வெட்பாலை அரிசித் தூள், நெல்லிவற்றல் தூள் இவை வகையொன்றுக்கு 8 குன்றிமணி எடை, தேன் 3 வராகன் எடை [10 ½ கிராம்], இவற்றைக் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண, பருத்த உடல் இளைத்துப் போகும்.

மருந்துணவு;- நோய்களுக்குத் தகுந்தது போலவும், சமயோசிதமாகவும் மருந்துணவு வைத்துக் கொள்ள வேண்டியது.

134. வெள்வங்க பற்பம் (வேறு)

தூய்மை செய்த வெள்வங்கம் 2 பலம் [70 கிராம்], மருதம் பட்டைச் சாம்பல் 10 பலம், [350 கிராம்] கழுநீர், சதுரக் கள்ளிப்பால் இவை செல்லத்தக்க அளவு.

செய்முறை:- மருதம்பட்டைச் சாம்பலில் கழுநீரைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமம் அரைத்து வில்லை தட்டி உலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடு மூடி மூன்று சீலைமண் செய்து கவசத்தின் பத்துப்

பங்கு எடை வராட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கக் கடுங்காரச் சுண்ணமாகி இருக்கும். இந்தச் சுண்ணத்தில் சதுரக் கள்ளிப்பாலைச் சிறுகச் சிறுக விட்டு ஒரு சாமம் அரைத்து மெழுகு பதமாக எடுத்துக் கொள்ள வேண்டும். வெள்வங்கத்தை காலணா கனமுள்ள தகடடித்து முன் சித்தப்படுத்தின மெழுகை அதன்மேல் இருபுறமும் பூசி ஓட்டில் வைத்து மேலோடு மூடி ஏழு சீலைமண் செய்துலர்த்திக் கவசத்திற்குக் கீழும், மேலும் ஒவ்வொரு படி புளியம் புறணியை வைத்து ஒரு கெசம் பள்ளத்தில் வராட்டியை அடுக்கி அதனடுவில் வைத்துப் புடமிடவும். நன்றாய்க் குளிர ஆறினபின் எடுக்க மேலான பற்பமாகி இருக்கும்.

அளவு;- 2 முதல் 3 குன்றிமணி எடை.

தீரும் நோய்:- சிறப்பான துணைமருந்துகளுடன் கொடுக்க இருபத்தொரு வகை மேகநோய்களும் தீரும்.

மருந்துணவு;- நோய் வலிமை, உடல் வலிமை ஆகியவைகளுக்குத் தகுந்தது போலும் சமயோசிதம் போலும் வைத்துக் கொள்ள வேண்டும்.

135. வெள்வங்க பற்பம் (வேறு)

தூய்மை செய்த வெள்வங்கம் 1 பலம் (35 கிராம்), வெண்ணொச்சி இலையை உலர்த்தி இடித்த தூள் 5 படி.

செய்முறை:- உரத்த வெள்ளைச் சீலைத்துண்டில் மேற்கண்ட தூளைப் பரப்பி மேற்படி வங்கத்தை ஈசலிறகுபோல தகடடித்து அதனைச் சன்னமாகத் துண்டித்துத் தகடானது ஒன்றோடொன்று சேராமல் அதன்மேல் பரப்பி மெதுவாகச் சுருட்டித் திரியைப்போற் செய்து நூற் கயிற்றினால் மெதுவாகக் கட்டி இலேசாய் அதன்மேல் மண்ணைப் பூசி உலர்த்திக் காற்றில்லாத இடத்தில் வைத்து இரு தலைப்பிலுங் கொளுத்தி விட்டு இரண்டு நாள் குளிர ஆறவிட்டுப் பார்த்தால் உள்ளே வங்கத்தூளெல்லாம் பொரிந்து போயிருக்கும். அதிக விழிப்புடன் நொச்சிச் சாம்பலை ஊதி நீக்கிப் பொரிந்திருக்கிற வங்கத் தகட்டைப் பொருக்கி எடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து மெல்லிய துணியில் வடிகட்டித் திப்பியை நீக்கி விட்டுப் பற்பத்தை மாத்திரம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அளவு;- 2 முதல் 3 குன்றிமணி எடை.

திரும் நோய்கள்:- தகுந்த சிறப்புமிகு துணைமருந்துகளிலிட இருபத்தொரு மேகங்கள், குட்டநோய், வயிற்றுவலி, குன்மம், வாயு சம்பந்தநோய் ஆகியவைகள் தீரும்.

மருந்துணவு:- பசுவின் பால் பசுவின் நெய் ஆகியவைகளை அதிகமாகச் சேர்க்க வேண்டும். நோய் வலிமைக்குத் தகுந்தபடி உப்பு, புளி ஆகியவைகளையும் நீக்கி வைக்க வேண்டியது.

136. வெள்வங்கச் சுண்ணம்

தூய்மை செய்த வெள்வங்கம் 1 பலம் (35 கிராம்), நாலாங் காய்ச்சல் வெடியுப்பு 5 பலம் (175 கிராம்)

செய்முறை:- வெடியுப்பைப் பொடித்து இரண்டு பாகமாகச் செய்து ஒரு பாகத்தை ஒரு கலயத்தில் வைத்துச் சமமாக்கி வெள்வங்கத்தை மெல்லிய தகடாகச் செய்து அதன் மேல் வைத்து அதன் மேல் வெடியுப்பின் மறுபாகத்தைப் போட்டுக் கலயத்தின் வாய்க்குச் சில்லிட்டுச் சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் பத்துப் பங்கு எடை வராட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுக்க சுண்ணமாக இருக்கும்.

அளவு;- 1 முதல் 2 குன்றிமணி எடை.

தீரும்நோய்:- தகுந்த துணை மருந்துகளில் இட பிரமேக நோய்கள், மேக நோய்கள் ஆகியவைகள் தீரும்.

மருந்துணவு:- முன் முறையிற் சொன்ன பத்தியமேயாகும்.

137. வெள்வங்கச் செந்தூரம்

தூய்மை செய்த வெள்வங்கம் 1 பலம் (35 கிராம்), புளியம் புறணிச் சாம்பல் செல்லத்தக்க அளவு. தூய்மைசெய்த இரசம் கெந்தகம் இவை வகைக்கு 2 ½ வராகன் எடை [8 ¾ கிராம்].

செய்முறை:- மேற்படி வங்கத்தைச் சட்டியிலிட்டு அடுப்பேற்றி எரித்து உருகினபின் புளியம் புறணிச் சாம்பலை அதன் முகத்தில் சிறுகச் சிறுகத் தூவிப் புளியங்கொம்பாற் கடைந்தும் வரவேண்டும். இவ்விதம் சுமார் வங்கத்திற்கு ஒன்றரைப் பங்கு இரண்டு பங்கு எடை மேற்படி புறணிச் சாம்பலைத் தூவி, மேற்கண்டபடி கடைந்து வந்தால் வங்கமானது மடிந்து பற்பமாகிவிடும். கீழிறக்கி நன்றாய் ஆறினபின் அதை எடுத்து இரும்புச் சட்டியிலிட்டு அடுப்பேற்றி மெதுவாக எரித்து

மேற்படி இரசத்தையுங்கெந்தகத்தையும் ஒன்றாகச் சேர்த்து நன்றாய்க் கறுக்கிற வரையிலரைத்தெடுத்து மேற்படி பற்பத்துடன் சேர்த்துக் கிளறினால் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து திரண்டு உருண்டை போலாகிவிடும். பிறகு அதை எடுத்து வெய்யிலில் வைத்து நான்கு மணி நேரம் கலக்கிக் கொண்டிருந்தால் செந்தூரமாகி விடும். இதைச் செய்வதற்குக் கைபாகம் தெரிய வேண்டியது. இரண்டொரு தடவை செய்தால் இதன் பாகத்தை அனுபவத்தால் தெரிந்து கொள்ளலாம். ஒரு தடவை செந்தூரமாகாவிட்டால் தடுமாற்றப்பட்டு விட்டு விடலாகாது. தானே இரண்டொரு தடவை மடக்கி மடக்கிச் செய்தால் இதிலுள்ள வேறுபாடு விவரங்கள் நன்றாய் விளங்கிப்போம்.

அளவு:- 2 முதல் 3 குன்றிமணி எடை.

துணை மருந்தும், தீரும் நோயும்:- ஆளிவிதைத்தூள், நற்சீரகத்தூள், திப்பிலித் தூள் இம்மூன்றும் வகைக்கு ½ வராகன் எடை (1¾ கிராம்), மேற்படி பற்பம் 2 குன்றிமணி எடை இவை எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து செவ்விளநீர் ஆனால் உத்தமம்: அப்படி அது அகப்படாவிட்டால் சிவப்பு நிறமான இளநீரை மட்டையுடன் சீவிப் பொத்து, மேற்படி மருந்தை அதற்குள் இட்டு முன் வாயை சீவின அதன் மட்டையால் மூடி, அந்த மட்டையின் வாய்க்கு மண்ணைப் பூசி இளநீரின் வாய் மேற்பக்கமாக இருக்கும்படியாக வைத்துச் சுமார் பத்துப் பலமுள்ள பத்து வராட்டியிற் புடமிட்டு, ஆறின பின் எடுத்து அதற்குள்ளிருக்கிற இளநீர் மருந்து முதலியவைகளைப் பருக வேண்டும். உள்ளிருக்கிற வழுக்கை முதலியவைகளைச் சாப்பிடலாகாதாகையால், வழுக்கை பிடிக்காத இளநீராக எடுத்துக் கொள்வது உத்தமம். இவ்விதம் காலை, மாலை இரண்டு வேளையுஞ் சித்தப்படுத்திப் பத்து நாளுபயோகித்தால் இருபத்தொரு மேகங்கள், பிரமேகங்கள், நீரடைப்பு, சதையடைப்பு, கல்லடைப்பு ஆகியவைகள் தீரும்.

மருந்துணவு:- நோய்வலிமை, உடல் வலிமை ஆகியவைகளுக்குத் தகுந்ததுபோல் ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது.

குறிப்பு:- இதில் சொல்லி இருக்கப்பட்ட துணை மருந்தானது சற்றுக் கடினமானதாகத் தோன்றும். ஆனால் அஸ்மரி, கல்லடைப்பு, சதையடைப்பு ஆகிய நோயுள்ள நோயாளிகள் படும் துன்பத்தைப் பார்ப்பதற்கு சகிக்கக் கூடாமையாக இருக்கிறது. அவர்கள் படும்

துன்பத்திற்கு ஒரு அளவும் இல்லை, சலாகை முதலியவைகளை உபயோகித்துச் சில சமயங்களில் அபாயமாகவே முடிந்திருக்கிறது. அக்காரணங்களை எல்லாங் கவனிக்குங்கால், மேல் கண்டபடி சித்தப்படுத்தி உபயோகித்தால் கற்களெல்லாம் கரைந்து தானே வெளிப்பட்டுவிடுகிறது. இந்த நோயில் சலாகையை ஒரு தடவை உபயோகித்து விட்டால் பிறகு அது மருந்தால் அவ்வளவு குணப்படுகிறதில்லை. ஆகையால், சலாகையை உபயோகிக்காத மேற்படி நோய்களில் மேற்கண்ட படி உபயோகிக்கப் பெரும்பான்மையும் அனுகூலமாகவே முடியும்.

138. வெள்வங்கச் செந்தூரம் (வேறு)

தூய்மை செய்த வெள்வங்கம் 1 பலம் (இதனை அரத்தால் ராவிக்கொள்ள வேண்டியது அல்லது கடுதாசியைப் போன்ற தகடாகச் செய்து சன்னப் பொடியாகக் கத்தரித்துக் கொள்ள வேண்டியது.) புளி இலைச்சாறு, ஆலங்கொழுந்துச் சாறு, விழுதி இலைச்சாறு, சீத்தாபாலா இலைச்சாறு, பொன் முசுட்டை இலைச்சாறு, சிற்றரத்தை இலைச்சாறு இவ்வாறும் வகைக்கு 1½ ஆழாக்கு.

செய்முறை:- மேற்படி வங்கப் பொடியைக் கல்வத்திலிட்டுப் புளி இலைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து அரைக்க வேண்டும். இதனைக் கைவிடாமலரைக்க வேண்டுமென்னும் நிபந்தனையில்லை. மேற்கண்ட சாறு மேற்கண்ட அளவு ஏக காலத்தில் வேண்டுமென்னும் அவசியமுமில்லை. சாறு கிடைத்த போதும், சாவகாசமானபோதும் அரைத்துக் கொள்ளலாம். எவ்விதமாயினும் மேற்கண்ட அளவு சாற்றை அரைப்பிற் செலுத்தி அரைத்த பிறகு வில்லை தட்டி வெய்யிலிலுலர்த்த வேண்டும். வில்லை நன்றாய் உலர்ந்தபின் ஓட்டிலிட்டு மேலோடு மூடி-5 சீலை மண் செய்து அறுபது பலம் விராட்டியிற்புடமிட்டு ஆறினபின் எடுத்துக் கொள்ளவும்.

பிறகு மேற்கண்ட விதமாகவே ஆலங்கொழுந்துச் சாற்றாலரைத்து ஒரு புடமிடவும், அவ்விதமே விழுதியிலைச் சாற்றில் ஒரு புடமும், அவ்விதமே பொன்முசுட்டையிலைச் சாற்றில் ஒரு புடமும், அவ்விதமே சிற்றரத்தை இலைச்சாற்றில் ஒரு புடமும் இட்டு எடுத்துக் கொள்ள வேண்டும். ஆகக் கூடி புடம் ஆறும் தீர்ந்தால் மலர்மிசையான் அருளினால் முருக்கம்பூப் போன்ற செந்தூரமாகி இருக்கும்.

அளவு:- 1 முதல் 2 குன்றிமணி எடை.

துணை மருந்தும் தீரும் நோயும்:- மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி தண்ணீரில் கலந்துண்ண சேத்தும நோய்களும், சர்க்கரையில் கலந்துண்ண சுரநோய்களும், பசுவின் நெய்யில் கலந்துண்ண எலும்புருக்கி நோய்களும், மிளகு இரசத்தில் கலந்துண்ண வாத நோய்களும், கறுப்பஞ்சாற்றில் கலந்துண்ண மூர்ச்சை நோய்களும், கம்மாறு வெற்றிலைச் சாற்றில் கலந்துண்ண மூவகை நச்சுச் சன்னிகளும், மூங்கில் குருத்துச் சாற்றில் கலந்துண்ணக் குன்ம நோய்களும், வேலம்பட்டைச் சாராயத்தில் கலந்துண்ண வெண்மேகம், கிரந்திமேகம் ஆகியவைகளும் தீரும்.

மருந்துணவு:- சமயோசிதம் போலவும் நோய் பலத்துக்குத் தகுந்தபடியும் வைத்துக் கொள்ள வேண்டியது. இன்னும் இதன் பத்திய முறைகளைச் சிறப்பாகத் தெரிந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் நமது இராச வைத்திய மகுடம் முதற்பாகத்தில் வங்க பற்பம் என்னும் தலைப்பில் எழுதி இருக்கும் பத்தியத்தை அனுசரித்தும் சமயோசிதம் போலவும் நடந்துகொள்ள வேண்டியது.

குறிப்பு:- இந்தப் பாகமானது இராசவைத்தியமகுடம் இரண்டாம் பாகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அங்குச் சொல்லி இருக்கிறபடி செய்வதற்குச் சுமார் மூன்று மாதஞ் செல்கின்றன. அதில் சொல்லி இருக்கிறபடி செய்வதால் சிறப்பான குணம் தருமென்பது உண்மையே ஆயினும், மேற்கண்ட விதமாகச் செய்வதற்கும் மேற்படி செய்யுளானது இடந் தருகிறபடியால் மேற்கண்ட விதமாகவே நாம் செய்து அனுபவித்து வருகின்றோம். இவ்விதம் செய்த செந்தூரமானது. சற்றேறக் குறைய முன் பற்பத்துக்கு ஒத்தே வருகிறது. இது சுமார் 3 மாதத்திற்குள் முடிந்துவிடுகிறது. நம்முடைய அனுபவப்படி நாமிங்கு எழுதி இருக்கின்றோம்.

139. வெள்வங்கச் செந்தூரம் (வேறு)

தூய்மை செய்த வெள்வங்கம் 3 பலம் (70 கிராம்), ஆடாதோடை வேர்த்தூள் 8 பலம் (280 கிராம்), நாலாங்காய்ச்சல் வெடியுப்பு 2 பலம் (70 கிராம்).

செய்முறை:- வங்கத்தை இரும்புச் சட்டியிலிட்டு அடுப்பேற்றி உருக்கி, உருக்கு முகத்தில் மேற்படி ஆடாதோடை வேர்த்தூளையும், வெடியுப்பைத் தூள் செய்தும் ஒன்றாகக் கலந்து, சிறுகச் சிறுகச் சுருக்குக்

கொடுத்து இரும்புக் கடப் பாறையால் தேய்த்துவர வேண்டும். எல்லாத் தூளையும் சுருக்கிட்டுத் தேய்த்து வந்தால் வங்கமானது செந்தூரமாகிவிடும். செந்தூரம் வண்ணம் போதாதிருந்தாலும், தீயின் விசுற்பத்தால் செந்தூரமாகாதிருந்தாலும் முன்போல் முன்னெடையே ஆடாதோடை வேர்த்தூளையும், வெடியுப்பையும் சேர்த்துப் பொடித்து நன்றாய்ச் சிவந்து வண்ணமாகிற வரையில் சுருக்கிட்டு வரவேண்டியது.

அளவு:- 2 முதல் 3 குன்றிமணி எடை.

தீரும்நோய்கள்:- தகுந்த சிறப்பான துணை மருந்துகளிலிட நீர்ச்சுருக்கு, நீர்க்காந்தல், நீரிழிவு, பவுத்திரம், எருவாய் நோய், மேகம் ஆகியவைகள் தீரும்.

மருந்துணவு:- நோய்வலிமை, உடல் வலிமை ஆகியவைகளுக்குத் தகுந்தது போல் வைத்துக் கொள்ள வேண்டும்.

140. வெள்வங்கச் செந்தூரம் (வேறு)

தூய்மை செய்த வெள்வங்கம் ½ பலம் [17½ கிராம்], இரசம், தாளகம், நெல்லிக்காய்க் கெந்தகம், நவச்சாரம், பூரம், சவ்வீரம், இந்த ஆறு சரக்குகளையும் தூய்மை செய்து வகைக்கு அரைப் பலமாக [17½ கிராம்], நிறுத்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

செய்முறை:- வெள்வங்கத்தையும் இரசத்தையும் கலக்கும்படி கெந்தகத்தைச் சேர்த்து நன்றாயரைத்துக் கொள்ள வேண்டும். பிறகு எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும். தாளகம் முதலிய மற்றச் சரக்குகளைத் தனித்தனியே பொடித்துக் கொள்ள வேண்டும். பிறகு எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து, நான்கு சாமம் [12 மணி] கைவிடாமல் அரைக்க வேண்டும். பிறகு சோடாவாட்டர் குப்பியை ஒரு சீலைமண் செய்து வெய்யிலிலுர்த்தி, ஈரமில்லாமல் உலர்ந்த பின் மறுசீலை அதன் மேற் செய்ய வேண்டியது. இவ்விதம் ஒவ்வொரு சீலை உலர உலர ஏழு சீலைமண் செய்துலர்த்தி, முன் அரைத்த தூளை அதற்குள் போட்டு, வாய்க்கு மாக்கல்லிட்டடைத்து ஒரு மண் பானையில் நாலங்குல கனம் மணலைக் கொட்டி அதன் மேல் முன் சித்தப்படுத்தின சோடாவாட்டர் குப்பியை வைத்துக் குப்பி மறையும்படி மணலைக் கொட்ட வேண்டும். குப்பியின் வாய்க்கு மேல் நாலைந்தங்குல மணலிருந்தாற் போதுமானது. இவ்விதஞ் சித்தப்படுத்தின பானையை அடுப்பின் மீதேற்றி ஆரம்பத்தில்

மெதுவாக எரித்து, வரவரத் தீயை அதிகப்படுத்திக் [பரவிய எரிப்பு] காடாக்கினியாக எரிக்கவும், இவ்விதம் நான்கு சாமம் எரித்து, ஒரு நாள் ஆறவிட்டு மறுநாளெடுக்கச் செந்தூரமானது இளஞ்சிவப்பு வண்ணமாக இருக்கும்.

அளவு:- 1 முதல் 1½ குன்றிமணி எடை.

தீரும் நோய்:- தகுந்த சிறப்பான துணை மருந்துகளிலிட எருவாய் நோய்கள், பெருங்கழிச்சல்கள், நிணக்கழிச்சல், குருதிக் கழிச்சல், மேகப்படை, மேகப்புண் முதலிய எல்லா நோய்களும் தீரும்.

மருந்துணவு:- நோயின் பலத்திற்குத் தகுந்தபடி புளி, உப்பு ஆகியவைகளை நீக்கி வைக்க வேண்டும். பசுவின் பால் பசுவின் நெய் முதலியவைகளை அதிகமாகச் சேர்த்தும் வர வேண்டும். மீன், கருவாடு, கத்தரிக்காய், கோழி இறைச்சி முதலிய சூடு தரும் உணவுப் பண்டங்களை நீக்க வேண்டியது அவசியமாகையால் இங்கும் அந்த பாண்டங்களை நீக்கிவைக்க வேண்டுமென நாம் எடுத்துச் சொல்லாமலே தெரிந்து கொள்ள கூடும்.

கருவங்கம்

கருவங்கத் தூய்மை:- வெள்வங்கத்தைப் போலவே இதனைத் தூய்மை செய்து கொள்ளலாம்.

தூய்மை (வேறு):- தேவையான கருவங்கத்தை உருக்கி எள்ளெண்ணெயிற் சாய்க்க வேண்டும். இந்த எண்ணெயானது கருவங்கம் தாராளமாய் ஆழ்ந்து கிடக்கும்படியாக இருக்க வேண்டியது. ஒரு தடவை உபயோகித்த எண்ணெய் மறு தடவைக்கு உபயோகப்படாது. ஆறினபின் வங்கத்தையெடுத்து முன்போல் உருக்கி முன்போல் எண்ணெயிற் சாய்த்துக் கொள்ள வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஏழு தடவைகள் எண்ணெயிற்செய்து கொள்ளவும். இவ்விதமே கோமூத்திரத்தில் ஏழு தடவையும், காடியில் ஏழு தடவையும், கொள்ளுக் குடிநீரில் ஏழு தடவையும் சாய்த்தெடுக்கக் கருவங்கம் தூய்மையாகும்.

141. கருவங்க பற்பம்

தூய்மை செய்த கருவங்கம் 1½ -பலம் (52½ கிராம்), பொன்னிமிளை, தாளகம் வகைக்கு 1½ பலம் (52 ½ கிராம்),

அரசம்பட்டைச் சாம்பல் 1-படி புளியம் புறணித்தூள் 1-படி, கல்யாணமுருக்கிலைச் சாறு அல்லது பூச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- மேற்படி வங்கத்தை அரையணாக் கனமுள்ள தகடாகத் தட்டி வைத்துக் கொள்ள வேண்டும் பொன்னிமிளையையும், தாளகத்தையும் தனித்தனியாக பொடித்துப் பிறகு இரண்டையும் கலந்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து எட்டுச் சாமமரைத்து மேற்படித் தகட்டிற்கு கீழும் மேலும் சமமாகக் கவசித்து கடும் வெய்யிலில் வைத்து உலர்த்திக் கொள்ள வேண்டும். பிறகு அடிகனத்த ஒரு பானையில், அரசம்பட்டைச் சாம்பலை இரண்டு பங்காக்கி ஒரு பங்கைப் போட்டுச் சமப்படுத்தி அதன் மேல் புளியம் புறணித்தூளை இரண்டுபங்காக்கி ஒரு பங்கைப் போட்டுச் சமப்படுத்தி, முன் சித்தப்படுத்தி இருக்கிற தகட்டை அதன் மேல் வைத்து அதன்மேல் மறுபாதிப் புளியம் புறணித் தூளைப் போட்டு அழுத்தி, அதன்மேல் மறுபாதி அரசம்பட்டைச் சாம்பலைப் போட்டு அழுத்திப் பானைவாயை மண் தாலத்தால் மூடி -5 சீலைமண் செய்து உலர்த்தி அடுப்பேற்றி ஆரம்பத்தில் இலகுவாக எரித்துப் பிறகு காடாக்கினியாக எரிக்க வேண்டும். இவ்விதம் நான்கு சாமம் எரித்து ஒரு நாள் ஆற விட்டு மறுநாள் எடுக்க, முருக்கம்பூப் போன்ற செந்தூரமாகி இருக்கும்.

அளவு:- 4 அரிசி எடை முதல்-1-குன்றிமணி எடை வரையில்.

துணை மருந்தும்: தீரும் நோயும்:- தேன் 3 வராகன் எடை (10 ½ கிராம்) இதில் மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண பிரமிய நோய்கள் தீரும். விந்தில் ஏற்படும் கெடுதிகள் நீங்கும். வலுக்குறைவு நீங்கி உடல் வலிமை உண்டாகும். பசியுணர்வு அதிகப்படும். முகக்களை, உடல் வளமை ஆகியவைகளுண்டாகும்.

மஞ்சட் கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிமுள்ளி இவற்றின் தனித்தனித் தூள்கள் வகைக்கு 5 குன்றிமணி எடை, மேற்றோல் நீக்கின வாதுமைப் பருப்பு 4, தேன் 5 வராகன் எடை (17½ கிராம்), இவை எல்லாவற்றையும் ஒன்றாய்ச் சேர்த்தரைத்துக் கலந்துமேற்படி பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண, மூளை வலுக்குறைவு, பீனிச நோய் ஆகியவைகள் தீரும். கண்ணில் அதிக ஒளியுண்டாகும்.

தாளிசப்பத்திரித் தூள் 8 குன்றிமணி எடை, தேன் 3 வராகன் எடை [10 ½ கிராம்] இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பக்தை

அளவுப்படி சேர்த்துண்ண கப சம்பந்தமான மந்தாக்கினி நோய் வாயு சம்பந்தமான நச்சு அனல் நோய் ஆகியவைகள் தீரும்.

தேன் 3 வராகன் எடை [10 ½ கிராம்], இதில் ஒரு குன்றிமணி எடை மேற்படி பற்பத்தை அளவுப்படி கலந்து உட்கொண்டு அதன் மேல் அரை அல்லது, ஒரு ஆழாக்குப் பசுவின் மோரைப் பருகச் செய்ய இரத்த மூலநோய், வறட்சி எருவாய், மூளை நோய், தொடர்கழிச்சல் நோய், பெருங்கழிச்சல் நோய் ஆகியவைகள் தீரும்.

மஞ்சள் தூள் 4 குன்றிமணி எடை, தேன் 3 வராகன் எடை (10 ½ கிராம்) இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி உட்கொண்டு ¼ அல்லது ½ ஆழாக்குக் காடி நீரைப் பருகச் செய்ய செரியாமை நோய் தீர்ந்து பசியுணர்வு அதிகப்படும். வயிற்றிலுள்ள நுண்புழுக்கள் நாசமாகும்.

வெள்ளரி விதைத் தூள் 3 வராகன் எடை (10 ½ கிராம்), தேன் 3 வராகன் எடை (10 ½ கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண சுரக்கட்டி, ஈரல் வீக்கம், வயிற்று நோய் ஆகியவைகள் தீரும். தேன் 3 வராகன் எடை (10 ½ கிராம்) பசுவின் நெய் 3 வராகன் எடை (10 ½ கிராம்) கற்கண்டுத் தூள் 1 ½ வராகன் எடை (5 ¼ கிராம்). இவை எல்லாவற்றையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண பித்த சம்பந்தமான இருமல் நோய், கக்கல் நோய் ஆகியவைகள் தீரும்.

முள்ளங்கிக் கிழங்குச் சாறு 6 வராகன் எடை (21 கிராம்), கற்கண்டுத் தூள் 3 வராகன் எடை (10 ½ கிராம்). இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண குன்மக்கட்டி, குன்மநோய் ஆகியவை தீரும்.

சிறுதேக்குத் தூள் 1½ வராகன் எடை [5½ கிராம்], தேன் 1½ வராகன் எடை [5½ கிராம்] இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண இரைப்பு, மேல்மூச்சு, இருமல் ஆகியவை தீரும்.

5 திராட்சைப் பழம், 2 பேரீச்சங்காய், தேன் 3 வராகன் எடை [10½ கிராம்]. இவை எல்லாவற்றையும் அரைத்து இளகம் போல் செய்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண நீடித்த இருமல் நோய், கிழவர்களுக்குண்டாகும் இருமல் நோய், சீழ் விழுகிற இருமல் நோய், ஆகியவைகள் தீரும்.

மரமஞ்சள் தூள் 2 வராகன் எடை [7 கிராம்], தேன் 3 வராகன் எடை (10 ½ கிராம்). இவற்றைக் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண எல்லா வகைப் பிரமிய நோய்கள், குருதி எருவாய்முளை நோய் ஆகியவைகள் தீரும்.

இஞ்சிச்சாறு 3 வராகன் எடை (10 ½ கிராம்). தேன் 3 வராகன் எடை [10½ கிராம்], இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண இருமல், இரைப்பு, பீனிசம், பக்கநோய், கபசம்பந்தசுரம் ஆகியவைகள் தீரும்.

அரிசி திப்பிலித் தூள் 2 குன்றிமணி எடை, தேன் 3 வராகன் எடை கற்கண்டுத்தூள் 1½ வராகன் எடை[5¼ கிராம்], இவை எல்லாவற்றையுங் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண வாத சம்பந்தமான இருமல் நோய், நீடித்த சுரம் ஆகியவைகள் தீரும்.

மருந்துணவு:- நோய்க்குத் தகுந்தபடியும் நோயாளி இயல்புக்குத் தகுந்தபடியும் பத்தியம் ஏற்படுத்த வேண்டியது.

142. கருவங்க பற்பம் (வேறு)

தூய்மை செய்த கருவங்கம் 3 பலம் [105 கிராம்] அரிசித் திப்பிலித் தூள் ½ படி, புளியம் புறணித் தூள் ½ படி.

செய்முறை:- வங்கத்தை உருக்கி இரசத்துடன் தொந்தித்து ஆறின பின் சிறு துண்டுகளாகச் செய்து கொள்ள வேண்டும். ஒரு கனத்த விராட்டியை எடுத்து அதில் அரைவாசி அரிசித் திப்பிலித் தூளை பரப்பி அதன்மேல் அரைவாசி புளியம் புரணித் தூளைப் பரப்பி அதன் மேல் முன் சித்தப்படுத்தின இரசவங்கத் துண்டுகளை ஒன்றோடொன்று படாமல் வைத்து மறுபாதி புளியம் புறணித் தூளைப் போட்டு, மெதுவாயமுத்தி அதன் மேல் மறுபாதித் திப்பிலித் தூளைப் போட்டு நன்றாயமுத்திவிட்டு அரைக்கெசம் பள்ளத்தில் புடம்போட்டு ஆறின பின் எடுக்கப் பற்பமாய் இருக்கும்.

அல்லது, மேற்கண்டபடி ஒரு சட்டியில் முறையே கீழ்மேல் மேற்படி பொடிகளை வைத்து மேற்சட்டி மூடி -8 சாமம் காடாக்கினியாக எரித்து ஒருநாள் ஆறவிட்டெடுக்கப் பற்பமாகி இருக்கும்.

முன்சொன்ன புடபாகத்தில் இரசமானது ஓடிப் போய் வங்கமானது சோளத்தைப் போல் பொரிந்திருக்கும். சட்டியில் வைத்தெரிப்பதினால் இரசம் சட்டியின் மீது பதங்கித்து நிற்கும். எந்த விதமாயினும் பற்பமாகிவிடும்.

அளவு:- 1 குன்றிமணி எடை.

துணை மருந்தும், தீரும் நோயும்:- சிலாசத்துப் பற்பம் 8 குன்றிமணி எடை, தேன் 3 வராகன் எடை [10 ½ கிராம்], இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண நீர்ப்பையின் வலுக்குறைவு நீங்கும்.

மருதம்பட்டை 5-பலம் [175 கிராம்], இதனை இடித்து 10-பலம் [350 கிராம்] நெய்யிற் போட்டுக் கரிந்து போகும்படியாகக் காய்ச்சி அந்த நெய்யை வடிகட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். அந்த நெய் 2 வராகன் எடை [7 கிராம்], கற்கண்டுத்தூள் 1½ வராகன் எடை [5¼ கிராம்]. இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண விந்துக்குறைவு நோய் தீரும்.

நெருஞ்சிச்சாறு 3 வராகன் எடை [10½ கிராம்], வெள்ளறுகுச்சாறு 3 வராகன் எடை [10 ½ கிராம்], தேன் 6 வராகன் எடை (21 கிராம்), இவற்றைக் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண பிரமேக நோய்கள் தீரும்.

பூனைக்காலி விதைத்தூள் ½ குன்றிமணி எடை, நிலப்பனைக் கிழங்குத்தூள் ½ வராகன் எடை (1¾ கிராம்) நீர் முள்ளி விதைத்தூள் 1 வராகன் எடை (3½ கிராம்), தேன் 3 வராகன் எடை [10 ½ கிராம்], இவற்றைக் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண தாதுக்குறைவு, உடல் வலுக்குறைவு ஆகியவைகள் நீங்கித் தாதுவிருத்தி, உடற்செழிப்பு முதலியவைகளுண்டாகும்.

பசுவின்பால் 2-பலம், பசுவின் நெய் ½ பலம், தேன் 1-பலம் இவற்றைக் கலந்து வைத்துக் கொள்ளவும். 1-குன்றிமணி எடை மேற்படி பற்பத்தைத் தேனிற் குழைத்துட்கொண்டு அதன்மேல் முன் சித்தப்படுத்தி வைத்திருப்பதை பருகச் செய்யவேண்டும். இப்படிச் செய்துவந்தால் விந்தானது ஊற்றைப்போல் சுரக்கும். விந்து வளமை உண்டாகும். தாது விருத்தி அதிகப்படும். உடல் வலிமையும் விருத்தியாகும்.

தயிர் 1½ பலம், தேன் 6 வராகன் எடை (21 கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண தொடர்கழிச்சல், சூட்டுக்கழிச்சல் ஆகியவைகள் தீரும்.

வெங்காய வேர்த்தூள் ½ வராகன் எடை (1¾ கிராம்), தேன் 3 வராகன் எடை (10½ கிராம்), இவற்றைக் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்தருந்த மூர்ச்சை நோய் தீரும்.

தாளிசப்பத்திரித்தூள் ½ வராகன் எடை (1¾ கிராம்), புழுங்கலரிசியை வறுத்தரைத்த மா 3 வராகன் எடை (10½ கிராம்), கற்கடகசிங்கித் தூள் 3 வராகன் எடை (10½ கிராம்), தேன் வராகன் எடை 3 இவை எல்லாவற்றையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண கண்டத்தின் நோய்கள் தீரும்.

புளித்தெளிநீர் 6 வராகன் எடை (21 கிராம்), தேன் 6 வராகன் எடை (21 கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண பித்த சம்பந்தமான சுரநோய் தீரும்.

செம்முள்ளி இலைச்சாறு 3 வராகன் எடை (10½ கிராம்), தேன் 3 வராகன் எடை (10½ கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண கபசம்பந்தமான இருமல்; இரைப்பு ஆகியவைகள் தீரும்.

மஞ்சிட்டித்தூள், தண்ணீர் விட்டான் கிழங்குச் சாறு வகைக்கு 3 வராகன் எடை [10½ கிராம்], தேன் 6 வராகன் எடை [24 கிராம்], இவற்றைச் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண விரணமேகம், ஆரம்ப குட்டம், மேகப்படை ஆகியவைகள் தீரும்.

வசம்பைச் சுட்டெரித்த சாம்பல் 1 வராகன் எடை [3½ கிராம்], தாமரைக் கொட்டைத்தூள் 1 வராகன் எடை [3½ கிராம்], தேன் 3 வராகன் எடை [10½ கிராம்], இவற்றைச் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண மார்பு துடித்தல், மார்பு அதிர்ச்சி ஆகியவைகள் தீரும். ஞாபக சக்தி அதிகப்படும்.

மிளகுத் தூள் 4 குன்றிமணி எடை, தித்திப்பு மாதுளம் பழச் சுளைச்சாறு 3 வராகன் எடை அக்கிராகாரத்தூள் 2 குன்றிமணி எடை, பழைய வெல்லம் 4 வராகன் எடை, இவை எல்லாவற்றையும் சேர்த்து அரைத்தெடுத்து அதில் மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி

கலந்துண்ண, எந்த மருந்திலும் தீராத இருமல் நோய் தீரும். சீழைப்போல் விழுகிற கபம் இருமல் நோய் தீரும்.

இலவங்கத் தூள் 2 குன்றிமணி எடை, சாதிக்காய்த்தூள், மிளகுத்தூள் வகைக்கு 3 குன்றிமணி எடை இவை எல்லாவற்றையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தைச் சேர்த்து அளவுப்படி கலந்துண்ண நீடித்த இருமல், சோகை நோய் ஆகியவைகள் தீரும்.

மருந்துணவு:- அந்தந்த நோய்களுக்குத் தகுந்த விதமாகப் பத்தியம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது நோயாளிகளின் கடமையாம்.

143. கருவங்க பற்பம் (வேறு)

கருவங்கம் 1 பலம், கர்ப்பூரசிலாசத்து 2 பலம், நாலங்குல கனமும், ஒன்று அல்லது ஒன்றரை முழ நீளமுள்ளதுமான அரசம் வேர்க்கட்டை 1, எருக்கம்பால் செல்லத்தக்க அளவு,

செய்முறை:- வங்கத்தைச் சட்டியிலிட்டு உருக்கி மேற்படி சிலாசத்தைப் பொடித்து வைத்துக் கொண்டு கொஞ்சங்கொஞ்சமாகக் கிராசித்து, மேற்படி அரசம் வேர்க்கொம்பால் கடைந்து வரவேண்டும். இவ்விதம் மேற்படி சிலாசத்தெல்லாஞ் சென்றுவிட்டால் வங்கமானது மடிந்து தூளாகிவிடும். பிறகு இதனைக் கல்வத்திலிட்டு மேற்படி எருக்கம்பாலைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமம் அரைத்து தம்பிடி அகலமுள்ள சிறு வில்லைகளாகச் செய்து வெய்யிலில் நன்றாயுலர்த்தி மூசையில் வைத்து மூசைக்குச் சில்லிட்டு சீலைவலுவாகச் செய்து கொல்லுலையில் வைத்து குகையழுக ஊதியெடுத்து ஆறவைத்தெடுக்கக் கருவங்கமானது பற்பமாகி இருக்கும். சில சமயம் சுண்ணமாகியும் இருக்கும். அரைத்த மஞ்சளில் இதனைச் சேர்த்துப் பார்த்தால் அது சிவந்துபோனால் சுண்ணமென்றும் அது சிவக்காவிட்டால் பற்பமென்றும் நிதானித்துக் கொள்ளவேண்டும்.

அளவு:- ½ முதல் 1 குன்றிமணி எடை.

தீரும் நோய்கள்:- தகுந்த துணைமருந்துகளிலிடப் பிரமேக நோய்கள், மேகநோய்கள், நீர்மேக நோய்கள் ஆகியவைகள் தீரும்.

144. கருவங்க பற்பம் (வேறு)

தூய்மை செய்த கருவங்கம் 1 பலம், நாட்சென்று சிவந்திருக்கிற பூவரசம் பட்டைத் தூள் ¼ படி, ஓமம் ¼ படி.

செய்முறை:- மேற்படி வங்கத்தை மெல்லிய தகடாகத் தட்டிச் சிறு வில்லைகளாகக் கத்தரித்துக் கொள்ளவேண்டும். பூவரசம் பட்டைத்தூளையும், ஓமத்தையும் கலந்து உரத்த துணியில் பரப்பி அதன்மேல் முன் வங்கத்தூளை ஒன்றோடொன்று கலக்காமல் தெளித்து அதனைப் பந்துபோல் சுருட்டிக் கட்டிச் சீலைமண் செய்து உலர்த்தி முழப்புடமிடவும். ஆறின பின் எடுக்கப் பற்பமாகி இருக்கும்.

அளவு:- 1 முதல் 1½ குன்றிமணி எடை.

துணைமருந்து:- நெய், தேன் முதலியவைகளாம்.

தீரும் நோய்கள்:- மேகம், கருமேகம் ஆகியவைகள் தீரும்.

145. கருவங்க பற்பம் (வேறு)

தூய்மை செய்த கருவங்கம் 1 பலம், தாளிக்காத கிளிஞ்சற் சுண்ணாம்பு, அல்லது கற்சுண்ணாம்பு 1 படி.

செய்முறை:- கருவங்கத்தை மெல்லிய தகடாக அடித்துக் கல்வத்திலிட்டு நீர் வார்த்து வெண்ணெய் போல் அரைத்து சிறு வில்லைகளாகச் செய்து வெய்யிலில் உலர்த்த வேண்டும். ஒரு பெரிய வராட்டியில் முன் சித்தப்படுத்தின வங்க வில்லைகளை வைத்து அதன் மேல் மற்ற பாதி சுண்ணாம்பு நீரைப் பரப்பி, அதன் மேல் ஒரு வராட்டியை வைத்துச் சித்தப்படுத்தி வைத்துக் கொள்ள வேண்டும். பத்து அல்லது பனிரெண்டு பலமுள்ள 5 வராட்டிகளை ஒடித்து அடுக்கி அதன்மேல் முன் சித்தப்படுத்தி இருக்கிற மருந்தை வைத்து அதன்மேலும் முன் மாதிரி 5 வராட்டிகளை அடுக்கி, நெருப்பிட்டு எரித்து குளிர ஆறின பின் எடுக்கக் கடுங்கார பற்பமாகி இருக்கும்.

அளவு, துணை மருந்து, தீரும் நோய்கள்:- மேற்கண்ட பற்பம் 1 வராகன் எடை, பசுவின் நெய் 10 பலம் [350 கிராம்], தேன் 5 வராகன் எடை [17½ கிராம்] இவை எல்லாவற்றையும் ஒன்றாய்க் கலந்து வைத்துக் கொண்டு மேற்படி கலவையில் வேளையொன்றுக்கு 1 முதல் 2 வராகன் எடை வீதம் காலை, மாலை இரண்டு வேளையும் உட்கொண்டு வர, இருபத்தொரு மேகங்கள், ஆரம்ப குட்டங்கள், நீர் வியாதிகள் ஆகியவைகள் தீரும்.

146. கருவங்க பற்பம் (வேறு)

கருவங்கம் 8 பலம் [280 கிராம்], தாழை, விழுதுச்சாறு, வெள்ளறுக்குச் சாறு, சோற்றுக்கற்றாழைச் சாறு இம்மூன்றும் வகைக்குச்

செல்லத்தக்க அளவு: மருதம்பட்டைச் சாறு செல்லத்தக்க அளவு, சோற்றுக்கற்றாழை வேர் செல்லத்தக்க அளவு.

செய்முறை:- மேற்படி கருவங்கத்தை உருக்கித் தாழை விழுதுச்சாற்றில் இருபத்தொரு தடவையும், வெள்ளருகுச்சாற்றில் இருபத்தொரு தடவையும், சோற்றுக் கற்றாழைச் சாற்றில் இருபத்தொரு தடவையும் உருக்கிச் சாய்த்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு தடவையும் புதிது புதிதாய்ச் சாற்றைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஒரு தடவை உபயோகித்த சாற்றை மறு தடவை உபயோகிக்கலாகாது. ஒவ்வொரு தடவையும் விடுஞ்சாறானது வங்கம் மூழ்கி இருக்கும் படியாக இருக்க வேண்டியது. இவ்விதம் செய்தெடுத்த பின் மேற்படி வங்கத்தைச் சட்டியிலிட்டு உருக்கி, மேற்படி கற்றாழை வேரைப் பொடியாகத் துண்டித்து வைத்துக் கொண்டு அதில் தூவி, மருதமரக் கொம்பினால் கடைத்து வர வேண்டியது. இவ்விதம் மேற்படி வங்கமானது மடிந்து தூளாகிற வரையிற் செய்து எடுத்துக் கல்வத்திலிட்டு மருதம்பட்டைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமம் அரைத்து தம்பிடி அகலமுள்ள சிறு வில்லைகளாகச் செய்து வெய்யிலில் நன்றாய்க் காயவைத்து ஒரு மண் தாலத்தில் காற்படி சுண்ணாம்பு நீரைப் பரப்பி அதன் மேல் முன் வில்லைகளை ஒன்றின் மேலொன்று படாமற் பரப்பி அதன் மேல் ¼ படி சுண்ணாம்பு நீரைப் போட்டு அழுத்தி அதன் மேல் மறு மண் தாலத்தால் மூடி ஏழு சீலை மண் செய்து உலர்த்தி கெச சதுரப் புடமிடவும். நன்றாய்க் குளிர ஆறின பின்னெடுக்க, செஞ்சாயலான பற்பமாக இருக்கும்.

அளவு:- 1 முதல் 1½ குன்றிமணி எடை.

துணை மருந்து:- முன் வங்க பற்பங்களிற் சொல்கிற துணை மருந்துகளும் இதற்காகும். இன்னும் நமது சர பேந்திர மேக நிவாரணபோதினியிற் சொல்லப்பட்டிருக்கும் பலவகை துணை மருந்துகளும் இதற்காகும்.

தீரும் நோய்கள்:- மேற்கண்ட விதமாகத் தகுந்த துணை மருந்துகளிலிட நீர் வியாதிகள், மதுமேகம், மேக நோய்கள், புண்புரைகள் ஆகியவைகள் தீரும்.

மருந்துணவு:- நோய் வலிமை, உடலியல்பு ஆகியவைகளுக்குத் தகுந்த மருந்துணவு ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது.

147. கருவங்க பற்பம் (வேறு)

தூய்மை செய்த கருவங்கம் 1 அல்லது 1½ பலம், [இதற்காக மேற்கண்ட எடையுள்ள பெருங் கருவங்கக் குண்டை எடுத்துக் கொள்ள வேண்டியது.] கரும்பூலா வேர்த்தோல் மேற்கண்ட கருவங்கத்திற்குப் பதினைந்து பங்கெடை.

செய்முறை:- மேற்படி பூலாவேரை மைப்போல் அரைத்து மேற்படி கருவங்கக் குண்டை அதற்குள் வைத்துப் பந்து போல் உருண்டையாகத் திரட்டி அதன் மேல் மூன்று சீலை மண் செய்து ஒரு முழச் சதுரக் குழி தோண்டி அதன் அடியில் இரண்டு அல்லது மூன்று படி உமியைக் கொட்டிப் பரப்பி அரை முழ உயரம் வராட்டியை அடுக்கி அதன் மேல் முன் சித்தப்படுத்தின கவசத்தை வைத்து அதன் மேல் மற்ற அரை முழம் வராட்டியை அடுக்கி அதன் மேல் இரண்டு மூன்று படி உமியைக் கொட்டிப் பரப்பி நெருப்பிட்டு எரிந்தடங்கின பின ஒருநாள் ஆறவிட்டு எடுத்து அப்படியே ஒரு இடத்தில் வைத்து மறுநாள் பார்க்க அப்படியே மலர்ந்து போய் பற்பமாகி இருக்கும்.

அளவு:- ½ முதல் 1 குன்றிமணி எடை.

துணை மருந்து;- நெய், தேன், சமயோசிதமான துணை மருந்துகள் ஆகியவைகளாம்.

தீரும் நோய்கள்:- மேகநோய், காசநோய், கபநோய் முதலிய அநேக நோய்கள் தீரும்.

மருந்துணவு:- அந்தந்த நோய்களுக்குத் தகுந்தது போலும், உடல் வலிமைக்குத் தகுந்தது போலும் மருந்துணவு வைக்க வேண்டியது.

குறிப்பு:- இந்த முறையானது பல தடவைகள் செய்து அனுபவப்பட்டது. இது ஒரு பெரிய மகானால் நேரில் செய்து நேரில் உபயோகித்து சோதிக்கப்பட்டது. இம் மகான் கருவங்கத்தை தூய்மை செய்யாமலே கருவங்கக் குண்டையே வைத்துப் பற்பித்தார். ஆயினும் அது தூய்மை செய்து ஒரே கட்டியாக அல்லது, குண்டை போல வார்ப்பித்துப் பற்பம் செய்வித்து அனுபவித்ததில் சிறந்த குணமே காணப்பட்டது. ஆகையால், நமது அனுபவப்படியே நாமிங்கு எழுதி இருக்கின்றோம். விருப்பமானவர்கள் எவ்விதமாயினுஞ் செய்து கொள்ளலாம்.

148. கருவங்கச் சுண்ணம்

கருவங்கம் 1 பலம், மனோசிலை, அரிதாரம், நெல்லிக்காய்க் கெந்தகம், இவை வகைக்கு 1 வராகன் எடை (3½ கிராம்), சவுக்கார நீர் செல்லத்தக்க அளவு.

செய்முறை:- மேற்படி வங்கத்தை மெல்லிய தகடாகச் செய்து கொள்ள வேண்டும். மற்ற மூன்று சரக்குகளையும் மெல்லியதாய்ப் பொடித்து உமிழ்நீரை விட்டு மைப்போலரைத்து மேற்படி தகட்டிற்குக் கீழும் மேலும் பூசி உலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடு மூடி இரண்டு சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் பத்துப் பங்கு எடை வராட்டியிற் புடமிட்டாறின பின் எடுக்க வங்கமானது வெட்டையாக இருக்கும். அதனைக் கல்வத்திலிட்டு அரைத்துப் பொடித்துச் சவுக்கார நீரைச் சிறுகச் சிறுக விட்டு இரண்டு சாமமரைத்து வில்லை தட்டிக் காயவைத்து ஓட்டில் வைத்து மேலோடு மூடிச் சீலைமண் செய்து உலர்த்தி ஆறு பலமுள்ள வராட்டியில் புடமிட வேண்டும்.

ஆறினபின் எடுத்து முன்போலவே முன்சவுக்கார நீரைவிட்டு இரண்டு சாமம் அரைத்து முன்போல் வில்லை செய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி மூன்று சீலைமண் செய்து உலர்த்தி முன்னெடையுள்ள ஐந்து வராட்டியில் புடமிட வேண்டும். முன்போலவே மூன்றாம் தடவையும் அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டில் வைத்துக் கவசம் செய்து உலர்த்தி முன் மாதிரி ஆறு வராட்டியில் புடமிட்டுக் கொள்ளவும்.

நாலாந் தடவையும் முன்போலவே அரைத்து உலர்த்தி ஓட்டில் வைத்துக் கவசித்து முன்மாதிரி ஏழு அல்லது பத்து வராட்டியில் புடமிட்டாறின பின் எடுக்க கடுங்காரச் சுண்ணமாகி இருக்கும்.

அளவு:- ½ முதல் 1 குன்றிமணி எடை.

தீரும் நோய்கள்:- நோய்களுக்குத் தகுந்த துணை மருந்துகளிலிட மேகநோய், நீர்நோய், கப நோய் முதலிய எல்லா நோய்களிலும் உபயோகிக்கலாம். ஆனால் இது கடுங்கார முள்ளதாகையால் இதனைத் தனியே உபயோகிப்பதைப் பார்க்கிலும் பத்து பலம் பசுவின் நெய்யில் ஒரு வராகன் எடை சுண்ணத்தைப் போட்டுக் கலந்து அதில் வேளையொன்றுக்குக் கால்பலம் வீதமாக காலை, மாலை இரண்டு வேளையும் உபயோகித்து வருவது நன்மையான மார்க்கமாம். ஆனால்

உடல் வலிமை, நோய் வலிமை ஆகியவைகளைக் கவனித்துச் சமயம் போல் உபயோகித்துக் கொள்ள வேண்டும்.

மருந்துணவு:- நோய் வலிமை, உடல் வலிமை ஆகியவைகளுக்குத் தகுந்ததுபோல் சமயோசிதமாகப் பத்தியம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது.

149. வெள்வங்கச் சுண்ணம்

கருவங்க சுண்ண முறைப்படியே, வெள்வங்கத்தையும் சுண்ணமாக்கிக் கொள்ள வேண்டியது.

வெண்குட்ட சங்காரன்

வெள்வங்கச் சுண்ணம், கருவங்கச் சுண்ணம் ஆகிய இரு வகையில் ஒரு வகையை எடுத்துக் கொள்ள வேண்டும். அயச் சுண்ணம், அல்லது அயபற்பம், அப்பிரகச் சுண்ணம், அல்லது அப்பிரக பற்பம், இரசச்சுண்ணம், அல்லது இரச பற்பம் ஆகிய இந்நான்கும் வகைக்கு 1-பங்கு தூய்மை செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் 4 பங்கு.

செய்முறை:- கெந்தகத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்துக் கொண்டு மற்ற நான்கு வகைகளையும் கூடச் சேர்த்து ஒரு சாமம் அரைத்து பளிங்குக்குப்பியில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அளவு:- 1 முதல் 2 குன்றிமணி எடை.

துணை மருந்து:- மேற்றோல் சீவின் சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, மஞ்சள் கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிமுள்ளி இவற்றைத் தனித்தனியாக இடித்து துணியிற் சலித்த தூள்கள் வகைக்குச் சமனெடை. இவற்றைக் கலந்து வைத்துக் கொள்ளவேண்டும். இந்தத் தூள் ½ வராகன் எடை (1¾ கிராம்), தேன் 3 வராகன் எடை (10½ கிராம்) இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட மருந்தை அளவுப்படி சேர்த்து உட்கொண்டு வரவேண்டும். இவ்விதம் இருபதுநாள் காலை, மாலை இரண்டு வேளையுமாகப் பத்து நாள் முப்பது நாள், நாற்பது நாள் முறையே நோயின் வலிமைக்குத் தகுந்தபடி உபயோகிக்க வேண்டும்.

தீரும் நோய்கள்:- சாத்தியமான வெண்குட்ட நோய்கள் தீரும். கெட்டுப்போன குருதி தூய்மையாகி நல்ல இரத்த விருத்தியுண்டாகும். உடல்வளம்., உடல் வலிமை ஆகியவைகளும் உண்டாகும்.

150. காரீய பற்பம்

காரீயம் 1 பலம் (35 கிராம்), இரசம் 1 வராகன் எடை (3½ கிராம்), கலைமான் கொம்புப் பற்பம் 1 பலம் (35 கிராம்), நற்பவழப் பொடி 1 பலம் (35 கிராம்), ஆரையிலைச்சாறு, ஆவாரையிலைச்சாறு, பொன்னாங்காணிச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு இவை செல்லத்தக்க அளவு.

செய்முறை:- காரீயத்தை உருக்கி இரசத்துடன் கலக்கும்படி ஆரையிலைச் சாற்றை விட்டு ஒரு சாமம் அரைத்து மைப்போலான பின் மான்கொம்பு பற்பம். பவழப்பொடி ஆகியவைகளையும் சேர்த்து ஆவாரையிலைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமம் அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து ஓட்டில் வைத்து மேலோடு மூடி 5 சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் 5 பங்கெடை விராட்டியில் புடமிடவும். ஆறின பின் எடுத்துக் கல்வத்திலிட்டு முன்போல் ஆவாரையிலைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமம் அரைத்து முன்போல் வில்லை செய்துலர்த்திக் கவசத்தின் ஆறுபங்கெடை விராட்டியில் புடமிடவேண்டும். மூன்றாந் தடவையும் மேற்படி ஆவாரையிலைச் சாற்றில் முன்போலவே அரைத்து வில்லை செய்துலர்த்தி ஓட்டிலிட்டுக் கவசித்துலர்த்தி ஏழுபங்கு விராட்டியில் புடமிட வேண்டும்.

இவ்விதமே பொன்னாங்காணிச் சாற்றில் மடக்கி மடக்கி மூன்று புடமிட வேண்டும். ஆனால் ஒவ்வொரு புடத்திற்கும் ஒவ்வொரு பங்கெடை விராட்டியை அதிகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்விதமே எலுமிச்சம்பழச் சாற்றில் மடக்கி மடக்கி மூன்று புடமிட்டுக் கொள்ளவேண்டும். ஆனால் இந்த மூன்று புடங்களிலும் புடத்திற்குப் புடம் விராட்டியை அதிகப்படுத்த வேண்டியதில்லை. கவசத்திற்குப் பத்துப் பங்கெடை விராட்டியே போதுமானது. இவ்விதம் ஒன்பது புடமிட்டுத் தீர்ந்தால் வங்கம், கலைமான்கொம்பு, பவழம் ஆகிய மூன்றும் ஒன்றாகி உயர்ந்த பற்பமாயிருக்குமு.

அளவு:- 2 முதல் 1 குன்றிமணி எடை.

துணைமருந்து:- நெய், தேன், சர்பத்துகள், இளகங்கள், ஆகியவைகளில் அந்தந்த நோய்களுக்குத் தகுந்த விதமாக சேர்த்து உபயோகிக்கலாம்.

தீரும் நோய்கள்:- மேக நோய், சயநோய், காசநோய், இரைப்பு, கடின சுவாசம், பிரமேகம், பிரமியம் முதலிய அநேக நோய்கள் தீரும். இது எல்லா நோய்களிலும் உபயோகப்பட்டு வருகிறது. இதில் சேர்ந்திருக்கிற சரக்குகளின் குணம் முதலியவைகள் அனுபவசாலிகளுக்கு நன்றாய்த் தெரிந்திருக்குமாகையால் அத்தகையினர்கள் எந்தெந்தச் சமயத்தில் எந்தெந்த விதம் இதனை உபயோகப்படுத்த வேணடும் என்பதும் அவர்களுக்குத் தெரிந்தே இருக்கும். இதனை உபயோகப்படுத்தும் வகை விபரங்களை எல்லாம் இங்கு எழுதி முடியாது. ஆகையால் மேற்கண்ட படி ஒருவாறு சுருக்கிச் சொன்ன போதிலும் இது பொதுவாக எல்லா நோய்களிலும் உபயோகப்படுமெனத் தெரிந்திருக்க வேண்டியது.

மருந்துணவு:- எந்தெந்த நோய்கள் எந்தெந்தக் காரணத்தால், அல்லது, எந்தெந்த பொருள்களால் உண்டாகிறதோ அதை நீக்கி வைப்பதே பிரதான பத்தியம், இன்னும் புணர்ச்சி புகை, புளி ஆகிய மூன்றும் எவ்வித நோய்களுக்கும் பொதுவாய்ப் பத்தியம் வைக்கப்படுகிறபடியால், இதற்கும் அந்தப் பத்தியம் ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியம்., சுருக்கிச் சொல்லில் மருத்துவர்கள் தம் தம் நோக்கம் போலவும், சமயோசிதம் போலவும் பத்தியத்தை ஏற்படுத்துவதே சாத்தியமான வழி.

குறிப்பு:- இந்தப் பற்பமானது அருமையான முறைகளில் ஒன்றென்பது அனுபவசாலிகளுக்கு நன்கு விளங்கும். ஆனால் ரோசாப் புட்பத்தைச் சுற்றிலும் முட்கள் நிறைந்திருப்பது போல இதற்கு ஒன்பது புடம் ஏற்படுத்தி இருப்பது கடினமான செயல்கள்தான். ஆனால் "பாடுபட்டாற் பலன் பெறலாம்" மென்னும் வாக்கியப்படி இது பல நோய்களில் உபயோகப் பட்டு நிச்சயமான நற்குணத்தைத் தருவதால் இந்த உழைப்பினால் எவ்வித இழப்புமில்லை என்பது நமது துணிபு.

கலைமான் கொம்பு பற்பம்

கலைமான் கொம்பு தேவையான அளவு. இதனை மெல்லிய சிறு துண்டுகளாகத் துண்டித்து ஆவாரை இலைச்சாற்றில் ஊறப் போடவேண்டும். இந்தச் சாறானது மேற்படி துண்டுகள் அமிழ்ந்திருக்கும்படியாகத் தாராளமாக இருக்கவும் வேண்டும். இந்தச் சாறானது சுண்டினபின் மேற்படி ஆவாரை இலையை அரைத்த விழுது மேற்படி கொம்பின் எடைக்குச் சுமார் ஆறு, ஏழுபங்கு இருக்க வேண்டியது. இதனை இரண்டு அடையாகத் தட்டி ஒரு அடையின்

மீது மேற்படி துண்டுகளைப் பரப்பி அதன் மேல் மறு அடையை வைத்து வாய் பொருந்தும்படியாகச் சேர்த்து இரண்டு சீலைமண் செய்து கவசத்தினெடைக்கு இருபது பங்கெடை விராட்டியிற் புடமிட் டெடுக்க, வெண்ணிறமான பற்பமாயிருக்கும். நெருப்புக் குறைவினால் பற்பம் கருப்பாயிருந்தால் முன் ஆவாரை இலைச் சாற்றையே விட்டரைத்து வில்லை செய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி மூன்று சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் பத்துப் பங்கெடை விராட்டியிற் புடமிட்டாறின பின் எடுக்க உயர்ந்த பற்பமாய் இருக்கும். இந்தப் பற்பத்தை மேற்கண்ட காரீய பற்பத்திற்கு வேண்டிய அளவு எடுத்துக் கொள்ள வேண்டுமெ. இந்தப் பற்பத்தைத் தனியாகவும் உபயோகிக்கலாம்.

சிங்கி பற்பமுறைகள் பின்னே பல எழுதப்படும். அம்முறைப்படி செய்த பற்பத்தையும் இதிற் சேர்த்துக் கொள்ளலாம்.

151, கருவங்க பற்பம் (வேறு)

தூய்மை செய்த கருவங்கம் 2 பலம், செம்முள்ளி இலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- வங்கத்தை மண்சட்டியிலிட்டு உருக்கி மேற்படி இலைச்சாற்றைச் சிறுகச் சிறுக ஊற்றி இரும்புக் கரண்டியால் தேய்த்து வரவேண்டியது. இவ்விதம் அடிக்கடி சாறு சுண்டச் சுண்டச் சாற்றை ஊற்றிக் கரண்டியால் தேய்த்து வரவேண்டியது. இவ்விதம் நான்கு சாமஞ் செய்தால், கசடில்லாத பற்பமாகி இருக்கும் இந்தப் பற்பத்தைக் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு இரண்டு சாமமரைத்து வில்லை தட்டி உலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி மூன்று சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் 5-பங்கெடை விராட்டியில் புடமிட்டாறின பின்னெடுக்கச் சுத்த வெண்மையான பற்பமாயிருக்கும்.

அளவு;- 1 முதல் 2 குன்றிமணி எடை.

தீரும் நோய்கள்:- தகுந்த துணை மருந்துகளிலிட, மேகம், பிரமியம். நீரெரிச்சல், வாயுகள் தீரும்.

துணைமருந்து:- சமயோசிதம்போல் வைத்துக் கொள்ளவும்.

152. கருவங்க பற்பம் (வேறு)

கருவங்கம் 1 பலம் (35 கிராம்) மனோசிலை 1 பலம் (35 கிராம்0 எருக்கம்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை:- வங்கத்தை ஒரு தம்பிடி கனமுள்ளதாக அடித்துக் கொள்ள வேண்டும். மனோசிலையைக் கல்வத்தில் பொடித்து, எருக்கம்பாலைச் சிறுகச் சிறுக விட்டு ஒரு சாமமரைத்து வெண்ணெய் போலான பின் மேற்படி வங்கத் தகட்டிற்குக் கீழும் மேலும் பூசி வெய்யிலில் வைத்துலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடு மூடி 5 சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் ஆறு பங்கெடை விராட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து எருக்கம்பாலைச் சிறுகச் சிறுக விட்டு இரண்டு சாமம் அரைத்து வில்லை செய்துலர்த்தி, ஓட்டிலிட்டு மேலோடு மூடி 5 சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் ஆறு பங்கெடை விராட்டியில் புடமிட்டாறின பின் எடுக்கக் கறுப்பு வண்ணாமான பற்பமாகி இருக்கும்.

இதனை நன்றாய் வெளுக்கும்படியாகச் செய்யவேண்டுமானால் மேற்படி எருக்கம்பாலை விட்டரைத்து நன்றாய் வெளுக்கிறவரையில் புடம் போட்டுக் கொண்டு போக வேண்டியது. விருப்பமுள்ளவர்கள் இப்படி செய்யலாமே தவிர மேற்கண்ட இரண்டு புடமே போதுமானது. இந்தப் பற்பத்தை இளகங்கள், சூரணங்கள் மாத்திரைகள் முதலியவைகளிலும் சேர்த்துக் கொள்ளலாம்.

அளவு;- 1 முதல் 1½ குன்றிமணி எடை.

துணை மருந்து:- தேன், நெய் ஆகியவைகளாம்.

தீரும் நோய்கள்:- மேக நோய், வாயு நோய், பிடிப்பு ஆகியவைகள் தீரும். இன்னும் வேறு தகுந்த துணைமருந்துகளில் கொடுக்க நோய்கள் தீரும்.

மருத்துணவு:- நோய்க்கும், உடல் வலுவிற்கும் தகுந்தது போல் வைத்துக் கொள்ள வேண்டியது.

153. கருவங்க இரசித பற்பம்

மேற்படி கருவங்க பற்பம் 12 வராகன் எடை. சரிகை வெள்ளி 3 வராகன் எடை (10½ கிராம்) எருக்கம்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை:- சரிகை வெள்ளியை உருக்கி ஒரு தம்பிடி கனமுள்ள தகடாக அடித்துக் கொள்ள வேண்டும். முன் பற்பத்தை நான்கு பங்காகச் செய்து ஒரு பங்கைக் கல்வத்திலிட்டு எருக்கம்பாலைச் சிறுகச் சிறுகவிட்டு ஒரு சாமமரைத்து மேற்படி வெள்ளித் தகட்டிற்குக் கவசித்து உலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடு மூடி மூன்று சீலைமண் செய்து கவசத்தின் எடைக்கு ஆறுபங்கெடை விராட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுத்துக் கொள்ளவும்.

பற்பத்தின் இன்னொரு பாகத்தைக் கல்வத்திலிட்டு முன் போல எருக்கம்பாலைச் சிறுகச்சிறுக விட்டு ஒரு சாமம் அரைத்து முன் தகட்டிற்கு முன்போல் கவசம் செய்துலர்த்தி முன்போல் ஓட்டிலிட்டுச் சீலைமண் செய்து முன்போல் புடமிட்டு எடுத்துக் கொள்ளவும்.

இவ்விதமே மற்றோரு பாகத்தையும் முன்போலரைத்து முன் தகட்டிற்கு முன்போல கவசஞ் செய்து முன்போல புடமிட்டு எடுத்துக் கொள்ளவும்.

நான்காந் தடவையும் மிச்சமாய் இருக்கிற இன்னொரு பாகத்தையும் முன்போலரைத்து முன்போல் முன்தகட்டிற்குக் கவசஞ் செய்து முன்போல் புடமிட்டு எடுத்துக் கொள்ளவேண்டியது. இவ்விதம் செய்வதால் மேற்படி தகடானது பற்பமாகி விடும்.

இந்தப் பற்பமானது மாத்திரை, இளகம் சூரணம் முதலிய எல்லாவகை மருந்துகளிலும் சேர்த்துக் கொள்ளப் பயன்படும் இதன் குணம் முதலியவைகளை வெள்ளி பற்ப வகையில் பார்த்துக் கொள்ளவும்.

154. கருவங்க சூத பற்பம்

தூய்மை செய்த கருவங்கம 2 பலம், அடைவைத்த அண்ட வோடு 2 பலம், தூய்மை செய்த இரசம் 1 பலம், புளியிலைச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- வங்கத்தை உருக்கி இரசத்துடன் சேர்த்துக் கொள்ள வேண்டும். இதனைக் கல்வத்திலிட்டு அண்ட வோட்டையும் சேர்த்தரைத்து கலந்து புளியிலைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு இரண்டு சாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி அகலிலிட்டு மேலகல் மூடி 5 சீலைமண் செய்துலர்த்திக் கொல்லுலையில் வைத்து

ஓடு நன்றாய்ப் பழுத்துச் சிவக்கும்படியாக வூதி எடுத்து, ஆறவிட்டு எடுக்கப் பற்பமாகி இருக்கும்.

அளவு:- 1 முதல் 2 குன்றிமணி எடை.

தீரும் நோய்கள்:- தகுந்த துணைமருந்துகளிலிட மேகநோய்கள், அண்டவாயு, அண்ட வீக்கம், பிரமேகநோய், குன்மம் ஆகியவைகள் தீரும்.

மருத்துணவு:- நோய்க்குத் தகுந்ததுபோலவும், சமயோசிதம் போலவும் வைத்துக் கொள்ள வேண்டும்.

155. கருவங்க யோக பற்பம்

தூய்மை செய்த கருவங்கம், தூய்மை செய்த இரசம், நற்பவழம், இவை வகைக்கு 1 வராகன் எடை, எலுமிச்சம்பழச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- வங்கத்தையுருக்கி இரசத்துடன் சேர்த்துக் கல்வத்திலிட்டுப் பவழத்தையுஞ் சேர்த்தரைத்து கலந்து பழச்சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு இரண்டொரு சாமம் அரைத்து வில்லை செய்துலர்த்தி அகலிலிட்டு மேலகல் மூடி அரை முழச்சதுரப் புடமிடவும். ஆறினபின் எடுக்கப் பற்பமாகி இருக்கும்.

அளவு:- 1 முதல் 2 குன்றிமணி எடை.

தீரும் நோய்கள்:- தகுந்த துணைமருந்துகளிலிட, மூலம் சயம், காசம், குன்மம், மேகம் ஆகியவை தீரும்.

மருத்துணவு:- சூடுதரும் உணவுகள், மீன், கருவாடு ஆகியவைகளையும், புணர்ச்சி, புகை முதலியவைகளையும் நீக்க வேண்டியது.

156. கருவங்கச் சுண்ணம்

காரீயம் 2 வராகன் எடை, அடை வைத்த அண்டவோடு 2 வராகன் எடை. இரசம் ¼ வராகன் எடை.

செய்முறை:- வங்கத்தை ராவிக் கல்வத்திலிட்டு இரசத்தைச் சேர்த்தரைத்துப் பிறகு அண்ட வோட்டைச் சேர்த்து மைபோல் அரைத்துக் குகையிலிட்டுக் குகை வாய்க்குச் சில்லிட்டு மூன்று சீலைமண்

செய்து உலர்த்திக் கொல்லுலையில் வைத்துக் குகையழுக வூதி ஆறவிட்டு எடுக்கச் சுண்ணமாகி இருக்கும்.

அளவு:- 1 முதல் 2 குன்றிமணி எடை.

தீரும் நோய்:- இதனை பனைவெல்லத்தில் கலந்து காலை மாலை இரண்டு வேளையும் மூன்றுநாள் ஆறு பொழுது கொடுக்க மலட்டு வலி நீங்கி கர்ப்பந்தரிக்கும்.

மருத்துணவு:- சமயோசிதம் போல வைத்துக் கொள்ள வேண்டியது.

157. வங்கச் சுண்ணம் (வேறு)

(அ) வீரம், அரிதாரம், நெல்லிக்காய்க் கந்தகம் இரசம் சீனாக்காரம் இவை வகைக்கு 1 வராகன் எடை, பால் நண்டுச் சாறு செல்லத்தக்க அளவு. (ஆ) தூய்மை செய்த கருவங்கம் 13 வராகன் எடை, இரசம் 3 வராகன் எடை, பெருந்தேள் கொடுக்கு இலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- (அ) விலுள்ள சரக்குகளில் இரசத்தையும் கந்தகத்தையும் சேர்த்து நன்றாய்க் கருக்கிற வரையில் அரைத்து எடுத்துக்கொள்ள வேண்டும். மற்ற நான்கு சரக்குகளையும் தனித்தனியே பொடித்து எல்லாவற்றையும் அதாவது (அ) விலுள்ள ஆறு சரக்குகளையும் ஒன்றாகச் சேர்த்துப் பால் நண்டுச் சாற்றைச் சிறுகச்சிறுக விட்டு நான்கு சாமம் அரைத்து வெய்யிலில் வைத்து உலர்த்தி அரைத்துத் தூளாக்கிக் கொள்ள வேண்டும்.

(ஆ) விலுள்ள வங்கத்தை இரும்புக் கரண்டியில் வைத்து உருக்கி முன்சித்தப்படுத்தின (அ) விலுள்ள சரக்குப் பொடியைச் சிறுகச் சிறுக மேற்படி வங்கத்தின் உருக்கு முகத்திற்றூவி இரும்பு கட்டப்பாரையினால் கடைய வேண்டும். பொடி எல்லாவற்றையும் சிறுகச் சிறுகத் தூவிக் கடைந்து பொடி எல்லாம் சென்ற பின்பு மேற்படி வங்கமானது நொருங்கி மடிந்துபோகும். இவ்விதம் மடிந்த வங்கத் தூளுடன் (ஆ)விலுள்ள இரசத்தைச் சேர்த்து மேற்படி பெருந்தேள் கொடுக்கு இலைச் சாற்றை சிறுகச் சிறுக விட்டு ஒரு சாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி அகலில் வைத்து மேலகல் மூடி 5 சீலைமண் செய்து உலர்த்தி 5 பலமுள்ள ஒரு விராட்டியில் புடமிட வேண்டும் ஆறினபின் எடுத்துக் கல்வத்திலிட்டு முன் போல் பெருந்தேள்

கொடுக்கு இலைச்சாற்றைச் சிறுகச்சிறுக விட்டு ஒரு சாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி மேலோடு மூடி முன்போல் சீலைமண் செய்து ஒன்றேகால் வராட்டியில் புடமிட வேண்டும். இவ்விதம் மேற்படி சாற்றில் ஒவ்வொரு சாமம் அரைத்து மேற்கண்ட விதமாகவே மடக்கி, மடக்கி முப்பத்தாறு புடமிட வேண்டும். ஒவ்வொரு புடத்திற்கும் கால்கால் விராட்டி அதிகப்படுத்திக் கொள்ளவும் வேண்டும். இவ்விதம் முப்பத்தாறு புடமிட்டுத் தீர்ந்தால் கருவங்கமானது மிக உயர்ந்த சுண்ணமாகி இருக்கும்.

அளவு:- ½ முதல் 1 குன்றிமணி எடை.

தீரும்நோய்:- தகுந்த துணைமருந்துகளில் கொடுக்க குன்ம நோய்கள் தீரும்.

மருத்துணவு:- நோய் இயல்பு, உடல் இயல்பு ஆகியவைகளுக்குத் தகுந்ததுபோல் ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது.

குறிப்பு:- இந்தச் சுண்ணத்திற்காக முப்பத்தாறு புடம் தீர்க்க வேண்டியதாக இருக்கிறதேயென மலைக்க வேண்டியதில்லை. இது, சுமார் ஒரு மாதத்திற்குள் முடிந்து போகிறது. இது வைத்தியத்திற்கு உபயோகப்படுகிறது தவிர, வாத முறைகளுக்கும் உபயோகமாகிறது. ஆகையால் அனுபவசாலிகளுக்கு இது இருவகையிலும் உபயோகப்படுமென இதனையும் இங்கெழுத நேரிட்டது.

158 (அ) கருவங்க செந்தூரம்

தூய்மை செய்த கருவங்கம் 1 பலம் (35 கிராம்), நாகமல்லிகை இலைச்சாறு செல்லத்தக்க அளவு, வாழைக் கிழங்குச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை- மேற்படி வங்கத்தை அரத்தால் இராவித் தூளாகச் செய்து கொள்ள வேண்டும். இதனைக் கல்வத்திலிட்டு மேற்படி நாகமல்லிகை இலைச்சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமம் அரைக்க வேண்டும். இதனைத் தொடர்ந்தாற் போல் அரைக்க வேண்டுமென்னும் நிபந்தனையில்லை. சாவகாசமான காலங்களி லெல்லாம் அரைத்துக் கொள்ளலாம். ஆனால் எவ்விதமும் நான்கு சாமம் அரைப்பாக வேண்டியதே பிரதானம். பிறகு வில்லை செய்து உலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி மூன்று சீலைமண் செய்து உலர்த்தி ஐம்பது பலம் விராட்டியிற் புடமிட வேண்டும். ஆறினபின்

எடுத்து முன்போலவே முன் சாற்றில் அரைத்து அரைத்து மடக்கி மடக்கி இன்னும் நான்கு புடமும் போட்டுக் கொள்ள வேண்டும்.

இவ்விதமே வாழைக் கிழங்குச்சாற்றில் அரைத்து அரைத்து மடக்கி மடக்கி ஐந்து புடம்போட்டு எடுத்துக் கொள்ள வேண்டும். ஆகக்கூடிய பத்துப் புடமுமிட்டுத் தீர்ந்தால் வாலறிவன் அருளால் மிகமேலான செந்தூரமாகி இருக்கும்.

அளவு:- ½ முதல் 1 குன்றிமணி எடை.

தீரும்நோய்கள்:- தகுந்த துணைமருந்துகளிலிட, சன்னி நோய்கள், இரண நோய்கள், நீரிழிவு, நீர்பெருக்கு, நீரறுகுதல், நீர்க்கோவை, நீரேற்றம், கழுத்து இரணப்புற்று, சத்திகுன்மம், நேத்திரவாயு, கபால உஷ்ணம், பித்தவறட்சி, வாதவிக்கல், காசநோய்கள், சயகாச நோய்கள், அழுக்குத் தேமல், தேமல் முதலிய அநேக நோய்கள் தீரும்.

மருத்துணவு:- நோய்க்குத் தகுந்தபடியும், உடல் இயல்புக்கு தகுந்தபடியும் பத்தியம் ஏற்படுத்த வேண்டியது மருத்துவர்களின் கடமையாம்.

158 (ஆ) கருவங்கச் செந்தூரம் (வேறு)

காரீயக் குண்டு ஒவவொரு பலமுள்ள இரண்டு குண்டுகள் ஆடுதின்னாப் பாலையை அரைத்து விழுது 40 பலம் (1400 கிராம்) தாளகம் செல்லத்தக்க அளவு, வேலிப் பருத்திச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- மேற்படி குண்டுகளை மேற்படி ஆடு தின்னாப் பாலை விழுதிற்குள் வைத்து உருண்டை போல் செய்து ஒரு சட்டியில் வைத்து மேல் சட்டி மூடி ஏழு சீலைமண் செய்து கெச புடமிட்டெடுக்க வங்கக் குண்டானது வெட்டையாகி இருக்கும். அதை நிறுத்து அது கண்ட எடைக்கு மூன்றிலொரு எடை தாளகம் இதனைத் தனியேபொடித்து வங்கத்தையும் பொடித்து இரண்டையும் ஒன்றாகக் கலந்து கல்வத்திலிட்டு மேற்படி வேலிப் பருத்திச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமமரைத்து வில்லை தட்டிக் காயவைத்து ஓட்டிலிட்டு மேலோடு மூடிச் சீலைமண் செய்து உலர்த்தி - 5 பலமுள்ள இருபது விராட்டியில் புடமிட்டாறினபின் எடுக்கச் செந்தூரமாகி இருக்கும்

அளவு:- 1 முதல் 3 குன்றிமணி எடை.

தீரும் நோய்கள்:- தகுந்த சிறப்பான துணைமருந்துகளிலிட பிரமிய நோய்கள், வெட்டை நோய்கள், பெரும்பாடு, நீரிழிவு ஆகியவைகள் தீரும்.

மருத்துணவு:- இச்சாபத்தியம்.

159. கருவங்கச் செந்தூரம் (வேறு)

(அ) சிவனார் வேம்புச் சமூலத்தைச் சுட்ட சாம்பல் 2 படி சிறுநீர் 3 படி. (ஆ) கருவங்கக்குண்டு 1 பலம் (35 கிராம்) வீரம் 1 வராகன் எடை (3½ கிராம்), உமிழ்நீர், ஊமத்தை இலைச் சாறு ஆகியவை செல்லத்தக்க அளவு.

செய்முறை:- மேற்படி சிவனார் வேம்புச் சாம்பலில் மேற்படி சிறுநீரை விட்டுக் கரைத்து ஒரு இரவு வைத்துக் காலையில் தெளிவிறுத்துக் காய்ச்சி உப்பெடுத்துக் கொள்ள வேண்டும். அந்த உப்பை இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தை ஒரு அகலில் வைத்து அதனடுவில் ஈயக்குண்டை வைத்து அதன்மேல் மறுபாக உப்பைப் போட்டு மேலகல் மூடி மூன்று சீலைமண் செய்து கெச புடமிடவேண்டும். புடம் ஆறினபின் எடுக்க வங்கமானது வெட்டையாகி இருக்கும். இதனைக் கல்வத்திலிட்டுப் பொடித்து வீரத்தையும் சேர்த்து உமிழ் நீரையும் ஊமத்தஞ் சாற்றையும் சிறுகச் சிறுக விட்டு இரண்டு சாமமரைத்து வில்லை தட்டிக் காயவைத்து அகலில் வைத்து மேலகல் மூடி மூன்று சீலைமண் செய்து, கவசத்தின் எடைக்கு ஆறு பங்கு எடை விராட்டியில் புடமிடவேண்டும. புடம் ஆறின பின் எடுத்துக் கல்வத்திலிட்டு முன்போல் உமிழ்நீரையும் ஊமத்தஞ் சாற்றையும் சிறுகச் சிறுக விட்டு இரண்டு சாமம் அரைத்து முன்போல் அரைத்து முன் போல் வில்லை செய்து உலர்த்தி, அகலில் வைத்துக் கவசம் செய்து உலர்த்தி முன்போல் புடமிட வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஊமத்தஞ் சாற்றிலும் உமிழ் நீரிலும் இன்னும் மூன்று புடமிடவேண்டும். ஆக மொத்தம் ஐந்து புடமுமிட்டுத் தீர்ந்தால் மிக சிறப்பான செந்தூரமாகி இருக்கும்.

அளவு:- 1 முதல் 3 குன்றிமணி எடை.

தீரும் நோய்கள்:- தகுந்த சிறப்பான துணை மருந்துகளிலிட, பிரமிய நோய்கள், வெட்டை நோய்கள், பெரும்பாடு. நீரிழிவு ஆகியவைகள் தீரும்.

மருத்துணவு:- இச்சா பத்தயம்,

160. கருவங்கச் செந்தூரம் (வேறு) வறுப்பு

தூய்மை செய்த கருவங்கம் 2 பலம் நாலாங்காய்ச்சல் வெடியுப்பு 2 பலம் உலர்ந்த சிறுநீரை வேர் 4 பலம்.

செய்முறை:- வெடியுப்பைத் தூள் செய்து வைத்துக் கொள்ளவும். சிறுகீரை வேரைச் சிறுகரணையாக நறுக்கி வைத்துக் கொள்ளவும். வங்கத்தைச் சட்டியிலிட்டு உருக்கி, உருக்கு முகத்தில் வெடியுப்புத் தூளையிரண்டு சிட்டிகை எடுத்துப் போட்டுச் சிறுகீரை வேரிலுங் கொஞ்சமெடுத்துப் போட்டு ஒரு குச்சியால் துழாவி வரவேண்டும். இவ்விதம் ஒழுங்காக செய்துவரின் மேற்படி வெடியுப்பும் மேற்படி சிறு கீரை வேரும் எல்லாஞ் சென்றவுடன் கருவங்கமானது செந்தூரமாகிவிடும்.

அளவு:- 1 முதல் 3 குன்றிமணி எடை.

துணை மருந்து:- பசுவின் வெண்ணெய், பசுவின் நெய் முதலயவைகளாம்.

தீரும் நோய்கள்:- படர்தாமரை, அசாத்திய குட்டம், சிரங்குகள், செவ்வட்டைக்கடி ஆகியவைகள் நீங்கும்.

மருந்துணவு;- ஈரவெங்காயமும், பழைய சோறும் காலையில் ஒரு வேளை சாப்பிட வேண்டும். பசுவின் மோர் சாதம், பசுவின் பால்சாதம் முதலியவைகளும் ஆகும். உடலிற்குச் சூடுதரும் உணவுகள், கரப்பான் உணவுகள் ஆகியவைகள் ஆகாது. புகை புணர்ச்சி ஆகியவைகளை அறவே நீக்கி விட வேண்டும்.

161. கருவங்கச் செந்தூரம் (வேறு) வறுப்பு

தூய்மை செய்த கருவங்கம் 5 பலம் (175 கிராம்), சுத்தித்த இரசம் 5 பலம் (175 கிராம்), ஓமம் 10 பலம் (350 கிராம்), உலர்ந்த முருங்கைப் பூ 10 பலம் (350 கிராம), சிவப்பு நாயுருவிச் சமூலம் செல்லத்தக்க அளவு.

செய்முறை:- காரீயத்தை உருக்கி இரசத்துடன் தொந்தித்துக் கொள்ளவேண்டும். ஓமத்தை இடித்து தூளாக்கி முருங்கைப் பூவையும்கூடச் சேர்த்து இந்தக் கலவையைத் தனியே வைத்துக் கொள்ள

வேண்டும். நாயுருவியைச் சிறு துண்டுகளாகத் துண்டித்து அதனையும் தனியே வைத்துக் கொள்ள வேண்டும். முன் சித்தப்படுத்தின வங்கரசத்தைச் சட்டியிலிட்டு அடுப்பேற்றி உருக்கி உருக்கு முகத்தில் ஓம முருங்கைப் பூக் கலவையில் கொஞ்சமெடுத்துத் தூவிக் குச்சியால் வறுக்க வேண்டும். அது எரிந்த உடன் மறுபடியும் முன் தூளைப் போட்டு வறுக்க வேண்டும். இவ்விதம் ஓம முருங்கைப் பூத்தூள் ஆனபின் மேற்படி நாயுருவிப் பொடியைப்போட்டு வறுக்கவேண்டும். போட்டதூள் எரிந்த உடன் மறுதூளைப் போட வேண்டும். இவ்விதம் அடிக்கடி போட்டு நன்றாய்ச் சிவந்து செந்தூரமாகிற வரையில் வறுக்க வேண்டும். இது சுமார் ஒன்று இரண்டு, மூன்று மணிக்குள் செந்தூரமாகிவிடும்.

அளவு:- 2 முதல் 4 குன்றிமணி எடை.

துணைமருந்தும் தீரும் நோயும்:- செவ்வாழைப்பழம் அல்லது இரஸ்தாளி வாழைப்பழம் ½ பலம் (17 ½ கிராம்), தேன் 3 வராகன் எடை (10½ கிராம்), இவற்றை கலந்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்துண்ண, கபாலசூலை கண்ணோய், காதுநோய், பல் நோய் ஆகியவைகள் தீரும். பழத்துடன் தேனைச் சேர்க்காமலும் உபயோகிக்கலாம்.

சருக்கரை 2 வராகன் எடை (7 கிராம்), நெய் 2 வராகன் எடை (7கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி சேர்த்துண்ண, எல்லா வகைப் பிரமிய நோய்களும் தீரும்.

பழைய பனைவெல்லம் 1 ½ வராகன் எடை (5¼ கிராம்), தேன் 1½ வராகன் எடை (5¼ கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி சேர்த்துண்ண உதிர சூலை, உதிரவாயு, உதிரச்சிக்கல் ஆகியவை தீரும்.

முருங்கைவேர்ப் பட்டைத்தூள் 1 வராகன் எடை (5¼ கிராம்), தேன் 3 வராகன் எடை (10½ கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட செந்தூரத்தை சேர்த்துண்ண கபநோய், செரியாமை நோய் ஆகியவைகள் தீரும்.

நீர்முள்ளி விதையை வறுத்து இடித்த தூள் 1½ வராகன் எடை (5¼ கிராம்), தேன் 3 வராகன் எடை (10½ கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண கிராணி நோய்கள் தீரும்.

பேய்ச் சுண்டை வேர்ப்பட்டை, குறிஞ்சாவேர். வெட்டிவேர இவற்றின் தனித்தனித் தூள் வகைக்கு ½ வராகன் எடை (1¾ கிராம்), தேன் 3 வராகன் எடை (10½ கிராம்), இவற்றை கலந்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி சேர்த்துண்ண, அறுவகைக் 'கிராணிகளும் தீரும்.

பொன்னாங்காணிச்சாறு, 3 வராகன் எடை (10½ கிராம்), தேன் 3 வராகன் எடை (10½ கிராம்). இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி சேர்த்துண்ண கை கால் எரிச்சல் முதலிய எரி வந்த நோய்கள் தீரும்.

மருத்துணவு:- நோய்க்குத் தகுந்ததுபோலவும் சமயோசிதம் போலவும் மருத்துணவு வைத்துக் கொள்ள வேண்டும்.

குறிப்பு:- இந்தச் செந்தூரமானது அருமையான முறைகளிலொன்று. ஆனால் இதனைச் செய்வதில் சற்று கருத்தாகவும், விழிப்பாகவும், கைபாகத்துடனும் செய்யவேண்டியது. இது தீயின் விகற்பத்தினால் சில சமயம் சீக்கிரமாகவும் சில சமயங்களில் அதிக தாமதமாகவும் செந்தூரமாகிறது. சில சமயம் செந்தூரமாகாமலே கருத்துப் போகிறது. ஆகையால் இதனை இரண்டொரு தடவை மடக்கி, மடக்கிச் செய்வதால் தனக்குத்தானே இயல்பாக இதன் மர்மங்கள் விளங்கிப் போகும். ஒரு தடவையாகா விட்டால் அதைரியப்பட்டு விட்டுவிடாமல் மறு தடவையும் செய்யவேண்டியது.

162. கருவங்க பவழச் செந்தூரம் (வேறு)

தூய்மை செய்த கருவங்கம் 1 பலம் (35 கிராம்), தூய்மை செய்த கர்ப்பூர சிலாசத்து 1 பலம் (35 கிராம்), நற்பவழம் 1 பலம் (35 கிராம்), (இதனை வாங்க சத்தியில்லாதவர்கள் பவழப் புற்றைச் சேர்த்துக் கொள்ளலாம்.) தூய்மை செய்த பூநீறு ¼ பலம் (8¾ கிராம்), எலுமிச்சம் பழச்சாறு, பொற்றலைக் கையாந்தகரைச்சாறு ஆகியவை செல்லத்தக்க அளவு, நெல்லிக்காய் கெந்தகம் செல்லத்தக்க அளவு.

செய்முறை:- கருவங்கத்தை மெல்லிய தகடாகத் தட்டிச் சன்னப் பொடிகளாகக் கத்தரித்து தனியே வைத்துக் கொள்ளவும். பவழத்தைபும், சிலாசத்தையும், பூநீற்றையும் தனித்தனியே பொடித்து ஒன்றாய்க் கலந்து வைத்துக் கொள்ளவும். முன் சுத்தப்படுத்தின கருவங்கப்பொடியைக் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து வெண்ணெய் போலாகிறவரையில் அரைக்க வேண்டும்.

பிறகு முன் சித்தப்படுத்தின தூள்களையும் சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றை சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி அகலிலிட்டு மேலகல் மூடி மூன்று சீலை மண் செய்து உலர்த்திக் கவசத்தின் இருபது பங்கு எடை விராட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுத்து நிறுத்துக் கண்ட எடையில் காற் பங்கெடை கெந்தகத்தைச்சேர்த்து எலுமிச்சம் பழச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து இரண்டு சாமம் அரைத்து வில்லை செய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி மூன்று சீலைமண் செய்துலர்த்தி இருநூற்றைம்பது பலம் விராட்டியில் புடமிட வேண்டும். ஆறின பின்னெடுத்து நிறுத்து கண்ட எடையில் காற்பங்கெடை நெல்லிக்காய்க் கெந்தகம் சேர்த்து பொற்றலைக் கையாந்தகரைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமம் அரைத்து வில்லை செய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி மூன்று சீலைமண் செய்துலர்த்தி முன்போல் இருநூற்றைம்பது பலம் வராட்டியில் புடமிட வேண்டும். ஆறினபின் எடுத்து நிறுத்துக் கண்ட எடையில் காற்பங்கெடை நெல்லிக்காய்க் கெந்தகம் சேர்த்து முன்போல் பொற்றலைக் கையாந்தகரைச் சாற்றை விட்டே இரண்டு சாமம் அரைத்து முன்போல் வில்லை செய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி மூன்று சீலைமண் செய்துலர்த்தி முன்போல் இருநூற்றைம்பது பலம் விராட்டியில் புடமிட்டு எடுக்க சித்தரது அருளால் மிக மேலான செந்தூரமாகி இருக்கும். அரைப்புக் குறைவாயினும் தீக்குறைவாயினும் நல்லவண்ணமான செந்தூரமாகாது. அந்தச் சமயங்களில் முன்போலவே பொற்றலைக்கையாந்தகரைச் சாற்றில் இரண்டொரு புடம் போட்டு எடுத்துக் கொள்ள செந்தூரமாகி இருக்கும்.

அளவு:- 2 முதல் 4 குன்றிமணி எடை.

தீரும் நோய்கள்:- தகுந்த துணைமருந்துகளில் கொடுக்க, வெட்டை நோய்கள், பிரமேக நோய்கள், நீர்நோய்கள், மேக நோய்கள் முதலிய அநேக நோய்கள் தீரும்.

மருத்துணவு:- இச்சாபத்தியம்.

163. கருவங்கச் செந்தூரம் (வேறு)

தூய்மை செய்த கருவங்கம் 5 பலம் (175 கிராம்), நாலாங்காய்ச்சல் வெடியுப்பு 10 பலம் (350 கிராம்), அபின் 6 வராகன் எடை (17½

கிராம்), வட்டத்துத்தி வேர்ப்படை, ஆவாரை வேர்ப்பட்டை வகைக்கு 2½ பலம் (87½ கிராம்).

செய்முறை:- வெடியுப்பைத் தூள் செய்து வைத்துக் கொள்ள வேண்டும். வட்டத் துத்திவேர், ஆவாரம்பட்டை இவ்விரண்டையும் தனித்தனியே தூள் செய்து வைத்துக் கொள்ள வேண்டும். அபினியைக் குன்றிமணி அளவான மாத்திரைகள் செய்து வைத்துக் கொள்ளவேண்டும்.

வங்கத்தைச் சட்டியிலிட்டு அது உருகின் பின் உருக்கு முகத்தில் அபின்மாத்திரையில் ஒன்றைக் கொடுத்து. வெடியுப்புத் தூளைக் கொஞ்சம் தூவிப் பிறகு வட்டத் துத்திவேர்த் தூளை கொஞ்சம் தூவி, அதன்மேல் ஆவாரை வேர்பட்டைத் தூளை கொஞ்சம் தூவி இருப்புக் கடப்பாறையால் கடைந்துவிட வேண்டும். போட்ட மருந்து பொருள்கள் எரிந்துபோன பின் முன் போலவே அபின் வெடியுப்பு துத்திவேர்ப் பட்டைத் தூள், ஆவாரை வேர்ப்பட்டைத் தூள் ஆகியவைகளை முறையே ஒன்றின் பின் ஒன்றாகப் போட்டுக் கடைந்து வரவேண்டும். இவ்விதம் நான்கு சாமம் வறுத்தால் செந்தூரமாகிவிடும். நான்கு சாமத்திற்குள் நல்லவண்ணமுள்ள செந்தூரமாகாவிட்டால் அரை அல்லது, ஒரு சாமம் தொடர்ச்சியாய் அதிகம் வறுக்கச் செந்தூரமாகிவிடும். இச் செந்தூரத்தைக் கடிதத்தில் மடித்து வைக்காமல் பளிங்குக்குப்பியில் வைத்துக் கொண்டு உபயோகிக்க வேண்டும். தாளில் (காகிதம்) வைப்பதனால் அது கெட்டுப் போவதுமன்றி செந்தூரத்தின் வேகமுங் குறைந்து போக ஏதுவாகிறது.

அளவு:- 2 முதல் 4 குன்றிமணி எடை.

தீரும் நோயும் துணைமருந்தும்:- நற்சீரகத்தை வறுத்து இடித்துத் தூள் செய்து துணியில் சலித்த தூள் 1 வராகன் எடை (3½ கிராம்), சர்க்கரை 1 வராகன் எடை (3½ கிராம்), பசுவின் வெண்ணெய் 2 வராகன் எடை (7 கிராம்) இம்மூன்றையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்து உட்கொள்ள வேண்டும். இவ்விதம் காலை, மாலை இரண்டு வேளையும் பத்து அல்லது, இருபது நாள் உபயோகித்துவரின் கல்லடைப்பு நோய்கள், சுக்கிலப்பிரமிய நோய்கள், பித்த நோய்கள், பித்த கோப நோய்கள், நீர்க்கழிச்சல், தாகம், நீர்க்கடுப்பு, உள்ளுருக்கி எலும்புருக்கி முகம், கை, கால் முதலிய இடங்களிலுண்டாகும் எரிவந்தம் முதலிய பல நோய்கள் தீரும்

இஞ்சிச்சாறு 1 ½ வராகன் எடை (5¼ கிராம்) தேன் 3 வராகன் எடை (10½ கிராம்) இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட செந்தூரத்தைக் காலை, மாலை இரண்டு வேளையுமாகப் பன்னிரெண்டு நாள் உபயோகிக்கின் குன்ம நோய், சன்னி நோய் ஆகியவைகள் தீரும்.

அட்டவர்க்க சூரணம் அல்லது அட்டமூலச் சூரணம் 1 வராகன் எடை (3½ கிராம்), நெய், அல்லது தேன் 2 வராகன் எடை (7 கிராம்) இவற்றைக் கலந்து மேற்கண்ட செந்தூரத்தை காலை, மாலை இரண்டு வேளையுமாகப் பத்துநாள் அல்லது இருபது நாள் உபயோகித்து வர, கழிச்சல் நோய் பன்னிரெண்டு வகை பெருங்கழிச்சல், வயிற்றுக்கடுப்பு, உதிரச்சிக்கல், பிரசவ மகளிருக்கு சீப்பழுத்தல் முதலிய நோய்கள் தீரும்.

மேற்றோல் சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி இம்மூன்றும் வகைக்குச் சமனெடை, இம் மூன்றையும் தனித்தனியாக இளவறுப்பாய் வறுத்து இடித்து துணியில் வடிகட்டிய தூள் 1 வராகன் எடை (3½ கிராம்), தேன் 2 வராகன் எடை (7கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்து காலை, மாலை இரண்டு வேளையுமாக இருபது நாள் உபயோகித்துவரின், வறட்காமாலை, பித்தபாண்டு, சோகை, நச்சுப் பாண்டு, மேலிளைத்தல், இருமல் முதலிய நோய்கள் தீரும்.

மருத்துணவு:- இச்சாபத்தியம்.

அட்டவர்க்கச் சூரணம்:- சீரகம், கருஞ்சீரகம், சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு வெங்காயம், ஓமம் இந்த எட்டுச் சரக்குகளையும் தனித்தனியே இடித்து துணியில் வடிகட்டி வகைக்குச் சமன் எடையாக எடுத்து ஒன்றாகக் கலந்து கொள்ளவேண்டும்.

நாகத்தூய்மை:- நாகத்தை உருக்கி இலுப்பை எண்ணெயில் சாய்க்க வேண்டும். இலுப்பை எண்ணெயானது நாகம் நன்றாய் அமிழ்ந்திருக்கும்படியாக இருக்க வேண்டும். ஒரு தடவைக்காக உபயோகித்த எண்ணெயை மறு தடவைக்கு உபயோகிக்கலாகாது. ஆறின பின் நாகத்தை எடுத்து உருக்கி முன்போல் மேற்படி எண்ணெயில் சாய்க்கவேண்டும். இவ்விதம் மடக்கி, மடக்கி, உருக்கி, உருக்கிப் பத்துத் தடவை சாய்த்தால் நாகமானது தூய்மையாகி விடும்.

குறிப்பு:- நாகம் எனப் பொதுவாகச் சொல்லப்பட்ட இடங்களில் சிறுகண் நாகத்தை அல்லது பெருகண் நாகத்தை உபயோகித்துக் கொள்ளலாம்.

164. நாக பற்பம்

தூய்மை செய்த நாகம் 1 பலம் (35 கிராம்), இலைக் கள்ளிச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- நாகத்தை இரும்புக் கரண்டியிலிட்டு அதில் சுமார் ½ பலம் (17½ கிராம்) மேற்படி இலைக்கள்ளிச் சாற்றை விட்டு உருக்கி இரும்புக் கம்பியால் தேய்க்கத் தேய்க்க நாக மெல்லாந் தூளாகிவிடும். அந்தத் தூளை ஒரு சட்டியில் போட்டு அந்தத் தூள் எடை மேற்கண்ட இலைக்கள்ளிச் சாற்றை விட்டு மேல் சட்டி மூடி சீலைமண் செய்து நான்கு சாமம் எரித்து ஒருநாள் ஆறவிட்டு எடுக்கச் சுத்த வெண்மையான பற்பமாயிருக்கும். தீக்குறைவானால் அல்லது, முறை பிசகினால் வண்ணபேதம் இருந்தால் அந்தத் தூளைச் சட்டியிலிட்டு அந்த எடை மேற்படி சாற்றை அதில் விட்டு, மேல்சட்டி மூடி சீலை மண் செய்து அடுப்பில் வைத்து முன் போல் நான்கு சாமம் எரிக்கவும். ஒரு நாள் ஆறவிட்டு எடுக்க உயர்ந்த பற்பமாய் இருக்கும்.

அளவு:- 2 முதல் 4 குன்றிமணி எடை.

தீரும் நோய்கள்:- தகுந்த துணைமருந்துகளில் கொடுக்க சயம் முதலிய எல்லாவகை இருமல் நோய்களும் தீரும்.

மருத்துணவு:- இச்சாபத்தியம்.

குறிப்பு:- நாகத்திற்குச் சமன் இரசத்தைச் சேர்த்து மேற்கண்ட பாகப்படி எரித்தாலும் பற்பமாகி விடும். இரசத்தை சம்பந்தப்படுத்திச் செய்யும் பற்பமானது அதிக சிறப்புடைய குணமுள்ளதாகையால் விருப்பமானவர்கள் இதன்படியும் செய்து கொள்ளலாம்.

165. நாக பற்பம் (வேறு)

தூய்மை செய்த நாகம் 1 பலம் (35 கிராம்), அபின் 1½ வராகன் எடை (5¼ கிராம்), பெரியா நங்கைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- நாகத்தை இரும்புச் சட்டியில் வைத்தடுப்பேற்றி உருக்கி அபினியைக் குன்றிமணி அளவு உருட்டி அதில் போட்டு இரும்புக் கம்பியால் துளாவி வறுக்கவேண்டும். அது எரிந்து போனவுடன் மறுபடியும் முன்போல் அபினியைப் போட்டு முன்போல் வறுக்க வேண்டியது. இவ்விதம் அபினெல்லாஞ் சென்றவுடன் நாகமானது பொரிந்து பற்பமாகி இருக்கும். அதனைக்

கல்வத்திலிட்டுப் பெரியாநங்கைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு இரண்டு சாமம் அரைத்தும் வில்லை செய்து உலர்த்தியும் ஓட்டிலிட்டு மேலோடு மூடி 5 சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் இருபது பங்கு எடை வராட்டியில் புடமிடவேண்டும். புடம் ஆறின பின் எடுக்கப் பற்பமாகி இருக்கும்.

அளவு:- 2 முதல் 4 குன்றிமணி எடை.

துணைமருந்து:- வெண்ணெய், நெய் முதலியவைகளாம்.

தீரும் நோய்கள்:- மூல நோய், வெட்டை நோய் ஆகியவைகள் தீரும்.

மருத்துணவு:- இச்சா பத்தியம்.

குறிப்பு:- மேற்கண்ட பாகத்தில் அபினியைக் கொடுத்துப் பற்பமாக்கி பெரியா நங்கைச் சாற்றை விட்டரைத்துப் புடம் போடாமலும் மேற்கண்ட நோய்களில் உபயோகிக்கலாம். மேற்கண்ட மூலிகை இலகுவாய் அகப்படுமானால் அதனால் அரைத்துப் புடமிட்டுக் கொள்வதால் சிறப்புடையது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஆகையால், அவரவர்கள் இடம், பொருள், ஏவல் என்னும் சமயோசிதம் போல் செய்துகொள்ளலாமென்னுங் கருத்துடனே இதனை இங்கெழுத நேரிட்டது.

166. நாக பற்பம் (வேறு)

தூய்மை செய்த நாகம் 11 வராகன் எடை (38½ கிராம்), தூய்மை செய்த இரசம் 11 வராகன் எடை (38½ கிராம்), நாலாங்காய்ச்சல் வெடி உப்பு 3 வராகன் எடை (10½ கிராம்). எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- நாகத்தை இரும்புக் கரண்டியில் உருக்கி இரசத்திற்கொடுத்து சேர்த்துக் கொள்ளவேண்டும். (இது இவ்விதம் சேர்க்கும்போது தெரிக்கும் இயல்பை உடையது. ஆகையால் சிறு துவாரமிட்டப்பட்ட ஒரு பாத்திரத்தை இரசத்தின்மீது கவிழ்த்து, அந்தத் துவாரத்தின் மூலமாக உருக்கின நாகத்தை இரசத்தின்மீது விட்டுச் சேர்த்துக் கொள்ளவேண்டும் அல்லது, இரசத்தில் விளக்கெண்ணெயை, அல்லது, நல்லெண்ணெயை விட்டு வைத்து அதில் உருக்கின நாகத்தை விட்டுச் சேர்த்த பிறகு எடுத்து எண்ணெய் முதலியவை இல்லாமல் நன்றாய்ச் சுத்தப்படுத்திக் கொள்ள

வேண்டியது) இவ்விதம் சேர்த்ததைப் பொடித்து எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு இரண்டு சாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி ஏழு சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் இருபது பங்கெடை விராட்டியில் புடமிட்டுக் குளிர ஆறினபின் எடுக்கப் பற்பமாகி இருக்கும்.

அளவு:- 1 முதல் 3 குன்றிமணி எடை.

தீரும் நோய்கள்:- தேன், நெய் முதலிய மருந்துகளிலிட, மேகநோய், மேகப்புண், மேகச்சொறி முதலிய பல நோய்கள் தீரும்.

மருத்துணவு:- நோயின் வலிமை, உடல் வலிமை ஆகிய வைகளுக்குத் தகுந்ததுபோல் பத்தியம் வைக்க வேண்டியது.

167. நாக பற்பம் (வேறு)

தூய்மை செய்த நாகம் 1 பலம் (35 கிராம்), புரசம்பூக் குழித் தைலம் செல்லத்தக்க அளவு.

செய்முறை:- நாகத்தைக் கரண்டியில் உருக்கித் தேற்றான் கொட்டை அளவு மேற்படி புரசம்பூக் குழித் தைலத்தை விட்டு வறுக்க வேண்டியது. அது எரிந்தவுடன் மறுபடியும் மேற்படி குழித் தைலத்தை விட்டு வறுக்க வேண்டியது. இவ்விதம் அடிக்கடி தைலத்தை விட்டுப் பற்பமாகிற வரையில் துழாவி வறுக்கவும். இவ்விதம் செய்து வந்தால் கொள்ளுப் பொரிபோல் பொரிந்து நாகம் பற்பமாகிவிடும்.

அளவு:- ½ முதல் 1 குன்றிமணி எடை.

தீரும் நோய்கள்:- இரண்டு வராகன் எடை வெண்ணெயில் மேற்படி பற்பத்தை அளவுப்படி சேர்த்துக் கொள்ள வேண்டும். இவ்விதம் காலை, மாலை இரண்டு வேளையுமாக இருபது நாள் உபயோகித்தால் தாதுவிருத்தி உண்டாகும். நீர்த்துப்போன இந்திரியம் கெட்டிப்படும். நரம்புகள் எல்லாம் முறுக்கேறி உடல் வலிமை மனோ வலிமை ஆகியவைகள் உண்டாகும்.

மருந்துணவு:- இச்சாபத்தியம், பால், மிட்டாய் தினுசுகள் ஆட்டிறைச்சி முதலியவைகளை அதிகமாகச் சேர்த்து வர வேண்டும்.

குறிப்பு:- குழித் தைலம் இறக்குமுறையானது நமது இரசவாத சிந்தாமணியில் வகை விபரமாகச் சொல்லப்பட்டிருப்பதால், அவசியமானவர்கள் தயவுடன் அதனை பார்த்துக் கொள்ளவும்.

168. நாக பற்பம் (வேறு)

தூய்மை செய்த நாகம் 2 பலம் (7 கிராம்), புங்கெண்ணெய் செல்லத்தக்க அளவு. வாழைக் கிழங்குச்சாறு செல்லத்தக்க அளவு, நுணா இலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- நாகத்தை இரும்புக் கரண்டியில் உருக்கிப் புங்கெண்ணெயில் சாய்க்க வேண்டும். புங்கெண்ணெயானது நாகம் அமிழ்ந்து கிடக்கும்படியாகத் தாராளமாயிருக்க வேண்டியது. ஒரு தடவை உபயோகித்த எண்ணெயை மறுதடவைக்கு உபயோகிக்கலாகாது. நன்றாய் ஆறினபின் எடுத்து உருக்கி முன்போல் புங்கெண்ணெயில் சாய்க்க வேண்டும். மூன்றாந்தடவையும் அவ்விதமே உருக்கிச் சாய்த்து எடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு நாகத்தின் மீது எண்ணெய்ப் பசையில்லாமல் துணியினால் துடைத்துத் தூய்மை செய்து, வாழைக்கிழங்குச் சாற்றில் ஊறப்போட வேண்டும். இந்தக் கிழங்குச் சாறானது நாகத்தின் மீது ஐந்தங்குலம் இருக்கும்படியாகத் தாராளமாய் விட்டு வைக்க வேண்டியது. எழு நாள் சென்ற பின்பு எடுத்து இரும்புக் கரண்டியில் வைத்து உருக்கி, உருக்கு முகத்தில் நுணா இலைச் சாற்றைக் கொஞ்சம் விட்டு இரும்புக் கடப்பாறையால் தேய்க்க வேண்டியது. இவ்விதம் ஐந்தாறு தடவை சாற்றை விட்டு, விட்டச்சாறு சுண்டினவுடன் மறுபடியும் முன்போல் கடைய வேண்டியது. இம்முறையாக ஐந்தாறு தடவை விட்டுக் கடைந்தால் பற்பமாகி விடும். அல்லது பற்பமாகிற வரையில் மேற்படி சாற்றை விட்டுக் கடைந்து வரவேண்டியது.

அளவு:- 2 முதல் 3 குன்றிமணி எடை.

தீரும் நோய்கள் :- வெண்ணெய் 2 வராகன் எடை (7 கிராம்) இதில் மேற்படி பற்பத்தை அளவுப்படி சேர்த்துட் கொள்ள மந்தாக்கினி நோய் தீர்ந்து, பசிசக்தி உண்டாகி, உடல் வலிமை உண்டாகும்., இன்னும் தகுந்த துணை மருந்துகளில் சேர்த்துக் கொடுத்தால் எல்லாவகை பித்த நோய்களும் தீரும்.

மருந்துணவு:- நோய்க்குத் தகுந்தது போல் பத்தியம் ஏற்படுத்த வேண்டியது.

169. நாக பற்பம் (வேறு)

தூய்மை செய்த நாகம் 1 பலம் (35 கிராம்) ஐவிரலிச்சாறு அல்லது நாமக் கோவைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- நாகத்தை இரும்புக் கரண்டியிலிட்டுக் கொல்லுலையில் வைத்தூதி உருக்கி, மேற்படி ஐவிரலிச் சாற்றை, அல்லது நாமக் கோவைச் சாற்றை சிறுகவிட்டு இரும்பு கடப்பாறையால் கடைய வேண்டியது. விட்ட சாறு சுண்டினவுடன் முன்போல் மேற்படி சாற்றை விட்டு முன் போல் கடைய வேண்டியது. இவ்விதம் இரண்டொரு மணி நேரம் ஊதி சாற்றைக் கொடுத்தால், சிலசமயம் சீக்கிரமாகவும், சில சமயம் தாமதமாகவும் பற்பம் மடியும். ஆகையால் பற்பமாகிற வரையில் ஊதிக் கொண்டேயிருந்து மேற்கண்ட சாற்றைக் கடைந்து வரவேண்டியது. மேற்படி பற்பத்தைக் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றைச் சிறகச் சிறுக விட்டு இரண்டு சாமம் அரைத்து வில்லை தட்டி உலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி 5 சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தினெடைக்குப் பத்துப் பங்கெடை விராட்டியில் புடமிட்டு ஆறின பின்னெடுக்க உயர்ந்த பற்பமாயிருக்கும்.

அளவு:- 2 முதல் 3 குன்றிமணி எடை.

தீரும் நோய்கள்:- தகுந்த துணை மருந்துகளில் கொடுக்க எல்லாவகை மேகநோய், ஆரம்ப குட்ட நோய், மேகரணம் ஆகியவைகள் தீரும்.

மருந்துணவு:- புளி, புகை, புணர்ச்சி ஆகியவைகளை அறவே நீக்க வேண்டும். நோய் கடினமாய் இருந்தால், உப்பை நீக்கி விடவேண்டியது உத்தமம். அப்படி நீக்காவிட்டால், வறுத்துச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

170. நாக பற்பகம் (வேறு)

சிறுகண் நாகம் 5 பலம் (175 கிராம்), காட்டாமணக்கு இலைத் தனிச்சாறு செல்லத்தக்க அளவு, மஞ்சட் கடுக்காய்த் தோல் தூள் செல்லத்தக்க அளவு, எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- நாகத்தைக் குகையில் இட்டு உருக்கிக் காட்டாமணக்குச் சாற்றில் சாய்க்க வேண்டும். அந்தச் சாறானது நாகம் அமிழ்ந்திருக்கும்படித் தாராளமாக இருக்கவேண்டியது. ஒரு தடவை உபயோகித்த சாறு மறுதடவை உபயோகிக்கலாகாது. ஆகையால் தடவைக்குத் தடவை புதிய சாறாக வார்த்துக் கொள்ள வேண்டியது. இந்தச் சாற்றைப் புதிய சட்டியிலும் வார்த்துச் சாய்க்க வேண்டியது. முன் உருக்கிச் சாய்த்த நாகமானது ஆறின உடன் எடுத்துக் குகையில்

இட்டு உருக்கி முன்போல் மேற்படி சாற்றில் சாய்க்க வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஏழு தடவை உருக்கி சாய்த்து எடுக்க நாகமானது தூய்மையாகி ஒரு வகைப் பாவனையுமாகும்.

மேற்படி நாகத்தைக் குகையில் இட்டு உருக்கி ஒரு புதுச்சட்டியில் வார்த்து மேற்படி கடுக்காய்த் தூள் சுமார் பத்துப் பலத்தைத் தூவி பூவரசன் கொம்பால் கடைந்தால், நாகமானது மாண்டு பொடிப் பொடியாகி விடும். இதனை முறத்தில் இட்டுப் புடைத்து நாகத் தூளை மாத்திரம் எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த நாகத் தூளை கல்வத்தில் இட்டு எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமம் அரைத்து வில்லை செய்து வெய்யிலில் வைத்து ஈரம் இல்லாமல் உலர்த்தி ஓட்டில் இட்டு மேலோடு மூடி ஐந்து சீலைமண் செய்து உலர்த்தி இருநூறு பலம் விராட்டியில் புடமிட வேண்டும். குளிர ஆறின பின் எடுத்துக் கல்வத்தில் இட்டு முன்போல் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமம் அரைத்து முன்போல் வில்லை செய்து முன்போல் ஓட்டில் வைத்து மேலோடுமூடிக் கவசம் செய்து உலர்த்தி முன்போல் புடமிட்டுக் கொள்ள வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஏழு தடவைகள் ஏழு புடமிட்டுக் கொண்டால் உயர்ந்த பற்பமாய் இருக்கும். இதில் தளுக்குசத்து முதலிய கெட்டகுணங்களிரா. சோதனைக்குச் சரியாக இருக்கும்.

அளவு:- 4 முதல் 6 குன்றிமணி எடை.

தீரும் நோய்கள்:- தேன் 2 வராகன் எடை (7 கிராம்) இதில் மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துக் கொள்ளவேண்டும். இவ்விதம் காலை, மாலை இரண்டு வேளையுமாக ஏழு நாட்கள் உபயோகித்துவரின், கைகால் கறுப்பு, தடிப்பு, ஊரல், படை முதலியவைகளும், எல்லாவகை கருமேகங்களும் தீரும்.

மருந்துணவு:- நோயின் வலிவுக்குத் தகுந்தபடி இலகுவான அல்லது கடினமான பத்தியம் வைத்துக் கொள்ளவேண்டும்.

171. நாக பற்பம் (வேறு)

தூய்மை செய்த நாகம் 2 பலம் (70 கிராம்), வேப்பிலைப் பழுப்பு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- இரும்புக் கரண்டியைச் சுத்தமாக விளக்கி அதில் நாகத்தையிட்டுக் கொல்லுலையில் வைத்து உருக்கி மேற்படி

வேப்பிலைப் பழுப்பைச் சிறுகச் சிறுகப் போட்டு இரும்புத் துடுப்பால் வறுத்துவர, சோளப் பொரிபோல நாகமானது பொரிந்து பற்பமாகிவிடும்.

அளவு:- 2 முதல் 3 குன்றிமணி எடை.

தீரும் நோய்கள்:- தேன் 1 வராகன் எடை (3½ கிராம்), இதில் மேற்படி பற்பத்தை முதல் நாள் மூன்று குன்றிமணி எடை, சேர்த்து காலையில் மாத்திரம் ஒருவேளை உட்கொள்ள வேண்டியது. இரண்டாம் நாள் காலையில் ஆறு குன்றிமணி எடை பற்பத்தை மேற்கண்டபடி கலந்து உட்கொள்ள வேண்டும். இவ்விதம் ஏழு நாட்கள் நாள்தோறும் மும்மூன்று குன்றி மணியாக உயர்த்தி மேற்படி தேனில் கலந்து உட்கொள்ள வேண்டியது. இவ்விதம் செய்து வந்தால், சூலைக்கட்டு, மேக வாய்வு, கைகால் பிடிப்பு முதலியவைகள் தீரும்.

பசுவின்பால் 4 பலம் (140 கிராம்), மேற்படி பற்பம் 4 குன்றிமணி எடை இவ்விரண்டையும் சேர்த்து பருகி வரவேண்டும். இவ்விதம் காலையில் மாத்திரம் ஒரு வேளையாக ஏழு நாள்கள் செய்துவரின், சீழ்பிரமியம், இரத்தப் பிரமியம் ஆகிய பல பிரமிய நோய்கள் தீரும்.

மருந்துணவு:- புளி, புகை, புணர்ச்சி, மீன், கருவாடு ஆகியவைகளை நீக்கவேண்டும்.

172. நாக பற்பம் (வேறு)

தூய்மை செய்த நாகம் 1 பலம் (35 கிராம்), துத்தி இலை 9 பலம் (315 கிராம்). நவாச்சாரம் 1½ பலம் (52½ கிராம்).

செய்முறை:- துத்தி இலையையும் நவாச்சாரத்தையும் தனித் தனி மூன்று பங்காகச் செய்து வைத்துக் கொள்ள வேண்டியது. நாகத்தை வாயகன்ற பெருத்த இரும்பு ஆலக்கரண்டியில் வைத்து உருக்கி, மேற்படி துத்தி இலையில் ஒரு பாகத்துடன் நவாச்சாரத்தின் ஒரு பாகத்தைச் சேர்த்து இடித்துப் பிழிந்த சாற்றை மேற்படி உருக்கு முகத்தில் விட்டு இரும்புத் துடுப்பால் துளாவி விடவேண்டும். விட்டசாறானது சுண்டி விட்டால் முன்போல் துத்தி இலையின் மற்றொரு பாகத்தையும் நவாச்சாரத்தின் மற்றொரு பாகத்தையும் சேர்த்திடித்துப் பிழிந்த சாற்றை முன்போல் கரண்டியில் விட்டு வறுக்க வேண்டும். இந்தச் சாறும் சுண்டின உடன் மூன்றாம் தடவையும் முன்போலவே செய்தால், நாகமானது சோளப் பொரி போல் பொரிந்து

, கரண்டி நிறைந்து போகும். ஆகையால் ஆரம்பத்திலேயே வாயகன்ற பெருத்த ஆல்க்கரண்டியில் வைத்து உருக்க வேண்டும்.

அளவு:- ¼ முதல் ½ வராகன் எடை.

தீரும் நோய்கள்:- முள்ளங்கிக் கிழங்குச்சாறு 3 வராகன் எடை (10½ கிராம்), இதில் மேற்படி பற்பத்தை அளவுப்படி சேர்த்து, ஏழு நட்கள் காலை, மாலை இரண்டு வேளையும் உபயோகித்து வந்தால் அட்டகுன்ம நோய்களும் தீரும்.

பசுவின் பால் 5 பலம் (175 கிராம்), மேற்படி மருந்து 4 குன்றி மணி எடை, இவ்விரண்டையும் சேர்த்து பருகச் செய்ய வேண்டும். இவ்விதம் காலை, மாலை இரண்டு வேளையும் பருகிவர இருபத்தோர் மேக வகைகளும் தீரும். சர்க்கரை 1 வராகன் எடை (3½ கிராம்), மேற்படி பறபம் 8 வராகன் எடை (28 கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து உட்கொண்டு வர, அண்டவாயு, அண்டவாதம் ஆகிய இவைகள் தீரும்.

மருந்துணவு:- இச்சாபத்தியம்.

173. நாகச் செந்தூரம்

தூய்மை செய்த நாகம் 1 பலம் (35 கிராம்), கருவேலம் பட்டை, கருவேலம் இலை இவை இரண்டும் சமமாக சேர்த்துக் கொள்ள வேண்டும். இவை பசுமையாகவும் இருக்க வேண்டும். அதாவது உலர்த்தாமல் பச்சையாகவே இருக்க வேண்டும்.

செய்முறை:- நாகத்தை இரும்புச் சட்டியில் வைத்து அடுப்பேற்றிக் காடாக்கினியாக எரித்து, நாகம் உருகினவுடன். முன் சித்தப்படுத்தின கருவேலன் பட்டை இலைத் தூள் 5 பலம் (175 கிராம்) எடுத்துப் போட்டு நாகத்தை மூடி வைக்க வேண்டும். போட்ட மருந்து எரிந்து போனவுடன் இரும்புக் கடப்பாறையால் கடைய வேண்டும். பிறகு முன் போட்டது போலவே முன் கருவேலம் பட்டை இலைத் தூளைப் போட்டு அழுத்தி மூடி வைக்க வேண்டும். அதுவும் எரிந்தவுடனே முன் போல் இரும்புக் கடப்பாறையால் கடைய வேண்டும். இவ்விதம் முன் கலவையைப் போட்டு தூள் எரிய எரிய கடைந்தும் அடிக்கடி அதைப் போட்டும் வர வேண்டும் இவ்விதம் 4 சாமம் வறுத்து வந்தால் நாகமானது செந்தூரமாகி விடும்.

அளவு:- 2 முதல் 3 குன்றிமணி எடை.

திரும் நோய்கள்:- தகுந்த துணைமருந்துகளிலிட, பவுத்திரங்கள், மேகநோய், மேகவாயு மேகசூலை ஆகியவைகள் தீரும்.

மருந்துணவு:- புளி, புகை, புணர்ச்சி ஆகியவைகளை நீக்க வேண்டும். இன்னும் சமயோசிதம்போல கடின பத்திய மாகவும் இலகு பத்தியமாகவும் வைத்துக் கொள்ள வேண்டும்.

174. நாக செந்தூரம் (வேறு)

தூய்மை செய்த நாகம் 5 பலம் (175 கிராம்), ஓமம் 5 பலம் (175 கிராம்), நாலாங்காய்ச்சல் வெடியுப்பு 3 பலம் (105 கிராம்), மஞ்சள் 1 பலம் (35 கிராம்), மேல் தோல் சீவின சுக்கு 1 பலம் (35 கிராம்).

செய்முறை:- வெடியுப்பு முதலிய 5 சரக்குகளையும் தனித்தனியே இடித்து ஒன்றாக சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும். மேற்படி நாக்தை தட்டையான சட்டியில் போட்டு அடுப்பேற்றி நாகம் உருகினபின். உருக்கு முகத்தில் மேற்படித் தூளை கொஞ்சம் சேர்த்து அது எரிந்த பக்குவத்தில் இரும்புக் கரண்டியால் துலாவ வேண்டும். இவ்விதம் அடிக்கடி மேற்படி தூளை தூவித் தூவி இரும்புக் கரண்டியால் துலாவித்துலாவி வறுக்க வேண்டும். இவ்விதம் நாக்கு சாமங்கள் வறுத்தால், இறைவனது அருளால் செந்தூரமாகி விடும். தீக்குறைவினால் அல்லது முறை பிசகினால் பூரண பக்குவமான செந்தூரமாகாவிட்டால், முன்சொன்ன 5 சரக்குகளையும் முன்னெடைப்படி தனித்தனியாக இடித்துத்தூள் செய்து, ஒன்றாய்க் கலந்து வைத்துக் கொண்டு முன் போல் தூவித் தூவி இன்னும் இரண்டு சாமம் வறுக்க, தப்பாமல் செந்தூரமாகிவிடும்.

அளவு:- 2 முதல் 4 குன்றிமணி எடை.

துணைமருந்தும், திரும்நோயும்:- தேன் 2 வராகன் எடை இதில் மேற்படி செந்தூரத்தை அளவுப்படி கலந்துட்கொள்ள வேண்டும். இவ்விதம் காலை, மாலை இரண்டு வேளையுமாக நோய் வலுவிற்குத் தகுந்தபடி அரை முதல் ஒரு மண்டலம் உபயோகித்து வர, சயம், ஈளை, மார்புவலி, கபப் பிரகோபம், பித்தப்பிரகோபம், சுக்கிலப் பிரமேகம், சதைவளர்ச்சி, குன்மம், சோம நோய், பவுத்திரம், உள்ளங்கை, கண், தலை ஆகிய இடங்களில் உண்டாகும் எரிச்சல் நோய் ஆகியவைகளெல்லாம் தீரும். மேற்கண்ட நோய்களில் தேனை மாத்திரம் முக்கியமான துணைமருந்தாகச் சொல்லி இருந்த போதிலும், அந்தந்த நோய்களுக்குத் தகுந்த துணை மருந்துகளில் மேற்படி

செந்தூரத்தை சேர்த்து உபயோகிக்க வேண்டியதென ஞாபகத்தில் வைக்க வேண்டியது.

ஆவாரைப் பஞ்சாங்கம் அதாவது, ஆவாரை வேர்ப்பட்டை ஆவாரை மரப்பட்டை, ஆவாரம்பூ, ஆவாரம் இலை, ஆவாரம் விதை இவ்வைந்தையும் தனித்தனியாக உலர்த்தி சமபாகமாகச் சேர்த்து ஒரு பெரும் பானையில் போட்டு, அதன் தூறில் பல சிறுத்துவாரமிட்டுப் பானைவாயை மூடி சீலைமண் செய்து உலர்த்திக் கொள்ள வேண்டும். பெருங்குழியொன்று தோண்டி அதன் நடுவில் சிறு பள்ளமொன்று செய்து அதற்குள் பீங்கான் பாத்திரத்தை வைத்து அதன் மேல் முன் சித்தப்படுத்தின பானையை வைத்து பீங்கான் வாய்க்கும் பானையடிப் பாகத்திற்கும் சீலைமண் செய்து பீங்கான் வாய்மட்டும் மண்ணைத்தள்ளிக் குழி நிறைய எருவடுக்கி நெருப்பிட்டு எரிந்து குளிர்ந்தாறினபின் எடுக்க, பீங்கான் பாத்திரத்தில் தயிலமிறங்கி இருக்கும். இதற்கு ஆவாரைப் பஞ்சாங்கக் குழித்தயிலமென்று பெயர். இந்தத் தயிலம் 1 வராகன் எடை, தேன் 1 வராகன் எடை (3½ கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி சேர்த்து உட்கொள்ளவேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையுமாக 20 நாள், 40 நாள் நோய் வலுவிற்குத் தகுந்தபடி உபயோகித்துவரின் பல வகை நீரிழிவுந் தீரும்.

மேற்படி ஆவாரைப் பஞ்சாங்கத்தூள் அதாவது மேற்கண்ட 5 வகைகளையும் தனித்தனியிடித்து துணியில் வடிகட்டி சமபாகமாக சேர்த்து வைத்துக் கொள்வதே ஆவாரைப் பஞ்சாங்கத் தூள், இந்த ஆவாரைப் பஞ்சாங்கத் தூள் 1 வராகன் எடை (3½ கிராம்), தேன் 3 வராகன் எடை (10½) இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்து உட்கொள்ளவேண்டும். இவ்விதம் காலை. மாலை இரண்டு வேளையுமாக இருபது நாள் நாற்பது நாள் உபயோகித்துவரின், வெகு மூத்திரநோய், மூத்திரக்கிரிச்சர நோய், எலும்புருக்கி நோய், உள்ளுருக்கி நோய் ஆகிய இவைகள் தீரும்.

கொடிவேலி வேர்ப்பட்டைத் தூள் ½ வராகன் எடை (1¾ கிராம்), தேன் 3 வராகன் எடை (10½ கிராம்), இவ்விரண்டையும் சேர்த்து மேற்படி செந்தூரத்தை அளவுப்படி கலந்துட்கொள்ள வேண்டும். இவ்விதம் காலை, மாலை, இரண்டுவேளையுமாக, அரை முதல் ஒரு மண்டலம் உபயோகித்துவரின், சத்தி குன்மம், சயம், எலிக்கடி ஆகியவைகள் தீரும்.

பிரண்டையைச் சிறு துண்டுகளாகத் துண்டித்து அதன் 4 பங்கு அளவு பசுவின் தயிரில் ஒரு இரவு ஊற வைத்து மறுநாள் தயிருடன் வெய்யிலில் உலர்த்த வேண்டும். ஈரம் இல்லாமல் நன்றாக உலர்ந்த பின்பு முன் போலவே முன் அளவு தயிரில் ஒரு இரவு ஊற வைத்து முன் போலவே வெய்யிலில் வைத்து உலர்த்த வேண்டும். மூன்றாம் தடவையும் முன்போல், முன் மாதிரி ஒரு இரவு ஊறவைத்து மறுநாள் முதல் காயவைத்து ஈரம் இல்லாமல் நன்றாக உலர்ந்த பின்பு இடித்துத் தூளாக்கி துணியில் வடிகட்டி வைத்துக் கொள்ள வேண்டும். இவ்விதம் பாகப்படுத்தப்பட்ட பிரண்டைத் தூள் 1 வராகன் எடை, பசுவின் நெய் 1 வராகன் எடை, இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்துட் கொள்ள வேண்டும். இவ்விதம் காலை, மாலை இரண்டு வேளையுமாகப் பத்துநாள் உபயோகித்தால் மூல நோய்கள் தீரும். நேய் நாள்பட்டதாய் இருந்தால் இடையில் 10 நாள் அல்லது, 15 நாள் விட்டு, விட்டு இரண்டு மூன்று முறை சாப்பிட்டால் சாத்தியமான மூலநோய் கடின சாத்தியமான மூலநோய் ஆகியவைகள் நாள்பட்டதாயினும் தீர்ந்து போகும்.

கோரோசனை 2 குன்றிமணி எடை, மேற்படி செந்தூரம் 2 குன்றிமணி எடை, தேன் 2 வராகன் எடை. இவற்றைச் சேர்த்து உட்கொள்ளவேண்டும். இவ்விதம் காலை, மாலை இரண்டுவேளையுமாக மூன்றுநாள் உபயோகிக்கின் பதினெட்டு வகை சுரமும் தீரும்.

அரிசித்திப்பிலியை வறுத்து இடித்துப் பொடித்து துணியில் வடிகட்டியத் தூள் ½ வராகன் எடை (1¾ கிராம்), தேன் ½ வராகன் எடை (1¾ கிராம்), இவ்விரண்டையும் சேர்த்து மேற்படி செந்தூரத்தை அளவுப்படி கலந்துட் கொள்ள வேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையுமாக 10 நாள் உபயோகித்துவரின், மூலக்கிராணி நோய் தீரும்.

சாதிக்காய், சாதிப்பத்திரி, லவங்கம், நற்சீரகம் இவற்றின் தனித்தனித் தூள் சமன் எடை. இந்த தூள் 1 வராகன் எடை, தேன் 2 வராகன் எடை. இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்து கொள்ள வேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையுமாக பத்து நாட்கள் பிரதி மாதமும் உபயோகித்துவரின், வீரியவிர்த்தி, தாதுவிர்த்தி, உடல் வலிமை, உடல் திடம் ஆகியவைகள் உண்டாகும்.

மருந்துணவு:- எந்தெந்த நோயில் எந்தெந்த உணவுப் பொருள்களை நீக்க வேண்டுமோ, அவைகளை நீக்க வேண்டியது அவசியம். இன்னும் உடல்நிலை, நாட்டின் வளப்பம் காலநிலை, ஆகியவைகளையும் நிதானித்துப் பத்தியபாவனைகளை ஏற்படுத்த வேண்டும். இவ்விதம் அரிய மருந்துகளின் பத்தியத்தை மருத்துவர்கள் தாம்தாமே சமயத்திற்கு ஏற்றவிதமாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது. சில சமயங்களில் புளி முதலியவைகளை நீக்கும்படி எழுதி இருந்த போதிலும் அவ்விதம் நீக்குவதினால் சிலருக்குப் பித்தாதிக்கம், தலை மயக்கம், கிறுகிறுப்பு, கக்கல் முதலியவைகள் உண்டாகின்றன. இவ்விதம் உண்டானால் மருந்தின் மீது இப்பழியைச் சுமத்த நேரிடுகிறது. உண்மையில் இவ்விதம் உண்டாவதற்குக் காரணம் மேற்கண்டபடி புளியை நீக்கினதேயாம். இவ்விதம் குணம் உடையவர்களுக்கு புளியை அறவே நீக்காமற் குறைந்த அளவாக உபயோகிக்க வேண்டியதாக இருக்கிறது. ஆகையால் ஒவ்வொரு மருந்துகளுக்கும் நேர்விரோதமான பண்டங்களை மாத்திரம், மருந்துணவு என்னும் தலைப்பில் எழுதி வருகின்றோம் ஆகையால் மருத்துவர்கள் நோயாளிகளின் உடல் நிலைக்கேற்ப சமயம் போல ஏற்படுத்திக் கொள்வதே முக்கியமான பத்தியமாம்.

175. செந்தூரத் திராவகம்

அன்னபேதி 85 பலம், வெடியுப்பு 45 பலம், படிக்காரம் 20 பலம், பூநீறு 10 பலம், கெந்தகம் 10 பலம், கறியுப்பு 5 பலம்.

செய்முறை:- மேற்படி சரக்குகள் ஒவ்வொன்றையும் தனித் தனியாகப் பொடித்துப் பிறகு எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்துப் பீங்கான் பாத்திரத்தில் வைத்து இரவில் பனியில் வைக்க வேண்டும். காலையில் மூன்று பங்காகச் செய்து ஒரு பங்கை வாலையிலிட்டுச் சிறு தீயாயெரித்துப் பாகப்படி திராவகம் இறக்கிக் கொள்ளவும் (திராவகம் இறக்கும் முறைகள் நமது இரசவாத சிந்தாமணி இரண்டாம் பாகத்தில் வகை விபரமாக சொல்லி இருக்கின்றோம். ஆகையால் விருப்பமானவர்கள் தயவுடன் அதனைப் பார்த்துக் கொள்ளலாம்.) இந்தத் திராவகத்தை முன் பிரித்து வைத்திருக்கிற மறுபங்கில் சேர்த்து வாலையிலிட்டு முன்போல் திராவகம் இறக்கிக் கொள்ளவும். இவ்விதம் இறக்கின திராவகத்தை மீதியாயிருக்கிற பங்கில் சேர்த்து முன்போல் வாலையிலிட்டு முன் போல் திராவகம் இறக்கிக்கொள்ள வேண்டும்.

இந்தத் திராவகத்தைக் கற்காரக்குள்ள புட்டியில் விட்டுப் பத்திரப் படுத்தக் கொள்ள வேண்டும்.

குறிப்பு:- சரக்கை வாலையிலிட்டு திராவகம் இறக்கும் போது அடுப்பை மெதுவாக எரித்துவர வேண்டும். தீயானது மிதத்திற்கு மிஞ்சினால் தோண்டி வெடித்து மருந்து சேதமாக ஏதுவாகும். திராவகம் முடிவாக இறங்காமல் நின்றுவிட்டால் உடனே தீயை நிறுத்திவிட வேண்டும்: அப்படி நிறுத்தாவிட்டாலும் தோண்டியானது வெடித்துப் போகும். இன்னும் ஒரு தடவை திராவக இறக்கின தோண்டியை மறுதடவை உபயோகிக்கலாகாது. ஆகையால் இந்தச் செய்முறைகளில் அதிக விழிப்பாகவும் அதிக எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டியது.

175. நாகச் செந்தூரம் (திராவக முறை)

தூய்மை செய்த நாகம் 1 பலம், தூய்மை செய்த ரசம் 1 பலம், இவ்விரண்டையும் விழிப்புடன் தொந்தித்துக் கொள்ள வேண்டும். தூய்மை செய்த தாளகம், தூய்மை செய்த கெந்தகம், நவாச்சாரம் இவை வகைக்கு 1 ப்லம் தூய்மை செய்த வீரம் 3 பலம் மேற்படி செந்தூரத் திராவகம் செல்லத்தக்க அளவு.

செய்முறை:- மேற்கண்ட சரக்குகள் ஒவ்வொன்றையும் தனித்தனியாகப் பொடித்து எல்லாவற்றையும் ஒன்றாக சேர்த்துக் கொள்ள வேண்டும். முன் தொந்தித்த நாகரசத்தைக் கல்வத்திலிட்டு மற்ற மருந்துகளையும் கல்வத்திலிட்டு மேற்படி திராவகத்தைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமம் அரைத்து, வில்லை தட்டி உலர்த்தி ஈரமில்லாமல் காய்ந்த பின்புபொடித்து, ஏழு சீலைமண் செய்யப்பட்ட புட்டியில் போட்டு, கல்காரக்கிட்டு, ஒரு பானையில் நான்கு விரல் கனம் மணலைப் பரப்பி அதன்மேல் முன் சித்தப்படுத்தின புட்டியை வைத்து புட்டி மறையும்படியாக மணலைக் கொட்டி அடுப்பின் மீதேற்றி நான்கு சாமம் எரித்து ஒரு நாள் ஆறவிட்டு மறுநாள் எடுக்க, சொர்ணம் போன்ற செந்தூரமாகி இருக்கும்.

இவ்விதம் செய்ய இயலாதவர்கள் முன் சித்தப்படுத்தின வில்லையை ஓட்டிலிட்டு மேலோடு மூடி ஏழு சீலைமண் செய்து நன்றாக உலர்த்திக் கவசத்தின் எடைக்கு 7 பங்கெடை எருவில் புடமிட்டு, ஆறின பின் எடுக்கச் சொர்ணம் போன்ற செந்தூரமாகி இருக்கும். தீயின் குறைவினால் ஒருவேளை பூரண பக்குவமான

செந்தூரமாகாதிருந்தால் முன் திராவகத்தையே விட்டு இரண்டொரு சாமம் அரைத்து வில்லை செய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி 5 சீலைமண் செய்துலர்த்தி முன் போல் புடமிட சொர்ணம் போன்ற செந்தூரமாகி இருக்கும்.

அளவு:- 1 முதல் 2 குன்றிமணி எடை.

தீரும் நோய்கள்:- தகுந்த துணைமருந்துகளிலிட, மேகப் படைகள், குட்டங்கள், கறுப்பு மேகங்கள் முதலிய எல்லாவகை நோய்களும் தீரும். இன்னும் இது பல நோய்களில் உபயோகப் படுகின்றபடியால் அனுபவசாலிகள் தம் தம் விருப்பப்படி உபயோகித்துக் கொள்வார்களாக.

மருந்துணவு:- நோய்க்குத் தகுந்த விதமாக இலகு பத்திய மாகவும் கடின பத்தியமாகவும் வைக்க வேண்டியது.

குறிப்பு:- மேற்கண்ட விதமாக வெள்வங்கம், கருவங்கம் ஆகிய இவைகளையும் செந்தூரித்துக் கொள்ளலாம்.

வீர மெழுகு

மேற்படி திராவகத்தில் தேவையான அளவு, துருசுக் கட்டிகளை நனைத்துக் கடும் வெய்யிலில் வைத்து வந்தால், அக்கட்டிகள் வெளுத்துப்போம், இவை முற்றும் தூய்மையாக வெளுத்துப் போகிறவயையில் வெய்யிலில் வைத்து வரவேண்டும். இந்தத் துருசு வெள்ளைக்குச் சமன் எடை நவச்சாரத்தைச் சேர்த்து அரைத்துப் பனியில் வைக்க செயநீராகும். (இந்த நவச்சாரத்தைக் கட்டிச் சேர்த்தால் சிறப்பானகுணம் உண்டாகும். கூடுமானவர்கள் அவ்விதம் கட்டிச் சேர்த்துக் கொள்ளலாம்.) மேற்படி செயநீரில் வீரக்கட்டியை நனைத்து விளக்கெண்ணெய் விளக்கில் வாட்டிவர மெழுகாகும். இந்த மெழுகானது வைத்தியம், வாதம் என்னும் இருவகைக்குமாகும்.

176. திரிவங்க பற்பம்

தூய்மை செய்த வெள்வங்கம், தூய்மை செய்த கருவங்கம், தூய்மை செய்த நாகம் மூன்றும் வகை ஒன்றுக்கு 1 பலம், சிறுபீளை வேர் செல்லத்தக்க அளவு.

செய்முறை:- மேற்கண்ட மூன்றையும் சட்டியில் இட்டு உருக்கி மேற்படி சிறுபீளைவேர்த் தூளை கொஞ்சம் தூவி இரும்புக் கடப்பாறையால் கடையவேண்டும். போட்ட தூள் எரிந்தவுடன்

முன்போல் மேற்படி தூளைத் தூவிக் கடைய வேண்டும். இவ்விதம் அடிக்கடி தூளைத் தூவி அடிக்கடி கடைந்து வந்தால, இரண்டு அல்லது மூன்று சாமத்துக்குள் மேற்படி திரிவங்கமும் பற்பமாகிவிடும். தீயின் வேறுபாட்டினால் அல்லது மேற்படி வேரின் காரத்தினால் மேற்கண்ட காலத்திற்குள் பற்பமாகாதிருந்தால் முடிவாகப் பற்பமாகிற வரையல் மேற்படி தூளைத் தூவித்தூவி கடைந்து வரவேண்டியது. இந்த பற்பத்தில் ஏதேனும் கசடிருந்தால் செம்முள்ளி இலைச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டில் இட்டு மேலோடுமூடி ஐந்து சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் ஏழுபங்கு எடை எருவில் புடமிட்டு, ஆறினபின் எடுத்துக் கொள்ள உயர்ந்த பற்பமாக இருக்கும்.

அளவு:- 1 முதல் 2 குன்றிமணி எடை.

தீரும் நோய்கள்:- தகுந்த துணைமருந்துகளில் உபயோகித்து வந்தால், மேக நோய், நீர் நோய், குன்மநோய், காச நோய் ஆகியவைகள் தீரும்.

மருந்துணவு:- நோய்க்குத் தகுந்தபடி ஆகாரங்களை ஏற்படுத்திச் சமயோசிதம்போல் பத்தியம் வைத்துக் கொள்ள வேண்டும்.

177. திரிவங்க பற்பம் (வேறு)

தூய்மை செய்த வெள்வங்கம், கருவங்கம், நாகம் இவை வகைக்குப் பலம் ஒன்று, செம்முள்ளிச் சமூலம் செல்லத்தக்க அளவு.

செய்முறை:- மேற்படி மூன்று வங்கங்களையும் புதுமண் சட்டியில போட்டு அடுப்பேற்றி எரிக்க வேண்டியது. மேற்படி செம்முள்ளிச் சமூலத்தைப் பஞ்சுபோல் நசுக்கி வைத்துக் கொண்டு அதில் கொஞ்சம் எடுத்து மேற்படி சட்டியில் வங்கங்கள் உருகின உடனே உருக்குமுகத்தில் கொடுத்து இரும்புத் துடுப்பால் வறுக்க வேண்டியது. போட்ட மூலிகை எரிந்து சாம்பலான உடன் முன்போலவே முன் மூலிகையில் கொஞ்சம் எடுத்துப் போட்டு முன்போலவே வறுக்கவேண்டும். இவ்விதம் தடவைக்குத் தடவை மூலிகையைப் போட்டு மேற்கண்டபடி நான்கு சாமம் வறுக்க, திரிவங்கமானது பற்பமாய் இருக்கும். இந்தப் பற்பத்தை கல்வத்தில் இட்டு, மேற்படி செம்முள்ளிச் சமூலச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு இரண்டு சாமம் அரைத்து வில்லை செய்துலர்த்தி, ஓட்டில் இட்டு மேலோடு மூடி ஐந்து

சீலைமண் செய்து உலர்த்தி, கவசத்தின் எட்டுப் பங்கு எடை எருவில் புடமிட்டு ஆறின பின் எடுக்க வேண்டும்.

அளவு:- 2 முதல் 4 குன்றிமணி எடை.

தீரும் நோய்கள்:- தகுந்த துணை மருந்துகளிலிட, எல்லா வகை மேகநோய்கள், குன்ம நோய்கள், காசநோய்கள் ஆகியவைகள் தீரும்.

மருந்துணவு:- நோய்களுக்குத் தகுந்தது போலவும் உடல் நிலைமைக்குத் தகுந்தது போலவும் இன்னின்ன உணவுப் பொருள்கள் தகும் தகாதென மருத்துவர்கள் ஏற்படுத்த வேண்டியதே பத்தியம்.

178. வங்க தங்க பற்பம்

தூய்மை செய்த கருவங்கம் 1 வராகன் எடை, நாகம் 3/4 வராகன் எடை, தங்கம் 4 குன்றிமணி எடை, வெள்ளி 4 குன்றி மணி எடை, கீழாநெல்லி வேர் கைப்பிடிக் கொண்டது. மூக்குரட்டை வேர் அரை கைப்பிடிக் கொண்டது.

செய்முறை:- தங்கத்தையும் வெள்ளியையும் சேர்த்துக் குகையிலிட்டு உருக்கி, இவ்விரண்டும் உருகினவுடனே, அதில் கருவங்கத்தைச் சேர்க்க வேண்டும். இவற்றைக் கோலாடி, துத்தநாகத்தைப் போட்டுருக்கி, எடுத்து ஆற வைத்து, ஆறின பின் அதிலுள்ளதை எடுத்துக் கொள்ள வேண்டும்.

பிறகு, ஓர் இரும்புக் கரண்டியைச் சுத்தமாக வெள்ளையாகும்படி நன்றாக தேய்த்துக் கழுவி தூய்மை செய்து முன் சித்தப்படுத்தின மருந்தை அதில் வைத்துக் கொல்லுலையில் வைத்துருக்கி, உருகினவுடன் கீழாநெல்லி வேர்க் கற்றையால் இரண்டு நாழிகை கிடைய வேண்டும். இதில் பிறகு மூக்குரட்டை வேர்க்கற்றையால் ஒரு நாழிகை மேற்கண்ட விதமாக வறுக்க வேண்டும். இவ்விதம் செய்தால் மேற்கண்டவைகள் பற்பமாகி விடும்.

அளவு:- 1 முதல் 3 குன்றிமணி எடை.

தீரும் நோய்கள்:- தகுந்த துணை மருந்துகளில் சேர்த்துக் காலை, மாலை இரண்டு வேளையுமாக ஏழு நாள்கள் உபயோகித்து வந்தால், வெள்ளைப் பிரமியம், சீழ்ப்பிரமியம், இரத்தப் பிரமியம், நீரெரிச்சல், நீர்க்கடுப்பு, மர்மத்தானங்கள், நாபிக்கமலம் ஆகிய இடங்களிலுள்ள அழலை சுவையின்மை மூலநோய், மூலவாயு, மலப்போக்கு இருமல் ஆகியவை தீரும். பசி சக்தி அதிகமாகும். தாது வலிமை உண்டாகும்.

தேன் 1 வராகன் எடை, மேற்படி பற்பம் 2 குன்றிமணி எடை, லிங்க செந்தூரம் 2 குன்றிமணி எடை இவற்றைச் சேர்த்து உபயோகித்துவரின் எல்லா வகை வாயுக்களும் தீரும்

179. திரிவங்கச் செந்தூரம்

தூய்மை செய்த வெள்வங்கம், கருவங்கம், நாகம் இவை வகைக்கு 2 வராகன் எடை, வெங்கலநிமிளை 1 வராகன் எடை, (அ) நெல்லிக்காய்க் கெந்தகம், வெடியுப்பு, கறியுப்பு, வகைக்கு ½ பலம்.

செய்முறை:- வெங்கல நிமிளையைப் பொடித்துத் தனியே வைத்துக் கொள்ள வேண்டும். (அ) விலுள்ள மூன்று சரக்கையும் தனித்தனியாகப் பொடித்து நன்றாக சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும் (இதனை நாம் இங்கு உப்புச் சூரணமெனச் சொல்வோம். ஒரு மண் சட்டியில் மூன்று வங்கங்களையும் போட்டு உருக்கி, உருக்கினவுடன் நிமிளைப் பொடியில் கொஞ்சமெடுத்துத் தூவி, அதனமேல் (அ)விலுள்ள உப்புச் சூரணத்தில் கொஞ்சமெடுத்துத் தூவி இரும்புக் கரண்டியால் துழாவி வறுக்க வேண்டும். இவ்விதம் அடிக்கடி நிமிளைத் தூளையும் உப்புத் தூளையும் முறையே போட்டுத் துளாவி வந்தால், திரிவங்கமும் பற்பமாகி விடும். அந்தப் பற்பத்தை எடுத்து ஒரு அண்டோட்டுக்குள் போட்டு, அதன்மேலும் அண்டோட்டால் மூடி, ஐந்து சீலைமண் செய்துலர்த்தி, ஐம்பது பலம் வராட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கச் செந்தூரமாயிருக்கும்.

அளவு:- 1 முதல் 3 குன்றிமணி எடை.

தீரும் நோய்கள்:- தகுந்த அனுபானங்களிலிட இருபத்தோர் வகை மேகநோய், இருபத்தோர் வகை நீரிழிவு நோய், அறுவகை கிராணி நோய், ஒன்பது வகை மூலநோய், எட்டு வகை குன்ம நோய், சயம், காசம், இருமல் முதலிய பல நோய்களும் தீரும்.

மருந்துணவு:- நோய்க்குத் தகுந்த விதமாகவும் உடல் நிலை உடல்பலம் ஆகியவைகளுக்குத் தகுந்ததுபோல் ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது.

180. வங்க மாத்திரை

தூய்மை செய்த காரீயம் 1 பலம், சாதிலிங்கம் 5 வராகன் எடை, மனோசீலை 5 வராகனெடை, இரசம் 4 வராகன் எடை, மோர் செல்லத்தக்க அளவு.

செய்முறை:- முன்னர் காரீயத்தையும், இரசத்தையும், தொந்தித்துக் கல்வத்தில் வைத்துப் பொடித்து, மற்றிரண்டு சரக்குகளையுந் தனித்தனியாகப் பொடித்து, அதனுடன்சேர்த்து மோரைச் சிறுகச் சிறுக விட்டு, நான்கு சாமமரைத்துக் குன்றி மணி அளவுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு:- 1 மாத்திரை.

தீரும் நோய்கள்:- மேற்படி மாத்திரை ஒன்றை இழைத்து ஐந்து பலம் மோரில் கரைத்துப் பருகச் செய்ய வேண்டும். இவ்விதம் காலை, மாலை இரண்டு வேளையுமாக ஒரு மண்டலம் உபயோகித்துவரின், மதுமேகம் எலும்புருக்கி நோய் நீரிழிவு இருபத்தொன்று, பிரமியம் முதலிய பல நோய்கள் தீரும்.

மருந்துணவு:- புளி, புகை, புணர்ச்சி ஆகியவைகள் அறவே ஆகாது. இன்னும் சமயோசிதம்போல உடல் நிலைமைக்கு ஒவ்வாத பதார்த்தங்களையும் நீக்கி வைக்க வேண்டியது.

181. திரிவங்க மாத்திரை

(அ) தூய்மை செய்த வெள்வங்கம் 1 பலம், கருவங்கம் 1 பலம் நாகம் 1 பலம், தூய்மை செய்த கிஷ்ணப்பிரேக நவநீதம் 3 பலம்.

(ஆ) தூய்மை செய்த இரசம் 1½ பலம், தூய்மை செய்த கெந்தகம் 3 பலம், வேளைச்சாறு செல்லத்தக்க அளவு. (இ) மறுபடியும் கெந்தகம் செல்லத்தக்க அளவு. கைாந்தகரைச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- மூன்று வங்கங்களையும் ஒன்றாக உருக்கி எடுத்து கிருஷ்ணாப்பிரரேகத்தையும் சேர்த்து நொறுக்கித்தூள் வைத்துக் கொள்ள வேண்டும் (ஆ) விலுள்ள கெந்தகத்தையும் இரசத்தையும் சேர்த்தரைத்து நன்றாகக் கறுக்கிறவரையில் அரைத்து எடுத்து முன் சித்தப்படுத்தி இருப்பதுடன் சேர்த்து வேளைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமம் அரைத்து உலர்த்திப் பொடித்து குகையில் அடைத்து, குகை வாய்க்குச் சில்லிட்டு மூன்று சீலைமண் செய்து உலர்த்தி ஒரு பானையில் நாலங்குல மணல் போட்டு அதன் மத்தியிலிந்தக் குகையை வைத்துக் கவசத்தின் மீது பானை நிறைய மணலைக் கொட்டி நாலு சாமம் எரித்து ஆறவிட்டு எடுத்துக் கொள்ளவும். இவ்விதம் எடுத்த மருந்தின் எடைக்குச் சமன் எடை

(இ) யிலுள்ள நெல்லிக்காய் கெந்தகத்தைச் சேர்த்துக் கையாந்தகரைச சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாமம் அரைத்து வில்லை தட்டி உலர்த்தி ஒட்டில் வைத்து மேலோடுமூடி ஏழு சீலைமலை செய்து உலர்த்திக் கவசத்தின் எடைக்கு ஆறு பங்கு எடை எருவில் புடமிடவும். இந்த மருந்தை எடுத்துக் கல்வத்திலிட்டு மேலோடு மூடி முன்போல் கையாந்தகரைச் சாற்றை சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாமம் அரைத்து வில்லைசெய்து உலர்த்தி ஒட்டில் இட்டு மேலோடு மூடி முன்போல் சீலைமண் செய்து உலர்த்தி முன்போல் புடமிடவும். இவ்விதம் மடக்கி மடக்கி மருந்தானது சிவந்து செந்தூரமாகிற வரையில் மேற்படி சாற்றால் ஒவ்வொரு சாமம் அரைத்து புடமிட்டு வர வேண்டியது. நன்றாகச் செந்தூரமான பின் அதனிறையில் பாதிப் பங்கு எடை தூய்மை செய்த லிங்கத்தைச் சேர்த்து முலைப் பாலைச் சிறுகச் சிறுகவிட்டு சாமம் அரைத்துக் குன்றிமணி அளவுள்ள மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும்..

அளவு:- ¼ முதல் 1 மாத்திரை.

துணைமருந்தும் தீரும் நோய்களும்:- தேன் 1 வராகன் எடை இதில் மேற்படி மாத்திரையை இழைத்து உட்கொள்ள வேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையுமாக ஒரு மண்டலமுண்டு வந்தால் எல்லா வகை மேக நோய்களும் தீரும்.

கலியாண முறுக்கிலைச் சாறு 1 வராகன் எடை. தேன் 1 வராகன் எடை இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட மாத்திரையை இழைத்து, மேற்கண்ட விதமாக உட்கொண்டுவரின், கற்கம் போல் இறங்குகிற நீர் நோய் தீரும்.

பொன்னாங்காணிச் சாறு 1½ வராகன் எடை, தேன் 1 வராகன் எடை இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட மாத்திரையை கலந்து மேற்கண்ட விதமாக உட்கொண்டுவரின் முகமலர்ந்து வருகிற நீர்நோய் தீரும்.

பசுவின் கோமியம் 2 வராகன் எடை, தேன் 2 வராகன் எடை இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட மாத்திரையை கலந்து மேற்கண்ட விதமாக உபயோகித்துவரின், இரத்தமாய் வருகிற நீர்நோய் தீரும்.

நீர்முள்ளி விதைத் தூள் 1 வராகன் எடை, நல்லெண்ணெய் 2 வராகன் எடை, தேன் 3 வராகன் எடை இம் மூன்றையும் சேர்த்து

மேற்கண்ட மாத்திரையைச் சேர்த்து மேற்கண்ட விதமாக உபயோகித்துவரின், வெகு மூத்திர நோய், நீர்நோய் ஆகியவைகள் தீரும்.

நீர்முள்ளி விதையின் தூள் 1 பலம் கருங்குறுவை அரிசிமாவு 2 பலம். இவ்விரண்டையும் சேர்த்துக் களிக்கிண்டி மேற்படி மாத்திரையை அதில் சேர்த்து மேற்கண்ட விதமாக உபயோகித்துவரின் மூத்திரக்கிரிச்சிர நோய் தீரும்.

எருமை அறுகை வெய்யிலில் உலர்த்தி இடித்தத் தூள் 1 வராகன் எடை, தேன் 1 வராகன் எடை. இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட மாத்திரையைக் கலந்து மேற்கண்ட விதமாக உபயோகித்துவரின் மாக்கரைத்ததுப் போல் இறங்குகிற நீர் நோய் தீரும்.

சிறுகீரை 5 பலம். எள் புண்ணாக்கு 2½ பலம் இவ்விரண்டையும் வேக வைத்துக் கடைந்து மேற்படி மாத்திரையைத் தேனில் சேர்த்து அதன் மேற் அதனைச் சாப்பிட்டு வர, மஞ்சள் நிறமாய் இறங்குகிற நீர்நோய், கள்ளுப்போல் இறங்குகிற நீர் நோய், சீழ், இரத்தம் ஆகியவைகள் கலந்து வருகிற நீர்நோய் முதலிய பல நோய்கள் தீரும்.

புண்ணாக்குக் கீரை, நல்லெண்ணெய் இரண்டையும் சேர்த்து வறுத்து, தேனில் மேற்படி மாத்திரையைச சேர்த்துண்டு, அதன்மேல் சாப்பிட்டு மேற்கண்ட விதமாகச் செய்து வரின், மதுமேக நோய் தீரும்.

மஞ்சள் கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லி முள்ளி, கோரைக்கிழங்கு, மஞ்சள், உலர்த்தின் தென்னம்பாளை, உலர்த்தின முறுககிலை, கடலழிஞ்சப்பட்டை இவை வகைக்கு 1¼ வராகன் எடை, இதில் ஒருபடி. நீரைவிட்டு எட்டில் ஒரு பாகமாகக் காய்ச்சி அதில் மேற்படி மாத்திரையைக் கலந்து மேற்கண்டவிதமாக உபயோகித்துவரின், வழுவழுத்து இறங்குகிற நீர், சுண்ணாம்பைக் கரைத்தது போல் இறங்குகிற நீர் நொங்கு போல் விழுகிற மகா மேகமாகிய இவைகளெல்லாம் தீரும்.

கடுக்காய்த்தோல் 3-1/8 வராகன் எடை, கடலழிஞ்சிப்பட்டை 2½ வராகன் எடை, மருள்முள்ளிவேர்ப்பட்டை, அசுவகெந்தி இவை வகைக்கு 1¼ வராகன் எடை. இவற்றில் ஒருபடி நீரை விட்டு எட்டில் ஒன்றாய்க் காய்ச்சி வடிகட்டின நீரில் இரண்டு வராகன் எடை அபினியைச் சேர்த்துமேற்கண்ட மாத்திரையை கலந்து

மேற்கண்டவிதமாக உபயோகித்துவரின், நீர்க்கடுப்பு, நீர் எரிவு, நீர்ச்சிக்கல், நீலவண்ண நீர், மஞ்சள் வண்ணம் போன்ற நீர் ஆகிய நோய்கள் தீரும்.

குறுவை அரிசிமா, நீர்வள்ளி இலை இரண்டையும் சமபாகமாக இடித்து அதில் மேற்படி மாத்திரை ஒன்றைப் பொடித்து வைத்துக் களிக்கிண்டி மேற்கண்டவாறு உபயோகித்துவரின் மூத்திரக்கிரிச்சரம், வெகு மூத்திரம், மூத்திர அடைப்பு, முன்னர் சீழ் விழுந்து பிறகு நீரிறங்குகிற நோய் ஆகிய அனேக நோய்கள் தீரும்.

இது நீர்சம்பந்தமான அநேக நோய்களுக்கு உபயோகப் படுகிறது. சுருங்கச் சொல்லில் தகுந்த துணைமருந்துகளில் கொடுத்தால், இருபத்தோர் வகை நீரிழிவு நோய்களும், இருபத்தோர் வகை பிரமிய நோய்களும் தீரும்.

மருந்துணவு:- நோய்வலிமை, உடல் வலிமை, உடல் நிலைமை, ஆகியவைகளுக்குத் தகுந்ததுபோல் பத்தியத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது.

குறிப்பு:- இந்த முறையானது அதிக அருமையானவை களிலொன்றும், பரம ரகசியமாய் வைக்கத் தகுந்தவைகளி லொன்றுமாம், இந்தச் செந்தூரத்துடன் இன்னும் தகுந்த மருந்துகளைச் சேர்த்து உபயோகிப்பதனாலும் நமது "சரபேந்திர மேகநிவாரணி போதினி" யில் சொல்லப்பட்டிருக்கிற குடிநீர், பிட்டு, ரொட்டி முதலிய பலவகைகளுடன் இந்தத் திரிவங்க மாத்திரையை உபயோகித்துவந்தால் அங்குச் சொல்லியிருக்கிறபடி அந்தந்த நாட்கணக்குப் பிரகாரம் மகாகடின நோயான மதுமேக நோய் தீரும், அந்த நூலில் சொல்லப்பட்டிருக்கிறவைகளெல்லாம் இந்த மாத்திரைக்கு அனுபானமென்பதில் சந்தேகமில்லை. இந்த மாத்திரையை அங்குச் சொல்லாமல் இதனைத் தனியே கையிருப்பாக வைத்திருப்பது நமது முன்னோர்களின் பரம்பரைத் தொழில்

வெள்ளித் தூய்மை

(1) பற்ப முதலியவைகளுக்கு வேண்டிய வெள்ளியானது ஒடித்தாலும், காய்ச்சினாலும் வெண்ணிறமாகவும், ஊட்ட முள்ளதாகவும் நைப்புள்ளதாகவும் அடித்தால் ஒடியாமலும் இருக்கவேண்டும்.

(அ) வெள்ளியைத் தகடடித்து, கரி நெருப்பில் பழுக்கக் காய்ச்சி, காடியில் துவைக்க வேண்டும். நன்றாய்க் குளிர ஆறின பின் முன்போல பழுக்கக் காய்ச்சி, முன் மாதிரியே துவைக்க வேண்டியது. ஒரு தடவை துவைத்த திரவத்தை ஊற்றிவிட்டு மறுபடி புதிதாய் திரவம் வார்த்துக் கொண்டு துவைக்க வேண்டியது. தகடானது நன்றாய் முழுகும்படியும் திரவம் இருக்க வேண்டும். மேற்கண்ட காடியில் 7 தடவை நல்லெண்ணெய், புளித்த மோர், கொள்ளை வேகவைத்த குடிநீர், கோமூத்திரம் ஆகிய ஒவ்வொன்றிலும் மேற்கண்டபடி எவ்வேழு தடவைகள் காய்ச்சித் துவைக்கத் தூய்மையாகும்.

(ஆ) ஒரு ரூபாய் எடை வெள்ளிக்கு முக்கால் வராகன் எடை கருவங்கம், ¾ வராகன் எடை வெண்காரம் என்னும் விகிதம் வெள்ளியை உருக்கிச் சேர்த்து வங்கம் போக ஊதி யெடுக்கத் தூய்மையாகும்.

185. வெள்ளி பற்பம்

தூய்மை செய்த வெள்ளி 3¼ வராகன் எடை. இதனை மெல்லிய தகடாய் அடித்துக் கொள்ளவேண்டும். தூய்மை செய்த நெல்லிக்காய்க் கெந்தகம், பொன்னிமிளை (இது அகப்பட்டால் உத்தமம்.) அல்லது காகநிமிளை இவ்விரண்டையும் வகைக்கு 3¼ வராகன் எடை, எருக்கம் பால் செல்லத்தக்க அளவு.

அளவு:- 1 முதல் 2 குன்றிமணி எடை.

செய்முறை:- கெந்தகத்தையும் பொன்னிமிளையையும் கல்வத்திலிட்டுப் பொடித்து எருக்கம் பாலைச் சிறுகச் சிறுக விட்டு 4 சாமம் அரைத்து முன் தகட்டின்மீது எங்கும் சமமமாகப் பூசி உலர்த்தி ஒட்டிலிட்டு மேலோடு மூடி 5 சீலைமண் செய்து உலர்த்தி கசசதுர புடமிட்டு ஆறினபின் எடுக்க வெள்ளியானது பற்பமாகி இருக்கும்.

துணைமருந்தும் தீரும் நோயும்:- வெண்தாமரைப் பூவை இடித்துப் பிழிந்து வடிகட்டின சாறு 3¼ வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து முன் பற்பத்தை அளவுப்படி சேர்த்து உட்கொள்ளவும். இவ்விதம் காலை, மாலை இரண்டு வேளையும் சாபபிட்டு வர இருதயம், மூளை முதலிய இராச கருவிகள் பலப்படும். சுவாசநோய் தீரும். சுவாசாசாயம் என்னும் நுரையீரலின் எல்லா நோய்களையும் நீக்கும்.

(2) வெள்ளாட்டு நெய் 3¼ வராகன் எடை, நல்ல தேன் 3¼ வராகன் எடை இவ்விரண்டையும் மர்த்தித்து முன்பற்பத்தை

அளவுப்படி சேர்த்து இருவேளையும் உட்கொண்டுவரின், சயநோய், அத்திசுரம், புராண சுரம் ஆகியவை தீரும்.

குறிப்பு:- வெள்ளாட்டு வெண்ணெயும் தேனையும் கலந்து மேற்கண்டபடி சாப்பிட மேற்கண்ட குணங்களே. வெள்ளாட்டுச் சாதியில் கொடியாடு அல்லது காட்டாடு என ஒரு வகை உண்டு. இது காட்டிலுள்ள எல்லா வகைத் தழைகள் செடி கொடி முதலிய எல்லாவற்றையும் தின்னும், இவ்வகை ஆடுகள் அரிதாய்க் கிடைக்கக் கூடுமென்பதால், இதன் நெய் குதிரைக் கொம்புதான். ஆகையால் இவ்வகையாட்டின் இறைச்சி பங்கிற்கு 16 பங்கு நீரைவிட்டுக் காய்ச்சி எட்டிலொரு பாகமாய்ச் சுண்ட வைத்துச் சூட்டுடனே கம்பிளியில் வடிகட்டிப் பிறகு மறுபாத்திரத்தில் விட்டு. குளிர்ந்த இடத்தில், வைத்து விட்டால் நெய்யைப் போல இறுகியிருக்கும். அதை எடுத்து வைத்துக் கொண்டு வெள்ளாட்டு நெய்க்குப் பதிலாக உபயோகிக்கின் சிறப்பான குணமாகும்.

(3) ஆடாதோடைக் குடிநீர் சுண்டற் தூள் 1 வராகன் எடை, தேன் 3/4 வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து மேற்படி பற்பத்தை மேற்கண்ட அளவுப்படி சாப்பிட்டு வர, கபாதிக்க இருமல், கபபித்த இருமல் ஆகியவை தீரும்.

ஆடாதோடைச் சுண்டற் தூள்:- ஆடாதோடா இலையை இடித்துப் பிழிந்த தனிரசத்தை ஒரு பாத்திரத்தில் விட்டு நீராவி யந்திரத்தில் வைத்துச் சுண்டக் காய்ச்சித் தூளாய்ச் செய்து கொள்வதேயாம்.

இக்காலத்தில் எத்தப் பாகமும் சுலபமாகவும் கடினமில்லாமலும் இருப்பதுடன், கோடி நோய்கள் தீரக்கூடியதாக இருக்க வேண்டுமென்னும் சோம்பேறித்தனமுடையவர்கள் மேற்கண்டவிதமாக எங்ஙனம் செய்வார்கள். ஆகையால், அத்தகையினர்கள் ஆடாதோடை ரசத்தை அடுப்பின் மீது வைத்துக் காய்ச்சி சுண்டிக் குழம்பான பதத்திலிறக்கி ஆற வைத்து உபயோகித்துக் கொள்ளலாம்.

(4) செம்பருத்திப் பூவை இடித்துப் பிழிந்த தனிச்சாற்றை ஒரு பாத்திரத்தில் இட்டுக் காய்ச்சிக் குழம்புப் பதமான சமயத்தில் இறக்கி ஆற வைத்துக் கொள்ள வேண்டும். இக்குழம்பிற்குச் செங்குழம்பெனப் பெயர். இக்குழம்பு 3/4 வராகன் எடை. பசுவின் நெய் 3/4 வராகன் எடை. இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி

சாப்பிட 20 வகைப் பிரமேகங்களும் தீரும், இந்திரிய விர்த்தியதிகமாம். சோம்பல் நீங்கிச் சுறுசுறுப்புண்டாகும். உடல் வலிமை, உடல் சக்தி முதலியவைகள் உண்டாகும். இப்படிச் செய்ய சோம்பலுள்ளவர்கள் மேற்படி தனிச் சாற்றிலாகிலும் சேர்த்துண்ணவும்.

(5) சிறு நெருஞ்சில் சமூலச் சாற்றை மேற்கண்டபடி காய்ச்சிக் குழம்பு பதத்தில் இறக்கிக் கொள்க. நன்றாய்க் குளிர ஆறின பின்பு 3/4 வராகன் எடை சிலாசத்துப் பற்பம் அல்லது 2 குன்றிமணி எடை சிலாசத்துப் பொடி, தேன் 3/4 வராகன் எடை இம்மூன்றையும் கலந்து மேற்படி பற்பத்தை மேற்படி அளவுப்படி கலந்து சாப்பிட்டுவரின், மூத்திர சம்பந்தமான எல்லா நோய்களும் தீரும்.

குறிப்பு:- நெருஞ்சில் சாற்றை நீராவி இயந்திரத்தில் வைத்துச் சுண்ட வைத்துக் கொண்டால், சிறப்புடைய குணம் உண்டாகும். அப்படிச் செய்துகொள்ளக் கூடாத காலத்தில் வெய்யிலில் வைத்தாகிலும் சுண்ட வைத்துப் பக்குவம் செய்து கொள்ளலாம். இவ்விரண்டு வகையும் செய்ய இயலாதவர்கள் பச்சை ரசத்தைத்தான் உபயோகித்துக் கொள்ள வேண்டும். "மாவிற்குத் தக்க பலகாரம்" என்பது அனுபவசித்தமாயறிந்த பொருளே. எந்த மருந்தையும் கஷ்டத்தைப் பாராமல் முறைப்படி செய்துவரின் சிரமத்திற்கேற்ற கூலியாகிய பலன் கைகூடுமென்பதும். "சோம்பேறிக்குத் தோலோடு வாழைப்பழம்" என்பதும் யாவருக்கும் தெரிந்த விவகாரமேயாம்.

(6) வெண் தாமரைப் பூச்சாறு 6½ வராகன் எடை, தேன் 3/4 வராகன் எடை இவற்றை ஒன்றாகக் கலந்து முன்வெள்ளிப் பற்பத்தை அளவுப்படி சேர்த்துக் கொடுக்க, நாட்பட்ட கப நோய், இருமல் நோய், வாதபித்த தோசம், சயநோய், இரத்த காசநோய், சுர சம்பந்த சயநோய், இரைப்பு, சுவாசம் மந்தார காசம் ஆகியவைகள் தீர்ந்து உடல் வலிவு உண்டாகும். இதனால் எத்தனை நாட்பட்ட கபநோயும் குணமாகி நல்ல பல முண்டாகும்.

கொள்ளின் குடிநீர்:- ஒரு பங்கு கொள்ளில் எட்டுப் பங்கு நீரைவிட்டுக் காய்ச்சி கொள்ளானது நன்றாய் வெந்து மலர்ந்த பதத்திலிறக்கி வடிகட்டித் திப்பி நீக்கியெடுத்துக் கொள்வதேயாம்.

(7) அரிசித் திப்பிலித் தூள் 1 குன்றிமணியெடை, மிளகுத் தூள் 5 குன்றிமணி எடை, பசுவின் நெய் 3/4 வராகன் எடை, தேன் வராகன் எடை 3/4, இவற்றை யொன்றாய் அளவுப்படி முன் வெள்ளி பற்பத்தை

அளவுப்படி சேர்த்துட்கொள்ள வாத, கபசம்பந்த இருமல் ரோகம் தீரும், கரபங்க சுரம், தேக எரிச்சல் ஆகியவைகளும் தீரும்.

மேற்கண்ட அரிசித்திப்பிலி, மிளகு ஆகியவைகளை இளவறுப்பாய் வறுத்துக் கொள்ளலாம். வெய்யிலிலுலர்த்தியும் தூள் செய்து கொள்ளலாம்.

கஸ்தூரி, லவங்கத் தூள் இவ்விரண்டும் வகைக்கு 1 குன்றி மணி எடை, சாதிக்காய்த்தூள் 4 குன்றிமணி எடை, தேன் வராகன் எடை 3/4, இவையெல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து முன் வெள்ளி பற்பத்தை அளவுப்படி சேர்த்துட் கொண்டுவரின் பிரமேக நோய் பிரமேக சம்பந்த சயநோய் முதலிய நோய்கள் தீர்ந்து உடல் வலிவு உண்டாகும்.

நண்டு பற்பம் குன்றிமணி எடை 5, பூநாக பற்பம் குன்றி மணி எடை 1/2, பாகம் செய்த நற்பவளப் பொடி குன்றிமணி எடை 2, பாகம் செய்த முத்துப்பொடி குன்றிமணி எடை 1, தேன் 3/4 வராகன் எடை இவை எல்லாவற்றையும் ஒன்றாய்க் கலந்து முன் வெள்ளிப் பற்பத்தை அளவுப்படி கலந்து கொள்ள சரநோய், காசநோய் முதலியவைகள் கடினமானவைகளாயினும் தீரும்.

குறிப்பு: நண்டு பற்பம்:- பால் நண்டென்னும் வெள்ளை நண்டைக் கொண்டு வந்து கொடுக்கு கால் முதலியவைகளை நீக்கி, ஒரு சிறு கலையத்திலிட்டு வாய்க்குச் சில்லிட்டுச் சீலை செய்து கனத்த புடமிட்டு ஆறினபின் எடுத்துப் பொடித்து துணியில் வடிகட்டி செய்து வைத்துக் கொள்க. இதுவே நண்டு பற்பமாம்.

பூநாக பற்பம்:- செம்மண் தரையிலுள்ள நாக்குப்பூச்சிகளைக் கொண்டு வந்து மோரில் 1 சாமம் ஊறப் போட்டால், வயிற்றிலுள்ள மண் முதலிய அசுத்தங்களெல்லாம் வெளியாகி விடும். பிறகு சுத்த தண்ணீர் விட்டு இரண்டு மூன்று தடவைகள் கழுவித் தூய்மை செய்து ஒரு சிறு கலயத்திலிட்டு வாய்க்குச் சில்லிட்டுச் சீலைமண் செய்து கனத்த புடமிட்டு ஆறின பின்னெடுத்துப் பொடித்து துணியில வடிகட்டி வைத்துக் கொள்க. இதுவே பூநாக பற்பமாம்.

பவளத்தைப் பக்குவப்படுத்தல், முத்தைப் பக்குவப்படுத்தல் ஆகிய இம்முறைகள் நமது யூனானி வைத்திய தாருட்யவிர்த்தி போதினி முதற்பாகத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.

வெற்றிலைச் சாறு, தேன் ஆகிய இரண்டும் வகைக்கு 3¼ வராகனெடை ஒன்றாய்ச் சேர்த்து முன் பற்பத்தை அளவுப்படி கலந்துட் கொண்டுவரின் எல்லாவிதக் காசங்களும் தீரும்.

வெற்றிலைச்சாறு, 3¼ வராகனெடை மிளகுத்தூள் 4 குன்றி மணி எடை, இவ்விரண்டையும் சேர்த்து முன் பற்பத்தை அளவுப்படி கலந்துட் கொள்ள, கரணமூல நோய் முதலியவைகள் தீரும்.

குறிப்பு:- இங்கு சொல்லப்பட்ட துணை மருந்துகளை, அவரவர்களின் புத்தி உத்தி முதலியவைகளை உபயோகித்து நோய், உடல் வலிமை முதலியவைகளுக் கேற்பச் சமயோசிதமாக உபயோகிப்பதே உத்தமம்.

186. வெள்ளி பற்பம் (வேறு)

முன் சொன்னபடி தூய்மை செய்த வெள்ளி 1 ரூபா எடை. (இதனை 1½ அங்குல அகலமுள்ள சக்கரத் தகடாய்ச் செய்து கொள்ள வேண்டும்) தூய்மை செய்த இரசம், நெல்லிக்காய்க் கந்தகம், தாளகம், பொரித்த வெண்காரம் ஆகிய இந் நான்கும் வகைக்கு 1 ரூபா எடை. எலுமிச்சம்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- இவற்றுள் முன்னர் இரசத்தையும் கெந்தகத்தையும் சேர்த்து நன்றாய்க் கருக்கிற வரை அரைத்து. தாளகத்தை தனியே மைபோலரைத்துப் பின்னர் முன் சரக்குகளுடன் சேர்த்தரைத்து முடிவாய் வெண்காரத்தைச் சேர்த்து எல்லாம் ஒன்றாகக் கலக்க அரைத்து, எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு 1 சாமமரைத்து, முன் தகட்டிற்கு முதலில் ஒரு பக்கம் கவசித்து உலர்த்தி அது நன்றாயுலர்ந்தபின் மறுபக்கமும் கவசித்து அதுவும் நன்றாயுலர்ந்த பின் அகலில் வைத்து மேலகல் மூடி வாய்க்கு ஏழுசீலைமண் வலுவாகச்செய்துலர்த்தி கெசபுடமிட்டாறினபின எடுக்கப் பற்பமாம், இது சற்று கறுப்பு வண்ணமாயிருக்கும். முற்றும் பற்பமாகாமல் ஏதேனும் அரை குறையாயிருந்தால், எல்லாவற்றையும் மேற்கண்ட சரக்குகளையும் மேற்கண்ட அளவே, மேற்கண்டவிதமாக அரைத்துச் சேர்த்து முன்போல் பழச்சாற்றையே சிறுகச் சிறுகவிட்டு அரைத்து வில்லை தட்டிக் காய வைத்து அகலுக்குள் வைத்து முன்போல் புடமிட்டெடுக்க நேர்த்தியான பற்பமாம.

அளவு:- வேளை 1 க்கு ஒரு குன்றிமணியெடை முதல் இரண்டு குன்றிமணியெடை வரையிலாம். காலை, மாலை இரண்டு வேளையும் உபயோகிக்கலாம்.

துணை மருந்தும் தீரும் நோயும்

(1) மஞ்சட் கிழங்கின் சாறு 1¼ வராகனெடை, தேன் 3¼ வராகனெடை. இவ்விரண்டையும் சேர்த்து, மேற்படி பற்பத்தை அளவுப்படி கலந்துட் கொள்ள் பாண்டு நோய், சுரக்கட்டி, உப்பு நோய் ஆகியவை தீரும்.

(2) தும்மைப்பூச்சாறு, தூதுவளைச்சாறு இவ்விரண்டையும் வகைக்கு 1½ வராகனெடை, தேன் 3¼ வராகனெடை இவைகளை ஒன்றாய் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துட் கொண்டுவரின், தொண்டைச் சம்பந்தமான எல்லா நோய்களும் தீரும். மூளைப் பலப்பட்டு புத்தி தெளிவும், கண்ணொளியும், ஞாபகசக்தியும் அதிகப்படும்.

(3) வெண்ணொச்சிக் கொழுந்துச் சாறு 3¼ வராகனெடை, பசுவின் நெய் 3¼ வராகனெடை இவ்விரண்டையும் சேர்த்து மேற்படி பற்பத்தை அளவுப்படி சேர்த்துட் கொள்ள, சூலை நோய், கபசுரம் ஆகியவை தீரும்.

(4) வெட்பாலை மரப்பட்டைச்சாறு 3¼ வராகனெடை, தேன் 3¼ வராகனெடை இவ்விரண்டையும் சேர்த்து மேற்படி பற்பத்தை அளவுப்படி கலந்துட் கொள்ள இரத்தமூலம், இரத்த பேதி, ரத்த பித்தநோய் ஆகியவை தீரும்.

(5) புரசம் பட்டைச்சாறு 1¼ வராகனெடை, தேன் 3¼ வராகனெடை இவ்விரண்டையும் சேர்த்து மேற்படி பற்பத்தை அளவுப்படி கலந்துட் கொள்ள வயிற்றிலுள்ள நுண் புழுக்கள் வெளிப்பட்டுப் போகும். கபவாத மூலநோய்கள் தீரும். உதரவதே நோய் தீரும். இன்னும் வயிற்றிலுள்ள நோய்கள் அநேகந் தீரும்.

(6) குன்றிமணி இலைச்சாறு 1¼ வராகனெடை தேன் 3¼ வராகனெடை இவ்விரண்டையும் சேர்த்து மேற்படி பற்பத்தை அளவுப்படி கலந்துட் கொண்டுவரின் பித்தம், வாய்வறட்சி நாவறட்சி, மேற்சுவாசம் ஆகியவை தீரும்.

இன்னும் உடல் நிலை, நோயின் வலிமை முதலியவைகளுக்கேற்ற விதமாகவும் சமயோசிதமாகவும் தகுந்த துணைமருந்துகளில் கொடுக்கலம். இன்னும் தகுந்த இளகம், நெய் முதலியவைகளிலும் கலந்துக் கொடுக்க அந்தந்த நோய்கள் தீரும்.

187. வெள்ளி பற்பம்

காட்டுச் சோம்பு அல்லது காட்டுப் பெருஞ் சீரகச் செடியென ஒருவகைச் செடியுண்டு. இதன் விதைகள் பெருஞ்சீரகத்தைப் போலவே உருவத்திலும் சுவையிலும் சற்று ஒத்திருக்கும். இது மிகுதியாக உதயகிரி மலையிற் கிடைக்கின்றது. வேறு இடங்களிலும் கிடைக்கின்றது. இது அபூர்வமான மூலிகையன்று. சாதாரணமாய்க் கிடைக்கக் கூடியதேயாம்.

ஊத்துக்கட்டி வெள்ளி அல்லது தூய்மை செய்த வெள்ளி 1 ரூபாய் எடை. இதனைப் புளியிலைச் கனம் தகடடித்துக் கரி நெருப்பில் பழுக்கக் காய்ச்சி மேற்சொன்ன காட்டுச் சோம்பிலையைத் தனியே இடித்துப் பிழிந்த சாற்றில் துவைக்க வேண்டும். சாறானது தகடு நன்றாய் மூழ்கி நிற்கும்படியாக இருக்க வேண்டும். மிகவும் குளிர ஆறினபின் எடுத்து முன் போலக் காய்ச்சி முன்போலவே மேற்படி சாற்றில் துவைக்க வேண்டும். இவ்விதம் 25 தடவைளானவுடன், சாற்றை மாற்றிவிட வேண்டும். இவ்விதம் நூறு தடவைகள் காய்ச்சித் துவைத்தெடுத்து முன் இலை 5 பலம் (175 கிராம்), இதனை வெண்ணெய் போல அரைத்து அதற்கு முன் சித்தப்படுத்தின தகட்டை வைத்து மூன்று சீலைமண் செய்து - 21 சேர் அல்லது 168 பலம் எடையுள்ள வராட்டியிற் புடமிட்டு, நன்றாய்க் குளிர ஆறினபின் எடுக்க, தகடு அப்படியே மலர்ந்து வெள்ளையாக இருக்கும். கால வேறுபாட்டால் ஒரு சமயம் அப்படி வெள்ளை ஆகாதிருந்தால் மறுபடியும் முன்போலவே முன் இலையில் கவசித்துப் புடமிடவும். காயச்சித் துவைக்க வேண்டிய அவசியமில்லை.

இப்பற்பம் முக்கால் வராகன் எடையானது ஒரு ரூபாய் எடை இரசத்தை வெண்ணெயாக்கி விடுகிறது. இது எனது கைப்பழக்கத்தால் செய்யப்பட்டது.

தாது விருத்திக்கான வெள்ளி பற்பங்களில் இது அதிக மேலானதென நம்பப்பட்டிருக்கிறது.

அளவு:- வேளை 1-க்கு ஒரு குன்றிமணி எடை முதல் இரண்டு குன்றிமணி எடை வரையிலாம்.

துணை மருந்தும் தீரும் நோய்களும்:- (1) பசுவின் நெய், கற்கண்டுத் தூள், இவை வகை ஒன்றுக்கு 3/4 வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து மேற்படி பற்பத்தை அளவுப்படி சேர்த்துட் கொண்டு உடனே காய்ச்சிக் கற்கண்டிட்ட பத்து பலம் பசுவின் பாலைப் பருகச் செய்ய வேண்டும். இவ்விதங் காலை, மாலை இரண்டு வேளையும் இருபது நாள் உபயோகித்தால் உடல் செழித்து வளமை உணடாகும். இரத்தப் பெருக்கம் இரத்தத் தூய்மை ஆகியவை உண்டாகும். பசி அதிகம் உண்டாகும். பிரமிய நோய்கள் தீரும். முகக்களை, உடற்கட்டழகு தாது வளமை ஆகியவை உண்டாகும்.

(2) மேல் தோல் சீவின சுக்குத் தூள் 4 குன்றிமணி எடை, கற்கடசிங்கித் தூள், வாதுமைப் பிசின் தூள் இவ்விரண்டும் வகை 1 க்கு இரண்டு குன்றிமணி எடை, தேன் 4½ வராகன் எடை, இவற்றை ஒன்றாய்க் கலந்து மேற்படி தூளை அளவுப்படி சேர்த்துட் கொண்டுவரின் எல்லாவகை இருமல் நோய்களும் தீரும் இறுகின கபங் கரைந்து, இளகி வெளிப்பட்டுப் போம். இரைப்பிருமல், இரைப்பு ஆகியவை தீரும், இரைப்பை பலப் படும். மலச்சிக்கல் தீரும்.

(3) கருந்துளசிச் சாறு 3/4 வராகன் எடை, மஞ்சள் கடுக்காய்த் தூள் 1 வராகன் எடை, மூங்கிலுப்புத் தூள் 4 குன்றி மணி எடை, தேன் 3/4 வராகன் எடை, இவை எல்லாவற்றையும் ஒன்றாய்க் கலந்து மேற்படி பற்பத்தை அளவுப்படி சேர்த்துட் கொண்டுவரின் எலலா வகை இருமல் நோய்களும் தீரும். இருமல் அதிகத்தால் உறக்கம் இல்லாமல இருப்பினும் இருமல் தணிந்து உறக்கம் உண்டாகும்.

(4) கறிமஞ்சள் தூள் ¼ வராகன் எடை, சீந்திற் சர்க்கரை 4 குன்றிமணி எடை, தேன் 3/4 வராகன் எடை, இவைகளை ஒன்றாய்க் கலந்து மேற்படி பற்பத்தை அளவுப்படி சேர்த்துட் கொள்ளப் பல வகைப் பிரமிய நோய்கள் தீரும்.

இன்னும் நோய் இயல்பு, நோய் வன்மை முதலியவைகளுக்குத் தகுந்த துணைமருந்துகளிலிட அநேக நோய்கள் தீரும்.

தாது விருத்திக்கான அல்வாக்கள் முதலியவைகளில் சேர்த்து பயன்படுத்திவரின் தாது விருத்தி, உடல் வன்மை உடல் வளமை முதலியவைகள் உண்டாகும்.

மருந்துணவு:- நோய்கட்குத் தகுந்த முறையில் சமயோசிதமான பத்தியம் வைக்க வேண்டியதே முறையாம்.

188. வெள்ளி பற்பம் (வேறு)

நமது "சுகாதார போதினி" அபிமானிகளில் ஒருவருக்கும் அவர் பரம்பரையார்களுக்கும் அனுபவ சித்தமான ஒரு வெள்ளி பற்ப முறையை எழுதியிருந்தார். அம்முறையானது நமது அபிமானிகளுள் சிலரால் செய்யப்பட்டு. சிறந்த குணங்காணப்பட்டதால் அம்முறையையும் இங்கு எழுதி இருக்கின்றோம். அம்முறை இது.

மூலாம் வெள்ளி 1 ரூபாய் எடை. மாதுளை இலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- வெள்ளியைப் புளியிலைக் கனமுள்ள தகடாய் அடித்துக் கொள்ள வேண்டும். கரிநெருப்பிற் காய்ச்சிக் காய்ச்சி எவ்வேழு தடவைகள் முறையே நல்லெண்ணெய், காடி, கோமூத்திரம், கொள்ளை வேகவைத்தக் குடிநீர், புளித்த மோர் ஆகியவைகளில் விதிப்படி துவைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

பிறகு மாதுளை இலையை இடித்துப் பிழிந்த சாற்றில், முன் சித்தப்படுத்தின தகட்டை முன்போல் கரிநெருப்பிற் பழுக்கக் காய்ச்சித் துவைக்க வேண்டும். இவ்விதம் 3-5-7 தடவைகள் செய்ய வேண்டும். தகடு நொறுங்க ஆரம்பித்தால் பதமென நிறுத்தி விட வேண்டும். அதற்கு மேல் காயச்சினால், எல்லாம் நொறுங்கித் தூளாகிப்போம். ஆகையால் பக்குவமாகவும், பதமாகவுஞ் செய்து கொள்ள வேண்டும். பின்பு பத்து பலம் (350 கிராம்) மாதுளை இலையை அரைத்து அதற்குள் முன்தகட்டை வைத்து ஏழு சீலைமண் செய்து, உலர்த்தி ஒரு குழிதோண்டி, அதில் 9 அல்லது 10 வீசை விராட்டியில், அரை வாசியைப் பள்ளத்தில் பக்குவமாய் அடுக்கி, முன் கவசத்தை வைத்து அதன் மேல் மறு அரைவாசி விராட்டிகளையும் அடுக்கிப் புடம்போட வேண்டும். இப்புடமானது குழிக்குள்ளேயே அதாவது தரைமட்டத்திற்கு மேலாக இருக்கலாகாது. காற்று அடைப்பான இடத்தில் புடம் போட வேண்டும். இப்படிச் செய்வதால், நெருப்பு நனறாய்த் தாக்கி ஒரே புடத்தில் பற்பமாகி விடும். நெருப்பு திட்டமாயிராவிட்டால் ஒரே புடத்தில் பற்பம் ஆகாது. மறு தடவை புடம் போட வேண்டும். புடமானது குளிர ஆறினபின் நினைவாகப் பற்பத்தை எடுத்து புட்டியில் வைத்துக் கொள்ள வேண்டும். கைபாகப்

பிசகால் ஒரே புடத்திலாகாமல் இரண்டு மூன்று புடம் போட நேரிடுவதுமுண்டு. எப்படியாயினும் நன்றாய்ப் பற்பமாகிற வரையில் புடம் போட்டுத் தீரவேண்டும்.

அளவும் தீரும் நோய்களும்:- ஒன்று அல்லது இரண்டு குன்றி மணி எடை பசுவின் வெண்ணெய்யில் அல்லது பசுவின் நெய்யில் கலந்து உட்.கொள்ள வேண்டும். இவ்விதம் காலை, மாலை இரண்டு வேளையும் உபயோகிக்கலாம்: இது எல்லாவகை நோய்களுக்கும் உபயோகமாம். இதனுடன் தகுந்த இளகங்கள், நெய்கள், மணப்பாகு ஆகியவைகளையும் உபயோகிக்கலாம். உடல் வலிமையின்மை, உடல் தளர்ச்சி, தாது இழப்பு, விந்து இழப்பு, சயநோய், விடாச்சாரம், உடல் சூடு, எலும்புச் சூடு முதலிய நோய்கள் தீரும், இன்னும் பழக்கத்தால் இதன் சிறந்த குணத்தைத் தானே தெரிந்து கொள்ளும்படி இது தானே கற்பிக்கும். ஆகையால் இங்கு விரித்தெழுதாமல் இவ்வளவில் நிறுததப்பட்டது.

189. வெள்ளி பற்பம் (வேறு)

சரிகை வெள்ளி 3¼ வராகன் எடை (11-2/8 கிராம்) மனோசிலை 15 வராகன் எடை. கொடிக்கள்ளி வேர்ப்பட்டைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- வெள்ளியை உருக்கிப் புளி இலைக் கனம் தகடடித்துக் கொள்ள வேண்டும். மனோசிலையைக் கல்வத்தில் இட்டுப் பொடித்துக் கொடிக்கள்ளி வேர்ப்பட்டைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு அரைத்து வெண்ணெய் போலான பின் மேற்படி தகட்டிற்கு இரு புறமும் பூசி உலர்த்திக் கொள்ளவும். பிறகு, மேற்படி கொடிக்கள்ளி வேர்ப்பட்டையை ஒரு அகலில் பரப்பி அதன் நடுவில் முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற தகட்டை வைத்து அதன் மேலும், அகல் மூடி 5 சீலைமண் செய்து ஈரமுலர வைத்துக் கவசத்தின் 20 பங்கு எடை விராட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்க, வெள்ளித் தகடானது வெட்டையாகி இருக்கும். இதனைக் கல்வத்தில் இட்டுப் பொடி செய்து கொடிக்கள்ளி வேர்ப்பட்டைச் சாறைச் சிறுகச் சிறுக விட்டு ஒரு சாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி, ஓட்டில் வைத்து மேலோடு மூடி 3 சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் எடைக்கு 10 பங்கு எடை விராட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுத்து முன்போல் கொடிக்கள்ளி வேர்ப்பட்டைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு 1 சாமம்

(3 மணி நேரம்) அரைத்து வில்லை செய்து முன்போல் புடமிடவும். மூன்றாம் தடவையும் மேற்கண்டவாறே புடமிட்டு எடுக்க பரம்பொருளின் அருளால் மிக மேலான பற்பமாகி யிருக்கும்.

அளவு:- 3 முதல் 6 குன்றிமணி எடை

துணைமருந்து:- நெய், தேன், வெண்ணெய் முதலியவைகளாகும்.

தீரும் நோய்கள்:- இருமல், நோய், காசநோய், சுவாசநோய், தொண்டைக்கம்மல், இரைப்பிருமல் வாயு இன்னும் பலவகைக் கபநோய்களும் தீரும்.

மருந்துணவு:- நோய், உடல் இயல்புக்குத் தகுந்தபடி பத்தியம் ஏற்படுத்த வேண்டியதே முதன்மையானது.

190. வெள்ளி பற்பம் (வேறு)

தூய்மை செய்த வெள்ளி 1¼ வராகன் எடை, சீனாக்காரம் 1½ பலம் (52½ கிராம்)

செய்முறை:- வெள்ளியைப் புளி இலைக் கனமுள்ள தகடாக அடித்துக் கொள்ளவேண்டும். சீனாக்காரத்தை நுண்மையான பொடியாகப் பொடித்து இரண்டு பாகமாக்கி, ஒரு பாகத்தை ஒரு ஓட்டில் பரப்பி, அதன்மேல் முன் சித்தப்படுத்தி இருக்கின்ற வெள்ளித் தகட்டை வைத்து. அதன்மேல் மறுபங்கு சீனாக்காரப் பொடியைத் தூவி அழுத்திச் சமப்படுத்தி, மேலோடு மூடி 5 சீலைமண் செய்துஉலர்த்தி, சதுரகசப் புடமிட்டு ஆறின பின் எடுக்கச் சீனாக்காரம், வெள்ளித் தகடு ஆகிய இரண்டும் பற்பமாகி இருக்கும். இவ்விரண்டையும் சேர்த்து எடுத்து கல்வத்தில் இட்டு ஒன்றாகக் கலக்கும்படி நன்றாய் அரைத்துப் பத்திரப்படுத்தவும்.

இப் பற்பமானது கண் நோய்க்கும் உபயோகப்படுகிறது.

அளவு:- 3 முதல் 4 குன்றிமணி எடை.

தீரும் நோய்கள்:- தகுந்த துணைமருந்துகளிலிட, பிரமிய நோய்கள், வெட்டைச்சூடு, மூலச்சூடு, எலும்புச்சூடு, கணச் சூடு, சம்பந்தமான பலவகை நோய்கள் தீரும்.

ஒரு அரிசி எடை பற்பத்தைக் கண்ணில் போட்டுவர, படலம், பில்லம், சதைசிவத்தால், சதை வளர்ச்சி, கண்ணில் நீர் வடிதல் முதலிய நோய்கள் தீரும்.

மருந்துணவு:- நோய், உடல் இயல்பு முதலியவைகளுக்குத் தகுந்த விதமாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டியதே.

191. வெள்ளி பற்பம் (வேறு)

தூய்மை செய்த வெள்ளி 3¼ வராகன் எடை (11-5/8 கிராம்) செந்தாழம்பூ இதழ்கள் 10 பலம் (350 கிராம்). மஞ்சள் பொடி 2 பலம் (70 கிராம்), கஞ்சாத்தூள் 2 பலம் (70 கிராம்)

செய்முறை:- வெள்ளியை மெல்லிய தகடாய் அடித்துச் சன்னமாகத் துணடித்துக் கொள்ள வேண்டும். தாழம்பூவைப் பஞ்சு போல் ஆகும்படி இடித்து இரண்டு பங்காகச் செய்து கொள்ள வேண்டும். மஞ்சள்பொடி, கஞ்சாத்தூள் ஆகியவைகளையும் இரண்டு இரண்டு பாகமாகச் செய்து கொள்ள வேண்டும். ஒரு சாண் சதுரமான உரத்த இரட்டுத் துணியில் தாழம்பூ பஞ்சின் ஒரு பாகத்தைச் சமமாகப் பரப்பி அதன்மேல் மஞ்சள் தூளின் ஒரு பாகத்தை சமமாகப் பரப்பி, அத்ன்மேல் கஞ்சாத்தூளின் ஒரு பாகத்தைப்பரப்பி அதன் மேல்முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற வெள்ளிப் பொடியைத் தெளித்து. அதன்மேல் கஞ்சாத் தூளின் பாகத்தைப் பரப்பி, அதன்மேல் மஞ்சள் தூளின் பாகத்தைப் பரப்பி அதன்மேல் தாழம்பூப் பஞ்சின் மறு பாகத்தைப் பரப்பி, அதன்மேல் சாண் சதுரமான உரத்த இரட்டு துணியைப்போட்டு, பக்குவமாகவும் கெட்டியாகவும் கயிற்றால் கட்டி 5 சீலைமண் செய்து உலர்த்தி, புடமிட்டு, குளிர ஆறனபின், விழிப்புடன் எடுக்க, வெள்ளிப் பொடியெல்லாம் கம்புப் பொரியைப் போலப் பொரிந்து போயிருக்கும். இப்பொரிகளை மாத்திரம் பார்த்தெடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து துணியில் வடிகட்டிப் புட்டியில் பத்திரப் படுத்தவும். இது அதிகக் காரமான பற்பம், குணத்திலும் அதிகம் சிறந்தது.

அளவு:- 1 முதல் 1¼ குன்றிமணி எடை.

தீரும் நோய்கள்:- 186ஆம் எண்ணில் சொல்லப்பட்டிருக்கிற துணைமருந்துகளை உபயோகிக்கின், ஆங்காங்கு சொல்லப் பட்டிருக்கிற நோய்களும் தீரும்.

இன்னும் இந்தப் பற்பமானது தீபாக்கினி விருத்தியையும், விந்துப் பெருக்கத்தையும் உண்டாக்குவதில் மிகவும் சிறந்தது.

மருந்துணவு:- மேற்கண்ட பாகத்தில் சொல்லப்பட்டவை களேயாம்.

192. வெள்ளி பற்பம் (வேறு)

வெள்ளி 1 ரூபாய் நாணயம், சிவப்பு ஓரிலைத் தாமரைச் சாறு செல்லத்தக்க அளவு, சிவப்பு ஓரிலைத் தாமரையை அரைத்த விழுது 40 பலம் (1400 கிராம்)

செய்முறை:- ரூபாயை மேற்படி சிவப்பு ஓரிலைத் தாமரை இலைச் சாற்றில் போட்டு ஊற வைக்கவேண்டும். இந்தச் சாறானது ரூபாய் ஆழ்ந்து கிடக்கும்படியாகத் தாராளமாக இருக்கவேண்டியது. இதனை வெய்யிலில் வைத்துச் சாறெல்லாம் சுண்டி உலர்ந்தவுடன் மறுபடியும் முன்போலவே முன் சாற்றில் ஊறப்போட்டு உலர்த்த வேண்டும். இவ்விதம் முடிந்த அளவு 3-5-7 தடவைகள் மடக்கிமடக்கி ஊறப்போட்டு உலர்த்தி எடுத்துக் கொள்ளவேண்டும். பிறகு மேற்படி இலையை அரைத்த விழுது 10 பலம் (350 கிராம்) இதன் நடுவில் மேற்படி ரூபாயை வைத்து. உருண்டையாகச் செய்து ஐந்து சீலைமண் செய்து, ஈரம் உலர்ததி, கெசபுடமிட்டு ஆறின பின் எடுக்க, வைத்த ரூபாய் அட்சரத்துடனே பற்பமாகி இருக்கும். எடுத்துக் கல்வத்தில் பொடித்துப் பத்திரப்படுத்தவும்.

அளவு:- 1 முதல் 2 குன்றிமணி எடை.

தீரும் நோய்கள் :- தகுந்த துணைமருந்துகளிலிட காச நோய், இருமல், வெட்டைச் சூடு, எலும்புச் சூடு, எலும்புருக்கி நோய் ஆகியவைகள் தீரும்.

மருந்துணவு:- மேற்கண்ட விதியே யாம்.

193. வீரிய வெள்ளி பற்பம்

தூய்மை செய்த வெள்ளி அரப்பொடி 3¼ (11-5/8 கிராம்) வராகன் எடை, புளிப்பு மாதுளம்பழத் தனிச்சாறு ¼ படி.

செய்முறை:- வெள்ளிப் பொடியைக் கல்வத்தில் இட்டு மேற்படிச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு அரைக்க வேண்டும். இதனை ஒரே தடவையாக அரைக்க வேண்டுமென்னும் அவசியமில்லை. இவ்வளவு சாறும் ஒரே காலத்தில் வேண்டும் என்னும் அவசியமும் இல்லை. மேற்கண்ட அரைப்படி சாறு மேற்கண்ட விதமாக அரைப்பில்

செலுத்தவேண்டியது முதன்மையாகும். இவ்விதம் சாறெல்லாம் சென்ற பின் வில்லை செய்து உலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடு மூடி சீலைமண் வலுவாகச் செய்து உலர்த்தி 2 வீசை வராட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்க அருள்முனிவன் அருளால் சஞ்சீவிக் கொப்பான பற்பமாகி இருக்கும்.

அளவு:- 2 முதல் 3 குன்றிமணி எடை.

தீரும் நோய்கள்:- தகுந்த துணைமருந்துகளிலிட விடாச் சுரம், எலும்புச்சுரம், எந்த மருந்தினாலும் தீராதவெட்டை நோய், ஈரற்சூடு, கைகால் எரிச்சல், கண்ணெரிச்சல் முதலிய சூடு சம்பந்தமான எல்லா நோய்களும் தீரும். இந்த பற்பமானது இயல்பில் கொழுமையானது. திக் என்னும் சயகாசத்திற்கு மிகவும் கைவல்யமான மருந்து. இந்த சயகாசமானது மகா கடினமான நோய் இந்த நோயில் இந்த மருந்து உபயோகப்படுவது போல் மற்ற மருந்துகள் அவ்வளவாக உபயோகப் படவில்லை. சொர்ண மாலியம், வசந்தகுசுமாகரம் முதலிய மருந்துகளும் உபயோகப்படாத சமயத்தில் இதனால் அதிகம் குணங்காணப்பட்டிருக்கிறது. பழக்கப்பட்டவர்கள் இதன் சிறந்த குணத்தை தத்தம் பழக்கத்தில் நிச்சயித்துக் கொள்வார்களாக.

மருந்துணவு:- மேற்கண்ட நோய்கட்குத் தகுந்த விதமாகவும். உடலியல்பிற்குத் தகுந்த விதமாகவும் செய்து கொள்வார்களாக.

194. மகாவீரிய வெள்ளி பற்பம்

மேற்கண்ட முறைப்படி செய்த வெள்ளி பற்பம் 3 வராகன் எடை (10½ கிராம்), தூய்மை செய்த வெள்ளைப் பாடாணம் 6¼ வராகன் எடை (21-7/8 கிராம்). தூய்மை செய்த இரசம் 12½ வராகன் எடை (43¾ கிராம்) கறுப்பு வெற்றிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- பாடாணத்தைக் கால்கால் வராகன் எடையாக 25 பங்கும், இரசத்தை அரையரை வராகன் எடையாக 25 பங்கும், தனித்தனியாக செய்து வைத்துக் கொள்ளவேண்டும். மேற்படி பற்பத்தைக் கல்வத்திலிட்டு அதனுடன் பாடாணத்தின் ஒரு பங்கையும், இரசத்தின் ஒரு பங்கையும் சேர்த்துப் பொடித்து மேற்படி கறுப்பு வெற்றிலைச் சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு இரண்டு சாமம் (6 மணி) அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டில் இட்டு மேலோடு மூடி சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் எடைக்கு ஒரு பங்கு எடை

வராட்டியிற் புடமிட வேண்டும். ஆறினபின் எடுத்துக் கல்வத்தில் இட்டு முன்போல் பாடாணத்தின் ஒரு பாகத்தையும் இரசத்தின் ஒரு பாகத்தையும் கூடச் சேர்த்துப் பொடித்து முன் போல் முன் வெற்றிலைச் சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு முன் போல் அரைத்து முன்போல் வில்லை செய்து உலர்த்தி முன் போல் கவசித்துலர்த்தி முன்போல் புடமிட வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி இருபத்தைந்து தடவைகள் மேற்கண்ட கணக்கின்படி பாடாணத்தையும் இரசத்தையும் சேர்த்துச் சேர்த்தரைத்துப் புடமிட வேண்டும். ஆனால் மூன்று புடத்திற்கு ஒரு தடவை காற்பாகம் அல்லது. அரைபாகம் விராட்டியை அதிகப் படுத்திக் கொண்டும் வரவேண்டியது. இவ்விதம் அதிகப் படுத்தாமலும் கவசத்தின் சம எடை விராட்டியிலேயும் புடம் போட்டுக் கொண்டும் வரலாம். இதில் தீயின் நிதானம் கொஞ்சம் கவனத்துடன் அனுபவத்தால் நிதானித்துக் கொள்ளவேண்டியது. எப்படியெனில் இரசமானது சனிக்காமல் மடிந்து போயிருந்தால் புடம் போட்ட தீ சரியானதென நிதானிக்க வேண்டும். அப்படி அதிகமாக சனித்தால் தீயைக் கொஞ்சம் அதிகப்படுத்திக் கொள்ள வேண்டியது. இந்த விவரத்தைச் சற்று கவனத்துடன் குறிப்பிட்டு வந்தால் பழக்கத்தில் தனக்குத் தானே விளங்கிப்போம். இந்த செய்திகளை எல்லாம் எழுதி முடியாது. ஆகையால் குறிப்பாய் எழுதி இருக்கின்றோம். இதைச் செய்யும் பெரியோர்கள் கைபாகம் செய்பாகம் முதலியவைகளில் விழிப்புடன் செய்யவேண்டுமென்பது நமது வேண்டுகோள்.

மேற்கண்ட விதமாக இருபத்தைந்து புடம் தீர்ந்தபின் மேற்படி பற்பத்தைக் கல்வத்திலிட்டு பாடாணம் இரசம் ஆகியவைகளைச் சேர்க்காமல் தனியே அந்தப் பற்பத்தை மட்டும் மேற்படி கறுப்பு வெற்றிலைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு இரண்டு சாமம் அரைத்து முன்போல் வில்லை செய்து உலர்த்தி முன்போல் கவசித்து இருபத்து நான்கு பலம் விரட்டியிற் புடமிட வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி 5 தடவை புடமிட வேண்டும். அதாவது பாடாணம் இரசம் ஆகியவைகளைச் சேர்க்காமல் தனியே மேற்கண்டபடி புடமிட வேண்டியது. இவ்விதம் 5 புடமுந்தீர்ந்தால் வாலறிவன் அருளால் காரமும் வீரியமுமுள்ள பற்பமாயிருக்கும். பற்பம் வைத்த எடைக்கு மேல் கால் அல்லது அரைப் பாகம், செய்பாகம், புடபாகம் ஆகியவைகளுக்குத் தகுந்தபடி அதிகமாக இருக்கும்.

மேற்படி பற்பம் 1 பங்கு, இலவங்கத்தை இடித்து துணியிலிறுத்த தூள் 1 பங்கு, திறமான குங்குமப்பூ 1 பங்கு, இவற்றுள் குங்குமப் பூவைக் கல்வத்திலிட்டுக் கொஞ்சம் பன்னீர் தெளித்து வெண்ணெய் போல் அரைத்து மற்ற இரண்டையும் சேர்த்து இரண்டொரு மணி நேரமரைத்து, வில்லை செய்து உலர்த்தி நன்றாய் உலர்ந்த பின்பு கல்வத்தில் பொடித்துப் பத்திரப் படுத்தவேண்டும்.

அளவு:- 1 முதல் 3 குன்றிமணி எடை.

தீரும் நோய்கள்:- இதனைத் தேன் நெய் முதலிய மருந்துகளில் உபயோகிக்க, மிதமிஞ்சின செரிக்கும் சக்தி உண்டாகும். அதாவது ஒருவரது செரிக்குந்திறன் உண்ணக்கூடிய உணவைப் பார்க்கிலும் பத்து அல்லது, இருபது பங்கு உணவை செரிக்கும் படியான சக்தி உண்டாக்கும். உடல் வன்மை உடல் வளமை முதலியவைகளுண்டாகி தாது விருத்தியை அதிகரிக்கச் செய்யும். நரம்புகளுக்கெல்லாம் முறுக்கேற்றி அவற்றைப் பலப்படுத்தும். இதன் குணங்கள் நிறைய உள. இதன் சிறப்பை நிச்சயித்து அறிந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் இதனைச் செய்ய நேரிடும் கடினத்திற்கும் பின்னடையாமல் உறுதியுடனும் ஊக்கத்துடனும், செய்ய வேண்டியது. "பாட்டிற்குத் தகுந்த பலன்" என்பது முன்னோார் வாக்கு. ஆகையால் கஷ்டப்பட்டுச் செய்பவர்கள் இதன் சிறந்த குணத்தை காணும்போது தங்கள் துன்பத்தை மறந்து அதிக வியப்புடன் மகிழ்ச்சியடைவார்கள்..

குறிப்பு:- நாம் பல தடவைகளிலும் பலரால் கேள்விப் பட்டிருப்பதாவது "ஒரு சந்நியாசி வந்தார். ஒருவேளை மருந்து கொடுத்தார். அதனால் நாலுபடி சாதம் சென்றது. ஐந்துபடி தயிர செரித்தது. அநேகஞ் சேர் இறைச்சி முதலியவைகள் தகிக்கப்பட்டன" என்பதே இவ்வித வியக்குங்குணமுள்ள மருந்துகளில் மேற்கண்ட பற்பமும் ஒன்று, ஆனால் எல்லா உடலினருக்கும் அப்படி உண்டாகுமென நாம் உறுதியாகச் சொல்ல முடியாது. நமக்குத் தெரிந்த வரையில் மேற்கண்ட விதமாக இயல்பளவைப் பார்க்கிலும் பத்துப் பங்கு. இருபது பங்கு, ஆகாரம் சிலருக்குச் சேர்க்க வேண்டிய தாயிருக்கிறது. இந்த பற்பமானது சாத்திரம், யுத்தி, புத்தி, அனுபவம் முதலியவைகளுக்கு ஒத்ததென்பதும் மேற்கண்ட குணம் இதற்குண்டென்பதும் பழக்கத்தினரான அறிஞர்களுக்கு நன்கு விளங்கும். ஆகையால், இதைப் பற்றி நாம் சிறப்பாக எழுதாமல் இம்மட்டோடு நிறுத்துகின்றோம். இன்னுமிதன் சிறந்த

குணத்தைக்கண்டு நிச்சயிக்கும் பெரியோர்கள் கருணையுடன் தெரியப் படுத்துவார்களாயின் அவர்கள் பெயருடன் சமயம் வாய்க்கும் போது உலகத்தாருக்கு வெளிப்படுத்துவோம்.

195. வெள்ளி சூத பற்பம்

தூய்மை செய்த வெள்ளி 1 வராகன் எடை. (3½ கிராம்) தூய்மை செய்த இரசம் ½ வராகன் எடை, (1¾ கிராம்) எழுத்தாணிப்பூண்டுச் சாறு செல்லத்தக்க அளவு. ஓமம் செல்லத்தக்க அளவு.

செய்முறை:- வெள்ளியை இராவித் தூளாக்கிக் கல்வத்திலிட்டு இரசத்தையும் சேர்த்து எழுத்தாணிப் பூண்டின் சாற்றை சிறுகச் சிறுகவிட்டு, 2 சாமமரைத்து (6 மணிநேரம்) வில்லை செய்து வெய்யிலில் உலர்த்திக் கொள்ளவேண்டும். ஒரு வட்டோட்டில் சுமார் 2½ பலம் (78¾ கிராம்) ஓமத்தைப் போட்டு அதன்மேல் முன் சித்தப்படுத்தின வில்லையை வைத்து அதன் மேலும் ஓமத்தைக்கொட்டி மேலோடு மூடி 5 சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் 7 பங்கெடை விராட்டியிற் புடமிட்டாறினபின் எடுக்க இறைவன் அருளால் பற்பமாகி இருக்கும். தீயின் வேறுபாட்டால் பற்பமாகாதிருந்தால் முன்போலவே இன்னொரு தடவையும் செய்து கொள்ளவேண்டும்.

அளவு, துணைமருந்து, தீரும் நோய்கள்:- ஆகியவைகள், 192ம் பாகத்தில் சொல்லப்பட்டவைகளே யாம்.

196. வெள்ளி மெழுகு

தூய்மை செய்த வெள்ளி, அரப்பொடி, சூடன், தூய்மை செய்த அரிதாரம், தூய்மைசெய்த பாடாணம், தூய்மை செய்த வெண்காரம் இவை வகை 1க்கு 2 வராகன் எடை (7 கிராம்). வங்கச் சுண்ணம் அல்லது வங்க பற்பம் 1 வராகன் எடை (3½ கிராம்) வெள்ளை எருக்கம்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை:- வெள்ளிப் பொடியையும் வங்கச் சுண்ணத்தையும் தவிர மற்றவைகளைத் தனித்தனியாக பொடித்துப் பிறகு எல்லாவற்றையும் கல்வத்தில் இட்டு வெள்ளை எருக்கம்பாலை சிறுகச் சிறுகவிட்டு 4 சாமம் (12 மணி) அரைத்து, உருண்டையாகத் திரட்டி வெய்யிலில் வைத்து உலர்த்தி, ஒரு துண்டுத் துணியில் வடிகட்டி, ஒரு கலயத்தில் முக்கால்வாசித் திருக்குக் கள்ளிப்பாலைவிட்டு அதில்

மேற்படி முடிச்சை துலாந்திரமாகத் தொங்கவிட வேண்டும். முடிச்சானது கலயத்தின் கீழ்ப் படாமல் சுமார் நாலங்குலம் உயரமாகத் தொங்கவிட வேண்டும். கலயமானது சுமார் ஐந்து அல்லது ஆறு ஆழாக்குக் கொள்ளத்தக்கதாகவும் இருக்கவேண்டும். பால் எலலாம் சுண்டிப் போகிறவரையில் காய்ச்சி ஆறவிட்டு எடுக்க மெழுகாகி இருக்கும்.

அளவு:- 1 முதல் 1½ குன்றிமணி எடை.

தீரும் நோய்கள்:- தகுந்த துணைமருந்துகளிலிட, சுரம், சயம், காசம், இருமல், வாத நோய்கள், வாயு நோய்கள் முதலிய அநேக நோய்கள் தீரும்.

மருந்துணவு:- நோயிற்குத் தகுந்தபடி பத்தியம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது.

குறிப்பு:- வெள்ளி பற்ப முறைகள் இன்னும் அநேகமுள. இது விலை உயர்ந்த சரக்காகையால் எலலோரும் அடிக்கடி செய்து கொள்வது கடினமாகையால் இந்தப் பற்பத்தின் பரீட்சையை மட்டும் எழுதி இவ்வளவோடு நிறுத்துவோம். சித்தர் அருளால் நமது "அநுபோக வைத்திய இரத்தினாகரத்தில்" அதன் அரிய முறைகளை எழுதுவோம்.

197. வெள்ளி பற்பப் பரீட்சை

(1) வெண்காரம், நெய், தேன் இம்மூன்றையும் சேர்த்து அரைத்து சேர வேண்டிய பற்பத்திற்குச் சமன் எடை சேர்த்துக் குகையில் இட்டு உருக்கினால் வெள்ளியாகாமல் இருக்கவேண்டும். இது எல்லாவித லோகங்களின் பற்பத்திற்கும் பொது தேர்வாம். மேற்படி மூன்று பொருள்களும் சேர்த்த யோகத்திற்கு அரபியில் மாவுல்ஹயாத் என்றும் வடமொழியில் சீவாமிர்தம் என்றும் பெயர், இந்த சீவாமிர்தத்தைச் சேர்த்து உருக்கினால் அரைகுறையாக இருக்கிற உலோகங்கள் உயிர் பெற்று சுய உலோகமாகிவிடும்.

(2) பரீட்சிக்க வேண்டிய பற்பத்தை ஒரு சிட்டிகையில் அழுத்தி எடுத்து நீரின்மீது வைத்தால் அது முழுவதும் தண்ணீருக்குள் ஆழ்ந்து போகாமல் மிதக்க வேண்டும். சில சமயம் அதன்மேல் ஒரு உளுந்தை வைத்தால் அதையும் சுமந்து கொண்டு மிதந்தால் சுய பற்பம் எனத்தெரிந்து கொள்ளலாம். இதுவும் கனமான எல்லா உலோகங்களின் பற்பத்தின் பொதுத் தேர்வாம்.

ஆனால், இவ்விரண்டு வகை தேர்வால் கொள்வது கூடாத காரியம், ஏனெனில் சிலாசத்து, கல்நார் முதலிய பற்பங்கள் மேற்கண்ட இரண்டு தேர்விற்கும் ஒத்திருக்கும். யாரேனும் இவ்வகைப் பற்பங்களை வெள்ளி பற்பமெனச் சொன்னால், நாம் மேற்கண்ட இரண்டுவகைத் தேர்வால் சிலாசத்து பற்பமா? அல்லது உண்மையான வெள்ளி பற்பமா? என நிதானித்தறிவது எளிதான செயலல்ல. எவ்விதத் திறமையுள்ளவர்களும் ஏமாந்து இழந்துபோக ஏதுவாகும். ஆகையால் இவ்வித இழப்பிற்குள்ளாகாதபடி இலகுவில் அறிந்து கொள்ளும் தேர்வானது வெள்ளி பற்பமொன்றிற்கே இயற்கையானது. அதுவும் முறைப்படி, தூய்மை செய்யப்பட்டு முறைப்படி பற்பிக்கப் பட்டிருந்தால் மாத்திரம் இந்த குணங்களிருக்கும். முறைப்படி தூய்மை செய்யப்படாவிடாலும், பாகப்படி செய்யப்பட்டு, பூரணபக்குவ தரத்தைப் பெறாவிட்டாலும் கீழ்க்காணும் குணங்களிரா, இந்த குணமில்லாத பற்பத்தால் ஒரு போதும் ஒரு குணமும் உண்டாகாது. மேலும் அதனால் கெடுதியே விளையும். அதாவது:

முறைப்படித்தூய்மை செய்யப்பட்டு கைபாகம் செய்பாகம் முதலிய முறைப்படி செய்யப்பட்ட வெள்ளி பற்பத்தை வாயிலிட்டு சுவைத்தால் குளிர்ச்சியாகவும், முதலில் இலைத்துப் பிறகு புளித்து முடிவாகச் சிறு இனிப்புள்ளதாம். இவ்வகையானதுதான் உண்மையானது: முறைப்படி செய்யப்பட்டதுமான வெள்ளி பற்பமாகும்.

இவ்வகைப் பற்பங்களால் அநேக நன்மைகளுண்டு. மலத்தைக் கட்டுப்படுத்தாது, உடலை இறுகச் செய்து தகுந்த வலிமையைக் கொடுக்கும் வீக்கம், வாத நோய்கள், பித்த சம்பந்த நோய்கள், கப சம்பந்த நோய்கள், விந்து ஒழுக்கு முதலிய விந்து சம்பந்த நோய்களை நீக்கி இரத்தத் தூய்மை முதலியவைகளை உண்டாக்கி உடற்கட்டு, உடற்களை, நீண்ட நல்வாழ்வுக்கான உடலாற்றல் ஆகியவைகளை உண்டாக்கும்.

மேற்கண்ட தேர்விற்கு நிற்காதவைகள் எல்லாம் உண்மையானவைகளாகா அல்லது முறைப்படியும் செய்யப்படாதவை களாம். ஆகையால் நல்ல குணத்திற்குப் பதிலாக குணமின்மை உண்டாகலாம் அவையாவன: -

விந்திழப்பு, சிறுநீரில் விந்துவருதல், விந்துவெளிப்பாடு, உடலில் எரிவந்தம், அழலை, சொறி சிரங்கு, இதயத்துடிப்பு, மார்பில் ஒருவகை

விகார ஒலிப்பு, தலை கிறுகிறுப்பு, தலைப்பாரம், தலைசுற்றல், சொட்டு மூத்திரம் முதலிய கடின நோய்களைப் பிறப்பிக்கும்.

தூய்மையில்லாமலும் முறைபிறழவும் செய்யப்பட்ட வெள்ளி முதலிய உலோகங்களால் உண்டான கடின நோய்கள் சிலசமயம் வேறெந்த மருந்தாலும் தீராவண்ணமாக உடலில் அந்நோயை நிலை பெற்றிருக்கச் செய்கின்ற படியால், ஆற அமரத் தேறித் தெளிய தேர்ச்சித்து உபயோகிக்க வேண்டியதே முதன்மையானது.

198. வெள்ளிச் செந்தூரம்

தூய்மைசெய்த வெள்ளி அரப்பொடி 1 பலம் (35 கிராம்) பாதிரிப்பட்டைச்சாறு, தண்ணீர் விட்டான் கிழங்குச்சாறு, சித்திர மூலவேர்ப்பட்டைச்சாறு, இந்நான்கு வகைச் சாறும் வகைக்கு 1 படி.

செய்முறை:- வெள்ளிப் பொடியைக் கல்வத்திலிட்டு பாதிரிப்பட்டைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு அரைக்க வேண்டும். இதனைக் கைவிடாமல் அரைக்கவேண்டுமென்னும் அவசியமும் இல்லை. சாறும் ஒரே காலத்தில் எல்லாம் வேண்டும் என்னும் அவசியமுமில்லை. சாறு கிடைத்தவரையில் அரைத்துக்கொள்ளலாம். ஆனால் அப்போதைக்கப்போது கணக்கு வைத்துமுடிவாக மேற்கண்ட கணக்களவு அரைப்பில் சாற்றைச் செலுத்திவிட வேண்டியதே முக்கியம். இவ்விதம் அரைப்பில் அரைப்படிச்சாறு சென்றபின் வில்லை தட்டிக் காயவைத்து ஓட்டிலிட்டுமேலோடு மூடி 5 சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் பத்துப் பங்கெடை விராட்டியிற் புடமிட்டு ஆறினபின் எடுத்துக் கொள்ளவும்.

பின்பு இதனைக் கல்வத்திலிட்டுத் தண்ணீர் விட்டான் கிழங்கின் சாற்றைச் சிறுகவிட்டு அரைத்து முன்போலவே புடமிட வேண்டும்.

முடிவாக, கொடிவேலி வேர்ப்பட்டைச் சாற்றிலும் மேற்கண்டவாறே புடமிட்டு எடுக்க எண்குணத்தான் அருளால் வெளிறின நிறமுள்ள செந்தூரமாகி இருக்கும்.

அளவு:- 1 முதல் 2 குன்றிமணியெடை.

தீரும்நோய்களும் துணைமருந்தும்:- சேத்துமசன்னி, சேத்து மத்தைப்பற்றி வரப்பட்டதான சீதசுரம், மித்திரசுரம், பக்க சூலை, மகோதரம், பெருவயிறு, நீரேற்றம், வல்லை, கபத் தொடர்கழிச்சல், கபப்பெருங்கழிச்சல், கபசம்பந்த பக்கசூலை, பயோதர

வன்மீகமென்னும் முலைக்கிரந்தி ஆகிய இவற்றிற்கும் இவைபோன்றவைகளுக்கும் பசுவின் பாலிலும்.

ஊது காமாலை, வறட்காமாலை, வாத காமாலை, பித்த காமாலை சேத்துமகாமாலை, வாதசேத்தும காமாலை, பித்த சேத்தும காமாலை, திரிதோட காமாலை, மஞ்சள் காமாலை, அழகு காமாலை, செங்கல காமாலை, கும்ப காமாலை, குன்ம காமாலை, ஆகிய இவற்றிற்கு குளிர்ந்த நீரிலும்.

வாதாதி குன்ம நோய்கள் வாதாதிதொந்த குன்மம், வலி குன்மம் ஆகிய இவற்றிற்கு வெந்நீரிலும்.

வாதசூலை, பித்தசூலை, சேத்துமசூலை, திரிதோடசூலை, ஆம சூலை, சர்க்கராசூலை, குன்ம சூலை பக்க சூலை, முதலிய இவற்றிற்கு பசுவின் மோரிலும்.

வாதச்சயம், பிததச்சயம், சேத்துமச்சயம், திரி தோடச்சயம் ஆகிய இவற்றிற்கு, பாலையிலைச் சாற்றிலும்.

மாலைக்கண், மந்தாரத் திமிரம், வறட்திமிரம், நீர்த்திமிரம், சேத்தும திமிரம், மேகத்திமிரம், வெள்ளெழுத்து ஆகிய இவற்றிற்கு பனங்கள்ளிலும்.

வாதப்பிடிப்பு, பித்தப்பிடிப்பு, சேத்துமப்பிடிப்பு, நரம்புப் பிடிப்பு, முதலியவற்றிற்கு தேனிலும்.

மார்பெரிச்சல், வயிற்றெரிச்சல், கை காலெரிச்சல் முதலிய இவற்றிற்கு சாராயத்திலும்.

வாத சுரம், பித்த சுரம், சேத்தும சுரம், திரிதோசச் சுரம், மேக சுரம், எலும்புச் சுரம் முதலிய எல்லாச்சுர நோய்கட்கு நெய்யிலும்.

வாதபாண்டு, பித்தபாண்டு, சேத்துமபாண்டு, மிர்த்திகா புக்தபாண்டு, விடபாண்டு ஆகிய இவற்றிற்கு கடப்பஞ்சாற்றிலும்.

செந்தாமரைப் பூவின் நிறத்தையுடைய செங்குட்ட மேகத் தேமல் அல்லது உத்கோட நோய், பலவித தேமல் நோய், திமிர் வாதம் ஆகிய இவற்றிற்கு கற்றாழைச் சாற்றிலும்,

அதிமூத்திர நோய், சொட்டுமூத்திர நோய், ஒழுக்குமூத்திர நோய், நித்திரை செய்யும்போது தானேபோகும் மூத்திரநோய் ஆகிய இவற்றிற்கு பாதாம் நெய்யிலும்.

மேற்படி வெள்ளிச் செந்தூரத்தை அளவுப்படி சேர்த்துட் கொள்ள மேற்கண்ட நோய்கள் தீரும் என்பதே.

குறிப்பு:- மேற்கண்ட பாகப்படி செய்ததில் வெளிறிய நிறமுள்ள செந்தூரமாக ஆனது, ஆனால் மேற்கண்ட எடை வெள்ளியைத் தகடடித்து, அதன் சமனளவு நெல்லிக்காய்க் கெந்தகத்தைப் பசுவின் நெய் விட்டரைத்து மேற்படி தகட்டிற்குக் கவசித்து ஓட்டில் வைத்துச் சீலைமண் செய்து கவசத்தின் 7 பங்கெடை விராட்டியில் புடமிட்டால், வெள்ளியானது வெட்டையாகி விடும். இந்த வெட்டையை எடுத்து மேற்கண்டவாறு செய்தால், மேலான செந்தூரமாகிறது. அல்லது, மேற்கண்ட புடம் ஒவ்வொன்றிலும் தடவைக்குத் தடவை காற்பலம் கெந்தகத்தைச் சேர்த்து அரைத்துப் புடமிட்டாலும் மேலான செந்தூரமாகி விடுகிறது. விருப்பமுள்ளவர்கள் எவ்விதமாயினும் செய்துகொள்ளலாம். இவை எல்லாம் அவரவர்களின் விருப்பத்தைப் பொறுத்தது.

மருந்துணவு:- அதிகப் புளிப்பான காய்கறிகள், உடல் வலிமையைக் குறைக்கும் செய்கை, பெண் சேர்க்கை முதலியவைகளாகா.

199. வெள்ளிச் செந்தூரம் (வேறு)

எவ்விதமாயினும் செய்யப்பட்ட வெள்ளி பற்பம் 1 பலம் (35 கிராம்), சாதிலிங்கம் 1 பலம் (35 கிராம்). எருக்கம்பால், அரசம்பட்டைச் சாறு, சிறுகாஞ்சோறு வேர்க் குடிநீர் இவைவகைக்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை:- மேற்கண்ட இரண்டு சரக்கையும் கல்வத்திலிட்டுப் பொடித்து எருக்கம்பாலைச் சிறுக சிறுகவிட்டு 1 மணி நேரம் அரைத்து உலர்த்திக் கொள்ள வேண்டும். இதன் பின் அரசம்பட்டைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு 1 மணி நேரம் அரைத்து உலர்த்திக் கொள்ளவேண்டும். இதன் பின்னர் சிறு காஞ்சோறி வேர்ப்பட்டைக் குடிநீரைச் சிறுகச் சிறுகவிட்டு 4 சாமம் (12 மணி) அரைத்து வில்லை செய்து உலர்த்தி அகலில் வைத்து மேலகல் மூடி 5 சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் பத்துப் பங்கெடை வராட்டியில் புடமிட்டாறினபின் எடுத்துக் கொள்ளவும்.

மேற்கண்டவாறே மூன்று வகைகளிலும் மேற்கண்டபடி அரைத்து அரைத்து மேற்கண்டபடி இன்னும் 4 புடமிட்டால் மேலான செந்தூரமாகி இருக்கும்.

அளவும் தீரும் நோய்களும் :- மேற்கண்டவைகளேயாம்.

200. வெள்ளிச் செந்தூரம்

தூய்மை செய்த வெள்ளி 1 வராகன் எடை (3½ கிராம்), தூய்மை செய்த வெள்வங்கம் 1 வராகன் எடை (3½ கிராம்), தூய்மை செய்த கெந்தகம், தூய்மை செய்த சவ்வீரம், தூய்மை செய்த நவாச்சாரம், வெடியுப்பு, தூய்மை செய்த அரிதாரம் இவை வகைக்கு ¼ வராகன் எடை, செருப்படைச் சமூலச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :- வெள்ளியைக் குகையிலிட்டு உருக்கி, உருக்கு முகத்தில் வெள்ளீயத்தைக் கொடுத்துக் கோலாடி எடுத்து வைத்து ஆறினபின் பார்த்தால் களங்காயிருக்கும். அந்தக் களங்கிற்குச சமனெடை இரசத்தை நிறுத்து எடுத்துக் கொள்ள வேண்டும். மற்ற சரக்குகளைத் தனித்தனியாகப் பொடித்து எல்லாவற்றையும் ஒன்றாகக்கலந்து கொள்ள வேண்டும். களங்கை கல்வத்திலிட்டு இடித்துத் தூள் செய்து இரசத்தைச் சேர்த்து அரைத்து மற்ற சரக்குகளையும் சேர்த்து மேற்படி செருப்படைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு 4 சாமம் (12 மணி) அரைத்து வில்லை செய்து ஈரமில்லாமல் உலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி ஏழு சீலைமண் செய்து நன்றாக உலர்த்திக் கவசத்தின் இருபது பங்கெடை விராட்டியில் புடமிட்டு எடுக்க செந்தூரமாகி இருக்கும். தீயின் விகற்பத்தால் செந்தூரமாகாதிருந்தால், மேற்கண்ட சாற்றை விட்டு அரைத்துச் செந்தூரம் இருக்கிற நிலைமைக்குத் தகுந்தது போல் புடமிட்டுக் கொள்ள வேண்டும்.

அளவு :- 1 முதல் 2 குன்றிமணி எடை.

துணை மருந்தும் தீரும் நோய்களும் :- பெருஞ்சீரகம், நற்சீரகம், ஏலரிசி, சாதிக்காய், சாதிப்பத்திரி, மேற்றோல் சீவின சுக்கு, மிளகு இவற்றின் தனித்தனித் தூள் வகைக்குச் சமனெடை, இந்த மொத்தத்திற்குச் சமனெடை கற்கண்டுத் தூள், எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து வைத்துக் கொள்ளவும். இந்தத் தூள் 1 வராகன் எடை (3 ½ கிராம்), தேன் அல்லது நெய் 1 வராகன் எடை (3 ½ கிராம்) இவற்றைக் கலந்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி சேர்த்துட்

கொண்டுவரின், சயம், இரைப்பிருமல், கபநோய், மந்தாரகாசம், செரியாமை நோய், பிரமேகம், மேகநோய், நீர்சம்பந்த நோய் முதலியவைகள் தீரும்.

மருந்துணவு :- மேற்கண்ட நோய்களுக்குத் தகுந்த விதமாகவும் உடல் குணத்திற்குத் தகுந்தது போலவும் பத்தியம் ஏற்படுத்த வேண்டியது.

குறிப்பு :- மேற்கண்ட செந்தூரமானது வைத்தியத்திற்கு உபயோகப்படுவது போலவே வாதமுறைகளுக்கும் உபயோகமாகிறது. நமது நண்பர்களும் சிலர் தங்களுக்கு உபயோகப்படும் படியாக சில வாத\ முறைகளை எழுதும்படியாக கடிதம் எழுதுகின்றார்கள். நாம் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக எழுதிக் கொண்டிருப்பதானால் நமக்கரிதாயுள்ள குறைந்த காலம் போதாது. சமயம் வாய்க்கும் போதெல்லாம் சில பல பாகங்களை நாம் எழுதியே வருகின்றோம். ஆனால் ஆங்காங்கு குறிப்பாகக் காட்டி இருப்பதால் விருப்பமுள்ளவர்கள் அந்தச் செய்திகளை ஆழ்ந்து அகல எண்ணிக் கஷ்டப்படுவார்களாயின் அவரவர்களின் புத்தி கூர்மைக்குத் தகுந்தபடியும் பலன் கிடைக்கும் என்பதும் உறுதி. இந்தக் குறையையும் ஒருவாறு போக்கும்படியாக நம்மாலியன்ற வரையில் முயற்சி செய்து "இரசவாத போதினி" என்னும் பத்திரிகையை வெளிப்படுத்தி இந்த இரசவாதமானது மெய் அல்லது. பொய் என்பதை உலகத்தாருக்கு விளக்கிக் காட்ட வேண்டும் என்னும் விருப்பம் இருந்தும் அவ்விதம் செய்ய இன்னும் சமயம் வாய்க்கவில்லை. கடவுள் அருள் செய்தால் குறைந்த அளவு முந்நூறு சந்தாதாரர்கள் சேர்ந்தவுடன் மேற்படி பத்திரிகையானது பிரசுரிக்கப்படும்.

201. வெள்ளிச் செந்தூரம் (வேறு)

நமது "அனுபோக வைத்திய நவநீதம்" முதல் பாகத்தில் 48-ம் எண்ணிலும். 98-ம் எண்ணிலும் முறையே சொல்லப்படுகின்ற அட்டலோக மாரணம், துவாதச லோக மாரணச் சரக்குகளினால் வெள்ளியைச் செந்தூரம் செய்து கொள்ளலாம். இன்னும் இந்த இரண்டாம் பாகத்தில் சொல்லப்பட்டிருக்கிற முறைப்படியும் வெள்ளியைச் செந்தூரம் செய்து கொள்ளலாம்.

அளவு, துணை மருந்து, தீரும் நோய்கள் :- ஆகியவைகளெல்லாம் முன் சொல்லப்பட்டிருக்கும் வெள்ளிச் செந்தூரத்தைப் போலவேயாம். இன்னும் அவரவர்களின் உத்தி, புத்தி பழக்கம் முதலியவைகளின்

படியும் துணை மருந்துகளை ஏற்படுத்தியும் உபயோகித்துக் கொள்ளலாம்.

தங்கத் தூய்மை :- பற்பம் செய்ய அல்லது செந்துரம் செய்ய தங்கத்தைத் தூய்மை செய்ய வேண்டியது முக்கியமாகும். தங்கமானது புடமிட்டுத் தூய்மை செய்ததாய் இருக்க வேண்டும். ஏனெனில், அதில் வெள்ளி, தாம்பிரம் ஆகியவை கலந்திருப்பதே காரணம்.

தங்கத்தைச் சற்றுக் கனமாய்த் தகடடித்துக் கரிநெருப்பில் பழுக்கக் காய்ச்சி நல்லெண்ணெயில் துவைக்க வேண்டும். நன்றாய்க் குளிர ஆறினபின் மறுபடியும் முன்போல் பழுக்கக் காய்ச்சி முன்போல் துவைக்க வேண்டும். ஒவ்வொரு தடவையும் எண்ணெயைப் புதிதாக வார்த்துக் கொள்ள வேண்டும். இவ்விதம் ஏழு தடவைகள் மடக்கி மடக்கிக் காய்ச்சித் துவைக்க வேண்டும். இவ்விதமே காய்ச்சி எவ்வேழு தடவைகள் முறையே காடி, கோமூத்திரம், கொள்ளை வேகவைத்த குடிநீர், புளித்த மோர் ஆகியவைகளில் விதிப்படி துவைத்து எடுக்க தங்கமானது தூய்மையாகும்.

தங்கத் தூய்மை (வேறு) :- கறையான் புற்றுமண், செங்கற்பொடி ஒட்டடை, காவிமண் ஆகியவைகளைச் சம பாகம் நிறுத்து எடுத்து கல்வத்தில் இட்டுக் காடியையும் எலுமிச்சம் பழச்சாற்றையும் ச பாகமாய்க் கலந்து சிறுகச் சிறுக விட்டு 1 (3 மணி) சாமம் அரைத்து தகட்டின் மீது கனமாய்ப் பூசிக் கரி நெருப்பில் வைத்துப் பலமா ஊதிப் பழுக்கக் காய்ச்ச வேண்டும். இவ்விதம் செய்து எடுத்து ஆறவைத்து மேலுள்ளவைகளை நீக்கித் தூய்மை செய்து கொள்ளவும் நன்றாய்த் தூய்மையாகவில்லை எனத் தோன்றுமாயின் முன் போலவே இன்னொரு முறையும் செய்து கொள்ளவும்.

தங்கத் தூய்மை (வேறு) :- இந்துப்பு, காட்டெருச் சாம்பல் கறையான் புற்றுமண், செங்கல் பொடி, காவிமண், புகையூறல் ஆகிய இவைகளைச் சம பாகமாய் நிஜத்தெடுத்துக் கல்வத்தில் இட்டு எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு மூன்று நாள் அரைத்து தங்கத் தகட்டின் மீது பூசிக் கரி நெருப்பில் பழுக்கக் காய்ச்சி எடுத்துக் கொள்ளத் தூய்மையாம்.

202. தங்க பற்பம்

தூய்மை செய்த தங்கம் 3 ¼ வராகன் எடை (11-5/8 கிராம்), இதனை வட்டமான தகடாகச் செய்து கொள்ள வேண்டும். தூய்மை

செய்த பாதரசம் 3 ¼ வராகன் எடை (11-5/8 கிராம்), தூய்மை செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் 3 ¼ வராகன் எடை (11-5/8 கிராம்), இவ்விரண்டையும் கல்வத்தில் இட்டு கச்சினாரி இலைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாம நேரமரைத்து (12 மணி) முன் தகட்டின் மேலெங்கும் சாயமாய்ப் பூசி உலர்த்திக் கொள்ள வேண்டும். மேற்படி கச்சினாரிப் பட்டையை மைபோல் அரைத்து வாய்கள் மட்டமாய்ப் பொருந்தக் கூடிய இரண்டு குகைகள் செய்து, முன் சித்தப்படுத்தி இருக்கிற தகட்டை ஒரு குகைக்குள் வைத்து அதன்மேல் மறு குகையால் மூடி வாய் நன்றாய்ப் பொருந்தும்படியாகச் செய்து கொள்ள வேண்டும். பின்பு இக்கவசம் கொள்ளும்படியான இரண்டு குகைகள் மண்ணால் செய்து ஒன்றிற்குள் வைத்து, மறு குகையால் மூடி, இரண்டு வாய்களும் ஒன்றாய்ப் பொருந்தும்படியாகச் செய்து, அதன்மேல் குகை முழுவதும் ஏழு சீலைமண் செய்து, ஈரம் உலர்ந்த பின் ஒரு கெசம் அகலம் ஒரு கெசம் ஆழமுள்ள ஒரு குழி தோண்டி, அதில் அரைவாசி காட்டு எரு மூட்டையை நிறைத்து, அதன் நடுவில் முன் கவசத்தை வைத்து, அதன் மேல் காட்டு எரு மூட்டைகளைக் குழி நிறையப் போட்டு புடமிடவும். மூன்று அல்லது நான்கு நாள் வரையில் தீயிருக்கும், மறு நான்கு நாள் குளிர ஆறவிட்டு எடுத்துக் கவசத்தை விழிப்புடன் பிரித்து முன்போலவே, பாதரசத்தையும் கெந்தகத்தையும் முன்னளவே, முன் சாற்றால் அரைத்து முன்போலவே கவசித்து முன்போலவே புடமிட்டு எடுத்து மூன்றாம் தடவையும் முன்போலவே செய்து புடமிட்டு எடுக்க நேர்த்தியான பற்பமாகும். இதனை விழிப்புடன் பளிங்குக்குப்பியில் பத்திரப்படுத்த வேண்டும்.

குறிப்பு :- இப்பாகத்தில் சொல்லப்பட்டிருக்கிற கச்சினாரி என்பதை வடதேசங்களில் கச்சினால் என்கின்றார்கள். அந்தப் பெயரே இவ்விடங்களில் மருவுக் கச்சினாரெனவழங்கப்படுகிறது. அந்த மரமானது முள்ளிலவ மரத்தைப் போலவே இருக்கிறது. சிலர் அதைக் காட்டு முள்ளிலவமரம் என்கின்றார்கள். அது அநேகமாகச் சரியாக இருக்கலாம். முள்ளிலவமரமும் அதுவும் பெரும்பாலும் ஒத்தே இருக்கிறது. இவ்வளவுதான் இதைப்பற்றி நாம் எழுதக் கூடும்.

அளவு :- 1 முதல் 2 அரிசி எடை.

துணைமருந்தும் தீரும் நோய்களும் :- மேற்கண்ட அளவுள்ள மேற்படி பற்பத்தை 1¼ வராகன் எடை தேனில் குழைத்துண்ணப்

பசியதிகம் உண்டாகும். இருதயம் மூளை, இரைப்பை ஆகியவைகள் பலப்படும். நினைவாற்றல் அதிகப்படும். முகக்களை, உடற்களை ஆகியவையுண்டாம். விந்து உற்பத்தி அதிகமாகித் தாதுவிருத்தி உண்டாகும்.

மேல் தோலை நீக்கி இடித்துப் பிழந்த இஞ்சிச்சாறு 1½ வராகன் எடை, தேன் 1½ வராகன் எடை, இரண்டையும் கலந்து மேற்படி பற்பத்தை அளவுப்படி சேர்த்துட்கொண்டு வர, வாத சம்பந்த நோய்கள், மலச்சிக்கல், மலக்கட்டு, வயிற்று வலி ஆகியவைகள் நீங்கும். நரம்பிழுப்பு, இசிவு ஆகியவைகளும் தீரும்.

வெற்றிலைச்சாறு, தேன், இவ்விரண்டும் வகைக்கு 1½ வராகன் எடை, இவ்விரண்டையும் கலந்து இப்பற்பத்தை அளவுப்படி சேர்த்துட்கொள்ள, இரைப்பிருமல், இரைப்பு, இருமல், கோழைக் கட்டு, கபக்கட்டு ஆகிய வகைகள் தீரும். செவிட்டு நோய், மந்தம் ஆகியவைகளைக் கண்டிக்கும். சீதள சம்பந்த நோய்கள், வாதசம்பந்த நோய்கள் ஆகிய எல்லாவகை சுரங்களும் தீரும்.

தண்ணீர் விட்டான் கிழங்குச்சாறு, தேன் இவ்விரண்டும், வகைக்கு 3 ¼ வராகன் எடை (11-5/8 கிராம்). இவ்விரண்டையும் கலந்து இப்பற்பத்தை அளவுப்படி சேர்த்துட்கொள்ள, எல்லாவகை பிரமேகங்கள், பிரமிய நோய்கள், இந்திரிய நோய்கள் விந்து ஒழுக்கு, விந்து வெளிப்பாடு, ஆகியவைகளை நீக்கி தாது விருத்தி, உடல் ...ளமை, உடல் வலிமை முதலியவைகளுண்டாம்.

வெட்பாலையரிசித் தூள் ¾ வராகன் எடை, தேன் 3 ¼ வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து மேற்படி பற்பத்தை அளவுப்படி சேர்த்துட்கொள்ள சங்கிரகணி, பேதி முதலியவை போன்ற பல மகாநோய்கள் தீரும்.

சாதிக்காய்த் தூள் 4 குன்றிமணி எடை, கும்குமப்பூ 4 குன்றிமணி எடை, மூங்கிலுப்புத் தூள் 4 குன்றிமணி எடை கத்தூரி 4 குன்றிமணி எடை, தேன் 6½ வராகன் எடை (22 ¾ கிராம்) இவையெல்லா வற்றையும் சேர்த்தரைத்துப் பாணிதம் போல் சித்தப்படுத்தி வைத்துக் கொள்ள வேண்டும். இப் பாணிதம் ½ வராகன் எடை (1¾ கிராம்), இதில் மேற்படி பற்பத்தை அளவுப் படி சேர்த்துட்கொண்டு அதன்மேல் காய்ச்சிக்கற்கண்டிட்ட பசுவின் பால் செரித்தல் திறனுக்குத் தகுந்ததுபோல் 1 முதல் 2 ஆழாக்குப் பருகச் செய்துவர உடல்

வலிவின்மை உடல் சோர்வு, சோம்பல், அசதி, கைகால் ஓய்ச்சல் முதலியவை தீர்ந்து உடல் வளமை, உடல்வன்மை, சுறுசுறுப்பு, ஊக்கம், தைரியம், வீரியம், உறுதி முதலியவைகளுண்டாகும். உடல் கொழுத்துத் தாதுவளமை உண்டாகும். உடல் வச்சிரக் காயமாகும்.

203. தங்க பற்பம் (வேறு)

தூய்மை செய்த தங்கம் 2 வராகன் எடை (7 கிராம்). இதனை உருக்கி, உருக்கு முகத்தில் தூய்மை செய்த அரைக்கால் வராகன் எடை கருவங்கத்தைக் கொடுத்துக் கோலாடி நன்றாய் உருக்கினபின் எடுத்துத் தண்ணீரில் நனைக்காமல் ஆறவைத்துப் பிறகு சன்ன அரத்தால் அராவிப் பொடி செய்து, 24 மணிநேரம் எலுமிச்சம் பழச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து அரைக்க வேண்டும். கைவிடாமல் அரைக்க வேண்டுமென்பது அவசியமில்லை. எப்படி யாயினும் 24 மணிநேரம் அரைக்க வேண்டுமென்பது தான் அவசியம். பிறகு ஒரே வில்லையாகச் செய்து வெய்யிலில் உலர்த்தி, அந்த வில்லையின் சமனெடை நெல்லிக்காய்க் கந்தகத்தைத் தூள் செய்து இதில் அரைவாசியை ஒரு சிறு அகலுக்குள்ளிட்டு ஏற்று பரப்பிவிட்டு வில்லையைச் சரியாக வைத்து, மற்ற அரைவாசி கெந்தகத்தூளை வில்லை மறையும்படியாகப் போட்டுச் சரிப்படுத்தி மேலகல் மூடி, ஏழு சீலைமண் செய்து வெய்யிலில் உலர்த்தி, ஈர மில்லாமல் உலர்ந்தபின் 100 பலம் (3500 கிராம்) விராட்டியில் புடமிட்டுக் குளிர ஆறினபின் எடுத்துக் கல்வத்திலிட்டு, முன்போலவே பழச்சாற்றை விட்டு 24 மணிநேரம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி வில்லைக்குச் சமமெனடை கந்தகத்தைத் தூள் செய்து முன்போலவே வில்லையின் கீழ் மேலிட்டு முன்போலவே சீலைமண் செய்து முன்போலவே புடமிட வேண்டும்.

இவ்விதம் மடக்கி, மடக்கி ஏழு புடமிட, மேலானப் பற்பமாகும்.

குறிப்பு :- இது எல்லாவிதத் தேர்வுகட்கும் ஒத்திருக்கும். விருப்பப்பட்டவர்கள் செய்து இதன் குணத்தைத் தெரிந்து பயன்படுத்திப் பார்க்கலாம்.

அளவு :- 1 முதல் 2 அரிசி எடை, காலை, மாலை இரண்டு வேளையும் உபயோகிக்கலாம்.

தீரும் நோயும், துணைமருந்தும் :- மேல்தோல் சீவின சுக்கை இடித்துத் துணியில் சலித்தத் தூளை புளித்த தயிரில் போட்டு ஒரு இரவு ஊற வைத்து மறுநாள் வெய்யிலில் உலர்த்த வேண்டும்.

மறுஇரவும் தயிரில் ஊற வைத்து மறுநாள் உலர்த்திக் கொள்ளவேண்டும். இவ்விதம் ஏழு முறைகள் செய்த சுக்குத் தூளிற்குத் தயிர்ச் சுண்டித் தூள் என்று பெயர். இந்தத் தூள் 2 குன்றிமணி எடை, அதிவிடயத் தூள் 2 குன்றிமணி எடை, தேன் 1¼ வராகன் எடை (4-5/8 கிராம்) இவற்றைக் கலந்து மேற்கண்ட அளவுப்படி மேற்படி பற்பத்தைக் குழைத்துட் கொள்ள, அதிசார பேதி, கிரகணி, வயிற்றுக்கடுப்பு இரத்தபேதி முதலிய பல பேதிநோய், இரத்தக் கடுப்புகள் தீரும்.

உலர்த்தின பொடுதலைக்காய்த் தூள், முள்ளிலவம் பிசின் தூள் இவ்விரண்டும் வகைக்கு 1/8 வராகன் எடை, தேன் 3 வராகன் எடை (10½ கிராம்) இவற்றைக் கலந்து மேற்படி பற்பத்தை அளவுப்படி சேர்த்துட்கொள்ள, எல்லா வகை சங்கிரகனி நோய்களுந் தீரும்.

தும்பைப் பூச்சாறு, தேன் இவ்விரண்டும் வகைக்கு 3 வராகன் எடை (10½ கிராம்), இவ்விரண்டையும் கலந்து இளஞ்சூடு உண்டாக்கி, இதில் மேற்படி பற்பத்தை அளவுப்படி சேர்த்துட்கொள்ள, நடுக்கல் சுரம் முதலிய பல சுரங்கள் தீரும்.

கையாந்தகரைச் சாறு, பசுவின் நெய், தேன் இம் மூன்றும் வகைக்கு 2½ வராகன் எடை (8 ¾ கிராம்) இம் மூன்றையும் ஒன்றாகக் கலந்து குழப்பி மேற்படி பற்பத்தை அளவுப்படி சேர்த்துட் கொண்டு வர, உடலியல்பு எப்போதும் நலமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும். எவ்வித நோயும் அணுகாது. நரை திரை ஆகியவை மாறும் உடற் சோர்வு, முகச் சோர்வு, உடற்களைப்பு, முகம் வாடுதல் முதலிய சோர்வுகளெல்லாம் நீங்கி முகப்பொலிவு, உடற்பொலிவு, தேகக்களை, முகக்களை ஆகியவை உண்டாகும். புத்தி கூர்மை, புத்திதெளிவு, நினைவாற்றல், ஆய்வாற்றல், உறுதி, ஊக்கம், சுறுசுறுப்பு, மனச்சக்தி, உடல்வலிமை,தாதுப் பெருக்கம், இரத்தப் பெருக்கம் முதலியவைகள் உண்டாகும்.

எள்ளின் பூச்சாறு தேன் இவை இரண்டும் வகைக்கு 3 வராகன் எடை (10½ கிராம்) இவ்விரண்டையுங் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண வாத மூலநோய் தீரும்.

இந்துப்புத்தூள், அரிசித்திப்பிலித்தூள், கொடிவேலிவேர்ப் பட்டைத் தூள், மேல்தோல் சீவின் சுக்குதூள் இந் நான்கும் வகைக்கு 2 குன்றிமணி எடை, பசுவின் மோர் அரை ஆழாக்கு, மோரில் முன்

தூள்களைக் கரைத்து மேற்படி பற்பத்தை அளவுப்படி சேர்த்துட் கொண்டுவர, எல்லாவித மூல நோய்களும் தீரும்.

வாய்விளங்கத் தூள் ¼ வராகன் எடை, தேன் 3 வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண, வயிற்றிலுள்ள நுண்புழுக்களெல்லாம் நாசமாகி வெளிப்பட்டுப்போகும்.

சிலாசத்துத்தூள் அல்லது சிலாசத்து பற்பம் 4 குன்றிமணி எடை, ஏலரிசித் தூள் 2 குன்றிமணி எடை, தேன் 4 வராகன் எடை இவற்றை ஒன்றாகக் குழைத்து மேற்படி பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண: நீர்க்கட்டு, நீரடைப்பு, நீரெரிச்சல் முதலிய நீர்சம்பந்த நோய்கள் தீரும்.

முள்ளங்கிக் கிழங்குச் சாறு 1¼ பலம், சீனாக் கற்கண்டு ½ பலம் இவ்விரண்டையும் சேர்த்து மேற்படி பற்பத்தை அளவுப் படி கலந்து உட்கொண்டுவர பாண்டு நோய், ஊதுகாமாலை, குருதிக் குறைவு நோய் முதலிய நோய்கள் தீரும்.

இன்னும் நோய்களுக்கேற்ற இளகத்தில் கலந்துட் கொள்ள அந்தந்த நோய்கள் தீரும். ஆகையால் மருத்துவ வல்லுநர்கள் சமயோசிதமாகவும் உடல்நிலை, நோய் வலிமை, உடல் வலிமை ஆகியவைகளுக்குத் தகுந்த விதமாகவும் உபயோகித்து வெற்றி பெறுவார்கள்.

204. தங்க பற்பம் (வேறு)

தூய்மை செய்த மனோசிலை 3 வராகன் எடை (10½ கிராம்), கடலில் விற்கிற ஈயச் செந்தூரம் 3 வராகன் எடை (10½ கிராம்) இவ்விரண்டையும் சேர்த்துக் கல்வத்தில் பொடித்து அஞ்சனம்போல நுண்மையான பின்பு ஒரு பீங்கான் பாத்திரத்தில் போட்டு வெள்ளெருக்கன் பாலாயின் உத்தமம். அது அகப்படாவிட்டால் நாட்டெருக்கன் பாலைவிட வேண்டியது. பாலானது மேற்படி சரக்கு அமிழ்ந்து பால் கொஞ்சம் அதிகமாக இருக்கவேண்டியது. அந்தப் பாத்திரத்தை வெய்யிலில் வைத்து இரண்டு மூன்று தடவைகள் யானை தந்தக்குச்சியால் அல்லது மூங்கிற்குச்சியாற் கிளறிக் கொடுத்து வரவும் வேண்டும். அது நன்றாய் உலர்ந்த பின்பு அதனைக் கல்வத்தில் இட்டுத் தூள் செய்து மறுபடியும் பீங்கான் பாத்திரத்தில் போட்டு முன்போலவே பாலைவிட்டு உலர்த்த வேண்டும். இவ்விதம் 7 தடவைகள் மடக்கிப் மடக்கிப் பாலைவிட்டு உலர்த்தியும் பொடித்து 8 தடவை மேற்படி

எருக்கம்பாலை அதிகமாக விட்டுப் புது ஓட்டில் வைத்துச் சிறு தீயாயெரித்து பால் சுண்டினபின் பக்குவமாக வறுத்து எடுத்துப் பொடித்து வைத்துக் கொள்ளவேண்டும். இதற்குச் சிலைவங்க யோகம் என்பது பெயர்.

ஒரு பங்குத் தங்கத்தைக் குகையில் உருக்கி மூன்று பங்கு மேற்படி சிலைவங்க யோகப் பொடியைச் சிறுகச் சிறுகக் கலந்து வரவேண்டும். ஒரு தடவை கலந்த பொடியானது புகைந் தடங்கினபின் மறுபடியும் கலக்க வேண்டியது. இவ்விதம் மேற் கண்ட எடை கலந்தால் தங்கமானது பற்பமாகிவிடும்.

அளவு :- 1 முதல் 2 அரிசி எடை.

துணைமருந்தும் தீரும்நோயும் :- தும்பைப்பூச்சாறு, விஷ்ணுகிரந்திச் சாறு இவ்விரண்டும் வகைக்கு 1½ வராகன் எடை, தேன் 3 வராகன் எடை (10½ கிராம்), இவற்றைச் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண, நாலாம் முறைக் காய்ச்சல், இடுப்பு வலி, நீர்க்கோவை முதலியவை தீரும்.

ஆறு வராகன் எடை தேனில் இரண்டு அரிசி எடை பற்பத்தைக் குழைத்து உட்கொண்டு, அதன் மேல் கொட்டைக் கரந்தைச் சாற்றைப் பருகச் செய்யவேண்டும். இவ்விதம் நோய் வலிமை, உடல் வலிவுத் தன்மை ஆகியவைகளுக்குத் தகுந்த விதமாக 1 முதல் 15 நாள்கள் கொடுத்து வர, கண்டமாலை, பவுத்திரங்கள், புரை, புண் ஆகியவைகள் தீரும்.

சூரியகாந்தி இலைச்சாறு 1½ வராகன் எடை, தேன் 2 வராகன் எடை இவ்விரண்டையும் சேர்த்து மேற்படி பற்பத்தை அளவுப்படி சேர்த்து உண்டு வர, ஒருத்தலை நோய், சூரியவர்த்தத் தலை நோய் ஆகியவை தீரும்.

மேல்தோல் நீக்கின சீந்திற்கொடிச்சாறு, தேன் இவ்விரண்டும் வகைக்கு 3 வராகன் எடை சேர்த்து, மேற்படி பற்பத்தை அளவுப்படி கலந்துட் கொண்டுவர என்பு சுரம், நாட்சென்ற சுரம், சுரம் ஆகியவை தீரும். உடல் வலிவுண்டாகும். சோர்வு, சோம்பல் ஆகியவை நீங்கிச் சுறுசுறுப்பு உண்டாகும்.

பாகப்படுத்தின மைசாட்சி அல்லது குக்கில் ¼ வராகன் எடை, பசுவின் நெய் 3 வராகன் எடை இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட

பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்டுவர, பக்கவாதம் முதலிய 80 வகை வாத நோய்களும் தீரும்.

மைசாட்சிப் பக்குவம்

தசமூலம் அதாவது வில்வம், பெருங்குமிழ், யானை நெருஞ்சில். முன்னை, சிறுமல்லிகை "பெருமல்லிகை" சிறுவணை, கத்திரி, பாதிரி, பெருவாகை ஆகியவைகளாம். இப் பத்தின் வேர்வகைக்கு 1½ பலம் இவற்றைச் சிதைத்து மூன்று ஆழாக்கு நீரில் போட்டுக் காய்ச்சி 1½ ஆழாக்காகச் சுண்டவைத்திறக்கி இளஞ்சூட்டுடன் பிசைந்து திப்பி நீக்கி வடிகட்டின குடிநீரில் சுத்தமான ஒரு பலம் மைசாட்சி போட்டுக் காய்ச்சவேண்டும். மைசாட்சி கரைந்தவுடன் கீழிறக்கி சற்று நேரம் தாமதித்து மேலுக்கு மேலாக அதன் தெளிவையிறுத்து நீக்கிவிட்டுக் காய்ச்சிக் குழம்புப் பதமானவுடன் ¼ முதல் ½ வராகன் எடையுள்ள மாத்திரைகளாகச் செய்து வைத்துக் கொள்ளவேண்டும். இதுவே மைசாட்சி பக்குவமாம். இவ்விதம் தேவையான வரையில் செய்து கொள்ளலாம். இது மேற்கண்ட தங்க பற்பத்திற்கு உபயோகமாவது மின்றியும் தனியாகவும் உபயோகமாகின்ற படியால், இதன் அளவு, தீரும் நோய் முதலியவைகளையும் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

பக்குவப்படுத்தின மைசாட்சியை சிறு சுண்டைக்காய் அளவு மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்திவைத்துக் கொள்ளலாம். வேண்டும்போது தேவையான நிறை கல்வத்தில் பொடித்து நீரை அல்லது மேற்படி தசமூலக் குடிநீரை விட்டரைத்து அவசியமான அளவு மாத்திரைகள் செய்து கொள்ள வேண்டும். நோயின் வலிவு, உடல் வலிவு முதலியவைகளுக்குத் தகுந்த விதமாக ¼ முதல் 1 வராகன் எடை வரையில் சாப்பிடலாம். காலையில் ஒரு வேளை அல்லது காலை, மாலை இரண்டுவேளையும் சாப்பிடலாம்.

தீரும் நோய்கள் :- பக்குவப்படுத்தின மைசாட்சியால் மேக ரணம், மேகக் கைகால்பிடிப்பு, பலவகை விட சம்பந்த நோய்கள், நாசிப்புண், காதுப்புண், பலவகைக் கட்டிகள், பலவகைக் கடிகள், பலவகை சூலை சம்பந்த நோய்கள் கைமுடக்கு, கால் முடக்கு, கீல்முடக்கு முதலிய பெரிய நோய்கள் நாட்பட்டவைகளாயினும் தீரும். ஆனால், நோய் பலமானதாயின் கடும்பத்தியம் இருக்கவேண்டும். அதாவது, உப்பு, புளி, புணர்ச்சி, புகை ஆகியவைகளை நீக்க வேண்டும். நோய் சற்று சுலபமானதாயின் உப்பைச் சேர்த்துக் கொள்ளலாம். இதற்குப் பச்சைத்

தண்ணீர் மாத்திரையெனப் பெயர். தேவையான போது நீர் விட்டரைத்துக் கொள்வதே காரணமாம். இது வைத்திய இரகசிய முறைகளிலொன்று.

தேன், பசுவின் நெய், இவையிரண்டும் வகைக்கு 3 வராகன் எடை நெல்லரிசிச் சாதம் ஒரு கவளம், இவை எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து மேற்படி பற்பத்தை அளவுப்படி சேர்த்துட் கொண்டுவர பசிசக்தி அதிகப்படும். இரைப்பை பலப்படும். அசதி, சோம்பல் ஆகியவை நீங்கிச் சுறுசுறுப்பு உண்டாகும்.

தோலுரித்த வெள்ளைப் பூண்டு 1 பங்கு, தேன் 1 பங்கு, பசுவின் பால் செல்லத்தக்க அளவு, பாலில் பூண்டைப் போட்டு வேகவைத்து நன்றாய் வெந்த பக்குவத்தில் எடுத்து நெய்யில் வறுத்து அம்மியில் வைத்தரைத்துத் தேனைக் காய்ச்சிப் பாகு பதத்தில், முன் சித்தப்படுத்தின பூண்டு பாகத்தைச் சேர்த்து மாஜுன் பதமாகச் செய்து கொள்ளவேண்டும். இதில் வேளைக்கு 2 வராகன் எடை (7 கிராம்), இதில் மேற்படி பற்பத்தை அளவுப்படி வைத்துண்டுவர வாயு சம்பந்தமான எல்லா நோய்களும் தீரும்.

தூய்மை செய்த கிட்டத்தூள், மேல்தோல் நீக்கின சுக்குத் தூள், கறிமிளகுத் தூள், அரிசித்திப்பிலித் தூள் இவை வகைக்கு 2 குன்றிமணி எடை, தேன் 3 வராகன் எடை, இவை எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து மேற்கண்ட பற்பம், ஒரு குன்றிமணி எடையைச் சேர்த்துக் குழைத்து உண்ணவேண்டும். அதன்மேல் 2 முதல் 4 பலம் மோரைக் குடிக்க வேண்டும். இவ்விதம் காலை, மாலை 2 வேளையும் செய்துவர, மூலநோய், காமாலை நோய், மந்தாக்கினி நோய், தொடர் கழிச்சல், கைகால் முடக்கு முதலிய நோய்கள் தீரும்.

205. தங்க பற்பம் (வேறு)

தூய்மை செய்த தங்க அரப்பொடி ½ வராகன் எடை, தூய்மை செய்த அண்டவோடு 1 வராகன் எடை, உத்தாமணிப் பால் 1 வராகன் எடை.

செய்முறை :- தங்கத்தையும் அண்டவோட்டையும் கல்வத்தில் ஒரு மணிநேரம் அரைத்து மேற்படி உத்தாமணிப் பாலை விட்டுப் பிசறிச் சுட்ட மூசையிலிட்டு வாய்க்குச் சில்லிட்டு 5 சீலைமண் செய்து உலர்த்தி ஒரு குண்டுசட்டியில் இரண்டரைப் படி அல்லது மூன்றுபடி உமியைப்போட்டு அதற்கு நடுவில் முன் சித்தப்படுத்தின மூசையை

வைத்து நெருப்பிட்டு ஆறின பின்னெடுக்கச் சித்தரது அருளால் பற்பமாகி இருக்கும்.

அளவு :- 1 முதல் 2 குன்றிமணி எடை.

தீரும் நோய்கள் :- தகுந்த துணைமருந்துகளில் மேற்கண்ட அளவுப்படி உண்டுவர, காசநோய், சயநோய், வாயுநோய், இருமல் நோய் ஆகியவைகள் தீரும். கொழுமை அதிகரித்துண்டான தாதுக்குறைவு தீர்ந்து, உடல் வலிவு, உடல் திடம் முதலியவைகள் உண்டாகும்.

மருந்துணவு :- நோய்க்குத் தகுந்தது போல் பத்தியம் வைக்க வேண்டியதே சிறப்புடையதாகும்.

206. தங்க பற்பம் (வேறு)

தூய்மை செய்த தங்க அரப்பொடி 1 வராகன் எடை, வாலைரசம் 1 வராகன் எடை, சிறு செருப்படைச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :- இரசத்தையும் தங்க அரப்பொடியையும் ஒரு பீங்கான் டம்ளரில் விட்டு 24 மணிநேரம் வைத்து எடுத்தால் இரசமும் தங்கமும் தொந்தித்துக் கொண்டிருக்கும். இதனைக் கல்வத்திலிட்டு மேற்படி சிறுசெருப்படைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு 2 சாமம் அரைத்துச் சிறு வில்லைகளாகச் செய்து காய வைத்து நன்றாக உலர்ந்த பின்பு ஓட்டிலிட்டு மேலோடு மூடி 5 சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் இருபது பங்கெடை விராட்டியில் புடமிட்டாறின பின்னெடுக்க, பற்பமாக இருக்கும்.

அளவு :- ½ முதல் 1 அரிசி எடை.

தீரும் நோய்கள் :- தகுந்த துணைமருந்துகளிலிட, நீரிழிவு, இருமல், மேகம் முதலிய நோய்கள் தீர்த்து, தாதுவிருத்தி, உடல் வலிமை முதலியவைகளும் உண்டாகும்.

மருந்துணவு :- இச்சாபத்தியம்.

207. தங்க பற்பம் (வேறு)

தூய்மை செய்த தங்க அரப்பொடி 1 வராகன் எடை (3½ கிராம்) புளியாரைத் தனிச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :- தங்க அரப்பொடியைக் கல்வத்தில் இட்டு மேற்படி புளியாரைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு இரண்டு சாமம் அரைத்து

வில்லை செய்து உலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடிச் சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் இருபது பங்கு எடை விராட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுத்து முன்போல் முன் சாற்றால் அரைத்து முன்போல் கவசித்து முன்போல் புடமிட வேண்டும். இவ்விதம் மூன்றாம் தடவையும் புடமிட்டுக் கொண்டால் மலர்மிசையான் அருளால் நல்ல பற்பமாகி இருக்கும். இந்தப் பற்பமானது கொஞ்சம் செஞ்சாயலான நிறமுள்ளதாய் இருக்கும். இது அதிகச் சிவப்பில்லாமல் வெண்மையே மிகுதியாக இருப்பதால் பற்ப வகையில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

அளவு :- ½ முதல் 1 அரிசி எடை.

தீரும்நோய் :- மேற்கண்ட பாகத்தில் சொன்னவைகளேயாம்.

208. தங்கச் செந்தூரம்

தூய்மை செய்த தங்க அரப்பொடி 3 வராகன் எடை (10½ கிராம்) தகரை இலைச்சாறு, கடுக்காய் இலைச்சாறு, யானைக் காஞ்சொறியிலைச் சாறு நான்கும் வகைக்கு ½ ஆழாக்கு.

செய்முறை :- மேற்படி தங்க அரப்பொடியைக் கல்வத்திலிட்டுத் தகரையிலைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு அரைக்க வேண்டும். இதனைத் தொடர்ச்சியாகக் கைவிடாமல் அரைக்க வேண்டுமென்னும் நிபந்தனை இல்லை. இந்தச் சாறு அவ்வளவும் ஏககாலத்திலேயே வேண்டுமென்னும் அவசியமுமில்லை. சாவகாசமானபோது அரைத்துக் கொள்ளலாம். சாறு கிடைத்த போதெல்லாம் சிறுகச் சிறுகச் சேர்த்துக் கொள்ளலாம். எவ்விதமும் மேற்கண்ட அளவு சாற்றை அரைப்பில் செலுத்த வேண்டியதே சிறப்பைத் தருவதாகும். மேற்கண்ட சாறானது அரைப்பில் சென்ற பிறகு வில்லை செய்து உலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி 5 சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் பத்துப் பங்கு எடை விராட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுத்துக் கொள்ளவும்.

மேற்படி அரைகுறையான செந்தூரத்தைக் கல்வத்தில் இட்டுக் கடுக்காய் இலைச்சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு மேற்கண்டவாறே புடமிட்டு எடுத்துக் கொள்ளவும்.

மேற்படி அரைகுறையான செந்தூரத்தை யானைக் காஞ்சொறிச் சாற்றிலும் மேற்கண்டவாறே புடமிட்டு எடுத்துக் கொள்ள வேண்டும்.

மேற்படி அரைகுறையான செந்தூரத்தைப் பசலை இலைச் சாற்றிலும் மேற்கண்டவாறே புடமிட்டெடுத்துக் கொள்ள பரம்பொருள் அருளால் சிறப்பான செந்தூரமாகி இருக்கும். தீயின் விகற்பத்தால் பூரணமான செந்தூரமாகாதிருந்தால், மேற்படி நான்கு வகைச்சாறுகளையும் ஒன்றாகக் கலந்து அந்த கலவைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு இரண்டு சாமமரைத்து முன்போல் புடமிடச் செந்தூரமாகி விடும்.

இந்தச் செந்தூர முறையில் தீயினளவை நிதானித்துச் செய்ய வேண்டியதுதான் கொஞ்சங் கடினமாகும். ஆங்கில முறைப்படி எரிப்பின் தீயளவைப் பற்றிய கருவி நம்மிடமில்லாதது பெருந்துன்பமாக இருக்கிறது. அவ்விதக் கருவிகள் புடத் திட்டத்தை அறியும்படி ஏற்பட்டிருந்தால் மிகவும் அனுகூலமாயிருக்கும். காலம் செல்லச் செல்ல அதற்கும் ஒரு வழியேற்பட்டுப் போகும்.

அளவு :- ½ முதல் 1 குன்றிமணி எடை.

துணைமருந்தும் தீரும்நோயும் :- பசுவின் வெண்ணெய் 1 வராகன் எடை, இதில் மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்துண்ண தனுர்வாயு, சூதக வாயு, நேத்திரவாயு, மூர்ச்சை வாயு, உருத்திர வாயு, தொந்த வாயு, விசுண்டவாயு முதலாகிய வாயு நோய்கள் தீரும்.

சர்க்கரை 1 வராகன் எடை, இதில் மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படிக் கலந்துண்ண, நீரிழிவைப் போன்று உள்பாதம் விளைக்கத்தக்க சேத்துமாதிக்க நோய்கள், கபமேகம், கபவாதம், கபவாத நடுக்கல்; கபபந்தம், உடல்வலி ஆகியவைகள் தீரும்.

வெந்நீர் 3 வராகன் எடை, தேன் 1½ வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி சேர்த்துட் கொள்ள வாத உப்புசம், பித்த உப்புசம், கப உப்புசம் ஆகியவைகள் தீரும்.

நெருஞ்சிச்சாறு 1 வராகன் எடை, இதில் மேற்படி செந்தூரத்தை அளவுப்படி கலந்தருந்த வாத சம்பந்த வயிற்றுவலி பித்த சம்பந்த வயிற்றுவலி, சேத்தும சம்பந்த வயிற்றுவலி என்னும் இவைகள் தீரும்.

குளிர்ந்த நீர் 3 வராகன் எடை, தேன் 1½ வராகன் எடை, இவற்றைக் கலந்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்துண்ண சயநோய், உப்புசவாந்தி, உளமாந்தம் ஆகியவைகள் தீரும்.

மிளகுரசம் 1 வராகன் எடை, இதில் மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்துண்ண, வாதகாசம், பித்தகாசம், சேத்துமகாசம் என்னும் இந்த நோய்கள் தீரும்,

பசுவின்மோர் 1 வராகன் எடை, இதில் மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்துண்ண வாதமூலம்: பித்தமூலம், சேத்தும் மூலம் என்னும் மூலவகைகள் தீரும்.

சோற்றுக் கற்றாழைச்சாறு 1 வராகன் எடை, இதில் மேற்படி செந்துரத்தை அளவுப்படி கலந்துண்ண, வாத மகோதரம், பித்த மகோதரம், சேத்தும மகோதரம் என்னும் மகோதர வகைகள் தீரும்.

பசுவின் பால் 1 வராகன் எடை, இதில் மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்து உட்கொள்ள சேத்தும விக்கல், பித்த விக்கல், வாத விக்கல் முதலியவைகள் தீரும்.

களிப்பாக்குக் குடிநீர் 1 வராகன் எடை. இதில் மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்துண்ண, இரணசன்னி, சுரம், இரணம் ஆகியவைகள் தீரும்.

தேன் 1 வராகன் எடை, இதில் மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்துண்ண, சீதசுர நடுக்கம், நடுக்குசுரம், நடுக்குவாதம் ஆகியவைகள் தீரும்.

இன்னும் இதின் சிறப்புமிகக துணைமருந்துகளையும் பத்தியங்களையும் தெரிந்து கொள்ள வேண்டுமாயின் நமது "இராஜ வைத்திய மகுடம்" இரண்டாம் பாகம் தங்கச் செந்தூரம் என்னும் தலைப்பில் தயவுடன் பார்த்துக் கொள்ளவும்.

209. தங்கச் செந்தூரம (வேறு)

தூய்மை செய்த தங்க அரப்பொடி, தூய்மை செய்த இரசம் தூய்மை செய்த நெல்லிக்காய் கெந்தகம், கீழ்க்கண்டபடி தூய்மை செய்த சிறுகண் நாகம், இவை வகைக்கு 1 வராகன் எடை, கறுப்பு வெற்றிலைச்சாறு, உத்தாமணி இலைச்சாறு, இவை செல்லத்தக்க அளவு.

செய்முறை: - நாகத்தையும் இரசத்தையும் கலக்கும்படி அரைத்துக் கொள்ளவேண்டும். எல்லாவற்றையும் கல்வத்தில் இட்டுப் பொடித்து மேற்படி வெற்றிலைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு மூன்றுசாமம் அரைத்து ஒரே வில்லையாகச் செய்து வெய்யிலில் உலர வைக்க

வேண்டும். நன்றாய் உலர்ந்த பின் ஓட்டில் இட்டு மேலோடு மூடி மூன்று சீலைமண் செய்து 5 பலம் விராட்டியில் புடமிடவேண்டும். ஆறினபின் எடுத்துக் கல்வத்தில் இட்டு மேற்படி கறுப்பு வெற்றிலைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு முன்போல் மூன்று சாமம் அரைத்து ஒரே வில்லையாகச் செய்துவெய்யிலில் வைத்து நன்றாய் உலர்த்திமுன்போல் கவசம் செய்து உலர்த்தி 5 பலம் விராட்டியில் புடமிட வேண்டும். இவ்வாறே மூன்றாம் தடவையும் புடமிட்டு எடுத்துக் கொள்ள வேண்டும்.

பிறகு உத்தாமணிச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு முன் போல் மூன்று சாமம் அரைத்து முன்போல் வில்லை செய்து உலர்த்தி முன்போல் கவசித்து உலர்த்தி முன்போல் 5 பலம் விராட்டியில் முன்போல் புடமிட்டு எடுத்துக் கொள்ளவும். இவ்விதமே உத்தாமணிச் சாற்றில் இன்னும் இரண்டு புடமிட்டு எடுக்கச் சிவந்த செந்தரமாகி இருக்கும். அப்படிச் சிவக்காதிருந்தால் மேற்படி உத்தாமணிச் சாற்றில் இன்னுமொரு புடமிட்டு எடுத்துக் கொள்ள சிவந்து போகும். புடத்திற்குப் புடம் மருந்தை நிறுத்துக் கொண்டு வரவேண்டியது. உள்ள எடையில் குறைந்தால் குறைந்த எடை கெந்தியைச் சேர்த்து வரவேண்டும்.

அளவு:- 1 முதல் 2 குன்றிமணி எடை.

தீரும் நோயும் துணைமருந்தும்:- திறமான கோரோசனையைப் பொன்னிறமாக வறுத்துப் பொடித்த தூள் 4 குன்றிமணி எடை, தேன் 1 வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலத்துண்ண இரைப்பிருமலானது இரண்டு அல்லது மூன்று வேளையில் குணமாகும். நாட்பட்ட நோயாயிருந்தால் ஆறு வேளையில் குணங்காணும். இன்னும் மூச்சு முட்டல், இரைப்பு, மந்தார காசம் ஆகியவைகளும் கூடிய சீக்கிரத்தில் குணமாகும்.

மேற்றோல் சீவின சுக்குத் தூள் 8 குன்றிமணி எடை, தேன் 2 வராகன் எடை. இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி சேர்த்துண்ண வாயு சம்பந்த நோய்களான மேகவாயு, கைகால் பிடிப்பு முதலியவைகள் தீரும்.

சீமை நீர்முள்ளி விதைத் தூள் 1 வராகன் எடை, நிலப் பனைக்கிழங்கு தூள் 1 வராகன் எடை, தேன் 3 வராகன் எடை இவற்றைக் கலந்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்து

உட்கொண்டு, அதன்மேல் காய்ச்சிக் கற்கண்டிட்ட பாலை செரித்தல் திறனக்குத் தகுந்தபடி அரை, முக்கால், ஒன்று ஆழாக்குப் பருகச் செய்துவர வேண்டும். இவ்விதம் செய்து வந்தால் வாலறிவன் அருளால் ஆறு நாளைக்குள் தாது இழப்புத் தீர்ந்து தாதுவிருத்தி உடல் வலிமை, உடல் வளமை முதலியவைகள் உண்டாகும்.

மருந்துணவு:- நோய் வலிமை, உடலியல்பு ஆகியவைகளுக்குத் தகுந்தது போல் பத்தியம் ஏற்படுத்த வேண்டும்.

சிறுகண் நாகத்தூய்மை :- நாகத்தை உருக்கிச் சுண்ணாம்புத் தெளிவில் சாய்க்க வேண்டும். ஆறினபின் எடுத்து முன்போல் உருக்கி முன்போல் சுண்ணாம்புத் தெளிவில் சாய்க்க வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி 7 தடவைகள் செய்து கொள்வதே தூய்மையாம்.

210. தங்கச் செந்தூரம் (வேறு)

தூய்மை செய்த தங்க அரப்பொடி 3 வராகன் எடை (10½ கிராம்), நீண்ட இலையை உடைய உப்பிலாங்கொடிச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :- மேற்படி தங்கப் பொடியைக் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு இரண்டு சாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டிலிட்டு மோலாடு மூடி மூன்று சீலைமண் செய்து 5 பலம் விராட்டியில் புடமிட்டெடுத்து முன்சாற்றில் முன் போலவே அரைத்து முன் போலவே கவசித்துலர்த்தி ஏழரைப் பலம் விராட்டியில் புடமிட வேண்டும். இவ்விதமே மடக்கி மடக்கி மேற்கண்ட சாற்றில் அரைத்து இன்னும் ஏழு புடமிட வேண்டும். ஆனால் புடத்திற்குப் புடம் இரண்டரை இரண்டரைப் பலம் விராட்டியை அதிகப்படுத்திக் கொண்டே போக வேண்டும். ஆகக் கூடிய ஒன்பது புடமும் தீர்ந்தால் சித்தர் அருளால் தளுக்கற்று குங்குமம் போன்ற செந்தூரமாக இருக்கும்.

அளவு, துணைமருந்து, தீரும் நோய் :- பசுவின் நெய் 40 பலம் மேற்படி செந்தூரம் 1 குன்றிமணி எடை இவ்விரண்டையும் கலந்து வைத்துக் கொள்ளவும். இந்த நெய் வேளை ஒன்றுக்கு 2 முதல் 3 வராகன் எடை, உட்கொண்டு வரவேண்டும். இவ்விதம் செய்து வருவதினால் தாது இழப்பு, விந்து இழப்பு ஆகியவைகள் தீர்ந்து தாதுவிருத்தி, விந்து விருத்தி ஆகியவை அதிகப்பட்டு உடல் திடம், உடல் வளம், உடல் வலிமை முதலியவைகளும் உண்டாகும். இதனை மேற்கண்ட பாகப்படி செய்து மேற்படி பாகப்படி உபயோகித்து

வந்தால் எவ்வித நோயையும் உடம்பில் அணுகவொட்டாது உடல்நலம் நிலைபெற்றிருக்கப் பாதுகாப்பாயிருக்கும். இது காய கற்பமுறைகளி லொன்று. இதன் சிறந்த குணம் இதனையுண்டு அனுபவிப்பவர் களுக்குத்தான் புலப்படும்.

211. தங்கச் செந்தூரம் (வேறு)

இலிங்கம் ½ பலம் (17½ கிராம்), படிகாரம் 7½ பலம் (262½ கிராம்) தூய்மை செய்த தங்க அரப்பொடி 3 வராகன் எடை, எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :- இலிங்கமானது ஒரே கட்டியாக இருக்க வேண்டும். படிகாரத்தைத் தூள் செய்து மூன்று பங்காக்கி வைத்துக் கொள்ளவேண்டும். இதில் ஒரு பங்கை எடுத்து அரைவாசியை ஒரு சட்டியில் பரப்பி அதன்மேல் மேற்படி 'லிங்கக் கட்டியை வைத்து அதன்மேல் மற்ற அரைவாசித்தூளைப் போட்டு அழுத்தி அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்துப் படிகாரமானது உருகிப் பொங்கி அடங்கிப் பொரிந்த பின்பு கீழிறக்கிக் குளிர ஆறின பின் லிங்கக் கட்டியை எடுத்து அதன் மீது பிடித்திருக்கிற படிகாரப் பற்றைக் கத்தியால் மெதுவாகச் சீவி நீக்கிவிட வேண்டும். இவ்விதமே மற்றிரண்டு பாக படிகாரப் பொடியில் ஒன்றன்பின் ஒன்றாக எரித்து லிங்கத்தை எடுத்துக் கொள்ளவேண்டும். இவ்விதம் பக்குவப் படுத்தின லிங்கம் 3 வராகன் எடை இதனையும் தங்கத்தையும் கல்வத்தில் இட்டு எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டிலிட்டு, மேலோடு மூடி 5 சீலைமண் செய்து கெச புடமிடவும். ஆறினபின் எடுக்கத் தங்கமானது செந்தூரமாகி இருக்கும்.

அளவு :- 2 முதல் 3 குன்றிமணி எடை.

தீரும் நோய் :- இதனை நெய்யில் அல்லது தேனில் கலந்துண்ண அதன்மேல், காய்ச்சிக் கற்கண்டிட்ட பாலை செரித்தல் திறனுக்குத் தகுந்தபடி ½ முதல் 1 ஆழாக்கு வரை பருகச் செய்ய வேண்டும். இவ்விதம் செய்து வருவதால் விந்து வெளிப்பாடு, தாது இழப்பு, விந்து இழப்பு, ஆகியவைகள் தீர்த்து தாது விருத்தி, உடல் திடம், உடல் வலிமை, புணர்ச்சி முதலியவைகளுண்டாகும். புணர்ச்சி அதிகப்படும்.

மருந்துணவு :- புளி, புகை ஆகியவைகளை நீக்கவேண்டியது.

212. தங்கச் செந்தூரம் (வேறு)

தூய்மை செய்த தங்க அரப்பொடி 1 வராகன் எடை (3½ கிராம்), தூய்மைசெய்த இரசம் ¼ வராகன் எடை, தூய்மை செய்த கெந்தகம் 1/1/8 வராகன் எடை, முருங்கை வேர்ப்பட்டைச் சாறு, மணத்தக்காளி இலைச்சாறு இவை செல்லத்தக்க அளவு.

செய்முறை :- எல்லாவற்றையும் கல்வத்தில் இட்டுப் பொடித்து கலந்து முருங்கை வேர்ப்பட்டைச் சாறு மூன்று துளியும், மணத்தக்காளிச் சாறு இரண்டு துளியுமாக விட்டு அரைக்க வேண்டும். இவ்விதம் மேற்படி சாறுகள் செல்லச் செல்ல விட்டு நான்கு சாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டில் இட்டு மேலோடு மூடி 5 சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் இருபது பங்கு எடை விராட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுத்துக் கொள்ள வேண்டும். இதனைக் கல்வத்தில் இட்டு முன்போல் கால் வராகன் எடை இரசத்தையும் அரைக்கால் வராகன் எடை கெந்தகத்தையும் கூடச் சேர்த்து முன் போலவே மேற்கண்ட சாற்றை விட்டு முன்போலவே அரைத்து முன்போலவே புடமிட வேண்டும். இவ்விதம் இரண்டு அல்லது மூன்று புடமிட்டால் செந்தூரமாகி விடும். செந்தூரமானது ரோஜாப்பூ வண்ணமாக இருக்கும். தீ சரியாக இருந்தால் சில சமயம் ஒரே புடத்தில் செந்தூரமாகி விடுகிறது. ஆகையால் தீயைச் சற்று நிதானித்துச் சமயோசிதம்போல் கொஞ்சம் அதிகப்படுத்தி அல்லது, கொஞ்சம் குறைத்து விடலாம். இது பழக்கத்தில் தானே விளங்கிப்போம்.

அளவு :- 1 முதல் 2 குன்றிமணி எடை.

தீரும் நோய் :- இதனை மேற்கண்ட அளவுப்படி நெய்யில் அல்லது, தேனில் கலந்து உட்கொண்டு அதன் மேல் காய்ச்சிக் கற்கண்டிட்ட பசுவின் பாலை செரித்தல் திறனுக்கு தகுந்தபடி ¼ முதல் 1 ஆழாக்கு வரை பருகச் செய்துவரின் விந்து இழப்பு, தாது இழப்பு, உடல் வலுக்குறைவு ஆகியவைகள் தீர்ந்து, விந்து விருத்தி, தாது உடல் வலிமை முதலியவைகள் அதிகரிக்கும்.

மருந்துணவு :- புளி, புகை, புணர்ச்சி ஆகியவைகளை நீக்க வேண்டியது.

213. சொர்ணலோகச் செந்தூரம்

கீழ்க்கண்டபடி தூய்மை செய்த அரப்பொடி 1 பலம் (35 கிராம்), தூய்மை செய்த தங்க அரப்பொடி 1 வராகன் எடை (3½ கிராம்), தூய்மை செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் செல்லத்தக்க அளவு, குமரிச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :- அயம், தங்கம் இரண்டையும் சேர்த்து 5 நிமிட நேரம் அரைத்து கலந்த பிறகு காற்பலம் கெந்தகத்தைச் சேர்த்து அரைத்து மேற்படி கற்றாழைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு ஒரு சாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி 5 சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் 4 பங்கு எடை விராட்டியில் புடமிட வேண்டும். ஆறினபின் எடுத்துக் கல்வத்திலிட்டு கால் பலம் கெந்தகத்தையும் சேர்த்து முன்போலவே கற்றாழைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு ஒரு சாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி முன் போலவே புடமிட்டு எடுத்துக் கொள்ளவும். மூன்றாந்தடவையும் கால்பலம் கெந்தகத்தை அதனுடன் சேர்த்து முன்போலவே முன்சாற்றை விட்டு அரைத்து முன்போலவே புடமிட்டுக் கொள்ள வேண்டும்.

இதனைக் கல்வத்திலிட்டு அரைப்பலம் கெந்தகத்தைச் சேர்த்து முன்போலவே முன் சாற்றைவிட்டு அரைத்து முன்போலவே புடமிட்டு எடுத்துக் கொள்ள வேண்டும். 5 தடவையும் அரைப்பலம் கெந்தகத்தைச் சேர்த்து முன்போலவே அரைத்து முன்போலவே புடமிட்டுக் கொள்ள வேண்டும், ஆறாந்தடவை இதற்குச் சமனெடை கெந்தகத்தைச் சேர்த்து முன்போலவே அரைத்து முன்போலவே புடமிட்டு எடுக்கச் சிறப்பான செந்தூரமாகி இருக்கும்.

அளவு :- 2 முதல் 4 குன்றிமணி எடை.

தீரும் நோய் :- தகுந்த துணைமருந்துகளிலிடப் பலவகைத் தொடர்கழிச்சல்கள், கழிச்சல்கள், குருதி எருவாய்முளை, குருதிக் கழிச்சல் ஆகியவைகள் தீர்ந்து குருதி விருத்தியுண்டாகி உடல் வளம், உடல் வலிமை முதலியவைகளுண்டாகும்.

மருந்துணவு :- நோய்க்குத் தகுந்தபடி இலகு ஆகாரமாகவும் சீக்கிரம் செரிக்கத்தக்க ஆகாரமாகவும் ஏற்படுத்த வேண்டும். கடினமான ஆகாரங்களையும், உடலுக்கு சூடுதரும் உணவுப் பண்டங்களையும் நீக்க வேண்டும்.

அயத்தூய்மை :- அயப்பொடி 2 பலம் (70 கிராம்), நல்லெண்ணெய் 2 பலம் (70 கிராம்) இவ்விரண்டையும் ஒரு மண் சட்டியிலிட்டு அடுப்பேற்றிச் சிறு தீயாயெரித்து வறுத்து எண்ணெய் சுண்டினவுடன் மறுபடியும் முன்போல் 2 பலம் (70 கிராம்) எண்ணெயை விட்டு வறுக்க வேண்டும். இவ்விதம் ஏழு தடவைகள் வறுத்தெடுத்து தண்ணீரைவிட்டுக் கழுவி எடுத்துக் கொள்ளவும். இவ்விதமே முப்பலைக் குடிநீரில் ஏழு தடவையும், நாகப்பட்டைக் குடிநீரில் ஏழு தடவையும் கற்றாழைச் சாற்றில் ஏழு தடவையும் வறுத்தெடுத்துக் கழுவி ஈரமில்லாமல் உலர்த்தி மேற்கண்ட எடை நிறுத்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

முப்பலைக் குடிநீர் :- மஞ்சட்கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிமுள்ளி இவை வகை 1 க்கு 5 பலம் (175 கிராம்) இவற்றில் 3 படி தண்ணீரைவிட்டு எட்டிலொருபாகமாகக் காய்ச்சிச் சுண்ட வைத்து இளஞ்சூட்டுடன் பிசைந்து வடிகட்டி எடுத்து கொள்வதே நாகப்பட்டைக் குடிநீராம்.

214. தங்கக் களங்கு

தூய்மை செய்த தங்க அரப்பொடி 1 வராகன் எடை (3½ கிராம்) பொன் வண்டோட்டுத் தூள் 1 வராகன் எடை (3½ கிராம்), பனி தாங்கி இலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :- மேற்படி இரண்டு சரக்குகளையும் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி ஏழு சீலைமண் செய்து 75 பலம் விராட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுத்துக் கல்வத்திலிட்டு முன்சாற்றையே சிறுகச் சிறுக விட்டு முன்போல் 4 சாமம் அரைத்து முன்போல் புடமிடவும். இவ்விதம் மடக்கி மடக்கி இன்னும் மூன்று புடமிட வேண்டும். ஆகக்கூடிய 5 புடமும் தீர்ந்தால் கறுப்பு வண்ணமான தூளாக இருக்கும். இதற்குத் தங்கக் களங்கு என்று பெயர்.

அளவு :- 1 முதல் 2 அரிசி எடை.

தீரும் நோய்கள் :- தகுந்த துணை மருந்துகளில் கலந்துண்ண, விந்து இழப்பு, தாது இழப்பு, உடற்சோர்வு, அசதி, உடற்தளர்ச்சி முதலியவைகள் நீங்கி, விந்து விருத்தி, தாது விருத்தி, உடல் வளமை, உடல் வலிமை, உடலுறுதி முதலியவைகள் அதிகரிக்கும்.

நிமிளைத் தூய்மை :- நிமிளையானது பொன்னிமிளை, வெள்ளி நிமிளை, காகநிமிளை, வெங்கல நிமிளை என நான்கு வகையாம். இந்நான்கு வகை நிமிளைக்கும் தூய்மை ஒன்றேயாம்.

பொன் நிமிளை 1 பங்கு, இந்துப்பு 1 பங்கு. இவ்விரண்டையும் மைப்போல பொடித்துச் சிறிய இரும்பு பாத்திரத்தில் போட்டு அதில் இருபது பங்கு வடிகட்டின காடி தண்ணீரை விட்டு அடுப்பின் மீதேற்றிச் சிறு தீயாய் எரித்து இரும்புச் சிற்றகப்பையால் துழாவிக் கொண்டே இருக்க வேண்டும். காடியானது சுண்டி அதிலுள்ள நிமிளையானது லிங்கம்போல் சிவந்து விட்டால் பதமென இறக்கி ஆறினபின் எடுத்துக் கொள்ள வேண்டியது. இப்படிச் செய்வதனால் நிமிளையானது பரிசுத்தமாகிவிடும். இவ்விதமே எல்லாவகை நிமிளைகளையும் தூய்மை செய்து கொள்ளலாம்.

நிமிளைத் தூய்மை (வேறு) :- நிமிளை 3 பங்கு, இந்துப்பு ஒரு பங்கு, எலுமிச்சம் பழரசம் அல்லது நாரத்தம் பழரசம் 25 பங்கு.

செய்முறை:- மேற்கண்ட இரண்டு சரக்குகளையும் மைபோலப் பொடித்து ஒரு சிறிய இரும்புச் சட்டியில் போட்டு மேற்படி இரசத்தை இதில் விட்டு அடுப்பேற்றிச் சிற தீயாக யெரித்து இரும்புக் கரண்டியால் துழாவிக் கொண்டே இருக்க வேண்டும். சாறெல்லாம் சுண்டி அந்தப் பாத்திரமும் அதிலுள்ள நிமிளையும் லிங்கம் போல் சிவந்து போனால் பதமெனக் கீழிறக்கி ஆறினபின் எடுத்துக் கொள்ளவும். இப்படிச் செய்வதால் எல்லாவகை நிமிளையும் தூய்மையாகி விடும்.

215. பொன்னிமிளை பற்பம்

தூய்மை செய்த பொன்னிமிளை 1 பலம் (35 கிராம்), நெல்லிக்காய்க் கெந்தகம் ¼ பலம் (7¾ கிராம்) விளக்கெண்ணெய் செல்லத்தக்க அளவு.

செய்முறை:- முன் இரண்டு சரக்குகளையும் கல்வத்தில் இட்டுப் பொடித்து விளக்கெண்ணெயைச் சிறுகச் சிறுக விட்டு இரண்டு சாமம் அரைத்து வில்லை செய்து ஓட்டில் வைத்து மேலோடு மூடி ஏழு சீலைமண் செய்து உலர்த்தி ஒரு சதுரகெசக் குழிதோண்டி அதில் அரைத்து கெசம் வரையில் விராட்டியை அடுக்கி அதன் மேல் முன் சித்தப்படுத்தின கவசத்தை வைத்து அதன் மேலும் நாலுபடி உமியைக் கொட்டி அதன் மேல் மீதி அரைக் கெசம் அளவு விராட்டியை அடுக்கி

நெருப்பிட்டுப் புடமிட வேண்டும். நன்றாய்க் குளிர ஆறினபின் எடுக்க இறைவன் அருளால் செஞ்சாயலான பற்பமாய் இருக்கும்.

216. பொன்னிமிளை பற்பம் (வேறு)

மேற்கண்ட பாகப்படியே விளக்கெண்ணெய்க்குப் பதிலாக நல்லெண்ணெய் விட்டரைத்து மேற்கண்டபடியே புடமிட்டெடுக்கப் பற்பமாய் விடும்.

அளவு:- ½ முதல் 1 குன்றிமணி எடை.

துணைமருந்தும் தீரும்நோயும்:- தேன் 3 வராகன் எடை இதில் மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண எல்லாவகைப் பிரமிய நோய்களும் தீரும்.

நெல்லிக்காய்ச்சாறு 3 வராகன் எடை. இதில் மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண இரத்த பித்த நோய், இரத்த மூலநோய் ஆகியவை தீரும்.

வறுத்திடித்த அரிசித்திப்பிலித் தூள் 2 குன்றிமணி எடை, தேன் ? குன்றிமணி எடை. இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பம் அளவுப்படி கலந்துண்ண சுரம், கப சம்பந்தமான இருமல் நோய் ஆகியவைகள் தீரும்.

கொடிவேலி வேர்ப்பட்டைத்தூள் 2 குன்றிமணி எடை, தேன் 3 வராகன் எடை, இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண மந்தாக்கினி நோய் தீர்ந்து நீடித்த சக்தி அதிகப்படும்.

முருங்கை வேர்ப்பட்டைச்சாறு 2 குன்றிமணி எடை, தேன் 3 வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண கண்டமாலை நோய் தீரும்.

மஞ்சட்கடுக்காய்த்தோல், தூள், நெல்லிமுள்ளி வற்றல் தூள் இவை வகைக்கு 1 குன்றி மணி எடை தேன் வராகன் எடை 2 இவற்றைக் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண, சிரசிலுள்ள நோய்கள் தீரும். பீனிச நோயும் குணமாகும்.

அரசமரத்துக் கொம்பரக்குத் தூள் 4 குன்றிமணி எடை, சீமைத் தண்ணீர்விட்டான் கிழங்குத்தூள் ½ வராகன் எடை தேன் 3 வராகன்

எடை இவற்றைக் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண இரத்தவாந்தி, இரத்த காசம், நீடித்த சுரம் ஆகியவைகள் தீரும்.

மருத்துணவு:- மேற்கண்ட நோய்களுக்குத் தகுந்தபடியும் உடலியல்புக்குத் தகுந்தபடியும் பத்தியம் ஏற்படுத்த வேண்டியது.

217. பொன்னிமிளை பற்பம் (வேறு)

தூய்மை செய்த பொன்னிமிளை 1 பலம் (35 கிராம்), கெந்தகம் 1 பலம் (35 கிராம்), வெள்ளாட்டு மூத்திரம் ¼ படி,

செய்முறை:- மேற்படி இரண்டு சரக்குகளையும் கல்வத்திலிட்டு மைப்போல பொடித்து மேற்படி நீரைச் சிறுகச் சிறுக விட்டு அரைக்க வேண்டும். நீரெல்லாஞ் சென்ற பின்பு வில்லை செய்து உலர்த்தி வெய்யிலில் வைத்துலர்த்தி அகலிலிட்டு மேலகல் மூடி ஏழு சீலைமண் செய்து முன் பாகத்தில் சொல்லி யிருக்கிறபடி புடமிட வேண்டும். குளிர ஆறினபின் எடுக்கச் செஞ்சாயலான பற்பமாயிருக்கும்.

அளவு:- 1 முதல் 2 குன்றிமணி எடை.

துணைமருந்தும் தீரும் நோயும்:- வெண்ணொச்சியிலைத் தூள் 4 குன்றிமணி எடை, நெய் 3 வராகன் எடை, தேன் 3 வராகன் எடை. இவை எல்லாவற்றையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண, மார்வலி, பக்க சூலை, இடுப்பு வலி, கீல்வாயுக்கள் முதலியவை தீரும்.

எலுமிச்சம்பழச் சாற்றில் ஊறவைத்து உலர்த்திய சீரகத்தூள் ¾ வராகன் எடை, நெய் 1½ வராகன் எடை, தேன் 1½ வராகன் எடை இவற்றைக் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண, சுவையின்மை நோய், அனல்மந்த நோய் ஆகியவை தீர்ந்து தீபாக்கினி அதிகப்படும்.

கண்டத்திப்பிலித் தூள் ¼ வராகன் எடை தேன் 3 வராகன் எடை இவற்றைக் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ணத் தொண்டைக்கட்டு, தொண்டை அடைப்பு, தொண்டைக் கரகரப்பு, தொண்டையிலுள்ள கபம் ஆகியவைகள் தீரும்.

நாயுருவியுப்பு, அல்லது முள்ளங்கி உப்பு 2 குன்றிமணி எடை வெள்ளரி விதைப் பருப்பு, அல்லது கக்கரி விதைப்பருப்பு ¾ வராகன்

எடை, இந்துப்பு ½ வராகன் எடை இவை எல்லாவற்றையும் சேர்த்து அரைத்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண, மூத்திரக் கிரிச்சரநோய், மூத்திர காசநோய், நீரடைப்பு, நீர்க்கட்டு ஆகியவைகள் தீரும்.

பூமிச்சர்க்கரைக் கிழங்குத்தூள் 1½ வராகன் எடை பூனைக் காலி விதைத்தூள் 1½ வராகன் எடை, தேன்-3 வராகன் எடை, கற்கண்டுத் தூள் 1 வராகன் எடை. இவை எல்லாவற்றையும் கலந்து சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண, சுக்கிலப் பிரமிய நோய் தீர்ந்து தாதுவிருத்தி உண்டாகும்.

தூய்மை செய்த மைசாட்சித் தூள் ¼ வராகன் எடை, மேற்றோல் சீவின சுக்குத்தூள் ¼ வராகன் எடை, பசுவின் நெய் 1 வராகன் எடை இவற்றைக் கலந்து மேற்கண்ட பற்பத்தை கலந்துண்ண கைகால் பிடிப்பு, இடுப்பு, நடுக்குவாதம் ஆகியவைகள் தீரும்.

இஞ்சிச்சாறு 1 ½ வராகன் எடை, வறுத்துத்தூள் செய்த பெருங்காயத் தூள் 1 குன்றிமணி எடை, தேன் 1½ வராகன் எடை, இவற்றைக் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண, வாயுநோய்கள், சூலைநோய்கள் ஆகியவை தீரும்.

மருந்துணவு:- மேற்கண்ட நோய்களுக்குத் தகுந்தபடியும் உடல் இயல்புக்கு ஏற்றபடியும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டியதே.

218. பொன்னிமிளை பற்பம் (வேறு)

மேற்கண்ட பாகப்படியே வெள்ளாட்டு நீருக்குப் பதிலாகக் குடிநீரை விட்டு மேற்கண்டபடியே அரைத்து மேற்கண்ட வாறே புடமிட்டெடுக்கப் பற்பமாயிருக்கும்.

அளவு துணைமருந்து, பத்தியம் முதலியவைகள் மேற்கண்டவைகளேயாம்.

219. பொன்னிமிளைச் செந்தூரம்

தூய்மை செய்த பொன்னிமிளை 1 பலம் (35 கிராம்), தாழை விழுதுச்சாறு செல்லத்தக்க அளவு. உலர்ந்த அரசம் பட்டைத்தூள் 3 பலம் (105 கிராம்.)

செய்முறை:- மேற்படி நிமிளையைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு 2 சாமம் அரைத்து வில்லை

செய்து உலர்த்தி ஒரு விராட்டித் துண்டில் மேற்படி அரசம்பட்டைத் தூளில் பாதியைப் பரப்பி அதன் மேற் மேற்படி வில்லையை வைத்து அதன் மேல் மற்ற அரைவாசி அரசம்பட்டைத் தூளைப் போட்டு இருபது பலம் வராட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கச் செந்தூரமாகி இருக்கும். அப்படிச் செந்தூரமாகாமல் உருகியிருந்தால் அதன் எடையில் கால் பங்கு எடை சூடனைச் சேர்த்துக் கையாந்த கரைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு 5 சாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி 5 சீலை மண்செய்து உலர்த்திக் கவசத்தின் எடைக்கு ஆறு பங்கு எடை வராட்டியில் புடமிடவும். ஆறின பின் எடுக்கச் செந்தூரமாயிருக்கும். தீயின் விகற்பத்தால் இந்தத் தடவையும் செந்தூரமாகாவிட்டால் முன்போல் புடமிடச் செந்தூரமாகி விடும்.

அளவு:- 2 முதல் 3 குன்றிமணி எடை.

தீரும் நோய்கள்:- தகுந்த துணைமருந்துகளிலிட பெருங்கழிச்சல் நோய், குருதி நிணக்கழிச்சல், அறுவகைக்கடுப்புகள் ஆகியவைகள் தீரும். இரத்த விருத்தி, தாது விருத்தி முதலியவைகளுமுண்டாம்.

மருந்துணவு:- சமயோசிதம்போல வைத்துக் கொள்ள வேண்டியது.

220. பொன்னிமிளைச் செந்தூரம் (வேறு)

தூய்மை செய்த பொன்னிமிளை 1 பலம் (35 கிராம்), தூய்மை செய்த கெந்தகம் ¼ பலம் (8¾ கிராம்) பூவரசம் பழுப்புச் சாறு செல்லத்தக்க அளவு. பூவரசம் பழுப்பை அரைத்த விழுது செல்லத்தக்க அளவு.

செய்முறை:- மேற்படி இரண்டு சரக்குகளையும் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படிச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு 4 சாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி மேற்படி பழுப்பை அரைத்த விழுதுக்குள் நடுவில் செலுத்தி உருண்டையாகத் திரட்டி அதன் மேல் 8 சீலைமண் செய்து அந்தக் கவசத்தின் எடைக்கு 4 பங்கு எடை விராட்டியில் புடமிட்டாறின பின் எடுக்கச் செந்தூரமாகி இருக்கும். தீயின் விகற்பத்தால் செந்தூரமாகாவிட்டால் மேற்கண்டபடி கெந்தகத்தைச் சேர்த்து முன் சாற்றை விட்டு முன்போலரைத்து முன்போல் புடமிடச் செந்தூரமாகிவிடும்.

அளவு:- 2 முதல் 3 குன்றிமணி எடை.

துணைமருந்து:- தேன், நெய், இன்னும் தகுந்த இளகங்கள் முதலியவைகளாம்.

தீரும் நோய்:- விந்து இழப்பு, தாது இழப்பு ஆகியவைகள் தீர்ந்து, விந்து விருத்தி, தாது விருத்தி ஆகியவையுண்டாகி உடல் வளமை, உடல் வலிமை, உள்ள வலிமை ஆகியவைகளுண்டாகும்.

மருந்துணவு:- மேற்கண்ட செந்தூரத்தை உட்கொண்டு அதன்மேல் காய்ச்சிக் கற்கண்டிட்ட பாலைச் செரித்தல் திறனுக்கு தகுந்தபடி ¼ முதல் 1 ஆழாக்கு வரையிற் சாப்பிட வேண்டும். இன்னும் செரித்தல் திறனுக்குத் தகுந்தபடி கோதுமைப் பால் அல்வா, வாதுமை அல்வா மிட்டாய் வகைகள் பால் பாயாசம் ஆகியவைகளையும் உபயோகித்து வர வேண்டியது.

குறிப்பு:- இந்தச் செந்தூரத்தைச் செய்து முடிக்கக் கொஞ்சம் பழக்கம் வேண்டும். இதில் இருக்கும் துன்பமெல்லாம் தீயின் அளவை நிதானித்துச் செய்ய வேண்டியதே. ஆனால் இரண்டொரு முறை செய்தால் தனக்குத் தானே இதன் கைபாகம் நன்றாய்த் தெரிந்து போகும்.

221. பொன்னிமிளைச் செந்தூரம் (வேறு)

தூய்மை செய்த பொன்னிமிளை 1 பலம் (35 கிராம்), பூவரசம் பழுப்பை அரைத்த விழுது 10 பலம் (350 கிராம்)

செய்முறை:- மேற்படி கட்டியை மேற்படி பழுப்பு விழுதுக்குள் நடுவில் செலுத்தி உருண்டையாகச் செய்து அதன் மேல் மூன்று சீலைமண் செய்து கவசத்தின் எடைக்கு இருபது பங்கு எடை விராட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுக்கக் கட்டியாகவே செந்தூரமாகி இருக்கும். அதனைக் கல்வத்தில் பொடித்து வைத்துக் கொண்டு உபயோகிக்க வேண்டியது செந்தூரத்தில் மினுமினுப்பிருந்தால் மேற்படி பழுப்பை இடித்துப் பிழிந்த சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு ஒரு சாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடு மூடி மூன்று சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் ஏழு பங்கு எடை விராட்டியில் புடமிட்டு எடுத்துக் கொள்ள வேண்டும். இவ்விதம் செய்தால் சில சமயம் சிவந்தும் சில

சமயம் கறுத்தும் இருக்கிறது. ஆகையால் இவ்வகைகளில் எவ்வகையாக இருந்தபோதிலும் உபயோகிக்கலாம். குணம் செய்வதில் தடை இல்லை.

அளவு:- 2 முதல் 3 குன்றிமணி எடை.

துணை மருந்தும் தீரும்நோயும்:- மேற்றோலை நீக்கி இடித்த சுக்குத்தூள் 10 குன்றிமணி எடை, தேன் 1½ வராகன் எடை. இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி சேர்த்துண்ண வாயு சம்பந்த நோய்கள் தீரும்.

பூமி சர்க்கரைக் கிழங்குத் தூள், சீமை நீர்முள்ளி விதைத் தூள் 10 குன்றிமணி எடை, தேன் 1 ½ வராகன் எடை இவற்றைக் கலந்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி சேர்த்துட் கொண்டு அதன்மேல் காய்ச்சிக் கற்கண்டிட்ட பசுவின் பாலை செரித்தல் திறனுக்குத் தகுந்தபடி ½ முதல் 1 ஆழாக்கு வரை பருகச் செய்ய வேண்டும். இவ்விதம் செய்து வருவதால் தாது இழப்பு, விந்து இழப்பு ஆகியவைகள் தீர்ந்து தாதுவிருத்தி, விந்து விருத்தி, உடல் வலிமை, உடல் வளமை ஆகியவைகள் உண்டாகும்.

வால் மிளகுத்தூள் 8 குன்றிமணி எடை, பசுவின் நெய் 1 வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி சேர்த்துண்ண, பிரமேகம், நீர், எரிச்சல், நீர்க்கடுப்பு ஆகியவைகள் தீரும்.

மேற்றோல் சீவின சுக்குத்தூள், மிளகுத்தூள், அரிசித்திப்பிலித் தூள் இவை வகைக்கு 7 குன்றிமணி எடை, தேன், அல்லது பசுவின் நெய் 1 வராகன் எடை, இவற்றைக் கலந்து மேற்படி செந்தூரத்தை அளவுப்படி சேர்த்துண்ண, நஞ்சுவீறு, முக்குற்றம், கண்டநோய், நச்சுநோய், அரிப்பு முதலியவைகள் தீரும்.

மஞ்சள் கடுக்காய்த் தோல் தூள், தான்றிக்காய்த்தோல் தூள், நெல்லிவற்றல் தூள் இவை வகைக்கு 7 குன்றிமணி எடை, தேன் 1½ வராகன் எடை இவற்றைக் கலந்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி சேர்த்துண்ண, மூலநோய், பாண்டு நோய், நேத்திர நோய், கண்டநோய், ஆகியவைகள் தீரும். தாதுவிருத்தி விந்து விருத்தி உண்டாகும். ஆண்குறி விந்து கருவிகளில் பிரதானமானது உரத்துப் பெருத்து முயங்கல் சக்தி உண்டாகும்.

மருந்துணவு:- இச்சாபத்தியம், புணர்ச்சிப் பத்தியத்தைக் கவனிக்க வேண்டியது அவசியம்.

குறிப்பு:- பொன்னிமிளையானது பொன்னிற்குப் பதிலாக உபயோகப்படுத்தப்படுகிறது. பொன்னிமிளையில் சற்றேறக்குறைய தங்கத்தின் குணமிருக்கிறதென சிந்தாமணி முதலிய நூல்கள் கூறுகின்றன. ஆனால் அசல் தரமான சரக்கை ஆராய்ந்து வாங்க வேண்டியது தான் முக்கியமாகும். இது கொஞ்சம் விலை உயர்ந்ததாகையால் பலவிதமான போலிச் சரக்குகள் இதற்குப் பதிலாய் விற்கப்படுகின்றன.

இதன் பிரதான தேர்வாவது:- இதனை உரை கல்லில் உரைத்தால் 5 மாற்றுள்ள பொன்னைப் போலவே இருக்கும். கனமாகவும், ஊட்டமுள்ளதாகவும் இருக்கும். பொன் சாயலுள்ளதாக இருக்கும். இவ்வித இலட்சணமில்லாத சரக்கானது போலிச் சரக்காகவாவது, அல்லது மட்டச் சரக்காகவாவது இருக்கவேண்டும்.

நிமிளையின் சத்தெடுத்து அதனைப் பற்பமாகவாவது, செந்தூரமாகவாவது மேற்கண்ட பல முறைகளின்படியே செய்து ஆங்காங்கு சொல்லி இருக்கிற துணைமருந்துகளில் உட்கொண்டு வந்தால், அதிக சிறப்பான குணமுண்டாமென நாமிங்கு எடுத்துக் காட்டாமலே அவரவர்களுக்கு நன்கு புலப்படும்.

222. பொன்னிமிளைச் சத்து

பொன்னிமிளை 1 பலம் [35 கிராம்], குன்றிமணிப்பருப்பு 2 வராகன் எடை [7 கிராம்], வெண்காரம் 2 வராகன் எடை [7 கிராம்], தேன் 3 வராகன் எடை [10½ கிராம்], எண்ணெய் 3 வராகன் எடை [10½ கிராம்].

செய்முறை :- தேனையும் எண்ணெயையும் கலந்து தனியே வைத்துக் கொள்ளவேண்டும். மற்ற சரக்குகளைக் கல்வத்தில் இட்டுப் பொடித்து மேற்படி எண்ணெய், தேன் யோகத்தைச் சிறுகச் சிறுக விட்டு அரைக்க வேண்டும். தேன் எண்ணெய் யோகம் எல்லாம் சென்ற பின்பு அதனை வழித்துச் சுட்டகுகையில் போட்டுச் சில்லிட்டுச் சீலைமண் வலுவாகச் செய்து கொல்லுலையில் வைத்து இரட்டைத் துருத்தியால், அல்லது சீமைத் துருத்தியால் குகையமுக ஊதி எடுத்தாற வைத்து உடைத்தெடுத்தால் உள்ளே கறுப்பு வண்ணமான சத்து இறங்கியிருக்கும். இந்தச் சத்தை எடுத்து முன்னே சொல்லியிருக்கிறபடி பற்பமாகவும் செந்தூரமாகவும் செய்து உபயோகித்தால் சிறந்த குணத்தைத் தரும்.

அபக்குவ நிமிளையால் உண்டாகும் கேடுகள் :- பொன்னிமிளையானது திறமாகத் தூய்மை செய்யப்படா விட்டாலும் அதன் பற்பம் செந்தூரங்கள் சிரமமான முறைப்படி செய்யப் படாவிட்டாலும் அவ் வகைகளை உபயோகிப்பதனால், அக்கினிமந்தம் வலுக்குறைவு, நெஞ்சு நடுக்கம், நேத்திரநோய், குட்டநோய், மூளை விரணம் ஆகியவைகளுண்டாகும்.

வெள்ளிநிமிளை இயற்றன்மை :- இது வெங்கலத்தைப் போன்றிருக்கும். இது கனமாய் ஊட்டமுள்ளதாய் இருக்கும். இதனை உரை கல்லில் உரைத்தால் வெள்ளியைப் போல இருக்கும்.

வெள்ளிநிமிளைத் தூய்மை :- பொன்னிமிளையைப் போலவே இதனையும் தூய்மை செய்து கொள்ளவேண்டும்.

223. வெள்ளிநிமிளை பற்பம்

இதனையும் பொன்னிமிளைப் பற்பத்தைப் போலவே பற்பித்துக் கொள்ள வேண்டும்.

இதன் தீரும்நோய், துணைமருந்து முதலியவைகளும் மேற்கண்டவைகளைப் போலவேயாம்.

224. வெள்ளிநிமிளைச் செந்தூரம்

மேற்கண்ட பொன்னிமிளைச் செந்தூரத்தைப் போலவே இதனையும் செய்து கொள்ளவேண்டும்.

இதன் தீரும்நோய், துணைமருந்து முதலியவைகளும் அவ்விதமேயாம்.

குறிப்பு :- மேற்கண்ட பொன்னிமிளையைப் போலவே வெள்ளிநிமிளையையும் பற்பஞ் செய்வதாயிருந்தாலும் வேறு தனி சில பாகங்களும் உள. அவைகளுள் அனுபவசித்தமும் அருமையுமான ஒரு முறையை உலகோர்க்கு உதவியாக இங்கெழுதுவோம். அவை பின்வருகிற விதமாம்.

225. வெள்ளிநிமிளை பற்பம்

வெள்ளிநிமிளை 4 பலம் (140 கிராம்), இதன்மேல் கயிற்றைச் சுற்றி சுத்தியால் அடித்துச் சிறு துண்டுகளாக்கிக் கொள்ளவேண்டும். [இப்படிச் செய்யாவிட்டால் துண்டுகள் சிதறித் தெறித்துபோம்.] இந்த தூளை ஒரு மண் பானையில் போட்டு ஒருபடி பசுவின் பாலைவிட்டு

அடுப்பேற்றிச் சிறு தீயாயெரித்துப் பாலெல்லாம் சுண்டின பின்னிறக்கித் தண்ணீரை விட்டுக் கழுவி ஈரத்தை உலர்த்திக் கொள்ள வேண்டும்.

யானை அறுகின் கிழங்கு 1 படி இதில் சொத்தை, அழுகல், வேர் முதலியவைகளை நீக்கி இடித்துத் தூளாக்கிக் கொள்ள வேண்டும். பசுவின்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை :- ஒரு அகலமான மண்தட்டில் முன் கிழங்குத் தூளில் கொஞ்சத்தைப் பரப்பி அதன்மேல் முன் சித்தப்படுத்தின நிமிளைத் துண்டுகளில் சிலவற்றை வைத்து அதன்மேல் முன் தூளைப்போட வேண்டும். இவ்விதம் அடுக்கடுக்காயும் கட்டிகள் ஒன்றோடொன்று படாமலிருக்கும் விதமாகவும் முறையே செய்து, அதன்மேல் தட்டால் மூடிச் சீலைமண் செய்யாமல் கெச புடமிட வேண்டும். குளிர ஆறினபின் கட்டிகளை மாத்திரமெடுத்துக் கல்வத்தில் பொடித்துப் பசுவின் பாலைச் சிறுகச் சிறுக விட்டு மூன்று சாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி, ஓட்டிலிட்டு மேலோடு மூடி சீலைமண் செய்து உலர்த்தி அரைக் கெச புடமிட்டுக் குளிர ஆறின பின் எடுக்க, வெண்மையான பற்பமாகியிருக்கும்.

அளவு :- 1 முதல் 1½ குன்றிமணி எடை.

தீரும் நோய் :- பசுவெண்ணெய் 1 வராகன் எடை, இதில் மேற்படி பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண அதன்மேல் செரித்தல் சத்துக்குத் தகுந்தவாறு காய்ச்சிக் கற்கண்டிட்ட பால் ½ முதல் ஆழாக்குவரை பருகச் செய்யவேண்டும். இப்படிச் செய்து வருவதால் தாதுவிருத்தி, விந்து விருத்தி, பசித்தீ, செரிதிறன் ஆகியவைகளுண்டாகும். அளவிற்கு அதிகமான பசித்தீ உண்டாகும்.

பிரமதண்டிலைச்சாறு 3 வராகன் எடை, பசுவின் நெய் 3 வராகன் எடை [இது பழைமையானதாயிருந்தால் சிறப்பாக இருக்கும்.] இவற்றைக் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண வளி [வாதம்], அழல் [பித்தம்], ஐயம் (சிலேத்துமம்) முதலியவைகள் சம்பந்தப்பட்ட நோய்கள் தீர்ந்து, நரை திரை மாறி யெவனம் போன்ற பலமுண்டாகும்.

வேப்பம்பட்டைத் தூள் ¾ வராகன் எடை, சித்திர மூல வேர்ப்பட்டைத் தூள் ¼ வராகன் எடை, தேன் 1 வராகன் எடை,

இவற்றைக் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்டுவர, வெண்குட்ட நோய் தீரும்.

வாய்விளங்கத் தூள் 4 குன்றிமணி எடை, தேன் 1½ வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண துட்புழு நோய்கள் அதாவது வயிற்றிலுள்ள நோய்கள் தீரும்.

தூய்மை செய்த மைசாட்சித்தூள் ¼ வராகன் எடை, கொடிவேலி வேர்ப்பட்டைத்தூள் ¼ வராகன் எடை, பசுவின் நெய் 3 வராகன் எடை இவற்றைக் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண வயிற்று நோய் அதாவது வயிற்றின் வீக்கங்கள், வயிற்றுக் கட்டிகள் ஆகியவைகள் தீரும்

பொரித்த பெருங்காயத்தூள் 1 குன்றிமணி எடை, இந்துப்புத்தூள் 4 குன்றிமணி எடை இஞ்சிச்சாறு 1½ வராகன் எடை இவை எல்லாவற்றையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண சுரக்கட்டி, வயிற்றிலுள்ள வீக்கம் உப்புசம் ஆகியவைகள் தீரும்.

பனம்பூத்தூள் 4 குன்றிமணி எடை, பழமையான பனை வெல்லம் 1½ வராகன் எடை, இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண நாட்பட்ட சுரக்கட்டி தீரும்.

எள் செடியைச் சுட்டெரித்து எடுத்த உப்பு 2 குன்றிமணி எடை, எலுமிச்சம் பழச்சாறு 1 வராகன் எடை தேன் 1½ வராகன் எடை, இவற்றைக் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண வயிற்றிலுள்ள நோய்கள், ஈரல் வீக்கம், மண்ணீரல் வீக்கம், உப்புசம் ஆகியவைகள் தீரும்.

அரிசித் திப்பிலித்தூள் 6 குன்றிமணி எடை, பழமையான பனைவெல்லம் 2 வராகன் எடை, இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண, நாட்பட்ட சுரம் தீரும்.

மருந்துணவு :- நோய்க்குத் தகுந்தபடியும், உடலியல்புக்குத் தகுந்தபடியும் பத்தியத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது.

சிலாசத்து :- சிலாசத்தென்பது கடுமையான வெய்யிற் காலங்களில் பிசினைப்போல மலைமேலிருந்து வடிகிற சத்தாம்.

சிலாசத்து வகையும் வேறுபாடும் :- இது கோமூத்திர சிலாசத்து, கர்ப்பூர சிலாசத்து என இருவகைப்படும், கோமூத்திர சிலாசத்தானது பசுவின் மூத்திரத்தின் வண்ணத்தைப் போன்றதாயிருக்கும். கருப்பூர சிலாசத்தானது சிவப்பாக அல்லது வெண்மையாக இருக்கும் இவற்றுள் வெண்மையே உயர்வானதாம்.

கருப்பூர சிலாசத்துத் தூய்மை :- கருப்பூர சிலாசத்தைக் கல்வத்தில் இட்டுப் பொடித்து தாமரைக் கிழங்கு சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து மூன்று மணிநேரம் அரைத்து வில்லை செய்து வெய்யிலில் உலர்த்தி எடுத்துக்கொள்ளத் தூய்மையாகிவிடும்.

குறிப்பு :- இவ்விதமே கோமூத்திர சிலாசத்தை தூய்மை செய்து கொள்ளலாம்.

சிலாசத்துத் தூய்மை (வேறு) :- கருப்பூர சிலாசத்தைச் சிறு துண்டுகளாகத் துண்டித்துப் பாலில் போட்டுக் காய்ச்சிப் பால் கண்டினபின் எடுத்துக் கழுவி உலர்த்திக் கொள்ளத் தூய்மையாம். இதில் சிலாசத்து பங்கு 1 க்கு 20 பங்கு எடை பால் இருக்கவேண்டியது.

இவ்விதம் கோமூத்திர சிலாசத்தையும் தூய்மை செய்து கொள்ளவாம்.

சிலாசத்துத் தூய்மை (வேறு) :- சிலாசத்தைப் பெருந்துண்டுகளாகச் செய்து இளநீரில் போடவேண்டும். இளநீரானது சிலாசத்திற்கு மேல் இரண்டங்குலம் அதிகமாக இருக்க வேண்டியது. 24 மணிநேரம் ஊறவைத்து அதிலுள்ள இளநீரை வடிகட்டி நீக்கி முன்போலவே புதிதாக இளநீரைவிட்டு 24 மணிநேரம் ஊறவைத்து இறுத்து நீக்கி மூன்றாம் தடவையும் முன் போல இளநீரை விட்டு 24 மணிநேரம் ஊறவைத்து இறுத்துத் தண்ணீரைவிட்டுச் சுத்தமாகக் கழுவி உலர்த்திக் கொள்ள தூய்மையாம்.

226. சிலாசத்துப் பாவனை

சிலாசத்து 1 பலம் (35 கிராம்), இதனைச் சிறு துண்டுகளாகத் துண்டித்துக் கொள்ள வேண்டும். திராட்சைப்பழம், அதிமதுரத் தூள், சந்தனத்தூள் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்), இளநீர் 1 படி.

செய்முறை :- முன் சொல்லி இருக்கிற சிலாசத்தை ஒரு துணியில் தளர முடிந்து கிழிக்கட்டி வைத்துக் கொள்ள வேண்டும். மற்ற மூன்று

சரக்குகளையும் மைபோல அரைத்து மேற்படி இளநீரில் கரைத்து முன் கிழிக் கட்டினதை அதில் துலாந்தரமாகத் தொங்க விட வேண்டும். இந்த முடிப்பானது பானையின் அடியில் படாமல் இரண்டொரு அங்குலம் பானையின் அடிக்கு மேலேயே இருக்கும்படியாகத் தொங்கவிட வேண்டும். இதை அடுப்பின் மீதேற்றிச் சிறு தீயாயெரித்துப் பானையிலுள்ள நீர் எல்லாம் சுண்டின பின் இறக்கி ஆறின உடன் முடிப்பிலுள்ளதை எடுத்து நீரைவிட்டுக் கழுவி வெய்யிலில் வைத்து ஈரமில்லாமல் சுத்தமாக உலர்ந்தபின் பொடித்து வைத்துக் கொள்ளவும்.

அளவு :- 2 முதல் 4 குன்றிமணி எடை.

தீரும் நோய்கள் :- இதனை எல்லா நோய்களிலும் அந்தந்த நோய்களுக்குத் தகுந்த சிறப்பான துணைமருந்துகளில் உபயோகிக்க பயனுண்டாகும், உடற்பொலிவு, உடல் வளம், உடல் வலிமை ஆகியவைகளும் உண்டாகும்.

மருந்துணவு :- இச்சாபத்தியம்.

சிலாசத்துப் பொதுக்குணம் :- தூய்மைசெய்த அசல் தரமான சிலாசத்தால், பாண்டு, பிரமேகம், சுரம், பிலீகநோய், கபநோய், வாத நோய், அனல்மந்தம், குட்டநோய், இராசநோய், உன்மத்தம், வீக்கம், சர்க்கரை நோய், நுண்புழு நோய், மார்புவலி, மூலநோய், ஆமிலபித்தம், வயிற்றுநோய், மஞ்சள் நோய், கல்லடைப்பு நோய், மூத்திரக்கிரிச்சரம், சிரங்கு, முதுமை முதலியவைகள் தீரும்.

சிலாசத்தானது இவ்விடங்களில் அசலானதாகக் கிடைப்பது மிக அரிதாக இருக்கிறது. வடநாட்டிலிருந்து வருவிக்க வேண்டியது. இதனால் அநேக நோய்கள் தீருகின்றபடியால் இந்த முறைகளைச் செய்ய விருப்பமானவர்கள் அசல்தரமான சிலாசத்தை வாங்கி உபயோகித்தால் அநேக சிறப்பான குணங்களும் உண்டாகும்.

தூய்மையற்ற சிலாசத்தின் கெடுதல்கள் :- தூய்மையில்லாச் சிலாசத்தால், தாகம், மூர்ச்சை, பிரமை, பித்தரத்தம், இரத்த விகாரம், அக்கினி மந்தம், மலபந்தம் ஆகியவைகளும் உண்டாகும்.

சிலாசத்தின் தேர்வு :- இதனை நெருப்பின் மீது வைத்தால் புகையாமலிருக்க வேண்டும். கம்பி கம்பியாகப் பிரியவேண்டும். தண்ணீரில் போட்டால் தண்ணீருக்குள் கயிறுபோல் நீளவேண்டும். இந்த பண்புகளுடன் பசுவின் மூத்திர வாசனையுமிருந்தால்

அசல்தரமான சிலாசத்தாம். இந்த பண்புகளை நிதானித்து வாங்க வேண்டியது.

தென்னாட்டில் சிலாசத்தென விற்கப்படுகிறது கற்சிலாசத்து அல்லது, சிலாசத்துக்கல் என்று சொல்லப்படுகிற ஒரு வகையாம். இது அசல்தர சிலாசத்தாகாது ஆனால் இதில் நின்று சத்து வெளிப்படலாம்.

227. சிலாசத்துப் பற்பம்

தூய்மை செய்த சிலாசத்து 2 பலம் (70 கிராம்), காட்டு சிறுக்கீரைச்சாறு ¼ படி.

செய்முறை :- மேற்படி சாற்றை ஒரு சிறு கலயத்தில் நிறைய விட்டு மேற்படி சிலாசத்தை அதற்குள்ளிட்டு வாய்க்குச் சில்லிட்டுச் சீலைமண் செய்து இருநூற்றைம்பது பல விராட்டியில் புடமிட்டாறின பின் எடுக்கப் பற்பமாகி இருக்கும். தூய வெண்மையான பற்பமாகாவிட்டாலும், சிறப்பான குணமுள்ளதாகச் செய்ய வேண்டியதானாலும் முன் புடமிட்டதைக் கல்வத்திலிட்டுப் பொடித்து முன் சாற்றையே சிறுகச் சிறுக விட்டு ஒரு சாமம் அரைத்து வில்லை செய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடிச் சீலைமண் செய்துலர்த்தி நூறு பல விராட்டியில் புடமிட்டெடுக்க மிகமேலான பற்பமாகி இருக்கும்.

அளவு :- 2 முதல் 4 குன்றிமணி எடை.

துணைமருந்து :- வெண்ணெய், நெய், தேன்.

தீரும் நோய் :- அறுவகைக் கடுப்புகள், நிணக்கழிச்சல், மூலக்கடுப்பு, மூலச்சூடு, இரைப்பையின் அழலை முதலிய பித்த சம்பந்தமான எல்லா நோய்களிலும் உபயோகிக்கலாம்.

மருந்துணவு :- நோய்க்குத் தகுந்தபடியும் உடற்க்குத் தகுந்தபடியும் வைக்க வேண்டியது.

228. சிலாசத்துப் பற்பம் (வேறு)

மேற்கண்ட பாகப்படியே கற்றாழைச் சாற்றிலும் செய்து கொள்ளலாம்.

அளவு, துணைமருந்து, தீரும்நோய் முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

229. சிலாசத்துப் பற்பம் [வேறு]

மேற்கண்ட பாகப்படி இளநீரில் தூய்மை செய்த சிலாசத்து 2 பலம் (70 கிராம்), சிறு செருப்படைச்சாறு ¼ படி.

செய்முறை :- சிலாசத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு அரைத்துச் சாறெல்லாம் சென்றபின் இலேசான சிறு வில்லைகளாகச் செய்து வெய்யிலில் உலர்த்தி நன்றாய் உலர்ந்தபின்பு ஓட்டிலிட்டு மேலோடு மூடி மூன்று சீலைமண் செய்துலர்த்தி கவசத்தின் எடைக்கு இருபது பங்கெடை விராட்டியில் புடமிட்டாறினபின் எடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து முன்போலவே முன்சாற்றை முன்னளவு விட்டு அரைத்து முன்போலவே புடமிட வேண்டும். இவ்விதமே மூன்றாந்தடவையும் புடமிட்டெடுத்துக் கொள்ள மிகமேலான பற்பமாகி இருக்கும்.

அளவு :- 4 முதல் 10 குன்றிமணி எடை.

துணைமருந்து :- நெய், தேன், வெண்ணெய் முதலியவைகளாம்.

தீரும்நோய் :- இது பித்த சம்மந்தமான எல்லா நோய்களிலும் உபயோகமாகும். குருதி மூலம், இரத்தபித்த நோய், மூலச்சூடு, சீழ்ப் பிரமேகம், கபநோய், கக்கிருமல், இரைப்பையின் அழலை, ஈரல் அழலை ஆகியவைகள் தீரும்.

மருந்துணவு :- நோய்க்குத் தகுந்தபடியும் உடலுக்குத் தகுந்தபடியும் பத்தியம் வைக்க வேண்டியது.

230. சிலாசத்துப் பற்பம் [வேறு]

இளநீரில் தூய்மை செய்து சிலாசத்து 2 பலம் (70 கிராம்), முள்ளங்கிக்கிழங்கு 20 பலம் (70 கிராம்).

செய்முறை :- சிலாசத்தைச் சிறுதுண்டுகளாகச் செய்து கொள்ளவும். மேற்படி கிழங்கை மரவுரலில் மைப் போலிடித்து இரண்டு பங்காக்கி ஒரு பங்கை மண் தட்டில் இட்டுப் பரப்பி அதன் மேல் மேற்படி சிலாசத்துத் தூள்களை அதிக அடர்த்தியாயில்லாமல் இலேசாகப் பரப்பி அதன்மேல் மற்றப்பாதி முள்ளங்கிக் கிழங்கின் விழுதை வைத்துப் பரப்பிச் சந்தில்லாமல் ஓரங்களை அழுத்திவிட்டு அதன் மேல் மண் பாத்திரத்தால் மூடி மூன்று சீலைமண் செய்து, கவசத்திற்குப் பதினாறு பங்கு எடை விராட்டியில் புடமிட்டுக் குளிர ஆறின பின் எடுக்கப் பற்பமாயிருக்கும்.

அளவு :- 4 முதல் 10 குன்றிமணி எடை.

துணைமருந்து :- நெய், வெண்ணெய் முதலியவைகளேயாம்.

தீரும்நோய் :- எல்லாவகை இருமல்கள் கபநோய்கள் ஆகியவைகள் தீரும். இருமல் பலமாயிருந்தால், இராக்காலங்களில் செரித்தல் திறனுக்குத் தகுந்தபடி அரை அல்லது ஒரு ஆழாக்குப் பாலில் 8 குன்றிமணி எடை மஞ்கள் தூளும், 8 குன்றிமணி எடை மிளகுத் தூளும், வேண்டிய அளவு கற்கண்டுத் தூளும் சேர்த்துக் கலந்து பருகச்செய்யவேண்டும். இன்னும் இதனால் சயம், சயகாசம் முதலியவைகளிலும் குணம் காணப்பட்டிருக்கிறது.

மருந்துணவு :- நோய்க்கும் உடலுக்கும் தகுந்ததுபோல் பத்தியம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

231. சிலாசத்துப் பற்பம் [வேறு]

இளநீரில் தூய்மை செய்த சிலாசத்து 20 பலம் (70 கிராம்), சிவப்பு நாயுருவியிலை 20 பலம் (700 கிராம்) (இதனை மைப்போல அம்மியிலரைத்துக் கொள்ளவேண்டும்.)

செய்முறை:- மேற்கண்ட பாகப்படியே செய்துகொள்ள வேண்டியது.

அளவு:- 4 முதல் 8 குன்றிமணி எடை.

துணைமருந்து:- பசுவின் வெண்ணெய், நெய் முதலியவைகளாம்.

தீரும்நோய்:- என்புசுரம், என்புச்சூடு, மேக வெட்டை வெட்டை சுரம் முதலியவைகள் தீரும்.

மருந்துணவு:- சமயோசிதம்போல் ஏற்படுத்திக் கொள்ள வேண்டியதேயாம்.

232. சிலாசத்துப் பற்பம் (வேறு)

இளநீரில் தூய்மை செய்த சிலாசத்து 2 பலம் (70 கிராம்), சுண்ணாம்புத் தெளிநீர் செல்லத்தக்க அளவு,

செய்முறை:- சிலாசத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி சுண்ணாம்புத் தெளிநீரைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாமமரைத்துச் சிறு வில்லைகளாகச் செய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி மூன்று

சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் பதினாறு பங்கு எடை விராட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுத்து முன்போலவே. சுண்ணாம்பு நீரை விட்டு அரைத்தரைத்து மடக்கி மடக்கி இன்னும் இரண்டு புடம் போட்டுக் கொள்ளவும். ஆக மூன்று புடமுந்தீர்ந்தால், மேன்மையான பற்பமாயிருக்கும்.

அளவு:- 3 முதல் 6 குன்றிமணி எடை.

துணைமருந்து:- பசுவின் வெண்ணெய், நெய், தேன்

தீரும் நோய்கள்:- நீர்ச்சுருக்கு, நீரெரிச்சல், வெட்டைச்சூடு முதலியவை தீரும்.

மருந்துணவு:- சமயோசிதம் போல் வைத்துக் கொள்ள வேண்டியது.

233. சிலாசத்துப் பற்பம் (வேறு)

இளநீரில் தூய்மை செய்த சிலாசத்து 2 பலம் (70 கிராம்), மத்தாப்புச் சிட்டம் 10 பலம் (350 கிராம்).

செய்முறை:- மேற்படி மத்தாப்புச் சிட்டத்தைக் கல்வத்தில் பொடித்துத்தண்ணீர் விட்டுமைபோலரைத்து இரண்டடையாகச் செய்து ஒரு அடையில் மேற்படி சிலாசத்தைப் பரப்பி வைத்து அதனை மற்ற அடையால் மூடி ஓரத்தை நன்றாயமுத்திச் சந்து பந்தனஞ் செய்து அதனமேல் மூன்று சீலைமண் செய்து கவசத்தின் எடைக்குப் பதினைந்து பங்கு எடை விராட்டியில் புடமிட்டாறின பின் எடுக்க பற்பமாயிருக்கும்.

அளவு:- 3 முதல் 6 குன்றிமணி எடை.

தீரும்நோய்:- வெட்டைச் சூடு, பிரமேகம், நீரெரிச்சல் ஆகியவைகள் தீரும்.

மருந்துணவு:- சமயோசிதம்போல வைத்துக் கொள்ள வேண்டியது.

234. சிலாசத்துப் பற்பம் (வேறு)

கருப்பூர சிலாசத்து 1½ பலம் (52½ கிராம்), இதனைக் கோமூத்திரத்தில் மூன்று நாள் ஊற வைத்து நாலாம் நாள் எடுத்து தண்ணீரை விட்டு நன்றாய்க் கழுவி வெய்யிலில் உலர்த்திக்கொள்ளத்

தூய்மையாம். இவ்விதம் தூய்மை செய்த சிலாசத்து: 1 பலம் (350 கிராம்), ஆகாசத்தாமரை இலை (இதிலுள்ள வேர் அழுகின இலை முதலியவைகளை நீக்கி) அரைத்த விழுது 10 பலம் (350 கிராம்)

செய்முறை:- மேற்படி சிலாசத்தை மேற்படி விழுதுக்குள் நடுவில் வைத்து உருண்டையாகத் திரட்டி அதன்மேல் மூன்று சீலைமண் செய்து கவசத்தின் பதினாறு பங்கு எடை விராட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுக்க மேன்மையான பற்பமாயிருக்கும்.

அளவு:- ½ வராகன் எடை.

துணைமருந்தும், தீரும்நோயும்:- ஒரு தேங்காயை இரண்டாக உடைத்து இரண்டு மூடியையும் ஒரு நாள் பூமியிற் கவிழ்த்து வைத்திருந்து மறுநாள் ஒரு மூடியைத் துருவிப் பால் பிழிந்து அதில் மேற்படி பற்பத்தை அளவுப்படி கலந்து பருகச் செய்யவேண்டும். இவ்விதம் காலையில் மாத்திரம் ஒவ்வொரு வேளையாக ஐந்து நாள் உபயோகித்து வந்தால் உட்சென்ற வெட்டை நோய், வெட்டைச்சூடு முதலியவை தீரும். இதை உபயோகிக்கும்போது சில உடலினர்க்கு இரண்டொரு தடவை கழிச்சலாகும். நோய் கடினமானதாக இருந்தால் இடையில் ஒரு வாரம் அல்லது பத்து நாள் விட்டு முன்போல் ஐந்து நாள் உபயோகிக்க வேண்டியது. இவ்விதம் செய்தால் எவ்வித வெட்டையும் தீர்ந்து உடல் ஆரோக்கியம் உண்டாகும்.

மருந்துணவு:- காரமான உணவுப் பண்டங்கள் ஆகா. மோரும் சாதமும் உபயோகிப்பது உத்தமம்.

235. சிலாசத்துச் செந்தூரம்

தூய்மை செய்த சிலாசத்து 1 பலம் (35 கிராம்), அன்னபேதி 2 பலம் (70 கிராம்). எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- இவ்விரண்டு சரக்கையும் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு இரண்டு சாமம் அரைத்து வில்லை செய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி மூன்று சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் பதினாலு பங்கெடை விராட்டியில் புடமிட்டெடுக்கச் செந்தூரமாகி இருக்கும்.

அளவு:- 3 முதல் 6 குன்றிமணி எடை.

துணைமருந்து:- நெய், வெண்ணெய்,

தீரும் நோய்:- பித்த சம்பந்தமான பாண்டு, வறட்சி இருமல், சயம், காசம், குருதிக் குறைவு முதலியவைகள் தீரும்.

மருந்துணவு:- நோய்க்கும் உடல் வலிமைக்கும் தகுந்தது போல வைத்துக் கொள்ள வேண்டியது.

236. சிலாசத்துச் செந்தூரம் (வேறு)

தூய்மை செய்த சிலாசத்து 1 பலம் (35 கிராம்), தூய்மை செய்த இரசம் 1 பலம் (35 கிராம்), கீழ்க்கண்ட பாகப்படி செய்த சங்கிலைக் குடிநீர் ¼ படி, செம்பரத்தம் பூ 2½ பலம் (87½ கிராம்).

செய்முறை:- இரசத்தையும் சிலாசத்தையும் சேர்த்தரைத்து மேற்படி சங்கிலைக் குடிநீரை சிறுகச் சிறுக வார்த்து அரைத்து மேற்படி குடிநீரெல்லாம் சென்ற பின்பு மேற்படி செம்பரத்தம் பூவைச் சிறு துண்டுகளாகக் கிள்ளிப் போட்டு மூன்று நாழிகை நேரம் அரைத்து வில்லை செய்துலர்த்தி அகலில் வைத்து மேலகல் மூடி 5 சீலைமண் செய்து உலர்த்திக் கல்வத்தினெடைக்கு 10 பங்கெடை விராட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கச் செந்தூரமாகி இருக்கும்.

அளவு:- 2 முதல் 4 குன்றிமணி எடை.

தீரும்நோய்:- தகுந்த துணைமருந்துகளிலிட, அக்கினி மந்தம், வயிற்று நோய், பிரமேகம், பாண்டு, சுரம், பிலீச நோய், மார்புவலி, வயிற்றுவலி, மூத்திரகிரிச்சரம், சிரங்கு, சொறி, புண், புரை ஆகியவைகள் தீரும்.

மருந்துணவு:- புளி, புகை, புணர்ச்சி ஆகியவைகளை நீக்க வேண்டும். நோயின் பலத்துக்குத் தகுந்தபடி இன்னும் இலகுவான, அல்லது கடினமான பத்தியம் வைத்துக் கொள்ளலாம்.

சங்கிலைக் குடிநீர்:- சங்கிலை 5 சேர் (1400 கிராம்). இதனை ஒரு பாண்டத்திலிட்டு அதில் இரண்டுபடி தண்ணீர் விட்டு ¼ படியாகச் சுண்ட வைத்து இறக்கி வடிகட்டிக் கொள்வதேயாம்.

237. சத்தாதி பற்பம்

தூய்மை செய்த சிலாசத்து, தூய்மை செய்த கல்நார், வெண்காரம், இம்மூன்றும் வகைக்கு 1 பலம் (35 கிராம்). தூய்மை செய்த இரச கருப்பூரம் ½ பலம் (17½ கிராம்) எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவ.

செய்முறை:- முன் நான்கு சரக்குகளையும் கல்வத்திலிட்டுப் பொடித்து எலுமிச்சம். பழச்சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு 4 சாமம் அரைத்து ஓட்டில் வைத்து மேலோடு மூடி 5 சீலைமண் செய்துலர்த்திக் கவசத்திற்கு 15 பங்கு எடை விராட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுக்கப் பற்பமாகி இருக்கும். இரச கற்பூரத்தின் எடை நிற்காது.

அளவு:- 3 முதல் 6 குன்றிமணி எடை.

தீரும்நோய்:- தகுந்த துணைமருந்துகளிலிட பிரமேகம், நீரெரிச்சல், நீரறுகல், கைகாலெரிச்சல் முதலிய பித்த சம்மந்த நோய்கள் தீரும்.

மருந்துணவு:- இச்சாபத்தியம்

யூதக்கல்

இதற்குப் பார்சியில் ஸங்கேயஹூதான் என்றும் அரபியில் ஹஜ்றுல்யஹூதி என்றும், ஆங்கிலத்தில் ஜூஸ்டோன் Jew's stone என்றும் பெயர்.

இதன் பிறப்பு முதலிய இலட்சணங்களெல்லாம் நமது யூனானி வைத்திய தாது விருத்தி போதினி திறவு கோலில் வகை விபரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றபடியால் அவசியமானவர்கள் தயவுடன் அதனைப் பார்த்துக் கொள்ளவும்.

238, யூதக்கல் தூய்மை

யூதக்கல்லைச் சிறு துண்டுகளாகத் துண்டித்துக் கொள்ளவும் பன்னீர், காடி இவை வகைக்குச் சமன் சேர்த்து செல்லத்தக்க அளவு எடுத்துக் கொள்ள வேண்டும். மேற்படி துண்டுகளை ஒரு ஓட்டிலிட்டு அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து மேற்படி பன்னீர் காடிக் கலவையைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமம் சுருக்கிட்டு எடுத்துக் கொள்ள வேண்டும். இப்படிச் செய்தால் யூதக்கல்லானது தூய்மையாகிவிடும்.

239. மேற்படித் தூய்மை (வேறு)

யூதக்கல் தேவையான அளவு. இதனைச் சிறு துண்டுகளாகச் செய்து கொள்ள வேண்டும். பன்னீர், காவுஜூபான் நீர். பிராண்டி சாராயம் (Brandy) காடி இந் நான்கையும் சமபாகமாகச் சேர்த்து மேற்கண்ட பாகப்படியே சுருக்கிட்டு எடுத்துக் கொள்வதினாலும் அது தூய்மையாகிவிடும்.

240. யூதக்கல் பற்பம்

தூய்மை செய்த யூதக்கல் 10 வராகன் எடை (5 கிராம்), கம்பி வெடியுப்பு 25 வராகன் எடை, முள்ளங்கிக் கிழங்குச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- மேற்கண்ட இரண்டு சரக்குகளையும் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி சாற்றை சிறுகச் சிறுக விட்டு இரண்டு சாமம் அரைத்து வில்லை செய்துலர்த்தி ஒரு குடுவையில் போட்டு வாய்க்குச் சில்லிட்டு 5 சீலைமண் செய்து உலர்த்தி 5 பலம் வராட்டியில் புடமிட வேண்டும். நன்றாய்க் குளிர ஆறின பின் எடுத்து கல்வத்திலிட்டு இதனுடன் முன் போல் பதினைந்து வராகன் எடை கம்பிவெடியுப்பைச் சேர்த்து முள்ளங்கிக் கிழங்குச்சாற்றை முன்போல் சிறுகச் சிறுக விட்டு இரண்டு சாமம் அரைத்து முன்போல் புடமிட்டுக் கொள்ள வேண்டியது. ஒவ்வொரு தடவைக்கும் பதினைந்து பதினைந்து வராகன் எடை கம்பி வெடியுப்பைச் சேர்த்துச் சேர்த்து முள்ளங்கிக் கிழங்குச் சாற்றையே விட்டு இரண்டிரண்டு சாமம் அரைத்து முன்போலவே புடமிட்டுக் கொள்ள வேண்டியது. ஆகக் கூடிய நான்கு புடமிட்டுத் தீர்ந்தால் திறமான பற்பமாயிருக்கும்.

அளவு:- 1 முதல் 2 குன்றிமணி எடை.

துணைமருந்தும் தீரும்நோயும்:- நெருஞ்சி முட்த்தூள், காசினி விதைத்தூள், வகைக்கு 16 குன்றிமணி எடை, தேன் 1½ வராகன் எடை, இவற்றைக் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண நாட்பட்ட பிரமேக நோய் கல்லடைப்பு (அஸ்மரி) நோய், நீர்ப்பைக் கல்லடைப்பு (அஸ்மரி) நோய் சதையடைப்பு ஆகியவைகள் தீரும்.

நற்சீரகத்தூள் 10 குன்றிமணி எடை, ஏலக்காய்த் தூள் 5 குன்றிமணி எடை, தேன் 1½ வராகன் எடை இவற்றை கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண, பிரமேக நோய்கள் தீரும்.

மருந்துணவு:- சமயோசிதம் போல் ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது.

241. யூதக்கல் பற்பம் (வேறு)

தூய்மை செய்த யூதக்கல் 8 பலம் (280 கிராம்), முள்ளங்கிக் கிழங்குச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- மேற்படி கல்லைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டு இரண்டு சாமமரைத்து வில்லை செய்துலர்த்தி ஓட்டில் இட்டு மேலோடு மூடி மூன்று சீலைமண் செய்து கவசத்தின் எடைக்கு இருபது பங்கு எடை விராட்டியில் புடமிடவேண்டும். ஆறினபின் எடுத்துக்கல்வத்தில் இட்டு முன் கிழங்குச் சாற்றையே சிறுகச் சிறுகவிட்டு ஒருசாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி முன்போல் கவசஞ் செய்து முன்போல் புடமிட்டுக் கொள்ளவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி மேற்படி சாற்றால் ஒவ்வொரு சாமம் அரைத்து மேற்கண்டவாறே ஐந்து புடமிட்டுக் கொள்ளவேண்டும். ஆகக் கூடிய ஏழு புடமிட்டுத் தீர்ந்தால் நல்ல வண்ணமுள்ள பற்பமாகிவிடும்.

அளவு:- 2 முதல் 16 குன்றிமணி எடை.

தீரும் நோய்:- கல்லடைப்பு நோய், நீர்ப்பையிலுண்டாகும் கல்விளைவு, கல்லடைப்பு, நீரடைப்பு ஆகியவைகள் தீரும்.

மருந்துணவு:- நோய்களுக்குத் தகுந்தபடியும் உடலியல்புக்கு ஏற்றதுபோலும் ஏற்படுத்திக் கொள்ளவேண்டியது.

242. யூதக்கல் பற்பம் (வேறு)

தூய்மை செய்த யூதக்கல் 1 பலம் (35 கிராம்), சோற்றுக் கற்றாழைச்சாறு, பருத்திக் கொட்டை குடிநீர், தயிர்த் தண்ணீர் நெருஞ்சிமுட் குடிநீர் இவை வகைக்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை:- யூதக்கல்லைக் கல்வத்தில் இட்டுப் பொடித்து 1 சோற்றுக் கற்றாழைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு ஒரு சாமம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி ஓட்டில் இட்டு மேலோடு மூடி மூன்று சீலைமண் செய்து உலர்த்தி கவசத்தின் இருபது பங்கு எடை விராட்டியில் புடமிடவேண்டும். இவ்விதமே பருத்திக் கொட்டைக் குடிநீரில் ஒரு புடமும் தயிர்த் தண்ணீரில் ஒரு புடமும் நெருஞ்சி முட்குடிநீரில் ஒரு புடமும் இட்டெடுக்கத் திறமான பற்பமாய் இருக்கும்.

அளவு, தீரும் நோய்கள் எல்லாம் மேற் சொன்னவைகளேயாம்.

பருத்திக் கொட்டைக் குடிநீர் :- ஐந்து பலம் பருத்திக் கொட்டையை அரைப்படி தண்ணீரில் போட்டு ஒருநாள் ஊறவைத்து

மறுநாள் உரலில் மைப்போல் இடித்து அரைப்படி தண்ணீரில் கலக்கி அடுப்பேற்றி மூன்றில் ஒரு பாகமாகச் சுண்டவைத்து இறக்கி ஆறவைத்து இளஞ்சூட்டில் பிசைந்து வடிகட்டித் திப்பி நீக்கி எடுத்துக் கொள்ளவேண்டும். இவ்விதம் செய்த குடிநீரைத் தான் மேற்கண்ட பாகத்தில் உபயோகிக்க வேண்டியது.

நெருஞ்சிமுட் குடிநீர்:- நெருஞ்சிமுள்ளை மேற்கண்ட பருத்தி விதைக் குடிநீரைப் போலவே செய்து கொள்ள வேண்டியது.

243. யூதக்கல் பற்பம் (வேறு)

தூய்மை செய்த யூதக்கல் 1 பலம் (35 கிராம்), பருத்திக் கொட்டைப் பருப்பு 10 பலம் (350 கிராம்), சிறுநெருஞ்சிமுள் 10 பலம் (350 கிராம்), முள்ளங்கி விதை 10 பலம் (350 கிராம்). முள்ளங்கிக் கிழங்குச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:- மேற்கண்ட மூன்று சரக்குகளையும் உரலிலிட்டு இடித்துத் தூளாக்கி அம்மியில் வைத்து முள்ளங்கிக் கிழங்குச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து மைபோல அரைத்து ஒரு உருண்டையாகத் திரட்டி அதற்கு நடுவில் மேற்படி யூதக்கல்லை வைத்துச் சந்தில்லாமல் செய்து, அதன்மேல் மூன்றுசீலை மண் செய்து கெசபுடமிட வேண்டும். குளிர ஆறினபின் எடுக்கச் சுத்தமான பற்பமாகி இருக்கும். ஒரு வேளை நமது விருப்பப்படி பற்பமாகா விட்டால் மறுபடியும் முன்போல் இன்னொரு புடமிட்டுக் கொள்ள மேன்மையான பற்பமாகி விடும்.

அளவு, தீரும்நோய் முதலியவைகளெல்லாம் மேற்பாகத்தில் சொல்லப்பட்டவைகளேயாம்.

244. யூதக்கல் பற்பம் (வேறு)

தூய்மை செய்த யூதக்கல் 3 வராகன் எடை (10½ கிராம்) சாமந்திப்பூவை அரைத்த விழுது 30 வராகன் எடை (105 கிராம்)

செய்முறை:- மேற்படி யூதக்கல்லை மேற்படி விழுதுக்குள் வைத்து, ஒரு சிறு கலயத்துக்குள் அதைச்செலுத்திக் கலயத்தின் இருபது பங்கெடை விராட்டியில் புடமிட வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஏழு புடமிட வேண்டும். ஆனால் ஒவ்வொரு புடத்திற்கும் சாமந்திப் பூவானது புதிதாக அரைத்துக்கொள்ள வேண்டும். ஆகக்

கூடிய ஏழு புடமிடமிட்டு தீர்ந்தால், யூதக்கல்லானது மேன்மையான பற்பமாகி இருக்கும்.

அளவு, தீரும்நோய் முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாகும்.

245. யூதக்கல் பற்பம் (வேறு)

தூய்மை செய்த யூதக்கல் 1 பலம் (35 கிராம்), உகா இலையை அரைத்த விழுது 13 பலம் (455 கிராம்).

செய்முறை:- மேற்படி யூதக்கல்லை மேற்படி விழுதுக்குள்வைத்து உருண்டையாகத் திரட்டி அதன் மீது 2 சீலைமண் செய்து கவசத்தின் இருபது பங்குளடை விராட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுக்கப் பற்பமாகி இருக்கும். ஒருவேளை முதல் புடத்தில் பற்பமாகா விட்டால் முன்போல் மறுபுடம் போட்டுக் கொள்ளப் பற்பமாகி விடும்.

அளவு, தீரும்நோய் முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாகும்.

அனுபோக வைத்திய நவநீதம்

இரண்டாம் பாகம் முற்றிற்று

தாமரை

நூலகம்